
பூமிக்குப் புதியவன்
சுபா
ION

## உள்ளே...


1. பூமிக்குப் புதியவன் 5
2. நீ வேறு நான் வேறு 200


# பூமிக்குப் புதியவன்

## 1

போலீஸ் டிபார்ட்மெண்டில் பாரிக்கு கான்ஸ்டபிளாக வேலை கிடைத்தது. அதில் அவனுக்குப் பெருமகிழ்ச்சி!

தஞ்சாவூருக்கு அருகில் இருக்கும் ஒரு சின்ன கிராமத்து இளைஞன் அவன். இவ்வளவு பெரிய சென்னை நகரால், மெட்ரோ பாலிடன், சிட்டியால், கான்ஸ்டபிளாய் அங்கீகரிக்கப்பட்டது நிச்சயம் கொண்டாடப்பட வேண்டிய விஷயம்.

காவல் துறையில் சேர வேண்டும் என்பது அவனது சிறு வயதுக் கனவு. விறைப்பு குறையாத சீருடை. மிடுக்கு குறையாத நடை. தப்பு செய்பவர்கள் யாராக இருப்பினும் தட்டிக் கேட்கும் உரிமை.

அவனது தந்தை - இளங்கோவன் என்பது அவரது பெயர் - தமிழ்ப்பற்றும், காந்திப்பற்றும், தேசப்பற்றும் நிறைந்தவர், பாரியை நேர்மையாக வளர்த்தார். தப்பு வழி போகிறவர்களோடு சகவாசம் வைத்துக்கொள்ள விட வில்லை.

பாரிக்கு அவரே சிலம்பம் கற்றுத் தந்தார். ஏரியில் நீச்சல் அடிக்கச் சொல்லித் தந்தார். நிறைய உடற் பயிற்சிகள் செய்ய துணையாக இருந்தார்.

அது தவிர, பாரி தஞ்சாவூர் சென்று கராத்தே பயின்று ப்ளாக் - பெல்ட் வாங்கினான். திறமையை மட்டுமே மூலதனமாகக் கொண்டு பெற்ற கறுப்புப் பட்டி, பத்து பதினைந்து பேர் ஆயுதங்களுடன் சுற்றி வந்து தாக்கி னாலும், ஆயுதம் எதுவும் இன்றிச் சமாளிக்கும் வித்தை அவனுக்குத் தெரியும்.

கற்ற வித்தை காரணமாக கர்வம் தலையில் ஏறி விடவில்லை. மாறாகப் பணிவுதான். தினவெடுத்த தோள்களைத் தட்டிக்கொண்டு யாருடனும் வம்புச் சண்டைக்குப் போகவில்லை. பணிவை மேலும், மேலும் வளர்த்துக் கொண்டான்.

திருச்சி கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்தபோது அவனுக்கு ஐ.பி.எஸ். தேர்வு எழுத வேண்டும் என்பது தான் ஒரே குறிக்கோளாக இருந்தது. ஆனாலும் இளங் கோவனின் உடல்நிலை சற்று மோசமாகி விட்டது. தான் இறப்பதற்குள் பாரி காவல் துறையில் வேலைக்குச் சேர்ந்து விட வேண்டும் என்று மிகவும் ஆசைப்பட்டார். எனவே ஐ.பி.எஸ். கனவைத் தற்காலிகமாகத் தள்ளி வைத்து விட்டு, செய்தித்தாளில் வந்த விளம்பரம் பார்த்து முதலில் கான்ஸ்டபிள் வேலைக்கு விண்ணப்பித்துக் கொண்டான்.



உயரம், எடை, சுற்றளவு என்று அவன் உடல் சரா சரிக்கும் அதிகமாகவே இருந்தது. விளையாட்டுப் போட்டி களில் அவனை யாராலும் வெல்ல முடியவில்லை. உயரந் தாண்டுதலில் அவன் தான் முதலாவதாக வந்தான். குண்டு எறிவதிலும் அவனே நம்பர் ஒன். ஓட்டப் பந்தயத்தில் அவனுக்கு அடுத்து வந்தவன் ஐந்து விநாடி தூரம் பின் தங்கியிருந்தான்.

எனவே வேரில் பழுத்த பலா போல் அவனுக்கு வேலை மடியிலேயே வந்து விழுந்தது. பாரியைக் காட்டிலும் அவன் தகப்பனுக்குத்தான் பூரிப்பு அதிகம். ஒரே ஒரு சிறு ஆதங்கம். சென்னையில் வேலை.

பரவாயில்லை என்று அப்பா வழியனுப்பி வைத்தார்.

ஆனால் வேலைக்குச் சேர்ந்த கொஞ்ச நாட்களிலேயே தேவாங்கு போல் வாடி வதங்கி விட்டான். காட்டில் இருக்கும் சிங்கம் வழி தெரியாமல் நகரத்து காங்கரீட் கட்டிடங்களுக்கிடையில் மாட்டிக் கொண்ட மாதிரி அவனுக்கு மூச்சுத் திணறத் தொடங்கியது.

அவனைச் சுற்றியிருந்தவர்கள் அத்தனை பேரும் தந்திர நரிகளாய் இருந்தார்கள். எந்தக் காகம் வடை வைத்திருந்தாலும் அதை ஏமாற்றித் தட்டிப் பறிப்பதில் எத்தர்களாய் இருந்தார்கள்.

சக போலீஸ்காரர்கள் திருடர்களுடனும், சங்கிலி அறுப்ப வர்களுடனும், சட்டைப் பையை ப்ளேடு போட்டு அறுப்பவர்களுடனும் சிரித்துச் சிரித்துப் பேசியது அவ னுக்கு ஜீரணிக்க முடியாத விஷயமாக இருந்தது.

போலீஸ்காரர்கள் திருடர்களை அடித்த அலித்தனமான அடிகள் முதலில் அவன் வயிற்றைக் கலக்கிவிட்டன. தொம், தொம் என்று சத்தம், பூட்ஸ் கால்கள் வயிற்றில்,

விலாவில் மோதும் போது ஏற்படும் ஒலிகளைக் கேட்டால் உதை வாங்குபவர்கள் அத்தனை பேரும் செத்தே போய் விடுவார்கள் என்று தான் அவனுக்குத் தோன்றியது.

யாரும் சாகவில்லை. கொஞ்ச நேரத்தில் அடிபட்டவர்கள், அடித்தவர்களிடம் பீடிக்கு நெருப்பு கேட்டார்கள். பாரியைப் பார்த்துச் சிரித்தார்கள். ''புதுசா?'' என்றார்கள். அவன் அவர்களிடம் பேசவில்லை. திருடர்கள் திருடர்கள் தான், போலீஸ்காரர்கள், போலீஸ்காரர்கள்தான்.

பாரி அவ்வப்போது சப்-இன்ஸ்பெக்டர் சாம்ராஜுடன் இரவு நேரங்களில் படைச்சிப்பாயாகப் போவது வழக்கம். எஸ்.ஐ. சாம்ராஜ் சில குறிப்பிட்ட வீடுகளுக்குப் போவார். கதவு தட்டுவார். திறக்கப்படும். அந்த வீட்டில் இருக்கும் அறைகளில் ஆண்களும், பெண்களுமாக இருப்பார்கள். அந்தப் பெண்களை எல்லாம் வேனில் ஏற்றி ஸ்டேஷனுக்குக் கூட்டி வருவார்கள்.

பெண்கள் தங்களுக்குள் பார்த்துப் பேசிக் கொண்டு, 'கீக், கீக்' என்று சிரிப்பார்கள். பாரியைப் பார்த்துக் கண் சிமிட்டி, ''எப்பய்யா, எங்க வீட்டு விருந்திற்கு வருகிறாய்? உங்க இன்ஸ்பெக்டர் எல்லாம் நம் வீட்டு விருந்தாளிகள் தான்'' என்பார்கள். பகீரென்று இருக்கும். தள்ளி வந்து விடுவான்.

அவர்களை மறுநாள் கோர்ட்டுக்குக் கூட்டிப் போவார்கள். கேள்வி கேட்பார்கள். சிறையிலோ, விடுதிகளிலோ அடைக்கப்படுவார்கள். மறுபடி சப்-இன்ஸ்பெக்டர் சாம்ராஜ் அதே வீடுகளுக்குப் போகும்போது மறுபடி அவர்கள் சிக்குவார்கள். பாரிக்கு அதன் பின்னணி புரியவில்லை. கொஞ்ச நாட்கள் கழித்து லஞ்சம் என்று தெரிந்தது. காசாகவும், பொருளாகவும், உடம்பாகவும்



சப்-இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர் எல்லோரும் அந்த லஞ்சத்தின் அடிமைகள்.

காவல்துறை அப்படி ஒன்றும் சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட துறையாக இல்லையென்று கொஞ்ச நாட்களிலேயே தெரிந்து விட்டது.

கள்ளச்சாராய வேட்டைக்குப் போவார்கள். கையைக் கறையாக்கிக் கொண்டு, பையை நிரப்பிக் கொண்டு திரும்பி வந்து விடுவார்கள்.

பாரிக்கு அந்தப் பாதை மிகவும் மோசமான பாதையாகத் தோன்றியது. அவனுடைய சொந்த ஊர் அப்படியொன்றும் பிரபலமானது இல்லை. மாரியம்மன் கோயில், ஊருணி, சந்தை, காலனி, கடை வீதி, டென்ட் கொட்டகை அவ்வளவுதான்.

ஆனால் அந்த ஊர்தான் அவனை வளர்த்தது. இனிப்பான பால் நிரம்பிய கிராமத்துச் சோளமாக அவன் வளர்ந்து விட்டான். அவன் கிராமத்துப் பசுக்கள் கன்றுகளுக்கு என்று பாலை ஒளித்து வைக்காமல் எல்லாவற்றையும் மனிதர்களுக்கே அளித்து வந்தன. விளைந்த நெல்மணிகளில் சாவி மணிகளே கிடையாது. இயற்கை அவனுக்கு வஞ்சனையைக் கற்றுத் தரவில்லை.

சின்ன வயதில் இருந்தே அப்பாவிற்கு அடங்கிய பையன். அப்பா காந்தியைக் கும்பிடுபவர். திருடக்கூடாது, பொய் பேசக்கூடாது. அடுத்தவன் வயிற்றில் மண்ணை அள்ளிப் போடக்கூடாது. நேர்மையாக இருக்க வேண்டும். நீதிக்கு முன்பாக மண்டி இட்டு அடி பணிய வேண்டும்.

பாரி அப்பாவின் விருப்பப்படிதான் வளர்ந்தான். கிராமத்து உடல்வாகு காரணமாக போலீஸ்காரனாகி விட்டான். காக்கிச் சட்டை அணிந்து, தொப்பி அணிந்து,

கையில் ஒரு போலீஸ் கழியை ஏந்தினாலும் பாரியின் உள்ளம் இன்னும் கிராமத்து வெள்ளைத் தனத்திலிருந்து வெளிப்படவில்லை.

அவன் காசு கொடுக்காமலேயே டீயும் பன்னும் கிடைத்தது. அதை வேண்டாம் என்று மறுத்தால், உடன் இருக்கும் போலீஸ்காரர்கள் அவனைக் கொன்று போட்டு விடுவார்கள் போல் இருந்தது. அதனால் அவன் அதிலேயே பசியாறி சாப்பிட்டுக் காசை மிச்சம் பிடித்தான். ஊரில் அவனுக்கு ஒரு தங்கை இருந்தாள். அப்பா அவள் கல்யாணத்தை நடத்தினார். அது முடிந்த கையோடு மும்முரமாகப் பெண் தேடிக் கண்டு பிடித்து பாரிக்கும் கல்யாணத்தை நடத்தி முடித்துவிட்டார்.

சென்னையில் ஒரு சின்ன வீட்டில் குடித்தனம். கலையரசி போலீஸ்காரன் மனைவி என்ற பட்டத்தை ஏற்றுக் கொண்டாள். குழாயடியில் நீர் பிடிக்கும்போது அவள் குடம் வரிசை மீறுவதை சுற்றியிருந்தவர்கள் முணுமுணுப்போடு சகித்தார்கள்.

வேலை முடிந்து வரும்போது அவன் பையில் பிச்சைக்காரன் பாத்திரத்தில் விழுந்த கதம்ப சாதம் போல், முட்டைக்கோஸ், காரட், கத்தரி, முட்டை, பப்பாளி, ஒன்றிரண்டு வஞ்சிர மீன்கள் என்று கொண்டு வருவான். அவனுக்கு வரும் பங்கு அது. அதை மறுத்தால் போலீஸ்காரர்களும் திட்டினார்கள். மனைவியும் திட்டினாள். அந்த காய்கறிதான் சமையலுக்கு.

கலையரசிக்குக் கொஞ்ச நாட்களில் வாழ்க்கை அலுத்து விட்டது. அவன் அந்த துணிப்பையில் வெள்ளிப் பாத்திரங்களும், தங்கக் காசுகளும், சரிகைப் புடவைகளும் கொண்டு வர வேண்டும் என்று எதிர்பார்த்தாள். தினம், தினம் கரன்ஸி காகிதங்களை அவள் கையில் திணிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டாள். மற்ற வீடுகளில் நடப்பதுதானே என்று அவனிடம் ஆரம்பத்தில் மெதுவான, சன்னக்குரலில் வாதிட்டாள். சிறிது நாட்கள் சென்ற பின்பு ஒரு குழந்தை பிறந்தால், அதுவும் பெண் குழந்தையாகப் பிறந்தால் அதன் கல்யாணத்திற்கும் மற்ற விசேஷங்களுக்கும் என்று நகைகளும், வெள்ளிப் பாலாடை, கொலுசு, பாத்திரங்கள் எல்லாம் சேர்க்க வேண்டும் என்று கொஞ்சம் உரத்த குரலில் வாதாடினாள். பாரி அவள் பேச்சைக் கேட்பதாய் இல்லை. அதனால் கலையரசிக்கு ஆவேசம் அதிகமானது. அடிக்கடி வெறி பிடித்தவள் போல் நடந்துகொள்ள வைத்தது. பாரியின் முடியைப் பற்றி உலுக்கி இரு கைகளிலும் அவன் மயிரைப் பிடுங்கி எடுத்தாள். இன்னொரு நாள் கொதிக்கும் குழம்பைக் கரண்டியில் எடுத்து அவன் முகத்தில் வீசினாள். பாரியின் கண் நல்லவேளையாகத் தப்பித்தது. முகத்தில் இருந்த தோலின் நிறம் பழைய நிலைமைக்கு வருவதற்கே ஆறு மாதம் பிடித்தது.



அவளுக்கு ஹிஸ்டீரியா என்று புரிந்தது. மனோ தத்துவ முறையில் சிகிச்சை அளிக்க வேண்டும். சிகிச்சைக்கெல்லாம் அவள் ஒத்துக் கொள்ளும் ஜாதி இல்லை. ஒரே ஒரு முறை அவளை டாக்டர் வீட்டுக்கு அழைத்ததில், "எனக்கென்ன பைத்தியமா? எதற்காக இப்போது டாக்டர் வீட்டிற்கு நான் வர வேண்டும். உன்னை மாதிரி ஒரு பொட்டைப் பையனை நான் இதுவரை பார்த்ததேயில்லை. சரியான பேடி நீ. வீட்டிற்கு வசதிகள் வேண்டும் என்று கேட்டால் டாக்டரிடம் கூட்டிப் போகிறேன் என்றா சொல்கிறாய்?" என்று ஓவென அலறினாள்.

பாரியால் அவள் ஹிம்சையைத் தாங்க முடியவில்லை. அவளுடைய ஆவேசத்தையும், அலறலையும் மட்டுப்படுத்துவதற்காக ஒரே ஒரு அறை அறைந்தான். சும்மா ஒரு தட்டல்தான் அது. வலியே இருக்காது.

ஆனாலும் அந்த அறைதான் கலையரசியை சாக அடித்தது.

## 2

பாரி அறைந்த அறை கலையரசியைப் பத்ரகாளியாக்கி விட்டது. பாரியிடம் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு வீட்டிற்குப் பின்னால் ஓடினாள்.

அங்கே ஒரு பொதுக்கிணறு இருந்தது. அதன் கைப்பிடிச் சுவரில் ஏறினாள். பாரி ஓடிவந்து அவளைத் தடுக்குமுன் அவள் கிணற்றில் குதித்தாள். அந்தக் கிணற்றில் அங்கங்கே தகர்க்கப்பட்ட பாறைகள் நீட்டிக் கொண்டிருந்தன. கிணற்றில் இறக்கப்படும் பாத்திரங்கள் யாவற்றையும் உருமாற்றி விடும் நீட்டல்கள் அவை. வாளிகள் பிளக்கும். குடங்கள் நசுங்கும்.

கலையரசி மண்டை உடைந்து, உடல் சிதைந்து, ரத்தத்தை எல்லாம் காலி பண்ணி விட்டுச் செத்துப் போனாள்.

பாரி குடும்ப வாழ்வில் வெறுப்பின் எல்லையைத் தொட்டிருந்தான். வெறுமை அவனைச் சூழ்ந்து கொண்டிருந்த நேரம் கலையரசியின் மரணம் அவனுக்கு ஒரு



திடுக்கிடல்தான். ஆனாலும் ஒரு விதத்தில் ஆறுதலுங் கூட. இனிமேல் மனைவி என்கிற பேயின் தொல்லை இருக்காதே.

உறவு அவனை இன்னொரு திருமணத்திற்குத் தயாராகும்படி வற்புறுத்தியது. இன்னொரு கல்யாணம். இன்னொரு பெண். இன்னொரு சித்திரவதை. பாரியால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

டிபார்ட்மென்டில் போய் அவனுடைய ஊருக்கு மாற்றல் கேட்டான். அவனுடைய கிராமத்திலேயே போலீஸ் ஸ்டேஷன் இருந்தது. அங்கே மாற்றலாகி விட்டால் ரொம்ப சந்தோஷம். அப்பாவுடன் இருந்து அவருக்குத் தேவையானவற்றைக் கவனித்துக் கொள்ளலாம்.

மாற்றல் அவ்வளவு எளிதில் கிடைத்து விடவில்லை. எப்போது கேட்டாலும் 'ஆகட்டும் பார்க்கலாம். ஆகட்டும் பார்க்கலாம்' என்றார்கள்.

சென்னையில் நிறைய போலீஸ்காரர்கள் தேவைப்பட்டார்கள். மந்திரிகள் எல்லாம் நிறைய பகைவர்களுடன் தான் பதவி ஏறுகிறார்கள். அதனால் அவர்களைச் சுற்றி அடியாட்களும், போலீஸ்காரர்களும் எந்நேரமும் பாரா கொடுக்க வேண்டியிருந்தது.

மந்திரிகளோ, இல்லை மந்திரிகளின் அடியாட்களோ எங்கிருந்தாவது பெண்களைக் காரில் கூட்டி வந்து விடுதி அறைக்குள் கூட்டிப் போவார்கள். போலீஸ்காரர்கள் அறைக்கு வெளியே நிற்க வேண்டியிருந்தது.

ஒரு பேட்டை தாதாவும், இன்னொரு பேட்டை தாதாவும் மோதிக் கொள்வது சென்னையில் சகஜமாக மாறியிருந்தது. அடிபட்டவர்களை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிப் போகப் போலீஸ்காரர்கள் தேவைப்பட்டார்கள். உள்ளூர்

போலீஸ்காரர்கள் போதவில்லை என்று வெளியூரில் இருந்து எல்லாம் போலீஸ்காரர்கள் வரவழைக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

பாரிக்கு மாற்றலாவது இன்னொன்றாவது. அரசியல் வாதிகளைக் கண்டாலே அவனுக்கு எரிச்சலாக வந்தது. எந்தப் பயலுக்கும் நேர்மை என்ற வார்த்தைக்கு எழுத் துக்கள் என்னவென்றே தெரியவில்லை.

மாற்றலுக்கு முயன்று முயன்று முடியாமல் ஏறக் குறைய வேலையை விட்டு விடலாம் என்று நினைத்த சமயத்தில் அது நடந்தது.

சப்-இன்ஸ்பெக்டரும் இன்றி, இன்ஸ்பெக்டரும் இன்றி ஏட்டு என்று சகஜமாக வழங்கப்படும் ஹெட் - கான்ஸ்டபிளுடன் அவன் ஒருமுறை லாட்ஜிற்குப் போக வேண்டியிருந்தது. ரெய்டு.

ஹெட்-கான்ஸ்டபிள் காசுக்காகத்தான் போகிறார் என்று அவனுக்குப் புரிந்தது. லாட்ஜில் அமைச்சர் ஒருவரின் கைத்தடி ஒரு பெண்ணுடன் உல்லாசமாக இருந்த வேளையில் பாரியிடம் சிக்கினான்.

பெண்ணுடன் மட்டும் அவன் உல்லாசமாக இருந் திருந்தால் பாரி அது பற்றிக் கவலையே பட்டிருக்க மாட்டான், ஹெட்-கான்ஸ்டபிள் நம்பிப் போன வரு மானம் வரும்போது குறுக்கேயும் நின்றிருக்க மாட்டான்.

அந்த் ஆள் போதை மருந்து பாக்கெட்டுகளை ஒரு பெட்டியில் வைத்திருந்தான். அந்தப் பெண் மூலம் விநி யோகிப்பதற்காக. பெண்ணிடம் உல்லாசமாக இருப்பது என்பது அமைச்சரின் கைத்தடியின் தனிப்பட்ட விஷயம். அவன் கொடுக்கும் பணத்தை ஏற்றுக் கொண்டு அந்தப் பெண்ணும் உடன்படுவதால் பெரிதாக ஒரு சமூகச்



சீரழிவு ஏற்பட்டுவிடும் என்று அவனுக்குத் தோன்ற வில்லை.

ஆனால் போதை மருந்தைப் பரப்புவதற்கு அவள் உதவுகிறாள். அமைச்சரின் கைத்தடி போதை மருந்தை அவள் மூலம் விநியோகிக்கிறான் என்பதுதான் அவனால் பொறுத்துக் கொள்ள முடியாத ஒன்றாகத் தோன்றியது.

பாரியிடம் சிக்கிய அமைச்சரின் கைத்தடி கவலையே படவில்லை. பாரியின் எதிரிலேயே படுக்கையில் கிடந்த லுங்கியை எடுத்து நிதானமாகச் சுற்றிக் கொண்டு, ''ஏய் அந்தப் பர்ஸில் இருந்து ஒரு நூறு ரூபாய் எடுத்துக் கொடு'' என்றான்.

ஹெட் - கான்ஸ்டபிளுக்கு மகிழ்ச்சி. நூறு ரூபாய் என்றால் சும்மாவா? பாரிக்கு ஏகப்பட்ட வருத்தம். கோபம், ஆவேசம்.

''எனக்கு வேண்டாம். நட ஸ்டேஷனுக்கு'' என்றான் பாரி.

''ஏய். யாரைப் பார்த்துப் பேசுகிறாய் நீ?'' என்று மிரட்டினான் அவன்.

''டேய். சட்டம் எல்லோருக்கும் ஒன்றுதான். நடடா ஸ்டேஷனுக்கு'' என்றான் பாரி.

ஹெட் - கான்ஸ்டபிள் கையைப் பிசைந்தான். பாரி ஒப்பவில்லை. அமைச்சரின் கைத்தடி சட்டென எழுந்து பாரியின் சட்டையைப் பிடித்தான். கொன்று விடும் ஆவேசம்.

அவனுடைய உடம்பு பருமனாய் இருந்தது. இருந்தும் கறியும், சாராயமும், சிகரெட் புகையும் கலந்திருந்தன. கூடா நட்பு காரணமாய்த் தளர்ந்த உடல். பாரி அப்படி

இல்லை. கிராமத்து உரமேறியவன். உடலிலும் மன திலும் வலு உள்ளவன். அமைச்சரின் கைத்தடியை ஓர் உதறு உதறினான். ஒரே அறை. அமைச்சரின் கைத்தடி சுழற் காற்றில் சிக்கிய குப்பைக் காகிதம் போல சுழன்றான். கீழே விழுந்தான்.

அவன் துண்டாலேயே அவன் கையைக் கட்டி ஜீப்பில் அவனையும், அவளையும், போதைப் பொருளையும் ஏற்றி விட்டான்.

ஸ்டேஷன் பென்ச்சில் கூட்டிப் போய் உட்கார வைத்தான். அந்தப் பெண்ணை லாக்கப்பில் வைத்தான். போதை மருந்தை வைத்திருந்ததாகவும், அதை விநி யோகிக்க மாலா என்னும் பெண்ணைப் பயன்படுத்திய தாகவும் ஒரு வெற்றுக் காகிதத்தில் எழுத வைத்து அதன் கீழ் அமைச்சரின் கைத்தடியின் கையொப்பத்தைப் போடச் சொன்னான்.

சப்-இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர் எல்லோரும் பந்தோபஸ்தில் இருந்து திரும்பி வந்தார்கள். அமைச் சருக்கு ஏற்கனவே விவரம் தெரிவிக்கப்பட்டு விட்டது. அந்த அமைச்சர் வழக்கமாக இன்ஸ்பெக்டருக்கும், சப்-இன்ஸ்பெக்டருக்கும் படி அளப்பவர். இந்த முறையும் அளந்து விட்டார். தன்னுடைய நம்பிக்கைக்குரியவன் என்று சொன்ன பிறகும் தனது ஆளைக் காவலில் வைத்த தற்காக சப்-இன்ஸ்பெக்டரையும், இன்ஸ்பெக்டரையும் கடிந்து கொண்டார்.

எனவே சப்-இன்ஸ்பெக்டரும் இன்ஸ்பெக்டரும் ஸ்டேஷனுக்குத் திரும்பி வரும்போது எரிமலையின் சிகரத்தில் உட்கார்ந்து வந்து சேர்ந்தார்கள்.



பாரி அவர்களிடம் தன் தரப்பு நியாயத்தை எடுத்துச் சொல்லிப் பார்த்தான். மேலதிகாரிகள் இருவரும் அவனை நிராகரித்தார்கள்.

பாரியை ஒதுக்கிவிட்டு, மற்ற அனைவரும் கூடிக் கூடிப் பேசினார்கள். கடைசியில் பாரியின் மேல் வழக்குப் பதிவானது.

ஸ்டேஷன் லாக்கப்பில் வைத்து மாலா என்ற பெண்ணை அவன் கற்பழித்து விட்டான். தடுக்க வந்த அமைச்சரின் கையாளைக் கொல்ல முயன்றான். போலீஸ் ஸ்டேஷனில் இருந்து ஹெட்-கான்ஸ்டபிள் தான் சாட்சி.

பத்திரிகைக்காரர்கள் வந்தார்கள். அந்த பெண் மாலாவைப் புகைப்படம் எடுத்தார்கள். அவள் கண் ணீருடன் காமிரா பார்த்தாள்.

செய்தித் தாள்களில் போலீஸ் லாக்கப்பில் கற்பழிப்பு. கான்ஸ்டபிளின் அராஜகம் என்று செய்தி அலறியது. பாரியின் படம் 'கற்பிழந்த'வளின் படம். மாலாவின் மானம் காக்க முயன்ற அமைச்சரின் உதவியாளரின் படம் எல்லாம் முதல் பக்கத்தில் வெளியாகி இருந்தன.

பாரி சஸ்பெண்ட் செய்யப்பட்டான். கைது செய்யப் பட்டான். அவனது முறையீடுகள் அனாதைகளாய்த் திரிந்தன. அவன் சிந்திய கண்ணீர் பாலையில் விழுந்தது. அதிகாரிகள் உதடுகளைப் பிதுக்கினார்கள்.

சக போலீஸ்காரர்கள் சிரித்தார்கள். காந்திக்கிழவன் இடுப்பில் கட்டியிருக்கும் ஒரே துண்டை உருவி நிர்வாண மாக்கி விட்டு, அந்தக் கிழத்தைப் பார்த்துச் சிரிக்கும் எள்ளல் சிரிப்பு அது.

அவன் கிராதகனாகி விட்டான். மானபங்கப் படுத்திய வன். பெண் குலத் துரோகி. ஐயோ எல்லோரும் நிர்வாண

மாகத் திரியும் ஊரில் கோவணம் கட்டிவிட்டேனே. நரகலைத் தின்று உழலுபவர்கள் இடையில் சோற்றைப் புசித்து விட்டேனே.

ஊரில் இருந்து தந்தி வந்தது.

'அப்பாவுக்கு ஆபத்து. உடனே வா.'

போலீஸ் காவலுடன் ஊருக்குப் போனான்.

அவன் ஊருக்குப் போய்ச் சேர்ந்தபோது அப்பாவின் வாயில் நுரை தள்ளியிருந்தது. உடலில் நீலம் பாவித்து இருந்தது. கண்ணியம் தவறிய மகனுக்குத் தகப்பனாக இருப்பதை விட மரிப்பது மேல் என்று அரளி விதைகளை அரைத்துச் சாப்பிட்டாராம்.

அவனை வளர்த்து ஆளாக்கிய ஆலமரம் அடி வேருடன் சாய்ந்து போயிருந்தது. வாடிய பயிராக, காய்ந்த சருகுச் சரமாக இருந்தார். அவனால் அழ முடியவில்லை.

அவனை யாரும் வரவேற்கக் கூடத் தயாராக இல்லை. தங்கையும், அவள் கணவனும் முகத்தைத் திருப்பிக் கொண்டார்கள். அவன் வருகை தெரிந்ததும் எல்லாப் பெண்களும் எழுந்து ஓடி விட்டார்கள்.

பாரி கொள்ளி போட்டான்.

போலீஸ் துணையோடு சென்னை மீண்டான். அவன் கண்கள் பிரபஞ்சத்தைப் போல் இருந்தது. இழப்பதற்கு அவனிடம் இனி எதுவுமில்லை.

அவன் வேலை செய்த போலீஸ் ஸ்டேஷனை ஒரு முறை பார்க்க வேண்டும் போல் இருந்தது. கூட வந்த போலீஸ்காரர்களைக் கேட்டுக் கொண்டான்.

அவனது அறியாமையும், நேர்மையும் கூட வந்த போலீஸ்காரர்களை அசைத்து விட்டன. கூட்டிப் போனார்கள். வாசலில் நின்றான்.



"என்ன பாரி?" என்று கேட்டான் சென்ட்ரி. "பிழைக்கத் தெரியாத ஆள் நீ."

பாரி பதில் சொல்லவில்லை. சென்ட்ரிக்கு அருகில் நின்று போலீஸ் ஸ்டேஷனிற்குள் பார்வையைச் செலுத்தினான். ஒருமுறை வணங்கினான். அவன் வந்த செய்தி அறிந்து சப்-இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர், ஹெட் கான்ஸ்டபிள் எல்லாம் எட்டிப் பார்த்தார்கள்.

அவர்களின் முகங்களில் ஏளனம்.

"இன்ஸ்பெக்டர் சார், சப்-இன்ஸ்பெக்டர் சார். ஏட்டையா நீங்கள் வாழுங்கள். நீங்களே வாழுங்கள்! எனக்கு இங்கே இடமில்லை."

பாரி சட்டென்று சென்ட்ரி கையில் பிடித்திருந்த ரைபிளின் முனையை இழுத்துத் தன்னை இலக்காக வைத்துக் கொண்டு அதன் விசையை இழுத்தான்.

ரைபிளின் குண்டு 'டுமீல்' என்று வெடித்தது.

## 3

பாரி கண் விழித்தான். அவன் படுத்திருந்தது ஆஸ்பத்திரி எனத் தெரிந்தது. சாகவில்லை என்றும் புரிந்தது. எப்படி அது சாத்தியம்?

துப்பாக்கி முனையைத் தன் கழுத்திற்கு நேராகத்தானே வைத்துக் கொண்டான். மூளை சிதறி உடனே உயிர் போயிருக்க வேண்டுமே!

தன் கேள்விகளுக்கு யாராவது பதில் சொல்வார்களோ என்று தன்னைச் சுற்றிப் பார்த்தான். அறையில் அவனைத் தவிர வேறு யாருமில்லை.

ஒரு சாதாரண கான்ஸ்டபிள்களுக்கு, அதுவும் சஸ் பெண்ட் செய்யப்பட்டவனுக்கு, கற்பழிப்புக் குற்றம் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்டவனுக்கு இப்படி ஒரு சுத்தமான அறையில் சிகிச்சையா?

எழுந்தான். உயரத்தில் தொங்கிய மின் விசிறி ஒரு சத்தமும் இன்றி காற்றைக் கொட்டியது. திறந்திருந்த ஜன்னலுக்கு வெளியே இருந்த மரக்கிளைகள் ஆடி ஆடி உள்ளே அனுப்பிய சுத்தமான காற்று வேறு அறையை நிரப்பிக் கொண்டிருந்தது. ஜன்னலருகே சென்று எட்டிப் பார்த்தான். தான் இருந்தது மூன்றாவது மாடியாகவோ, நான்காவது மாடியாகவோ இருக்க வேண்டும் என்று புரிந்தது.

அறையில் லேசான பினாயில் மற்றும் டெட்டால் கலந்த விரும்பத்தக்க நெடி. சுவரில் கண்களை உறுத்தாத வெளிர் நீலம்.

அருகில் இருந்த அறைக் கதவைத் திறந்தான். பாத்ரூம்! அதில் இருந்த கண்ணாடியில் முகம் பார்த்தான். இடது கன்னத்தில் கண்ணுக்குக் கீழிருந்து உதட்டின் விளிம்பு வரை ஒரு கட்டு போடப்பட்டிருந்தது. குண்டு கழுத்தைத் துளைப்பதற்குப் பதிலாகக் கன்னத்தை உரசிச் சென்றிருக்கிறது என அப்போதுதான் புரிந்தது.

இன்னும் சாகாமல் உயிர் பிழைத்திருப்பது அவனுக்கு லேசான வருத்தத்தை அளித்தது. திரும்பி வந்து கட்டி லில் உட்கார்ந்தான்.



கதவு தட்டப்பட்டது. அவனுடைய பதிலுக்குக் காத் திருக்க வேண்டும் என்ற சம்பிரதாயத்திற்குக் காத்திருக் காமல் அது திறந்தது.

உள்ளே அவன் நுழைந்தான். சற்று குண்டாக இருந் தான். குள்ளமாக இருந்தான். சஃபாரி ஆடை அணிந் திருந்தான். அவனிடம் பணம் இருப்பதை அறிந்து கொள்ள அந்த உடை உதவியதே தவிர, அவனுக்கு அது அவ்வளவாகப் பொருந்தவில்லை. கருப்பாக இருந்தான். கழுத்தைப் பிடித்த மாதிரி கைக்கடிகாரத்தின் பட்டை மாடலில் ஒரு தங்கச் சங்கிலி அணிந்திருந்தான். அதில் கோர்க்கப்பட்டிருந்த ஒரு பதக்கத்தில் ஒரு தலை மட்டும் சற்று மேடாகப் பொறிக்கப்பட்டிருந்தது.

''எப்படி இருக்கிறாய் பாரி?'' என்று கேட்டான் வந்தவன். முகத்தில் வஞ்சமில்லாத புன்னகை.

''நன்றாக இருக்கிறேன். ஆனால்...''

வந்தவன் பாரியை மேலே பேச விடாமல் கையமர்த்தி னான். ''பாஸ் பக்கத்தில் இருந்தார். உனக்குப் பின்னால் ஸ்டேஷனுக்கு வந்து கொண்டிருந்தார். அவர் தான் சட்டென்று துப்பாக்கியைக் கையால் பிடித்துத் தள்ளி விட்டார். அதனால்தான் நீ சாகவில்லை. குண்டு உன் கன்னத்தை சிராய்த்ததோடு நின்று விட்டது. உன்னை ஆஸ்பத்திரியில் கொண்டு வந்து சேர்க்கச் சொன்னது என் பாஸ்தான். உனக்கு ட்ரீட்மெண்ட் கொடுக்கச் சொன் னதும் என் பாஸ்தான். உனக்குச் சரியாகி விட்டால் ஒரு முறை. என் பாஸை வந்து பார்...'' என்றான் வந்தவன்.

''உங்கள் பெயரும் தெரியாது. உங்கள் பாஸ் பெயரும் தெரியாது. நான் யார் என்று கேட்டு அங்கே வந்து பார்ப்பது?''

வந்தவன் சிரித்தான். "சரியான நாட்டுக்கட்டை தான். நீ. என் பெயர் வைத்தி. என் பாஸின் பெயரைச் சொல்வது என் பழக்கம் இல்லை. இந்தா. இது என் பாஸின் விசிட்டிங் கார்டு. உனக்கு இப்போதே பரவாயில்லை என்றாலும் நானே உன்னைக் கூட்டிப் போகிறேன்" என்று வைத்தி என்று தன்னை அழைத்துக் கொண்டவன் ஒரு விசிட்டிங் கார்டை எடுத்து நீட்டினான்.

பாரி அதை வாங்கிக் கொண்டான். "நான் சாகத் தான் விரும்பினேன். உன் பாஸ் எதற்காக என் உயிரைக் காப்பாற்றினார் என்று அவரைப் பார்த்து ஒரு வார்த்தை கேட்டேயாக வேண்டும். நான் இப்போதே உன்னுடன் வரத் தயார்" என்றான் பாரி.

"அப்படியானால் இப்போதே போகலாம்" என்றான் வைத்தி.

பாரி அவனுடன் ஆஸ்பத்திரி அறையை விட்டு வெளியே வந்தான். பாரியிடம் யாரும் எதுவும் கேட்க வில்லை. வைத்தியும் ஆஸ்பத்திரிக்கான தொகை எதுவும் கொடுக்கவில்லை. வார்டு பாய்கள் வைத்தியைப் பார்த் ததும் ஓரமாய் ஒதுங்கி நின்று வணக்கம் சொன்னார்கள்.

ஏதோ ஒரு அறை நோக்கித் தள்ளப்பட்டுக் கொண் டிருந்த ஸ்ட்ரெச்சர் வைத்தியைப் பார்த்ததும் சுவரோரமாக ஒதுங்கிக் கொண்டது.

அவர்கள் ஆஸ்பத்திரியை விட்டு வெளிப்பட்டார்கள்.

பார்க்கிங்கில் ஒரு பியட் பாலியோ இருந்தது. வெளிர் பச்சை ப்ளோரசன்ட் நிறம். வைத்தி அதன் கதவைத் திறந்து ஏறி மறுபக்க லீவரை எடுத்து விட, பாரி வைத்தி யின் அருகில் அமர்ந்தான்.



மிக வேகமாக பாலியோ சென்றது. பயணம் சொர்க்கம். பாரி இத்தனை வருடங்களில் இது போன்றதொரு காரில் சவாரி செய்ததேயில்லை. ஊரில் டிரைவிங் ஸ்கூல் வைத்து நடத்திக் கொண்டிருந்த ராமுவிடம் அம்பாஸி டரில் டிரைவிங் கற்றுக் கொண்டு இருக்கிறான். அந்தக் கார், ஹார்ன் தவிர மற்ற எல்லா இடங்களில் இருந்தும் சத்தத்தை வெளிப்படுத்தும்.

காரின் கண்ணாடிகளில் கருப்பு இருந்ததால் தெரு விளக்குகள் பில்டர் போடப்பட்டது போல் வெளிச்சம் வடிகட்டப்பட்டுத் தெரிந்தன.

வேடிக்கை பார்ப்பது அலுத்துப் போய் சீட்டில் சுகமாகச் சாய்ந்து கொண்டான். யாரோ ஒரு பாஸ் அவன் உயிரைக் காப்பாற்றி இருக்கிறார். அவனைப் பார்க்க விரும்புகிறார். அவரைப் பார்த்து நன்றி சொல்ல வேண்டியது. எதற்காக அவனைக் காப்பாற்ற முயற்சி எடுத்துக் கொண்டார் என அறிந்து கொள்ள வேண்டியது. திரும்பி வந்து விட வேண்டியது.

கார் ஒரு காம்பவுண்டிற்குள் நுழைந்தது. அது வருவ தற்காகவே காத்திருந்த மாதிரி திறந்திருந்த கேட், கார் உள்ளே நுழைந்தவுடன் சாத்தப்பட்டது. கார் ஒரு பெரிய வீட்டைச் சுற்றி வந்து அதன் பின்புறத்தில் நின்றது. கதவு திறந்தது. பாரி இறங்கினான். வைத்தியைத் தொடர்ந்து சில படிகளில் ஏறினான். வைத்தி தன் கையிலிருந்த சாவியால் அந்த வீட்டுக் கதவைத் திறந்தான். உள்ளே நுழைந்தான். இருட்டு. வெளி வெளிச்சம் லேசாகக் கசிந்து கொண்டு இருந்தது. ஒரு திரை, வைத்தி அதை விலக்கி னான். உள்ளே நடந்து மறுபடி மாடிப்படிகளை ஏற பாரி பின் தொடர்ந்தான். படிகளின் முடிவில் ஒரு ஹால் இருந்தது. ஹாலில் ஒரு சோபா செட் இருந்தது.

''உட்கார்'' என்று சொன்னான் வைத்தி.

பாரி உட்கார்ந்தான். வைத்தி திரை விலக்கி மறைந்து போனான். சுவர்க்கோழிகள் ரீங்காரமிட்டன. ஒரு ஆந்தை சமய சந்தர்ப்பம் தெரியாமல் அலறியது. பாரிக்கு லேசான படபடப்பு இருந்தது.

ஏதோ ஓர் கதவு டக் என திறக்கப்படும் ஓசை கேட்டது.

''வா பாரி'' என்று கனமான ஒரு குரல் கேட்டது.

பாரி சரேலெனத் திரும்பினான்.

# 4

அவர் தெரிந்தார். நல்ல உயரமாக இருந்தார். கண்ணாடி ப்ரேமில் தங்கம். கட்டியிருந்த வாட்சில் தங்கம். விரல்களின் மோதிரங்களில் வைரம். தலைமுடி ராணுவ வீரர்களுக்குப் போல் சிக்கனமாக இருந்தது. மீசையின் எல்லா முடிகளும் கறுப்பாக இருந்தன. 'டை'யாக இருக்கலாம். இரவு ஆடைகள் அணிந்திருந்தார். கையில் கிளாஸில் விஸ்கியா, ஆப்பிள் ஜூஸா என்று தெரியவில்லை.

பாரி எழுந்து கொள்ளப் பார்த்தான். அவரைப் பார்த்தாலே மரியாதை தரத் தோன்றியது. வந்தவர் கையமர்த்தினார். ''உட்கார், உட்கார்.''

பாரி அவர் ஆணைக்குக் கட்டுப்பட்டு உட்கார்ந்தான். அவன் எதிரில் வந்து அமர்ந்தார்.

''என்ன சாப்பிடுகிறாய்? விஸ்கி, ஜின், பீர்?''



''எலுமிச்சை ஜூஸ்'' என்றான் பாரி.

சிரித்தார். ''நீ அதைத்தான் சொல்வாய் என்று எனக்குத் தெரியும். ஜூஸை எடுத்துக் கொள்,'' என்றார்.

'எங்கே ஜூஸ்?' என்று பாரியின் கண்கள் தேடுவதற்கு முன் அறையில் ஒருவன் ட்ரேயுடன் நுழைந்தான். அதில் ஒரு நீளமான கண்ணாடி டம்ளர். பனி பூத்து இருந்தது. பாரியிடம் நீட்டப்பட்டது. பாரி எடுத்துக் கொண்டு கையில் பிடித்து சும்மா அமர்ந்திருந்தான்.

''குடி.''

அதன்பின் ஒரு சீப்பு சீப்பினான். எலுமிச்சை சர்பத் தான். சூப்பராக இருந்தது. கொஞ்சமும் புளிப்பு இல் லாமல் ஆனால் எலுமிச்சை சர்பத்துதான் என்று தெரியும் வண்ணம் அது அமைந்திருந்தது.

''நான் நேரடியாகப் பேசுகிறேன்...'' என்று ஆரம்பித்தார் பாஸ். ''என்னை எல்லோரும் பாஸ், பாஸ் என்று தான் கூப்பிடுவார்கள். பெயரைச் சொல்ல மாட்டார்கள். என் பெயர் சுப்புரத்தினம். ரொம்ப நெருக்கமானவர்களுக்கு சுப்பு. என்னுடைய இறந்த காலம் கிட்டத்தட்ட உன்னுடையது போல் தான். ரொம்ப நேர்மையாக இருந்தேன். அதனால் நிறைய அடிபட்டேன். சத்தியமே ஜெயம், நேர்மையே வெல்லும் என்றெல்லாம் எழுதி வைத்திருக்கிறார்கள். அவையெல்லாம் பொய் என்று சொல்ல மாட்டேன். ஆனால் சத்தியத்தை ஜெயிக்க வைப்பதற்கும், நேர்மையை வெல்ல வைப்பதற்கும் மனிதனுக்கு நிறைய சாமர்த்தியம் வேண்டும் என்பதை பிற்பாடுதான் தெரிந்து கொண்டேன். நல்லவர்கள் வாழ வேண்டும். இது சாதாரணமான உலக நியதி. நல்லவர்கள் வாழ வேண்டும் என்றால் கெட்டவர்கள் அழிய வேண்டும். கெட்டவர்களை அழிப்பது நம் சாமர்த்தியம். நான் சொல்வது புரிகிறதா?''

பாரி தலையசைத்தான். அவரது வார்த்தைகள் ஏற்றுக் கொள்ளக்·கூடியதாக இல்லை. ஆனாலும் முரண்பட அப்போது அவன் தயாராய் இல்லை.

''பெரிய பெரிய மகான்கள் கூட சத்தியம் ஜெயிக்க வேண்டும் என்பதற்காகப் பொய் சொல்லியிருக்கிறார்கள். பாண்டவர்கள், நல்லவர்கள், நேர்மையானவர்கள். அவர்கள் ஜெயிக்க என்னவெல்லாம் செய்ய வேண்டியிருந்தது என்று யோசித்துப் பார். துரோணரைக் கொல்ல அசுவத்தாமன் காலி என்று பொய் சொல்ல வேண்டியிருந்தது. துரியோதனனை வீழ்த்த அவன் தொடையில் வாழை இலை கட்டி அனுப்ப வேண்டியிருந்தது. அர்ஜுனன் பலியாகாமல் இருக்க கர்ணன் ஒரு முறை தான் பிரம்மாஸ்திரம் எறியலாம் என்ற வரத்தை வாங்க வேண்டியிருந்தது. அவனது கவச, குண்டலங்களை இந்திரன் ஏழை அந்தணன் வேஷம் போட்டுப் போய் தானமாகக் கேட்டுப் பெற வேண்டி இருந்தது.''

சுப்பு சார் சொல்வதை அப்படியே வாய் பிளந்து கேட்டுக் கொண்டிருந்தான் பாரி.

''ஐ'ம் ஸாரி. இதையெல்லாம் இப்போது எதற்குச் சொல்லிக் கொண்டிருக்கிறேன் என்று தோன்றுகிறது இல்லை? நான் ஒரு சாதாரண ஆளாக இருந்தேன் என்று சொன்னேன் அல்லவா? சில நிகழ்ச்சிகள் என்னை அசாதாரணமானவனாக மாற்றி விட்டன. பெரிய தாதாவாகி விட்டேன். காலரில் அரிவாளை வைத்துக் கொண்டு அலைந்தேன். நிறைய பேரை சம்ஹாரம் பண்ணியிருக்கிறேன். சம்ஹாரம் என்றால் கொலை என்று அர்த்தம். நான் கையில் கோல் எடுத்தவுடன் என்னைச் சுற்றியிருந்த குரங்குகள் எல்லாம் பயப்பட ஆரம்பித்தன. தாதாவாக மாற பெரிதாக பலம் எதுவும் தேவையில்லை. தைரியம் வேண்டும். துணிச்சல் வேண்டும். அப்படித்தான் தாதா ஆனேன். தாதா ஆனவுடன் போட்டி தாதாக்களை எல்லாம் போட்டுத் தள்ளினேன். என்னைப் பல்லக்கில் உட்கார வைத்து விட்டார்கள். போலீஸ்காரர்கள் எல்லாம் என் எதிரில் வந்தால் உட்கார மாட்டார்கள். கைகட்டி வாய் பொத்தி நிற்பார்கள். நீ உன்னைச் சுட்டுக் கொள்ள முயன்றாயே... அப்போதுகூட காப்பாற்ற வேண்டும் என்று காப்பாற்றவில்லை. ஜஸ்ட் லைக் தட்... ஒரு ரிப்ளெக்ஸ் காரணமாக உன் துப்பாக்கியின் திசையை மாற்றி விட்டேன். குண்டு உன்னை உராய்ந்து கொண்டு சென்றது. நீ உயிர் பிழைத்து விட்டாய். உன்னை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகச் சொல்லிவிட்டு உன்னைப் பற்றி விசாரித்தேன். போலீஸ்காரர்களிடம் இல்லை. நீ வேலை பார்க்கும் பிரதேசத்தில். உன்னைப் பற்றித் தெரிந்து கொண்டேன். நீ எதற்கு அனாவசியமாக செத்துப் போக முயற்சி செய்தாய்? நீ செத்து விட்டால் உன்னைச் சுற்றி இருப்பவர்கள், தப்பு செய்பவர்கள் எல்லாம் மாறி விடுவார்களா என்ன? உன்னை மாட்ட வைத்தவர்களை எல்லாம் நீ மண்டியிட வைக்க வேண்டாமா? நீ நேர்மையானவன் என்றால் மட்டும் போதாது. நேர்மையானவன் வீரனாகவும் இருந்து நேர்மையை வெற்றியடையச் செய்வான் என்று இருக்க வேண்டும். அதுதான் சரி. நேர்மை ஜெயிக்கும் என்றால் மனிதர்கள்தானே ஜெயிக்க வைக்க வேண்டும்? எதற்காக இப்படி மற்றவர்கள் உன்னைக் குழி தோண்டிப் புதைக்கும்போது புதைத்தால் புதைக்கட்டும் என்று விட்டுக் கொடுக்கிறாய்?''

அவர் நிறுத்தினார். கையில் இருந்த டம்ளரில் மிச்சம் இருந்ததை அப்படியே சரித்துக் கொண்டார். அவர்

அவ்வளவு பேசியதற்கு அப்படித்தான் ஒரேயடியாகச் சரித்துத் தொண்டையைச் சமாதானப்படுத்த வேண்டும். பின் இமை கொட்டாமல் பாரியையே உற்றுப் பார்த்தார்.

பாரிக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. மனம் குழப்பத்தில் இருந்தது. இன்ஸ்பெக்டர் சப்-இன்ஸ்பெக் டர்கள், ஹெட் - கான்ஸ்டபிள் என்று எல்லோரும் சந்தர்ப்பவாதிகள்தான். நேர்மை ஜெயிக்க வேண்டும் என்பதற்காக இன்ஸ்பெக்டரையும், சப்-இன்ஸ்பெக்டரை யும் தன் முன் மண்டியிடச் செய்து உட்கார வைத்தால் கடந்து போன அவனது இறந்த காலம் மறுபடி உயிர் பெற்று விடுமா என்ன? அவன் மேல் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தார் அவனுடைய தந்தை! அந்த நம்பிக்கைகள் எல்லாம் இரண்டு மூன்று அயோக்கியர்களால் சின்னா, பின்னமாகி விட்டதே! அவனுக்கு அழுகை வந்தது. அழக்கூடாது என்று கட்டுப்படுத்திக் கொண்டான். சுப்பு சாரை நிமிர்ந்து பார்த்தான்.

''நீங்கள் சொல்வதெல்லாம் சரிதான். நேர்மை ஜெயிக்க வேண்டும் என்றால் மனிதன் ஒருவன் வீரமாக இருந்தாக வேண்டும் என்று இப்போது புரிகிறது. ஆனால் என் வாழ்க்கை ஒரு முடிவுக்கு வந்து விட்டது. எல்லோருமாகச் சேர்ந்து எனக்கு தேசிய கீதம் பாடி விட்டார்கள். அப்பா செத்து விட்டார். முகம் கூட பார்க்காத பெண்ணைக் கற்பழித்திருப்பதாக வழக்கு. வேலை போய் விட்டது. கற்பழிப்பு குற்றமும் நிச்சயம் நிரூபிக்கப்பட்டு விடும். தேனீக்கள் கூட்டம் போல் எனக்கு எதிராக சாட்சி சொல் லப் படை திரளும். ஏழு வருடமோ, எட்டு வருடமோ தெரியாது'' என்றான் பாரி தாங்க முடியாத குமுறலுடன்.

சுப்பு சார் சிரித்தார்.



''நீ வீட்டுக்குப் போ. ஏதாவது கொஞ்ச நஞ்சம் கழித்துக் கட்ட வேண்டியது, அது, இது என்று இருந்தால் கழித்துக் கட்டு. வீட்டைக் காலி செய்துவிடு. அப்புறம் நீ வேலை செய்த ஸ்டேஷனுக்குப் போ. என்ன நடக்கிறதென்று பார். உன்னை ஜெயிலில் போட்டால் மறுக்காமல் ஜெயி லுக்குப் போ. என்னை நீ எப்படியும் சந்திக்க வருவாய். அப்போது சொல்கிறேன் நீ என்ன செய்ய வேண்டுமென்று'' என்றார் சுப்பு சார்.

சுப்பு சார் சொன்ன வார்த்தைகள் எல்லாம் புரிந்தன. நல்ல தமிழில்தான் அவை இருந்தன. ஆனால் அவனால் தான் அவர் சொன்னது எதையும் புரிந்து கொள்ள முடிய வில்லை.

சுப்பு சார் சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டுச் சரேலென அகன்றார்.

பாரி எதுவும் செய்யத் தோன்றாதவனாக நின்றிருந் தான்.

## 5

வைத்தி வந்தான். பாரியின் தோளில் கை வைத் தான். பாரி திடுக்கிட்டுத் திரும்பினான். வைத்திதான் என்று தெரிந்து சமாதானமானான்.

''போகலாமா?''

பாரி அவனுடன் நடந்தான். மறுபடி பாலியோ. அவன் வீடு இருந்த தெருமுனையில் கார் அவனை இறக்கி

விட்டது. அந்தப் பயணத்தின்போது வைத்தி ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. பாரிக்கும் அவனை ஒன்றும் கேட்கத் தோன்றவில்லை.

பாரி இறங்கியவுடன் கார் பின் வாங்கியது. நின்றது. தயங்கியது. அதன் டிரைவிங் சீட் கண்ணாடி இறங்கியது. ஜன்னல் வழியாக வைத்தி அவனைப் பார்த்தான். அந்தப் பார்வையில் பரிதாபம் கலந்து இருந்தது. பின் ஒட்டாமல் ஒரு சிரிப்பு சிரித்தான்.

"குட் லக் பாரி" என்றான்.

"தாங்க்ஸ்" என்றான் பாரி. வீட்டை நோக்கி நடந்தான்.

தெரு உற்சாகமாக இருந்தது. விளக்குகள் எரியத் தொடங்கி இருந்தன. எப்போது துப்பாக்கிக் குண்டால் காயம் ஏற்பட்டது? எவ்வளவு நாள் ஆஸ்பத்திரியில் இருந்தோம்? இன்றைக்கு என்ன தேதி, என்ன கிழமை? எந்தக் கேள்வியும் பாரிக்குத் தோன்றவே இல்லை. செலுத்தப்பட்டவனைப் போல் நடந்து கொண்டிருந்தான். நாளும், கிழமையும், கோளும், கிரகமும் தெரிந்து என்ன ஆகப் போகிறது? அவன் வாழ்க்கை எந்தத் திசையில் செல்லப் போகிறது? எதுவுமே புரியவில்லை.

தண்ணீர் லாரி நின்றிருந்தது. பெண்கள் வழக்கம் போல் கூச்சல், குழப்பத்துடன் பிளாஸ்டிக் குடங்களை ஒன்றோடொன்று மோதவிட்டபடி நீர் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

மளிகைச் சாமான்கள் வாங்கும் 'பாய்' கடை திறந்து இருந்தது. பாய் உட்கார்ந்து இருந்தார். அவருக்கு நானூறு ரூபாய் மிச்சம் தர வேண்டும்.

ஆரம்ப நாட்களில் அவன் கடைக்குப் பின்னால் எழுந்து நின்று முகம் மலர வரவேற்கும் பாய், அவன்



கடன்காரனான பின்பு அந்த மரியாதையை எல்லாம் நிறுத்தி வைத்திருந்தார். இப்போது அவனைப் பார்த்து எழுந்து சிரித்து கை தூக்கி வரவேற்றார்.

"வாங்க அண்ணாச்சி..."

பாரி பதிலுக்குக் கை உயர்த்தி வீடு நோக்கி நடந்தான். பிளாட்பாரத்தில் ஒரு கும்பல் சீட்டாடிக் கொண்டிருந்தது. மடித்துவிடப்பட்ட லுங்கி. கோடு போட்ட அண்டர்வேர், பாரியைப் பார்த்தவுடன் சட்டென்று விளையாட்டு நின்றது. அந்தக் கும்பல் எழுந்து ஆளுக்கொரு பக்கமாகப் பிய்த்துக் கொண்டு ஓடியது. பாரி சிரித்துக் கொண்டான். இன்னமும்தான் போலீஸ்காரன் என்ற எண்ணம் அவர்களிடம் இருந்தது என்பதே அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. சிறுவர்களும், சிறுமிகளும் அரை நிர்வாணமாக ஒருவரை ஒருவர் துரத்திக் கொண்டு ஓடினார்கள்.

பாரி தன் வீட்டிற்குள் நுழைந்தான். ஆச்சரியப்பட்டான். அதைக் காலி செய்து விட வேண்டும் என்ற எண்ணத்துடன்தான் அவன் அந்த வீட்டிற்கு வந்ததே! வீடு காலியாக இருந்தது. சுத்தமாக இருந்தது.

வீட்டுக்காரர் வந்தார். கை கூப்பினார்.

"நீங்கள் வீடு காலி பண்ண விரும்புவதாக ஆள் வந்து தகவல் சொல்லி விட்டுப் போனது. உங்கள் விருப்பப்படி வீட்டைக் காலி செய்து விட்டேன். சின்னச் சின்னப் பாத்திரங்களை எல்லாம் எடைக்குப் போட்டு விட்டேன். நீங்கள் கொடுத்த அட்வான்ஸ், பாத்திரங்களை விற்று வந்த தொகை என எல்லாம் இந்தக் கவரில் இருக்கின்றன" என்று அவனிடம் ஒரு கவரை நீட்டினார்.

பெற்றுக் கொண்டான். திறந்து பார்த்தான். எதிர்பார்த்ததைவிட அதிகமாகவே இருந்தது. விடைபெற்றுக் கொண்டான். வெளியே வந்தான்.

மளிகைக் கடை பாயின் கடனைத் தீர்த்து விடும் எண்ணத்துடன் அவரை நெருங்கினான். பாய் எழுந்து கொண்டார். அவன் பையில் இருந்து கவரை எடுத்து நான்கு நூறு ரூபாய் நோட்டுகளை உருவி ''உங்களுடைய கடன் பாக்கி பாய்'' என்று சொன்னான்.

பாய் சிரித்தார். ''எத்தனை தடவை கொடுப்பீர்கள்? அதுதான் ஏற்கனவே நீங்கள் அனுப்பிய ஆள் பணத்தைக் கொடுத்து விட்டுப் போய் விட்டானே?'' என்று அவர் பணத்தை மறுத்தார்.

அலாவுதீன் விளக்கு அவன் கையில் வந்து அடைக்கலமாகி விட்ட மாதிரி வேலைகள் எல்லாம் அவன் வசத்தில் இல்லாமலேயே நடந்து கொண்டிருந்தன.

அவன் மறுக்க, மறுக்கக் கேட்காமல் பாய் அவனிடம் உலர்ந்த திராட்சைகளும், முந்திரிப் பருப்பும் நிறைந்த ஒரு பொட்டலத்தைத் திணித்தார்.

பாரி அங்கிருந்து அகன்றான்.

அவன் வேலை செய்த போலீஸ் - ஸ்டேஷனில் இன்னொரு ஆச்சரியம் காத்திருந்தது.

அவன் மேல், கற்பழித்ததாகக் குற்றம் சுமத்தியிருந்த மாலா தன் குற்றச்சாட்டை வாபஸ் வாங்கிக் கொண்டிருந்தாள். அவள் விபச்சாரத்தில் ஈடுபட்டிருந்தபோது, பாரி அவளைக் கையும் களவுமாகப் பிடித்து விட்டதாகவும், கேஸ் போடாமல் இருக்க மாலா லஞ்சம் கொடுத்ததாகவும், பாரி அதை ஏற்க மறுத்ததாகவும், எனவே கோபம் கொண்டு பாரியின் மேல் பொய்க் குற்றச்சாட்டு சொன்னதாகவும் கூறியிருந்தாள்.



லாக் - அப்பில் இருந்த வேறொரு குற்றவாளி அவளிடம் தப்பாக நடந்து கொண்டதைப் பார்த்த ஏட்டு அதைப் பாரி என நினைத்து சாட்சி சொன்னதாகவும் இன்னொரு வாக்குமூலத்தை எழுதிக் கையெழுத்துப் போட்டிருந்தார்.

திடீரென உலகம் தலைகீழாக மாறியிருந்தது.

பாரியின் மீது போடப்பட்டிருந்த வழக்கு ரத்து செய்யப்பட்டிருந்தது. அவனை சஸ்பெண்ட் செய்திருந்த உயர் அதிகாரி அவனுடைய சஸ்பென்ஷனை ரத்து செய்து இருந்தார்.

பாரி உடனே வந்து வேலையில் சேர்ந்து கொள்ளலாம் என்று ஹெட்-கான்ஸ்டபிள் அவனிடம் பரிவுடன் சொன்னார்.

''என்ன இது?'' என்றான் பாரி. வியப்பின் உச்சியில் உட்கார்ந்து இருப்பது போன்றதொரு உணர்வு.

''எது என்ன?'' என்று பரிவுடன், பணிவுடன் கேட்டார் ஹெட் - கான்ஸ்டபிள்.

''எப்படி நான் திடீரென்று குற்றமற்றவனாக மாறினேன்? எதனால் என் சஸ்பென்ஷன் ஆர்டர் ரத்து ஆகியது?''

ஹெட் கான்ஸ்டபிள் தர்ம சங்கடத்துடன் அவனைப் பார்த்தார்.

''பாரி சார். சுப்பு சாரை உங்களுக்குத் தெரியும் என்பதை நீங்கள் எங்களிடம் முன்னாலேயே சொல்லி இருக்கலாம்'' என்றார்.

ஆக இத்தனை மாற்றங்களுக்கும் சுப்பு சார்தான் காரணம்.

பாரி தீர்மானித்தான். எப்போதும் அனைவரிடமும் பணிவுடன் நடந்து கொள்வதுதான் அவன் வழக்கம். முதலில் அந்தப் பழக்கத்தை மாற்றுவது என்று முடிவெடுத்தான். பாத்திரமறிந்து பிச்சையிடு.

ஹெட் கான்ஸ்டபிளை ஓர் அக்கினிப் பார்வை பார்த்தான், ''எங்கே இன்ஸ்பெக்டர்? எங்கே சப்-இன்ஸ்பெக்டர்? எல்லோரும் எங்கே போய்த் தொலைந்தார்கள்?''

ஹெட் கான்ஸ்டபிள் பாரியின் கோபத்தைக் கண்டு அஞ்சினான். ஸ்டேஷனில் இருந்த வயர்லெஸ்... போனில் இன்ஸ்பெக்டரைப் பிடித்தான். அவரை உடனே ஸ்டேஷனுக்குத் திரும்பச் சொன்னான்.

ஐந்தாவது நிமிடம் இன்ஸ்பெக்டரும், சப்-இன்ஸ்பெக்டரும் பாரியின் எதிரில் தொப்பியைக் கழற்றிக் கொண்டு நின்றார்கள்.

''நான் என் வேலையை ராஜினாமா செய்யப் போகிறேன். முதலில் ஒரு பேப்பரும் பேனாவும் வேண்டும்'' என்றான்.

பேப்பர் வந்தது. உடன் நல்லதொரு பேனாவும் வந்தது.

பாரி ராஜினாமா கடிதத்தை எழுதி நீட்டினான்.

இன்ஸ்பெக்டர் உடனே அதை ஏற்றுக் கொண்டார். வேலையில் இருந்து அவனை விடுவிப்பதாக ஒரு கடிதம் எழுதித் தயாராக இருந்தது. அதில் தேதி போட்டுக் கையெழுத்திட்டு நீட்டினார். அவனுடைய சம்பள பாக்கி, பி.எஃப் தொகை, கிராஜுவிட்டி தொகை எல்லாம் கணக்கிடப்பட்டு, பணம் பாங்கில் இருந்து எடுக்கப்



பட்டுத் தயாராக இருந்தது. அதையும் அவனிடம் நீட்டினார்.

பாரிக்கு உள்ளூர வியப்பு. ஒரு அரசு அலுவலகத்தில் இவ்வளவு வேகமாக வேலை நடக்க முடியுமா? வியப்பை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

''ஒருவேளை நான் வேலையைத் தொடர்வதாக இருந்திருந்தால்?'' என்று கேட்டான்.

''ஒரு பிரச்னையும் இல்லை சார். பணத்தை பாங்கில் கட்டியிருப்போம். இது தனிக் கணக்கில் இருந்து எடுக்கப்பட்ட பணம். எல்லா அட்ஜஸ்ட்மென்டையும் அப்புறம் பண்ணிக் கொள்வோம். இப்போது நீங்கள் மனதை மாற்றி வேலையில் இருக்கப் போவதாகச் சொன்னாலும் எங்களுக்கு சந்தோஷமே. உங்கள் ராஜினாமா கடிதத்தை உடனேயே கிழித்துப் போட்டு விடுவோம். நீங்கள் பாட்டுக்கு வேலையில் இருக்கலாம். ஸ்டேஷனுக்கு வரவேண்டும் என்று கூட இல்லை. சம்பளம் நீங்கள் இருக்குமிடத்தைத் தேடி வரும்...'' என்றார் இன்ஸ்பெக்டர் உண்மையான பணிவுடன்.

'நான் கையில் கோல் எடுத்தவுடன் என்னைச் சுற்றி இருந்த குரங்குகள் பயப்பட ஆரம்பித்தன' என்று சுப்பு சார் சொன்னது நினைவிற்கு வந்தது.

குரங்கு என்றால் கோல் எடுத்துத்தான் ஆக வேண்டும்.

பாரி அங்கிருந்து புறப்பட்டான்.

## 6

மறுபடி சுப்பு சார் வீடு.

"நீ வருவாய் என்று எதிர்பார்த்தேன். வேலையை விட்டு விட்டாயாமே...?" என்று கேட்டார் சுப்பு சார்.

"ஆம்."

"வெரிகுட். எனக்காக வேலை செய்கிறாயா?"

"செய்கிறேன்."

"சரி. நீ உன் தைரியத்தை நிரூபிக்க வேண்டும். உன் புத்திசாலித்தனத்தை உபயோகிக்க வேண்டும். வெள்ளை உள்ளம் கொண்ட பழைய பாரி சாக வேண்டும். பூமிக்குப் புதியவனாக மாற வேண்டும்."

"மாறுகிறேன்..." என்றேன். "தைரியத்தையும், புத்தி சாலித்தனத்தையும் என்னால் நிரூபித்து உபயோகிக்க முடியும். அப்படி எதுவும் முடியாவிட்டால் உங்கள் முன் உயிரோடு வந்து நிற்க மாட்டேன்..."

"ரைட், ஜஸ்தான் சாப்பிடுவேன் என்று பிடிவாதம் பிடிக்காதே. அது உன்னைத் தர்ம வழியில் இருந்து தவற விடாது. புரியும் என்று நினைக்கிறேன். இன்றில் இருந்து என்னை நீ சந்திக்கக் கூடாது. உன் வேலையை முடித்து விட்டுத்தான் சந்திக்க வேண்டும். போ..."

என்ன வேலை, எங்கே போக வேண்டும்? பாரி கேட்க வில்லை. விலகி வெளியே வந்தான்.

வைத்தி காத்திருந்தான்.

"நீ அந்தமானுக்குப் போகப் போகிறாய். இந்தா டிக்கெட். இந்தா உன் பெட்டி. போ."

பாரி கப்பல் டிக்கெட்டைப் பெற்றுக் கொண்டான். பெட்டியை வாங்கிக் கொண்டான்.

வெளியே வந்தான்.



ஒரு பழைய அம்பாசிடர் டூரிஸ்ட் கேப் வண்டி காத்திருந்தது. டிரைவர் கதவைத் திறந்து காத்திருந்தான். அம்பாஸிடரில் ஏற வேண்டும் என்று அவனுக்குப் புரிந்தது.

ஏறினான். அம்பாஸிடர் புறப்பட்டது. பூந்தமல்லி நெடுஞ்சாலையில் இருந்த குரு பிரசாத் என்ற ஹோட்டலின் காம்பவுண்டில் நுழைந்தது. நின்றது.

பாரி இறங்கினான். டிரைவர் அவனை நெருங்கி, "நானூற்று இரண்டு" என்று உதடுகள் பிரியாமல் சொன்னான்.

பாரி லேசாகத் தலையாட்டினான. ரிசப்ஷனை நோக்கினான்.

"ரூம் நம்பர் நானூற்று இரண்டு எனக்காக ரிசர்வ் ஆகியிருக்கிறது" என்றான்.

"ஓ... மிஸ்டர் பாரி?"

"ஆம்."

அவனிடம் ரூம் சாவி கொடுக்கப்பட்டது. ரிசப்ஷனில் இருந்த ரூம்பாய் அவனிடம் இருந்த பெட்டியைக் கவர்ந்து கொண்டான். திறந்திருந்த லிப்டில் ஏறினான்.

நான்காவது மாடி வராந்தா. ரூம்பாய் நடந்தான். பாரி தொடர்ந்தான். வளைவைக் கடந்தவுடன் ரூம் நம்பர் 402.

அறைக்குள் நுழைந்தவுடன் கப்பல் டிக்கெட்டைப் பிரித்துப் பார்த்தான். அவனது போட்டோ ஒட்டியிருந்தது. கப்பலில் முதல் வகுப்பு டிக்கெட். மறுநாள் கப்பல் புறப்பட இருந்தது. பெட்டியைத் திறந்து பார்த்தான். அவனுக்கான உடைகள். ஷேவிங் - கிட். சோப், பற்பசை, டூத் பிரஷ். பெட்டியின் உள்ளே இருந்த ஒரு ஜிப் போட்ட

லெதர் பேகைத் திறந்தால் அதில் நூறு ரூபாய், ஐநூறு ரூபாய் நோட்டுகள். மேலும் அந்தமானில் டீல் - ஹவுஸ் என்னும் ஒரு தங்கும் விடுதியில் ரிசர்வ் செய்யப்பட்ட தற்கான ரசீது.

அவன் யாரையும் எதுவும் கேட்கத் தேவையில்லை என்பது போல் எல்லா விஷயங்களும் முன்கூட்டியே திட்டமிடப்பட்டு நடந்து கொண்டிருந்தன.

எனவே அவன் எதைப் பற்றியும் யோசிக்காமல் வான்வெளி மேகம் போல் இருந்து விடலாம் என்று தீர்மானித்தான். காற்று தீர்மானித்து மேகத்தை எந்தத் திசையில் இழுத்துச் செல்கிறதோ அதுபோல் எந்தத் திசைக்கு வேண்டுமானாலும் போவது என்று முடிவு செய்தான்.

பாத்ரூமில் வெந்நீர் வந்தது. திருப்தியாகக் குளித்தான். மெட்றாஸ் மீல்ஸ் ஆர்டர் செய்து சாப்பிட்டான். தூங்கி னான். மாலை அறைக்கு ஸ்காட்ச் விஸ்கியும், வறுத்த முந்திரியும் வந்து சேர்ந்தன. ஆர்டர் பண்ணாமலேயே புதிய மனிதனுக்காக!

சுப்பு சார் ஏற்பாடுதான். மறுக்காமல் குடித்தான். தந்தூரி சிக்கனைக் கடித்தான். சொர்க்கம்.

ஏறக்குறைய முடிந்துபோன அவன் வாழ்க்கைக்கு சுப்பு சார் உயிரூட்டி இருக்கிறார். அது மட்டுமில்லை. எச்சில் சோறு தின்று, அடுத்தவர் வயிற்றில் மண் அள்ளிப் போட்டு வாழும் கோழைகளை அவனைப் போன்றவர்கள் கம்பீரமாக இருந்து தவறுகளைத் தட்டிக் கேட்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்.

தாய்ப்பாலோடு சேர்த்து குடித்த தன்னம்பிக்கையை யும், தகப்பன் ஊட்டி வளர்த்த தைரியத்தையும் மறந்து



விட்டுத் தன் வாழ்க்கையை முடித்துக் கொண்டால் மற்றவர்கள் திருந்தி விடப் போகிறார்களா என்ன?

புது மனிதனாக மாறி, வாழ்க்கையைத் தான் விரும்பும் விதத்தில் அமைத்துக் கொள்வது என்று தீர்மானித்தான் பாரி.

எப்போது தூங்கிப் போனான். என்று அவனுக்கேத் தெரியாது.

# 7

*சென்னையை விட்டுப் புறப்பட்ட நாற்பத்து எட்டாவது மணி நேரம் கப்பல் அந்தமானின் போர்ட் - ப்ளேயர் துறை முகத்தை அடைந்தது.*

கப்பலில் இருந்து இறங்கினேன். புஜத்தின் வலி மையைக் காட்டுகிற மாதிரி ஒரு டீ-ஷர்ட் அணிந்திருந் தேன். கால்களைக் கவ்விப் பிடிக்கும் ஜீன்ஸ், ரீபோக் ஷூ, தரமான குளிர் கண்ணாடி உள்ளும், புறமும் மாறிய பாரி.

துறைமுகத்தை விட்டு வெளிப்பட்டேன். வாசலி லேயே மூங்கில் தட்டு ஒன்றை கழுத்தில் மாட்டிக் கொண்டு ஒரு சிறுவன் பீடாவும், சிகரெட்டும் விற்றான்.

சிகரெட் ஒன்றை உருவி எடுத்துப் பற்ற வைத்தேன். நாணயத்தைச் சுண்டினேன்.

டாக்ஸி டிரைவர்கள் சூழ்ந்தார்கள். இளைஞனாக ஒருவனைத் தேர்ந்தெடுத்தேன். ஏறி உட்கார்ந்தேன்.

''டீல் ஹவுஸ்.''

அடுத்த இரண்டாவது நிமிஷம் டாக்ஸி 'டீல்' ஹவுஸ் வாசலில் நின்றது.

இறங்கினேன்.

எனக்காக ரிசர்வ் செய்யப்பட்டிருந்த அறை அழகாக இருந்தது. எளிமையாக இருந்தது. குளித்தேன். சாப்பிட்டேன். தூங்கினேன். மாலை எழுந்தேன். பயணக் களைப்பு முற்றிலுமாக அகன்றிருந்தது.

அந்தமானில் எனக்காக என்ன காத்திருக்கிறது? நான் என்ன செய்ய வேண்டும்? தெரியவில்லை. ஆனால் ஏதாவது நடக்கும். கண்ணையும், காதையும் திறந்து வைத்துக் கொண்டு காத்திருப்பது என்று தீர்மானித்தேன்.

அழகாக ஆடை அணிந்தேன். சென்ட் பீய்ச்சிக் கொண்டேன்.

அறையிலிருந்து வெளிப்பட்டேன். டீல் ஹவுஸ் புல்வெளியில் சுற்றுலாவிற்கு அந்தமான் வந்தவர்களின் குழந்தைகள் சறுக்கு மரத்திலும் ஸீ-ஸாவிலும் விளையாடிக் கொண்டிருந்தன.

மாலை ஆறு மணி. அந்த நேரத்திற்கே அந்தமான் மிக நன்றாக இருட்டி இருந்தது. மாலை நான்கு முப்பதிற்கே சூரியன் அஸ்தமனமாகி விடுவான் என்பதால் அப்போதிலிருந்தே இருட்டு மெல்ல நழுவி அந்தமானில் நுழைந்து விடும்.

விளக்குகள் ப்ளோரசன்ட் வெளிச்சத்தை வாரி இறைத்துக் கொண்டிருந்தன.

டீல் ஹவுஸ் காம்பவுண்டில் இருந்து வெளிப்பட்டு சாலைக்கு வந்தேன்.



இடதும் வலதும் பார்த்தேன். தார்ச்சாலை சுத்தமாக இருந்தது. சென்னையின் போக்குவரத்து சுத்தமாக இல்லை. ஏதோ ஒரு பிரைவேட் சாலைக்குள் வந்து விட்ட உணர்வு தான் இருந்தது.

இடது பக்கச் சாலையில் சற்று தூரத்தில் 'டைன் அண்ட் டான்ஸ்' என்று பச்சையும், சிகப்புமாக நியான் விளக்கு எரிந்து எரிந்து அணைந்து என்னை அழைத்தது.

நடந்தேன். இரண்டு வளைவுகளுக்குப் பின் டைன் அண்ட் டான்ஸை அடைந்தேன். வாசலில் இருந்த செக்யூரிட்டி தடுத்தான்.

''ஸாரி சார். ஜோடியாக வந்தால்தான் அனுமதி'' என்றான்.

திரும்பினேன். பார்க்கிங்கில் அம்பாஸிடர்களும், பியட்களும், மாருதி வேன்களும், மாருதி 800களும் மேலிருந்து போடப்பட்ட வேர்க்கடலைத் தோல்களைப் போல் சிதறிக் கிடந்தன.

என்னருகே மாருதிவேன் ஒன்று வந்து நின்று குலுங்கியது.

டிரைவிங் சீட்டில் இருந்து ஒரு பெண் இறங்கினாள்.

புடவை கட்டியிருந்தாள். தலைமுடியைப் பின்னாமல் அலட்சியமாக அலைய விட்டிருந்தாள். குட்டைக் கை ரவிக்கை. புடவை கட்டியிருந்த விதத்தில் இடுப்பின் குழைவான சரிவு தெரிந்தது.

அவளை ரசித்துக் கொண்டிருந்த வேளையில் என்னை நோக்கி நடந்து வந்தாள். என் எதிரில் வந்து நின்றாள். அவளிடம் இருந்து விரும்பத்தக்க வாசனை.

விலக நினைத்தேன்.

''எக்ஸ்க்யூஸ் மீ'' என்றாள். தேனையும் ஐஸையும் கலந்த மாதிரியான ஒரு குரல் என்று தோன்றியது.

''என்னையா?'' என்று கேட்டு அவளை நிமிர்ந்து பார்த்தேன்.

''ஆம்'' என்று தலையாட்டினாள். பரபரப்பில்லாத நிதானமான தலை ஆட்டல் அது.

கொஞ்சமே கொஞ்சம் நீளமான முகம். மெல்லிய கூரான மூக்கு. திருத்தமான புருவங்கள். சற்றே அகன்ற நெற்றியில் பாம்பு போன்றதொரு ஸ்டிக்கர் பொட்டை ஒட்டியிருந்தாள். கண்கள் அகன்று இருந்தன. அவை எப்போதும் ஆச்சரியத்தில் இருப்பது போன்ற ஓர் உணர்வை ஏற்படுத்தின.

மாநிறம் பவுடர், மஸ்காரா என்று ஆர்ப்பாட்டமாக இல்லாமல் ஆயில் மேக்-அப் போட்டிருந்தாள். அதனால் முகம் மினுமினுப்பாகத் தெரிந்தது.

நான் அவளைப் பார்ப்பது தெரிந்ததும் உதடுகளை விரித்துப் புன்னகைத்தாள்.

''யெஸ்?'' என்றேன்.

''நீங்கள் தனியாகத்தானே இருக்கிறீர்கள்?''

''ஆம்.''

''அப்படியானால் எனக்குக் கம்பெனி கொடுக்க முடியுமா ப்ளீஸ்?'' என்று கேட்டாள். அந்த ப்ளீஸில் ஒரு பிசிறு இருந்தது. கவர்ச்சி இருந்தது. மறுக்காதே என்ற வற்புறுத்தல் இருந்தது.

'நான் உங்களுக்குக் கம்பெனி கொடுக்கட்டுமா?' என்று அவள் கேட்டிருந்தால் மறுத்திருப்பேன். உதவி கோரிய மாதிரி அவள் கேட்ட விதம் எனக்குப் பிடித்திருந்தது.



''வித் ப்ளெஷர்'' என்றேன்.

அவள் வெகு இயல்பாக என்னுடன் கை கோர்த்துக் கொண்டாள்.

ரெஸ்டாரண்ட் இருட்டாக இருந்தது. மையத்தில் தரையில் சதுர விளக்குகள் பதிக்கப்பட்டு அவை அடக்கப் பட்ட வெளிச்சத்தைக் கசிய விட்டன.

அந்த மையத்தில் நிறைய ஜோடிகள் மெல்லிய அசைவுகளுடன் ஒருவரை ஒருவர் முகர்ந்து கொண் டிருந்தனர். சுற்றி வர மேஜை, நாற்காலிகள்.

இடையூறுகள் இருக்க முடியாத ஒரு மூலையை நாடி உட்கார்ந்தாள். எதிரில் தான். இருவருக்கான மேஜை அது. பேரர் வந்ததும் ரிவேரா ஒயின் ஒரு கோப்பை ஆர்டர் பண்ணினாள். எனக்கு ஒரு லார்ஜ் ஸ்காட்ச் விஸ்கி ஆர்டர் பண்ணினாள்.

அவள் பெயர் ஷீலா. ஒயினைச் சிப்பிய விதத்தில் மேல் தட்டு நாகரிகத்திற்குப் பழக்கமானவள் என்று தெரிந்தது.

''ஆடலாமா?'' என்று கேட்டாள்.

''எனக்கு ஆடத் தெரியாதே.''

''கம்-ஆன். இங்கே இருக்கிறவர்கள் எல்லாம் தெரிஞ்சா ஆடுகிறார்கள்?''

அவள் அண்மை. அவள் மென்மை. அவள் வாசனை. எல்லாமே புதிதாய் இருந்தது. எழுந்தோம். ஆடுகளத் திற்குப் போனோம்.

அவள் கை என் தோளில் படர்ந்தது. என் கை அவள் இடுப்பில். அவள் உடல் சிற்சில சமயங்களில் என் மேல் முழுமையாகப்பட்டது. நான் உணர்ச்சி வசப்படவில்லை. என் கை தவறுதலாய் அவளது இடுப்பிற்குக் கீழே இறங்கி,

அவளது பின்னில் பட்டது. அவள் பதறவில்லை. முறைக்கவில்லை. பளார் என்று அறையவில்லை.

அரை மணி நேர ஆட்டத்திற்குப் பின் உணவு மேஜையை நாடியபோது இருவருக்கும் நல்ல பசி.

அந்த ஹோட்டலில் எதெது நன்றாக இருக்கும் என்று அவளுக்குத் தெரிந்திருந்தது. ஆர்டர் பண்ணினாள்.

சாப்பிடத் தொடங்கினோம்.

''பாரி. நல்ல பெயர். இதுவரை இந்த மாதிரி பெய ருடைய ஆண் யாரையும் நான் சந்தித்ததில்லை'' என்றாள்.

''நீங்கள் இங்கே என்ன செய்கிறீர்கள் ஷீலா?''

''பாரி. இந்த நீங்கள், வாங்கள், போங்கள் எல்லாம் வேண்டாம். ப்ரெண்ட்லியாக நீ என்றே சொல்லலாம்.''

''ஓ.கே. நீ இங்கே என்ன செய்கிறாய் ஷீலா?''

''எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் வைத்திருக்கிறேன். நீங்கள் இங்கே என்ன செய்கிறீர்கள்?''

ஷீலா ஏன் வலிய வந்து என்னைச் சந்தித்தாள் என்று எனக்கு இப்போது புரிந்தது. ஆனால் எதையும் காட்டிக் கொள்ளக் கூடாது என்று தோன்றியது.

''தற்சமயம் எதுவும் செய்யவில்லை.''

''அப்படி என்றால்?''

''யூ.ஸீ. என் அப்பா, என் வாழ்க்கையின் ஆதர்சம். அவர் இறந்து விட்டார். மனைவி என்று ஒருத்தி இருந்தாள்.



விபத்தில் அவளும் போய்விட்டாள். நான் தனியாகி விட்டேன். ஒரு போலீஸ்காரனாக இருந்தேன். அந்த வேலை போரடித்தது. அதனால் வேலையை ரிசைன் பண்ணிவிட்டு இன்று முற்பகல் தான் அந்தமான் வந்து சேர்ந்தேன்.''

''அப்படி என்றால் நீங்கள் போலீஸ்காரராக இருந்தீர் களா?''

''ஆம்.''

''துப்பாக்கி சுடத் தெரியுமா?''

என் குறி தவறி உயிர் பிழைத்திருப்பதை எண்ணிக் கொண்டேன்.

''தெரியும்.''

''குட். வெரிகுட். சர்ட்டிபிகேட்ஸ் எல்லாம் இருக் கின்றனவா?''

''இருக்கிறதே. ஏன்?''

''உங்களுக்கு மறுபடியும் மெட்ராஸ் போகும் எண்ணம் இல்லையா?''

''இப்போதைக்கு - யெஸ். அதாவது நோ.''

ஷீலா சிரித்தாள். ''நான் ஒரு வேலை வாங்கித் தந்தால் போவீர்களா?''

யோசித்தேன். ஷீலாதான் அந்தமானில் எனக்கு வழி காட்டப் போகிறவளா? நான் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொல்லப் போகிறவளா? ஒரு வேளை அது ஷீலாவாக இல்லாமல் வேறு யாராவதாகவோ இருந்து விட்டால்?

வேறு யாராவதாக இருந்து விட்டால்தான் என்ன? ஷீலா மூலம் சேர்கிற வேலையை உதறி விட்டால் போகிறது.

''போகிறேன்'' என்றேன்.

''அந்தமானில் தீவுகள் அதிகம்.''

''ஆம்'' என்று ஆமோதித்தேன்.

''ஆமைத் தீவு என்றொரு தீவு இருக்கிறது. அதை விஸ்வநாத் என்பவர் விலைக்கு வாங்கியிருக்கிறார். அவருக்கு ஒரு பெண். திரிவேணி என்று பெயர். அந்தத் தீவில்தான் அவள் இருக்கிறாள். அவளுக்கு செக்யூரிட்டி கார்டாகப் போக வேண்டும் முடியுமா?''

''போகிறேன்'' என்றேன்.

சம்பளம் கேட்கவில்லை. வேலை எப்படி இருக்கும் என்று தெரியாது. வெறும் கையில் முழம்போட வந்தவனுக்கு இந்தக் கேள்விகள் எல்லாம் அனாவசியம்.

ஷீலா என்னைப் பார்த்த பார்வையில் பரிதாபம் இருந்தது.

''நன்றாக யோசித்துவிட்டு உங்கள் முடிவைச் சொல்லலாம் பாரி. அந்தத் தீவு உங்களுக்கும் ஒரு ஜெயில் மாதிரி. அதை விட்டு வெளியே வருவது கஷ்டம். மிச்சமிருக்கும் வாழ்நாளை ஒரு அந்தமான் தீவில் கழிக்க வேண்டும் என்று சொன்னால் நான் முடியாது என்று சொல்லி விடுவேன். ஏனென்றால் அங்கே சுற்றுவதற்கு இடம் இல்லை. ஹோட்டல்கள் இல்லை. சுற்றிக் கடல். சிற்சில அபூர்வ மரங்களைக் கொண்ட தோப்புகள். வெளியாட்கள் யாரும் அனுமதிக்கப்படுவதில்லை.''

''போகிறேன்.''

''ஆல் தி பெஸ்ட்'' என்று கை கொடுத்தாள். சட்டென்று என் கன்னத்தில் முத்தமிட்டாள்.

''இது எதற்கு?''



''ஏதோ என்னால் முடிந்த சந்தோஷம்'' என்று முகத்தைத் திருப்பிக் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

எனக்காகப் பரிதாபப்பட்டு அழுகிறாள் என்று தெரிந்து விட்டது.

ஆமைத்தீவு அவ்வளவு அபாயமானதொரு மரணக் குழியா?

என்ன வந்தாலும் வரட்டும். அங்கே போய்த் தீருவது என்று தீர்மானித்தேன்.

''குட் - நைட்'' என்று சொல்லிவிட்டு ஷீலா சரேலென எழுந்து கொண்டாள். பாம்பு போல வெளியேறினாள்.

## 8

அதன்பின் நிகழ்ச்சிகள் படுவேகமாக நிகழ்ந்தன. மறுநாள் எனது சர்ட்டிபிகேட்டுகள் எல்லாம் சரி பார்க்கப்பட்டன. சென்னையுடன் தொடர்பு கொண்டு என் நடத்தையைப் பற்றி நான் வேலை பார்த்த போலீஸ் - ஸ்டேஷனில் விசாரிக்கப்பட்டு நான் உத்தமன், சத்திய சீலன் என்றெல்லாம் புகழப்பட்டு அங்கிருந்து ஒரு நடத்தைச் சான்றிதழ் ஃபாக்ஸில் வந்து சேர்ந்தது.

எனது மாதாந்திரச் சம்பளம் அதிகம் என்று தோன்றியது. அவள் என்ன ராட்சசியா? இல்லை பொக்கிஷமா? இல்லை இளவரசியா?

வேலைக்கான ஆர்டர் கையில் வந்துவிட்டது. கூடவே அட்வான்ஸ் ஐம்பதாயிரம்.

பெட்டி படுக்கையை மூட்டை கட்டிக் கொண்டேன். போனிக்ஸ் துறைமுகத்திற்குப் பிற்பகல் இரண்டு மணிக்கு வந்து சேருமாறு வேலைக்கான உத்தரவில் டைப் செய்யப்பட்டிருந்தது.

போனிக்ஸ் துறைமுகத்தை அடைந்தேன்.

பிற்பகல் இரண்டு மணிக்காகக் காத்திருந்தேன்.

போனிக்ஸ் துறைமுகம் படு சுறுசுறுப்பாக இருந்தது. சுற்றுப்புறத்தில் இருந்த மனிதர்கள் வாழும் தீவுகளுக்கு அங்கிருந்து சிறு சிறு கப்பல்கள் விடப்பட்டிருந்ததால் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. சாத்துக்குடி விற்ப வர்கள், கமலா ஆரஞ்சு விற்பவர்கள், இஞ்சி மொரப்பா விற்பவர்கள் என்று அந்த இடம் ஒரு பஸ் ஸ்டாண்டை நினைவு படுத்தியது.

சிறு கப்பல்கள் வந்து சேர்ந்தன. மக்கள் இறங்கி சாலைக்கு விரைந்தார்கள். பூம், பூம் என்று ஹார்ன் கொடுத்து விட்டுச் சில கப்பல்கள் புறப்பட்டன. சின்னச் சின்ன மீன் பிடிக் கப்பல்களில் ஸ்டவ் வைத்து சப்பாத்தி சுட்டார்கள். குளித்தார்கள். துணிகளைக் காயப் போட் டார்கள். சீட்டு விளையாடினார்கள். ஒவ்வொரு கப்பலின் விலாப் பகுதியில் இருந்தும் ஒரு ஓட்டை வழியாக மூன்று விரல் தடிமனுக்கு இடையறாமல் நீர் வேகத்துடன் வெளிப் பாய்ந்து 'சல்' என்று வளைந்து கடலில் இறங்கிக் கொண்டே இருந்தது. அந்தத் தண்ணீர் எங்கிருந்து வருகிறது? எதற்காக வருகிறது? நோ ஐடியா.

யாரோ என் தோளைத் தொட்டார்கள். திரும்பினேன்.

''மிஸ்டர் பாரி?'' என்றான் ஓர் இளைஞன். வெள்ளைச் சட்டை. வெள்ளை பேண்ட். வெள்ளைத் தொப்பி. நல்ல வேளை. மீசை கறுப்பாக இருந்தது.



''யெஸ்.''

''போகலாமா?''

நேரம் பார்த்தேன். பிற்பகல் இரண்டு மணி. ஆச் சரியத்தை வெளிக்காட்டாமல் அவனுடன் நடந்தேன்.

துறைமுக சிமெண்ட் தளத்தின் முடிவில் ஒரு இயந்திரப் படகு தண்ணீரில் வாத்து அசைவது போல் அசைந்து அசைந்து காத்திருந்தது.

அதில் அவன் தாவிக் குதித்தான். என்னையும் குதிக்கச் சொன்னான். குதித்தேன்.

படகு ட்ர்ர் என்று ஒலியெழுப்பிக் கொண்டு புறப் பட்டது.

மேலே நீலவானம் பிசிறு பிசிறாய், ராட்சசக் குழந்தை ஒன்று பிய்த்துப் போட்டப் பஞ்சுப் பொதிகளாய் மேகங்கள். கீழே முடிவில்லாத நீலமான கடல் பரப்பு. அங்கங்கே டால்பின்கள் துள்ளி விளையாடின. அவ்வப் போது கடற்பரப்பில் தீவுகள் சின்னதும் பெரியதுமாய் கடந்து கொண்டிருந்தது.

அரை மணி நேரப் பயணத்திற்குப் பின் படகு ஒரு தீவின் கரையோரம் ஒதுங்கியது. தீவின் கரையில் சின்னதாய் ஒரு படகுத்துறை கட்டப்பட்டிருந்தது.

படிகளில் ஏறினேன்.

படிகளின் முடிவில் ஒரு போர்டு இருந்தது. அந்த போர்டில்,

தனியார் தீவு.

அத்து மீறிப் பிரவேசிப்பவர்கள்

தண்டனைக்குள்ளாவார்கள்.

என்னும் செய்தி தமிழ், ஆங்கிலம், ஹிந்தி ஆகிய மூன்று மொழிகளிலும் எழுதப்பட்டிருந்தது.

போர்டில் இருந்து இருபது அடி தூரத்தில் ஒரு செக்யூரிட்டி நின்றிருந்தான். அவன் இடுப்பில் ஒரு ரிவால்வர் செருகியிருந்தது.

அவன் என்னைப் பார்த்தான். புருவங்கள் உயர்ந்தன. பின்னால் வந்த மோட்டார்ப் படகு ஓட்டி வந்த இளைஞனைப் பார்த்தான். புருவங்கள் தாழ்ந்தன.

ரிவால்வர் மீது வைத்த கையை விலக்கினேன்.

அந்த சாம்ராஜ்யத்திற்குள் நுழைந்தேன்.

எனக்கு வேலை போட்டுத் தந்தவர் பெயர் ராஜதுரை. அவருடைய கையெழுத்துடன்தான் அப்பாயின்ட்மென்ட் ஆர்டர் இருந்தது. அவரைச் சந்தித்தேன். கை குலுக்கினார். குலுக்கும்போது கண்களால் என்னை ஸ்கேன் செய்தார்.

அவர் ஒல்லியாக இருந்தார். கை, கால்கள் எல்லாம் ஒல்லியாக இருந்தாலும் மகா வலுவானவை என்று அவரைப் பார்த்தபோதே புரிந்தது. சிக்கனமான தலைமுடி. மீசை. மிலிட்டரியில் மேஜராக இருந்தவர். இப்போது திரிவேணியின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டிருந்தார்.

''வேலையைக் கவனமுடன் செய். ஒரு தப்பு நடந்தாலும் டிஸ்மிஸ் ஆகி விடுவாய். கோவர்தன். இவனை சாரதியிடம் கூட்டிப்போய் அறிமுகப்படுத்து'' என்றார் அறிமுகம் முடிந்தவுடன்.

கோவர்தன் என்று அழைக்கப்பட்ட படகோட்டி என்னை சாரதியிடம் கூட்டிப் போய் விட்டான். என் பெயரை சாரதியிடம் சொன்னான். சாரதி கை நீட்டினான். நானும் குலுக்கினேன். கோவர்தன் போய் விட்டான்.



அவன் போய்விட்டது. தெரிந்த பின் சாரதி என்னைப் பார்த்துச் சிரித்தான். கோவர்தன் இருக்கும் வரை இறுக்கமாக இருந்த அவன் முகம் இப்போதுதான் தளர்ந்தது.

''பாரி. நல்ல பெயர். நீ இங்கே வருவதற்கு முன்பே உன் போட்டோ, பயோடேட்டா எல்லாம் வந்து சேர்ந்து விட்டன. இதற்கு முன்னால் உன் இடத்தில் இருந்தவன் பெயர் அரவிந்த். பெங்காலி. அவன் மிலிட்டரியில் இருந்தவன்...

''ஒரே ஒரு நாள் நைட் - டூட்டியில் இருந்தபோது தூங்கி விட்டான். அந்த நேரம் பார்த்து ராஜதுரை வந்து விட்டார். அவ்வளவுதான். அவன் வேலை போய் விட்டது. உனக்கு வேலை நிலைக்க வேண்டுமென்றால் வேலை நேரத்தில் ஒரு கணம் கூட கண் அயரக் கூடாது... ஓ.கே?''

தலையாட்டினேன்.

''இதுதான் டூட்டி ரூம். இதோ இருக்கிறதே கதவு. இதற்கு அந்தப் பக்கம்தான் திரிவேணி இருக்கிறாள். இந்தக் கதவைத் திறந்தால் இன்னொரு கதவு இருக்கிறது. அதில் ஒரு கண்ணாடிச் சதுரம் இருக்கிறது. அதன் வழியே திரிவேணியைப் பார்க்கலாம். அவள் பத்திரமாக இருக்கிறாளா என்பதை உறுதி செய்து கொள்ளலாம். ஆனால் எக்காரணம் கொண்டும் அவளுடன் பேச்சு வைத்துக் கொள்ளக் கூடாது. ஏனென்றால் முதலாளி பெண். அவளால் ஏதாவது பேசினால் ஒன்றிரண்டு வார்த்தைகளில் பதில் சொல்லலாம். பதில் சொல்லா விட்டால் உன்னைப் பற்றி அவள் ராஜதுரையிடம் கன்னா, பின்னா என்று ரிப்போர்ட் பண்ணி விடுவாள். சாதாரண வேலை இல்லை இது. கத்தி மேல் நடக்கிற விஷயம். இங்கே உன்னையும் என்னையும் தவிர ஆஸாத் என்று

இன்னொரு கார்ட் இருக்கிறான். அவன் வந்து ரிலீவ் பண்ணும் நேரம் இப்போது. அவன் வந்தவுடன் நான் உன்னோடு வருகிறேன். உனக்கான குவார்ட்டர்ஸ் எது என்று சொல்கிறேன். ஒரு நாளைக்கு எட்டு மணி நேர டூட்டி ஷிஃப்ட் மாறி மாறி வரும். வாரத்தில் ஒரு நாள் விடுமுறை. இப்போது கொஞ்ச நேரம் பேசாமல் டி.வி. பார். நல்ல நல்ல நிகழ்ச்சிகள் எல்லாம் வருகின்றன'' என்று சொல்லிவிட்டு தூங்கிக் கொண்டிருந்த டி.வி.யை ரிமோட்டால் தட்டி எழுப்பினான் சாரதி.

எனக்குள் நிறைய கேள்விகள் இருந்தன. இருந்தும் கேட்கவில்லை.

சாரதி டூட்டி முடிந்தவுடன் கூட வருவதாகச் சொல்லி இருக்கிறானே. அப்போது கேட்டுக் கொள்ளலாம் என்று சும்மா இருந்து விட்டேன்.

சாரதி சொன்ன ஆஸாத் வந்தான். அவனும் என்னைப் போல் இளைஞன். வலுவானவன். சாரதி என்னை அவனிடம் அறிமுகப்படுத்தி விட்டு அங்கிருந்து புறப் பட்டான்.

என்னுடைய குவார்ட்டர்ஸ் என்பது திரிவேணி இருந்த பில்டிங்கில் இருந்து நூறடி இருந்தது. அது ஒரு தனி வீடு. வீட்டைச் சுற்றித் தோட்டம்.

தோட்டத்தில் அந்தமானுக்கே உரிய செடிகள். மரங்கள் இருந்தன. சில வினோதமான பறவைகள் தென்பட்டன.

சாரதி எனக்கான குவார்ட்டர்ஸில் சுதந்திரமாக நுழைந் தான். முன்னால் ஒரு சிட் - அவுட். கதவு ஒரு ஹால். அதில் பிரிட்ஜ் இருந்தது. சோபா செட்கள் இருந்தன. சுவர்களில் அலங்கார ஓவியங்கள். ஜன்னல்களில் திரைச் சீலைகள். ஹாலை ஒட்டி ஒரு படுக்கை அறை. அகலமான



படுக்கை இருந்தது. காலுக்குக் கீழ் கம்பளம் ஏ.ஸி.யின் மெலிதான ரீங்காரம். டெலிபோன். டெலிவிஷன். வார்ட் ரோப். ப்ளவர் வாஸ். அறை ஒட்டி பாத்ரூம். டிரெஸ்ஸிங் யூனிட். ஷாம்பூ, பற்பசை, டவல்கள், இரவு ஆடைகள் பாத் டப். இதர, இதர.

ஐந்து நட்சத்திர ஹோட்டலின் சூட் போல் இருந்தது அது.

சாரதி ஹால் ப்ரிட்ஜைத் திறந்தான். இரண்டு பியர் பாட்டில்களை எடுத்தான். திறந்தான், ஒன்றை என்னிடம் நீட்டினான். இன்னொன்றை வாயில் வைத்து ஒரே மூச்சில் கடகடவென்று குடித்தான்.

''சாப்பாடு வரும் தஞ்சாவூர் சமையல்காரன். பசுபதி என்று பெயர். சமையல் அட்டகாசமாக இருக்கும். சாப்பிடு. ரெஸ்ட் எடு. சாயங்காலம் குளித்து விட்டுத் தயாராக இரு. அப்போது வந்து பேசுகிறேன்'' என்று சொல்லிவிட்டு என் பதிலுக்காகக் காத்திராமல் வீட்டை விட்டு வெளியேறினான் சாரதி.

சற்று நேரம் எதுவும் செய்யத் தோன்றாமல் உட் கார்ந்திருந்தேன்.

கையில் இருந்த பியரைக் குடித்தேன்.

கொண்டு வந்திருந்த பெட்டியில் இருந்த ஆடைகளை எடுத்து வார்ட்ரோபில் அடுக்கத் தொடங்கினேன்.

ஒரே ஒரு அட்டை மட்டும் விலைச் சீட்டுத் துண் டோடு இருந்தது. பெட்டியில் அதை வைத்த ஆள் விலைச் சீட்டைக் கவனிக்கவில்லை போலும் என்று அதை அகற்றினேன். அந்த சட்டை என்ன விலை என்று

சாதாரண மனிதர்களுக்கே உரித்தான ஆவலுடன் பார்த்தேன்.

'திரிவேணியைக் கடத்தி சென்னைக்கு அழைத்து வர வேண்டும்' என்று அந்தச் சீட்டில் எழுதியிருந்தது.

# 9

என் கண்களை முதலில் நம்ப முடியவில்லை.

திரிவேணியைக் கடத்த வேண்டுமா? கடத்தி சென்னைக்குக் கூட்டிப் போக வேண்டுமா?

அதற்காகத்தான் நான் அனுப்பப்பட்டிருக்கிறேனா?

திரிவேணியை நான் இதுவரை பார்த்தது கூட இல்லை. பார்க்க முடியுமா என்று தெரியவில்லை. அவளைக் காப்பாற்ற, பாதுகாக்க என்று ஒரு படையே வேலை செய்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் என்னால் எப்படி அவளைக் கடத்த முடியும்?

சுப்பு சார் என்னைக் காப்பாற்றியதற்கு, என் வாழ்க்கைக் கடிகாரத்தை பழையபடி திருப்பி வைத்ததற்கு எல்லாம் அர்த்தம் இருப்பது இப்போது தெரிந்து விட்டது.

குவார்ட்டர்ஸின் காலிங்பெல் சத்தம் திடுக்கிட வைத்தது. அந்த விலைச் சீட்டை சட்டென்று வாயில் போட்டு மென்று கடித்து விழுங்கி விட்டுக் கதவைத் திறந்தேன்.

ஒரு ட்ராலி வண்டியுடன் ஓர் ஆள் நின்றிருந்தான். பார்த்தாலே சமையல் பகுதியில் இருந்து வருபவன் என்று தெரிந்தது. ட்ராலியில் இருந்து அபாரமான வாசனை.



''பசுபதி. தஞ்சாவூருக்குப் பக்கத்தில் திருவையாறு தான் சொந்த ஊர். சாப்பாடு கொடுக்க வந்தேன்'' என்று சொல்லிவிட்டு உள்ளே நுழைந்து ஹாலில் இருந்த டைனிங் டேபிளை நிரப்பி விட்டுப் போனான்.

தலை வாழை இலை மல்லிகைப் பூ சாதம், அரைத்து விட்ட வெங்காய சாம்பார், தெளிவான ரசம், காரக் குழம்பு, தயிர், மோர் மிளகாய், வடகம், ஊறுகாய், கூட்டு, காரக்கறி, மெனு அமர்க்களமாய் இருந்தது.

சாப்பிட்டேன்.

சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்தேன். படுக்கையில் மல்லாந்தேன்.

செய் அல்லது செத்து மடி!

நான் சாவதற்குத் தயாரானவன். இழப்பதற்கு எதுவு மற்றவன். அப்படி இருக்கும்போது நான் எதற்காகவும் தயங்க வேண்டியதில்லை. யாருக்காகவும் பயப்பட வேண் டியதில்லை. உயிரை மதிக்காதவன் என்பதாலேயே சுப்பு சார், என்னை இந்த வேலைக்குத் தேர்ந்தெடுத்திருக் கலாம்.

எனவே -

திரிவேணியைக் கடத்துவது என்று தீர்மானித்தேன்.

முயற்சியில் தோல்வியுற்றால் சாவு!

அவ்வளவுதானே? போய் விட்டுப் போகிறது!

திரிவேணியைக் கடத்துவது என்றால் எப்படி? என்ன திட்டம்?

ஆமைத்தீவின் அமைப்பு பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்.

யாருக்கு எது வீக்னெஸ் என்று அறிந்து கொள்ள வேண்டும்.

உதவிக்கு ஒரு ஆள் வேண்டும். யார்? நம்பகமான ஆள் யார்? சாரதி! ஆஸாத்? அல்லது இந்த வேலையில் நான் சேருவதற்கு உதவி செய்த ஷீலா?

இரு. இரு அலையாதே. தாவாதே. அவசர முடிவெடுக் காதே. சாரதியைப் பற்றி என்ன தெரியும்? ஆசாதைப் பற்றி என்ன தெரியும்? திரிவேணியைக் கடத்துவதற்குத் தங்கள் உயிரைப் பணயம் வைத்து விட்டு அவர்கள் உதவு வார்கள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

அப்படியானால் முதலில் என்ன செய்ய வேண்டும்?

இங்கு இருப்பவர்கள் அனைவரைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும்.

முக்கியமாகத் திரிவேணியைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்.

எனக்கு உலகில் உள்ள அத்தனை நேரமும் இருக் கிறது.

மெதுவாக யோசிக்கலாம். மெதுவாகத் திட்டமிடலாம். மெதுவாகச் செயல்படுத்தலாம்.

புகைத்துக் கொண்டிருந்த சிகரெட்டை நசுக்கிப் பாழாக்கினேன்.

நிம்மதியாகத் தூங்கினேன்.

அழைப்பு மணியின் வீறிடலில் திடுக்கிட்டு எழுந் தேன். சாரதி!

உள்ளே அனுமதித்து உட்கார வைத்தேன். மூன்று ஐந்து இம்போர்டட் சிகரெட் பாக்கெட்டையும், லைட்



டரையும், ஆஷ்ட்ரேயையும் அவன் முன் டீப்பாயில் வைத்தேன்.

''ஜஸ்ட் எ மினிட் ப்ளீஸ்...'' என்று அனுமதி கோரி பாத்ரூமிற்குள் நுழைந்தேன். உஷ்ணமான சுத்தமான வெந்நீர். ஏற்றுமதி தர சந்தன சோப் - ஷாம்பூ. மறுபடி உஷ்ணமான சுத்தமான வெந்நீர். நீராவியில் சோப்பும் ஷாம்பூவும் கலந்து உருவாக்கிய நறுமணக் கலவை. குளிக்கும் அறையின் புள்ளியற்ற சுத்தம். வெள்ளை தேங்காய்ப் பூத் துண்டின் பளீர். அதில் வீசிய வெயிலின் மணம். உலகில் எத்தனை கோடி சின்னச் சின்ன இன்பங்கள் இருக்கின்றன! பாரதி... உண்மையிலேயே நீ ஒரு அறிவு ஜீவி. ஜீனியஸ்!

புதுப்பித்துக் கொண்டு வெளிப்பட்டேன். தலைவாரல். செண்ட். வேற்றுடை. அவன் எதிரில் அமர்ந்தேன்.

சாரதி ஷேவ் செய்திருந்தான். மீசையைக் கவனமாகச் செதுக்கியிருந்தான். அணிந்திருந்த சட்டையும், பேண்ட் டும் பளிச் என்று இருந்தன.

''சொல்'' என்று சொல்லிச் சிரித்தேன்.

''என்ன சொல்ல வேண்டும்?'' என்று அவன் கேட் டான்.

''திரிவேணியைப் பற்றி, அவள் மட்டும் என்ன ஸ்பெஷல்? அவள் ஒருத்திக்காக என்று எதற்காக இந்த சிறைக்கூடம்? எதற்காக இவ்வளவு பெரிய தீவு? எதற்காக இவ்வளவு சம்பளம் கொடுத்து அவளுடைய பாதுகாப் புக்கு இவ்வளவு பேர் வேலையில் அமர்த்தப்பட்டிருக் கிறார்கள்? எதற்காக இவ்வளவு பேர் இராப்பகலாக சரியான தூக்கம் இல்லாமல் அவளைக் காப்பாற்றிக் கொண்டிருக் கிறார்கள்?''

''ஈஸி, ஈஸி'' என்று சொல்லிச் சிரித்தான் சாரதி. ''திரிவேணியைப் பற்றிச் சொன்னால் உன் அத்தனை கேள்விகளுக்கான விடையும் கிடைத்து விடும்.''

''சொல்லு.''

சாரதி சிகரெட் பாக்கெட்டை நீட்டினான். ஒன்றை உருவினேன். அவனும். இருவரும் பற்ற வைத்துக் கொண்டோம். புகையை ஆழமாக உள்ளுக்குள் வாங்கினேன். அதன் கதகதப்பு நெஞ்சில் பரவியது. மைக்ரோ சொர்க்கம்!

சாரதி சன்னமான குரலில் பேசத் தொடங்கினான்.

''திரிவேணி தன்னுடைய மூன்றாவது வயதிலேயே தாயை இழந்து விட்டாள். அவள் வளர்ந்தது முழுக்க, முழுக்க ஆயாக்களிடம். திரிவேணியால் யாரையுமே 'அம்மா' என்று கூப்பிட முடியவில்லை. அவளுடைய அப்பா விசுவநாதன். அப்போது நம் முதலாளி - அவளை மிகவும் பொத்திப் பொத்தி வளர்த்தார்.''

''விசுவநாதன் இப்போது எங்கே?'' என்று கேட்டேன்.

''முதலாளியைப் பற்றிக் கேட்கிறாய். அவரை நான் இதுவரை பார்த்ததில்லை. கொல்கத்தாவில் இருக்கிறார். மிகப் பெரிய புள்ளி, நிறைய பணம். நிறைய என்றால் எண்ணிக்கையில், எண்களில் சொல்ல முடியாத அளவு நிறைய. விசுவநாதனுக்கே அவர் சொத்தின் மதிப்பு எவ்வளவு என்று தெரியுமோ என்னவோ!''

''முதலாளியை விசுவநாதன் என்று பெயர் சொல்லிக் குறிப்பிடுகிறாயே! தப்பு இல்லையா?''

''தப்பு இல்லை. இங்கிலீஷ் வழக்கப்படி பெயருக்கு முன்னால் மிஸ்டர் சேர்த்துக்கூட அழைக்க வேண்டாம் என்று விசுவநாதனே சொல்லியிருக்கிறார். அவர் சொன்னால் அது சட்டம். அதை யாரும் மீறுவதில்லை. எல்லோரையும் பெயரிட்டுத்தான் அழைக்க வேண்டும். குறிப்பிட வேண்டும்.



வினோதமான மனிதர் என்று தோன்றியது. கிருஷ்ணனையும், ராமனையும், சிவனையும் திரு. கிருஷ்ணா, திரு. ராமா, திரு. சிவா என்று எப்போதும் அழைப்பதில்லையே. கிருஷ்ணா, ராமா, சிவா என்று அழைப்பதில்லை? சில சமயம் உரிமை எடுத்துக் கொண்டு, 'வாடா, போடா' என்று சொல்வதில்லை? தோள்களைக் குலுக்கிக் கொண்டேன்.

''திரிவேணி?''

''ஆ யெஸ். திரிவேணி பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தேன் இல்லை? சின்ன வயதில் திரிவேணி சோனியாக இருந்தாள். போலியோவால் தாக்கப்பட்ட குழந்தை போல் தான் இருந்திருக்கிறாள். பேச்சு குறைவு. எந்நேரமும் தனிமை. தனிமை தனிமை என்று தானாக விரும்பி ஏற்படுத்திக் கொண்ட தனிமைச் சிறையில், தனிமைத் தீவில் வாழ்ந்திருக்கிறாள். பள்ளிக் கூடத்திலும் ரொம்ப சாதாரண மாணவி. மிகவும் சூட்டிகையான மாணவி என்று சொல்ல முடியாது. பள்ளிப் படிப்பு முடிந்ததும் கல்லூரியில் சேர்க்கப்பட்டாள்.''

''கொல்கத்தாவில் தானே?''

''இல்லை. அவள் மெடிசின் படிக்க ஆசைப்பட்டாள். மணிபால் யூனிவர்சிடியில் எம்.பி.பி.எஸ். கோர்ஸில் சேர்ந்தாள். தினமும் கொல்கத்தாவில் இருந்து மணிபாலுக்குத் தனி விமானத்தில் அனுப்பி அவளைப் படிக்க வைத்திருக்க முடியும். படிக்கும் நேரம் எல்லாவற்றையும் பயணம் சாப்பிட்டு விடும் என்ற நிலை. அதனால்

திரிவேணி கல்லூரி ஹாஸ்டலில் சேர்க்கப்பட்டாள். அந்த ஹாஸ்டலில்தான் திரிவேணி தன்னை இழந்தாள் அல்லது தன்னை அடைந்தாள்.''

''இதோ பார். இப்படிப் பொடி வைத்துப் பேசுவதை விட்டு விடு. எனக்குப் புரியவில்லை. இப்படிப் பேசுவதற்கும், எழுதுவதற்கும் நம் ஊரில் நிறைய இலக்கியவாதிகள் இருக்கிறார்கள்.''

சிரித்தான்.

''சாதுப் பெண்ணாக, தனிமை விரும்பியாக இருந்த திரிவேணி மாறிப் போனாள். அவளுக்கு நிறைய நண்பர்கள் ஏற்பட்டார்கள். ஆண், பெண் நண்பர்கள், மணிபால் யூனிவர்சிடியில் போதைப் பொருட்களின் புழக்கம் அதிகம். கஞ்சா, ஹெராயின், பெத்தடின் எல்லாம் வெற்றிலை பாக்கு போல வினியோகம் ஆகும். திரிவேணி அந்த நண்பர்கள் கூட்டத்தில் சங்கமித்தாள். அவள் கஞ்சாவுக்கு அடிமையா? இல்லை. ஹெராயின், பெத்தடின் போன்றவற்றுக்கு அடிமையா? இல்லை. அவற்றை உபயோகப்படுத்தியபோது அவள் மனம் சுதந்திரமாக இயங்கியது. அந்த சுதந்திரம் அவளுக்குப் பிடித்திருந்தது. திரிவேணி - தன்னைப் பற்றிப் பேசாமல் இருந்தவள், நிறையப் பேசினாள். தான் யார் என்பதைச் சொன்னாள். விசுவநாதன் என்னும் மா, மா, மாபெரும் பணக்காரனின் ஒரே பெண் என்பதைச் சொன்னாள். அதுதான் அவளுக்கு எதிராக மாறியது.

''என்ன?'' என்றேன் நான். கதை கேட்கும் ஆர்வம் என்னுள் கிளர்ந்து விட்டது.

''ஆம். ஒரு சில இளைஞர்களுக்கு அவளுடைய தந்தையிடம் இருக்கும் பணத்தின் மேல் கவலை பதிந்தது.



அவரிடம் இருக்கும் பணத்தில் லட்சத்தில் ஒரு பங்காவது கிடைத்தால் வாழ்நாள் முழுதும் ஆடம்பரமாக, சொகுசாக, இறக்குமதி செய்யப்பட்ட காருடன், பெரிய பங்களாவில் வாட்ச்மேன் இன்னமும் வசதிகளுடன் வாழ்க்கை நடத்தலாமே என்று தோன்றி விட்டது.''

''அதனால்?''

''அதனால் அந்த இளைஞர்கள், அவர்கள் எட்டு பேர், திரிவேணியைக் கடத்தி விட்டார்கள். அவள் அப்பாவிடம் பணயத் தொகை கேட்டார்கள். திரிவேணி தான் கடத்தப்படுவது தெரியாமலேயே அவர்களுடன் சென்றாள்.''

''அப்புறம் என்ன ஆயிற்று?'' என்றேன் மூச்சைப் பிடித்துக் கொண்டு.

''விசுவநாதன் ஒரு ஆக்டோபஸ் போல ராம லட்சுமணனை மயில் ராவணன் கொண்டு போய் ஒளித்து வைத்தபோது அவர்களைக் கண்டு பிடிக்க அனுமான் கொஞ்சமாவது சிரமப்பட்டிருக்கக் கூடும். விசுவநாதன் அதுகூடப் படவில்லை. திரிவேணியை யார் கடத்தியிருக்கக் கூடும் என்பதை மிக ரகசியமாக விசாரித்துக் கண்டு பிடித்தார். எட்டு இளைஞர்களில் ஒருவனை ரகசியமாக மடக்கி அவர்கள் கேட்ட பணயத் தொகையை விட அதிகமாகவே அவன் முகத்தில் வீசி திரிவேணி எங்கே ஒளித்து வைக்கப்பட்டிருக்கிறாள் என்பதை அறிந்து கொண்டார். அவரது ஆட்கள் கமாண்டோக்களை விடத் திறமைசாலிகள். அடுத்த இரண்டு மணி நேரத்திற்குள் திரிவேணியை மீட்டு விட்டார்கள். அவளைக் கடத்திய ஏழு பேரையும் விசுவநாதன் கண் முன்பாக கொஞ்சம் கொஞ்சமாகச் சித்திரவதை செய்தார்கள்.''

''யார் சித்திரவதை செய்தது?'' முட்டாள்தனமான கேள்வி. இருந்தும் கேட்டேன்.

''விசுவநாதனின் ஆட்கள்தான். ஒரு மாத காலம் அந்த சித்திரவதை நடந்தது. ஏழு பேருக்கும் தற்கொலை செய்து கொள்ள எந்த வாய்ப்பும், வழங்கப்படவில்லை. தினம், தினம் நரகம். முப்பது நாட்களுக்கு அப்புறம் விசுவநாதன் அவர்கள் சாவதற்கு அனுமதித்தார்.''

''யூ மீன் திரிவேணியைக் கடத்தியதில் மிச்சமிருந்த ஏழு ஆட்கள்?''

''ஆம். ஒவ்வொருத்தனும் ஒவ்வொரு விதமாகக் கொல்லப்பட்டான். அவர்களது உடல்கள் அனாதைப் பிணங்களாக நடுத்தெருவில் வீசப்பட்டன. அவர்களது பெற்றோர்களுக்கு அந்தப் பிணங்களைக் கொண்டு போய் எரித்தோ, அடக்கம் பண்ணவோ கூட தைரியம் இல்லை. அப்படிச் செய்தால் அடுத்தபடி சாலையில் கிடக்கப் போவது தங்கள் பிணங்கள்தான் என்று அவர்கள் நம்பினார்கள்.''

சிலிர்த்தது. விசுவநாதன் அவ்வளவு சக்தி வாய்ந்த ஆசாமியா?''

''அந்த எட்டாவது ஆள்?''

''அவனிடம் கொடுத்த பணத்தை விஸ்வநாதன் பிடுங்கி அவனையும் கொல்லச் சொல்லிவிட்டார்.''

''அப்ரூவரைக் கூடவா?''

''ஆம். திரிவேணியைக் கடத்தலாம் என்று நினைத்ததே குற்றம் என்பதுதான் விசுவநாதனின் வாதம். அதனால் அப்ரூவராக மாறியவன் என்ற ஒரே காரணத்திற்காக அவர்கள் கேட்ட பணயத் தொகையை விட அதிகமாகத் தூக்கிக் கொடுத்து அவனை வாழ வைப்பதில் அவருக்கு விருப்பம் இல்லை. அந்தப் பணத்தை தூண்டில் புழு போல் உபயோகித்து அப்ரூவர் மீனை அவர்



பிடித்தார். அப்ரூவர் என்றால் என்ன அர்த்தம்? காட்டிக் கொடுப்பவன்தானே? இந்த மாதிரி துரோகிகளை அவர் மன்னிப்பதே இல்லை. ஆனால் ஒன்று, அவன் அப்ரூவராக மாறி, மகளை மீட்க உதவியதால் அவனுக்கு மட்டும் சிறு சலுகை!''

''என்ன சலுகை? அவன் குடும்பத்தைத் தத்தெடுத்துக் கொண்டாரா?''

''இல்லை, அவனைச் சித்திரவதை செய்யவில்லை. நெற்றிப் பொட்டில் துப்பாக்கி முனையை வைத்து க்ளோஸ் ரேஞ்சில் சுட்டார்கள். மூளை சிதறி உடனடி மரணம்.''

இதுதான் சலுகையாம்! உடல் முழுக்க ஜுரம் போல் நடுக்கம் பரவியது.

சாரதி என் உடல் நடுக்கத்தை அறியவில்லை. மேலும் தொடர்ந்து சொன்னான்.

''விசுவநாதன் அந்த நிகழ்ச்சிக்குப் பிறகுதான் திரிவேணியை இந்தத் தீவில் கொண்டு வந்து குடி வைக்க வேண்டும் என்று முடிவு செய்தார். திரிவேணி சுதந்திரமாக இருந்தால் அடிக்கடி இப்படி அவளை யாராவது கடத்த எண்ணக்கூடும். கடத்தக்கூடும். பணயத் தொகை கேட்கக்கூடும். ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் ஏதாவது ஒரு தவறு நிகழ்ந்து அதில் திரிவேணிக்கு ஏதாவது ஆகிவிட்டால் என்ன செய்வது என்று பயந்து தான் விசுவநாதன் இந்தத் தீவை விலைக்கு வாங்கினார். கட்டிடங்கள் எழுப்பினார். பாதுகாப்புக்கு ஆட்களை வேலைக்கு அமர்த்தி இருக்கிறார். நீயும், நானும் அவர் தயவில் சம்பாதித்து சாப்பிட்டு உயிர் வாழ்கிறோம்.''

''திரிவேணிக்கு இதில் சம்மதமா?'' என்று கேட்டேன்.

''அவளுடைய சம்மதத்தை விசுவநாதன் கேட்கவில்லை. மேலும் கூடாத நண்பர்களுடன் அவள் நட்பாகப் பழகிய தால்தானே அவளைக் கடத்தினார்கள்? ஒரு வகையில் திரிவேணியின் கடத்தலுக்கு அவளேதான் காரணம் என்று விசுவநாதன் நினைக்கிறார். எனவே அவளுக்கு இது ஒரு தண்டனையும் கூட.''

''இதை திரிவேணி எப்படி ஏற்றுக் கொண்டிருக்கிறாள்?''

''தெரியாது. அவள் மனதில் உள்ளது என்னவென்பதை ஆண்டவன் கூடத் தெரிந்து கொள்ள முடியாது. சில சமயங்களில் சந்தோஷமாக இருப்பாள். சில நேரங்களில் வருத்தமாக, கோபமாக இருப்பாள். சில நேரங்களில் சாந்த துர்கா. சில தருணங்களில் பத்ரகாளி. அவளுடைய அழகைப் பார்த்து மயங்கி அவளிடம் வாலாட்ட முயன்ற ஒரு செக்யூரிட்டியின் குரல் வளையைக் கடித்தே கொன்று விட்டாள் என்று ராஜதுரை என்னிடம் சொல்லியிருக்கிறார். எவ்வளவு உண்மை, எவ்வளவு பொய் என்று தெரியாது. எதற்கும் நீ திரிவேணியிடம் எச்சரிக்கையுடனேயே இரு. அவள் பேசினால் நீ பேசு. ஆனால் சுருக்கமாகப் பேசு. அவளுக்குக் கோபத்தை வரவழைத்து விடாதே. பெஸ்ட் ஆஃப் லக்'' என்று சொல்லி திடீரென்று கை நீட்டினான் சாரதி. ரிப்ளெக்ஸ் காரணமாக நானும் கையை நீட்டினேன். பற்றிக் குலுக்கினான்.

''ஹாவ் எ நைஸ் டைம் வித் திரிவேணி'' என்று சொல்லிவிட்டு சட்டென வெளியேறினான்.



# 10

நான் காவலுக்கு உட்கார்ந்த அறையைப் பற்றி முன்னால் சொல்லவில்லை. ஏனெனில் அப்போது அதை நான் கவனித்திருக்கவில்லை. இப்போதுதான் நன்றாக நிதானமாக ஆராய முடிகிறது.

அறை பெரிதாக இருந்தது. சுவர் வெளிர் நீல நிறத்தில் இருந்தது. மூன்று சோபாக்கள் இருந்தன. ஒரு டீ.வி. பொருத்தப்பட்டிருந்தது. இரண்டு இன்டர்காம் டெலிபோன்கள். ஒரு குட்டி அறையில் ஹாங்கர்களுடன் சுவரில் ஒரு கண்ணாடி, பெரிய அறைக்கு அந்த அறை இலவச இணைப்பு. அதில் யூனிஃபார்ம்கள் மாற்றிக் கொள்ளலாம். ஒரு காபி மேக்கிங் மிஷின் இருந்தது. காபி போட்டுக் கொள்ளலாம். சிகரெட் பாக்கெட்டுகள் இருந்தன. விஸ்கி, ரம், ஜின் - மூச். பியர் கூட கிடையாது. தூக்கத்தை அளிக்கும் எந்த சமாச்சாரமும் அந்த அறையில் இல்லை.

வடமேற்கு மூலையில் ஒரு கதவு இருக்கிறதே. அது பாத்ரூம் கதவு. அதைத் திறந்தால் எதிரே கண்ணாடி. கண்ணாடியில் அதன் முன் நிற்பவர்களின் முழு உருவம். ஆடையுடனும், ஆடை இல்லாமலும் ஓடோனில்லின் வாசனை. ஷாம்பூவின் வாசனை. சோப்பின் வாசனை. வரிசையாக அடுக்கி வைக்கப்பட்ட டவல்கள். சிறுநீர் கழிக்க ஒரு பீங்கான் அரை முட்டை சுவரில் பொருத்தியிருந்தது. இன்னொரு பக்கம் வெஸ்டர்ன்க்ளோசட். அருகில் ஒரு பிட்டே குளிக்கலாம். கழிக்கலாம். களிக்கலாம்.

அறை மையத்திலிருந்து நேராகக் கோடு போட்டால் ஒரு கதவு. அதில் கண்ணாடி ஓவல். அந்த ஓவல் வழியாகத் தெரிந்த இன்னொரு கண்ணாடி ஓவல். சந்நிதானம். அந்த இரண்டு கதவுகளுக்குப் பின்னால் இருக்கும் அறையில்தான் திரிவேணி இருக்கிறாள்.

அந்த அறையிலும் திரிவேணிக்கென்று ஒரு பாத்ரூம் இருக்கும். அதில் பீங்கான் அரை முட்டை. சுவரில் பொருத்தப்பட்டிருக்குமா என்று தெரியவில்லை. பெண்களின் பாத்ரூமில் இதுவரை எட்டிப் பார்த்ததில்லை - உள்ளுக்குள் ஒரு வக்கிர மனம் பெண்களின் பாத்ரூமைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையை ரகசியமாக வைத்துப் பாதுகாத்துக் கொண்டிருந்த போதிலும்,

திரிவேணிக்கும் என்னை மாதிரியே பசி எடுக்கும். தாகம் எடுக்கும். கழிவுகள் வெளியேற்ற வேண்டும் என்ற அவ்வப்போதைய உந்துதல்களுக்கு உடன்பட்டே ஆக வேண்டி இருக்கும். அவள் மனதிலும் ஆண்களின் பாத்ரூமைப் பார்க்க வேண்டும் என்ற வக்கிர ஆசை இருந்தாலும் இருக்கும்.

அடிப்படையில் எல்லா இச்சைகளும், எல்லா உடல் தேவைகளும் ஆணாயிருந்தாலும், பெண்ணாய் இருந்தாலும் ஒன்றுதான்.

இருந்தும் அவள் - தகப்பனிடம் பணம் இருக்கிறது. என்னிடம் அது இல்லை. எனவே அவள் எஜமானி. நான் காவல் நாய். ம்ஹும்!

டீ.வி.யை உயிர்ப்பித்தேன். கிரிக்கெட் இந்தியா உலக வரை படத்திலேயே இல்லாத ஏதோ ஒரு நாட்டுடன் ஆடித் தோற்றுக் கொண்டிருந்தது.



கிரிக்கெட்டில் மனம் பதியவில்லை. அடுத்த அறையில் திரிவேணி இருக்கிறாள்.

அடுத்த எட்டு மணி நேரத்தில் அவளை எந்தக் காகமும் வந்து கொத்திக் கொண்டு போய் விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

சிரிப்பு வந்தது. எந்தத் திரிவேணியைப் பாதுகாக்க சம்பளம் வாங்கப் போகிறேனோ அந்தத் திரிவேணியைக் கடத்த வேண்டும்.

ஏற்கனவே ஒரு முறை அவளைக் கடத்த முயன்ற எட்டு பேரை விஸ்வநாதன் எப்படிக் கொன்றார் என்பதை எடுத்துச் சொல்லி சாரதி மறைமுகமாக எச்சரிக்கை விடுத்திருக்கிறான். திரிவேணியைக் கடத்த வேண்டும் என்ற எண்ணம் யாருக்கும் கனவிலும் எழக்கூடாது என்கிற மாதிரித்தான் விஸ்வநாதன் செய்திருக்கிறார்.

எப்படிக் கடத்தப் போகிறேன்? இன்னும் அவள் முகத்தைக் கூடப் பார்க்கவில்லையே. கருப்பா, சிவப்பா, குண்டா, ஒல்லியா, உயரமா, குட்டையா தமிழா, வங்காளமா - எதுவும் தெரியாது.

திடீரென உள்ளுணர்வு எச்சரித்தது. யாரோ என்னைப் பார்த்துக் கொண்டிருப்பது போலத் தோன்றியது. டெலிவிஷன் திரையில் பதிந்திருந்த கண்களை விலக்கினேன். சரேலென்று அறையின் வாசல் பக்கம் பார்த்தேன். யாருமில்லை. பாத்ரூம் பக்கம் பார்த்தேன். யூனிஃபார்ம் மாட்டியிருந்த அறைப் பக்கம் பார்த்தேன். பின் அதே சரேலுடன் திரும்பி திரிவேணி இருந்த அறைப் பக்கம் திரும்பி அதன் கதவில் இருந்த கண்ணாடி ஓவலில் பார்வையைப் பதித்தேன்.

அவள் தெரிந்தாள். திரிவேணி! ஒரு கண்ணாடி ஓவலைத் தாண்டி அடுத்த கண்ணாடி ஓவலைத் தாண்டித் தெரிந்த அவளது முகம் மெழுகி விடப்பட்ட மாதிரி இருந்தது. அங்கே தெரிந்தது ஒரு மனித முகம் என்று மட்டுமே சொல்ல முடியும். அதுவும் பெண் முகமா, ஆண் முகமா என்று கூடச் சொல்ல முடியாது.

நான் பார்ப்பது தெரிந்ததும் அந்த முகம் விலகி விட்டது. உள்ளுக்குள் சிலிர்ப்பு ஓடியது. இப்போது நான் என்ன செய்ய வேண்டும்? இரண்டு கதவுகளையும் திறந்து கொண்டு போய் அவள் முன் நின்று இடுப்பு வரை குனிந்து 'அட் யுவர் சர்வீஸ் மேடம்' என்று சொல்ல வேண்டுமா? அல்லது சும்மா இருக்க வேண்டுமா?

இரண்டாவதில் ஆபத்தில்லை. சும்மா இருக்கலாம் எனத் தீர்மானித்தேன்.

இரண்டு நிமிடங்கள் கழிந்திருக்கலாம். கிரிக்கெட்டில் இன்னொரு இந்திய மட்டைப் பிடிப்பவன் பூஜ்யம் ஓட்டத்தில் ஆடுகளத்தை விட்டு வெளியேறினான்.

'க்ளிக் - டக்' என்று சத்தம் திடுக்கிட்டுத் திரும்பினேன்.

திரிவேணி நின்று கொண்டிருந்தாள். அவள் அறைக் கதவைத் திறந்து, நானிருந்த அறைக் கதவைத் திறந்து கதவுக்கப்பால் இருந்து முகத்தை மட்டும் வெளியே நீட்டி கைவிரலால் சொடக்கு போட்டு என்னை அழைத்தாள். அந்த சொடக்கில் இருந்த அதிகாரம் என்னைத் திகைக்க வைத்தது.

அடிபணிவதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை. எழுந்தேன். நடந்தேன். நெருங்கினேன்.



"என்ன?"

"உள்ளே வா..."

சென்றேன்.

அவளைப் பற்றி, அவள் அறையைப் பற்றி எல்லாம் விவரிக்கிறேன். அந்த அறையில் நிகழ்ந்த நிகழ்வை முதலில் சொல்லி விடுகிறேன்.

அவள் சுட்டு விரலை நீட்டிக் காட்டிய இடத்தில் பாத்ரூம். அதன் கதவு திறந்திருந்தது.

"பாத்ரூமில் என்ன?" என்று வினவினேன்.

"போய்ப்பார்" என்றாள்.

உள்ளே நுழைந்தேன். அதிர்ந்தேன்.

கையலகத்தை விடப் பெரிய நண்டு ஒன்று அந்த சுத்தமான பாத்ரூமில் ஸ்லோமோஷனில் கபடி ஆடிக் கொண்டிருந்தது.

திரிவேணி என்னை அழைத்ததில் நியாயம் இருக்கிறது.

அந்த நண்டை அடிக்க ஆயுதம் தேடினேன். பாத்ரூமில் எதுவும் இல்லை. என் காலால் ஒரே மிதி மிதித்து அதன் கதையை முடித்து விடலாம். பாத்ரூம் அசிங்கமாகி விடும்.

என்ன செய்யலாம்? பெல்ட்டில் செருகியிருக்கும் கத்தியால் குத்திக் கொல்லலாமா? ம்ஹூம்!

சட்டென்று வெளியில் பாய்ந்தேன். யூனிஃபார்ம்களை மாட்டுவதற்காக என்று இருந்த சிறு அறையில் ஒரு பிளாஸ்டிக் பையைப் பார்த்த ஞாபகம் இருந்தது.

அறைக்கதவைத் திறந்தேன். என் ஞாபக சக்திக்கு ஒரு ஜே! பிளாஸ்டிக் பை இருந்தது. அதைக் கவர்ந்தேன்.

மறுபடி பாத்ரூமில் நுழைந்தேன். பையை திமிங்கலத்தின் வாய் போல் அகலமாகத் திறந்து தரையில் பதிய வைத்தேன். நண்டு தன்னுடைய கபடி ஆட்டத்தின் ரிட்டர்ன் ட்ரிப்பில் கொஞ்சம் கூடச் சந்தேகப்படாமல் பிளாஸ்டிக் பைக்குள் நுழைந்தது. அவ்வளவுதான். விஷயம் அவ்வளவு எளிதாய் முடிந்தது.

பிளாஸ்டிக் பையின் வாயைக் கட்டினேன். அதை வெளியே எடுத்து வந்தேன். நான் காவல் காக்கும் அறைக்கு வெளியே இருந்த தோட்டத்தில் அதை ஒரு வீசு வீசினேன்.

சொத்தென்ற சத்தம் கேட்டது. இருட்டில் எங்கேயாவது விழுந்திருக்கும்.

இவ்வளவு கட்டுக்காவல்களை மீறி நண்டு எப்படி பாத்ரூமில் நுழைந்தது?

அந்தமானில் தென்னை மரங்களில் இருக்கும் பாளைகளையும், தேங்காய்களையும் காலி பண்ணுவதற்கென்றே ஒரு வகை நண்டுகள் இருக்கின்றன. அவை சில தீவுகளில் பிரதானமாக இருக்கும். இந்த நண்டு கூட அது போல் ஒரு தென்னைமரக் கொள்ளைக்கார நண்டுதான். நண்டைப் பார்த்து ஆச்சரியமாய் இல்லை. அது திரிவேணியின் பாத்ரூமில் இருந்ததுதான் ஆச்சரியமாக இருந்தது.

மறுபடி திரிவேணியின் பாத்ரூமிற்குள் நுழைந்தேன். அங்கு நண்டு எதுவும் இல்லை. அப்பாடா! ஒரு சின்ன நிம்மதித் தீவு. சுவர்க் கூரையில் எங்கேயாவது ஓட்டை இருக்கிறதா என்று பார்த்தேன். இல்லை. தரையில் எங்கேயாவது இடைவெளி தென்படுகிறதா என்று பார்த்தேன். ம்ஹூம்.

பின் எப்படி அது உள்ளே வந்தது?



நண்டு பாத்ரூமில் நுழைவதற்கு ஒரே வழி வெஸ்டர்ன் க்ளாசட் எனப்படும் கக்கூஸ் வழிதான். அதன் மறுபக்கத்தில் பூமியைக் குடைந்து பி.வி.சி. பைப்பைக் குடைந்து தண்ணீரில் நீந்தி பனாமா கால்வாயைக் கடப்பது போல் கடந்து டாய்லெட் பீங்கானின் சவரில் சிரமப்பட்டு ஏறி பாத்ரூமில் டைவ் அடித்திருக்க வேண்டும் என்று தோன்றியது.

இனி நண்டு எதுவும் அந்த அறையில் வராமல் இருக்க பாத்ரூமிற்கு வெளியே போய்த் தோண்டிப் பார்த்து ஏதாவது ஓட்டை இருந்தால் அடைக்கச் சொல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டேன். பாக்கெட்டில் இருந்து ஒரு ஸ்கிரிப்ளிங் பேட் எடுத்தேன். பேனாவால் முதல் வேலையாக நண்டு தடுப்புத் திட்டம் பற்றிக் குறித்துக் கொண்டேன்.

இந்த ஸ்கிரிப்ளிங் பேட். பேனா முறை நான் கான்ஸ்டபிளாய் இருந்த காலத்தில் இருந்து ஆரம்பித்தது. மறந்து போகாமல் இருக்க. எதையும் சரியான நேரத்தில் சரியானபடி நிறைவேற்ற.

நிமிர்ந்தேன். அதிர்ந்தேன்.

காரணம் திரிவேணி சற்று தூரத்தில் இருந்து என்னையே முறைத்துக் கொண்டிருந்தாள். அவள் முகத்தில் விரோதம் மற்றும் குரோதம் எதற்காக என்று தெரியவில்லை.

சற்றும் எதிர்பாராத விதமாக டாக் டாக் என்று நடந்து என்னருகில் வந்தாள். கையில் இருந்த ஸ்கிரிப்ளிங் பேடைப் பிடுங்கினாள். படித்தாள், பின் என்னிடமே தூக்கியெறிந்தாள்.

''காட்ச்.''

ரிப்ளெக்ஸ் ஆணையில் பேடைப் பிடித்தேன். ஒன்றும் புரியாமலேயே பாக்கெட்டில் போட்டுக் கொண்டேன். அவளைப் பார்த்தேன்.

முதன் முறையாக அவள் முகத்தில் ஒரு புன்னகை பிரசவம் ஆவதைப் பார்த்தேன். அது கலகல சிரிப்பாய் மாறியது.

இப்போது நான் என்ன செய்ய வேண்டும்? பதிலுக்கு மரியாதையாக உதடுகளைப் பிரித்து சத்தம் எழாமல் சிரிக்க வேண்டுமா?

அப்போதுதான் அவளை முழுதாகக் கவனித்தேன்.

மிக இளமையாக இருந்தாள். தலைமுடி ஷாம்பூ விளம்பரத்திற்குப் போல அலை அலையாய் அலைந்து கொண்டிருந்தது. கொஞ்சம் வட்டமான முகம். அதனாலேயே குழந்தைத் தனம் தெரிந்தது. அபாரமான கண்கள். அவை என்னை ஊடுருவின. அவளது பார்வைக் கதிர்கள் உடைகளை மீறி என் உடற்கட்டை, பயிற்சியால் திண் என்று இருந்த தோள்களை, பரந்த மார்பை, ஒட்டிய அடி வயிற்றை, இறுகிய தொடைகளை ஸ்கேன் செய்தன. வெட்கமாக இருந்தது.

அவளது கண்களை விடுத்துக் கீழே இறங்கினேன். ஒரு வளைசல் கூட இல்லாத நீளமான மூக்கு. அவற்றுக்குக் கீழே உதடுகள். ஈர பளபளப்புடன் சாதா உதடுகள் இல்லை. சிற்ப உதடுகள். கைகளில் அவற்றை மட்டும் வைத்து அழகு பார்க்கலாம் போல.

அந்த உதடுகளுக்குக் கீழே வளைந்த மோவாய் 'என்னை ஏந்திக் கொள்.'

கழுத்தில் ஒரு பச்சை நரம்பு ஓடியது. அது என்னை என்னவோ செய்தது. கடைந்தெடுத்தது போல் தோள்கள்.



காலர் எலும்பில் ஒரு குண்டு மாங்காய் மச்சம். துவரம் பருப்பு சைஸில். அந்த மச்சத்திற்குக் கீழே -

கிண்ணென்று, உருண்டு திரண்ட, சிற்பங்களுக்கே இருப்பது போன்ற மார்பகங்கள், மாசு மருவின்றி - யாரும் தொடாத மார்பகங்கள் என்று பார்த்த மாத்திரத்திலேயே புரிந்து போனது.

திடுக்கிட்டேன். அதிர்ந்தேன்.

திரிவேணி சட்டை அணியாமல், பிளவுஸ், பிரா போன்ற எந்த ஆடைக் கவசத்தையும் அணியாமல் என் எதிரில் நிர்வாணமாக நின்று கொண்டிருந்தாள் என்பதை அப்போதுதான் உணர்ந்தேன்.

இடுப்பில் டர்க்கி டவல் அபாய விளிம்பில், எந்த நொடியிலும் இற்று விழுந்து விடும் போலத் தெரிந்தது.

ஐயையோ, என் எஜமானி, அன்னலட்சுமி, எதிரில் அரை நிர்வாணமாக நிற்கிறாள். அவளை நான் ரசித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அவ்வளவு தான் என் வேலை காலி. அவளைக் கடத்தும் திட்டம் காலி.

என் முகத்தில் திகில் படர்வதை உணர்ந்தேன்.

## 11

குப்பென்று வியர்த்து விட்டது. உடனே என் அறைக்குத் திரும்பினேன்.

நாற்காலியில் சரிந்தேன். நடுங்கும் கரங்களால் ஒரு சிகரெட் பற்ற வைத்தேன். புகை நுரையீரல்களில்

படர்ந்ததும் படபடப்பு அடங்கியது. எதிரே டீ.வி. திரையில் இந்தியா ஜெயித்துக் கொண்டிருந்தது - எதிர்பாராதவிதமாக.

வாழ்க்கை கூட எதிர்பாராத திருப்பங்களுடன்தான் நிகழ்கிறது.

இப்போது என்ன ஆகும். திரிவேணியை அரை நிர்வாண நிலையில் பார்த்த குற்றத்திற்காகக் கசையடி களா? என் முதுகில் ஒரு பூட்ஸ் கால் பதிந்து கடலில் தள்ளுமா? வேலைக்குச் சேர்ந்த முதல் நாள், முதல் ஷோவிலேயே என் கதை முற்றுமா?

'டொக், டொக்' வாசல் பக்கம் பார்த்து பின் சத்தம் வேறு திசையில் இருந்து வருவது அறிந்து திரும்பினேன். திரிவேணிதான். ஓவல் கண்ணாடியில் விரல் முட்டியால் தட்டிக் கொண்டிருந்தாள். நான் பார்ப்பது தெரிந்ததும் இடது கை சுட்டு விரலை உயர்த்தி சைகையில் 'வா' என்று அழைத்தாள். திரும்பிப் போய் விட்டாள்.

எழுந்தேன். முழங்கால்களுக்குக் கீழே பஞ்சு. தடுமாறி நடந்தேன். முதல் கதவைத் தள்ளி, இரண்டாவது கதவைத் தள்ளி உள்ளே நுழைந்தேன்.

அறை மையத்தில் அவள் நின்றிருந்தாள். வெளிர் நீலத்தில் ஒரு சட்டை அணிந்திருந்தாள். அதன் கீழ் முனை இரண்டையும் இணைத்து முடிச்சு போட்டிருந் தாள்.

முடிச்சிற்குக் கீழே அவளது நாபிச் சுழிவு!

அந்தத் தொப்புள் குழிவுக்குக் கீழே சன்னமான, வெளிர் பழுப்பு நிற, மிக மெல்லிய முடிகள் தெரிந்தன.

பள்ளத்தாக்கை நோக்கிப் பாய்ந்தன.



அபாய எல்லையை அவை தொட்டபோது ஜீன்ஸ் பேண்ட்டின் விளிம்பு தெரிந்தது.

திரிவேணி தன் இடுப்பு துண்டை மட்டும் கட்டிக் கொண்டிருந்த போது தொப்புளை மறைத்திருந்தாள். இப்போது ஜீன்ஸ் அணிந்திருக்கும்போது, அதைக் காட்டிக் கொண்டிருந்தாள். வேலை எப்படியும் போகப் போகிறது. கசையடி எப்படியும் கிடைக்கப் போகிறது. தூக்கில் தொங்க விடப்படுபவனுக்கு கடைசி ஆசைச் சலுகை போல் எனக்கு இந்த தொப்புள் காட்சி போலும். எனவே ரசித்தேன்.

பின் நிமிர்ந்து பார்த்தேன். என்னை நேருக்கு நேர் பார்த்தாள். கண்கள் இமைக்கவில்லை. அப்படிப் பார்ப்ப தில் எந்தவிதத் தயக்கமும் இருப்பதாகத் தெரியவில்லை. சினிமாக் கதாநாயகிகள் ஸ்டில் போட்டோகிராபர்களுக்கு போஸ் கொடுப்பது போல் தலையை முப்பது டிகிரி கோணத்தில் சாய்த்துப் பார்த்தாள். அவள் கண்களில் இருந்தது கோபமா, பரிதாபமா - என்ன உணர்ச்சி என் பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்தியப் பெண் களின் சராசரி உயரமான ஐந்தடி அங்குலத்தை விட மூன்று இன்ச் உயரமாகவே இருப்பாள் என்று தோன் றியது.

இருவரும் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந் தோம். என் கண்களின் விழி வெண் படலத்தில் நீர் திரண்டு இனி இமைக்காமல் இருக்க முடியாது என்ற நிலையை அடைந்து கண்களை இமைத்தேன். தோற்று விட்டேன். இமை மயிர்கள் கண்ணீரில் நனைந்தன.

அவள் சிக்கனமாகச் சிரித்தாள். எனது தோல்வி அளித்த மமதை. பின் அவளும் இமைத்தாள்.

''உன் பெயர் என்ன?'' என்று கேட்டாள்.

ஸாக்ஸ்போனின் பிசிறு போல் அவள் குரலிலும் ஒரு நூலளவு பிசிறு இருந்தது. சில பெண்களுக்குத்தான் அது போல் குரல் அமையும். சில சமயங்களில் அது ஆண் மையை நினைவு படுத்தும். சில பேரிடம் அதே பிசிறு ஒரு வசீகரத்தைச் சொல்லும். திரிவேணியின் குரல் வசீகரமாக இருந்தது. அதில் செக்ஸ் கலந்து இருந்தது.

''என் பெயர் பாரி'' என்றேன்.

மேலும் சிரித்தாள்.

''ஒன்றாம் வகுப்புப் பையனிடம் 'வாட் ஈஸ் யுவர் நேம்?' என்று கேட்டால் 'மை நேம் ஈஸ் கே.எஸ். இளங்கோ' என்று சின்சியராகப் பதில் சொல்வது போல் இருக்கிறது உன் பதில். பாரி? நல்ல தமிழ்ப் பெயர்'' என்றாள்.

''அப்பாவுக்குத் தமிழ் மேல் காதல்.''

''புரிகிறது. புதிதாக வேலைக்குச் சேர்ந்திருக்கிறாயா?''

''யெஸ் மேடம்! உங்களிடம் அப்புறம் அறிமுகப் படுத்தலாம் என்று நினைத்திருப்பார்கள்.''

''என்றைக்கு?''

''இன்றைக்கு மேடம். இதுதான் என் முதல் ஷிஃப்ட்! உங்களுக்குப் பிடிக்குமோ...''

''லுக். இந்த இடம். நீங்கள், வாங்கள், போங்கள் எல்லா வற்றையும் வெட்டு. உதறு, மற. திரிவேணி என்று கூப்பிட்டு வா, போ என்று சொல்லு. உன்னை விட நான் வயதில் சிறியவள். உன்னை நான் வா, போ என்று



சொல்லவில்லையா? வயதானவர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும். ஸ்டேடஸில் உயர்ந்தவர்களுக்கு மரியாதை தர வேண்டும் என்பதெல்லாம் புல்ஷிட். இங்கிலீஷில் இந்த மரியாதை மயக்கங்கள் எல்லாம் கிடையாது. ஐ லைக் தட் லாங்வேஜ். நீக்கும் யூ தான். நீங்களுக்கும் யூ தான். லெட் அஸ் மீ ப்ரெண்ட்ஸ் சம்மதம்?''

''சம்மதம்.''

''தட்ஸ் குட்'' என்றாள்.

''என்னை மன்னித்து விடு'' என்றேன்.

''எதற்கு?''

''நீ டாப்லெஸாக இருந்ததைக் கவனிக்காமல் அறைக் குள் வந்து விட்டேன். நீ அப்படி இருக்கிறாய் என்பதை நான் உணரவேயில்லை. உணர்ந்திருந்தால் உள்ளே நுழைந்திருக்கவே மாட்டேன்.''

''ப்பூ இவ்வளவுதானா? டாப்லெஸாக இருந்தபோது தான் நான் உன்னைக் கூப்பிட்டேன். நண்டு ஏற்படுத்திய பயம், அருவெறுப்பு காரணமாக. இட்ஸ் ஓ.கே. நீ உள்ளே வந்து நான் டாப்லெஸாக இருப்பதையே வெறித்துப் பார்த் திருந்தால்தான் எனக்குக் கோபம் வந்திருக்கும். இதற்கு முன்னால் இருந்தவன் ஒரு முறை அப்படி என்னைப் பார்த்தான். அவனை நான் எங்கே கடித்துக் குதறினேன் என்று சொல்லவா?''

''வேண்டாம்'' என்றேன் அவசரமாக. மறுபடி சிரித்தாள்.

''எங்கே கடித்திருப்பேன் என்பதைப் புரிந்து கொண்ட தால்தானே அவசரமாக 'வேண்டாம்' என்று சொன்னாய்.

அது உன் புத்திசாலித்தனத்தைக் காட்டுகிறது. ஓ, பாய். ஒரு இளம்பெண்ணின் மேலுடம்பால் கலையாத புத்தி சாலி ஆண் நீ. ஐ லைக் யூ...''

''தாங்க்ஸ்.''

''வார்த்தைகளைக் கவனி, 'ஐ லைக் யூ' என்றுதான் சொன்னேனே தவிர 'ஐ லவ் யூ' என்று சொல்லவில்லை.''

''புரிகிறது ஐ லவ் யூவை நானும் எதிர்பார்க்கவில்லை. எதிர்பார்க்கவும் மாட்டேன்.''

''காதல் என்றால் எப்படியோ அதில் செக்ஸும் கலந்து விடுகிறது. செக்ஸில் அப்படி என்ன கவர்ச்சி இருக்கிறது? நட்பு என்றால் அதோடு செக்ஸ் சேருவதில்லை. அதுதான் எனக்கு ஆரோக்கியமாகப் படுகிறது.''

''வாவ் உன்னுடன் பேசப்பேச உன் பர்சனாலிட்டி என்னைப் பாதிக்கிறது. என்னைப் பார்த்த ஆண்களின் பார்வையில் எல்லாம் காமம் கலந்து இருந்தது. முதல் முறையாக காமமே கலக்காமல் பார்த்த அவன் நீ. மேலும் உன் ஸ்கிரிபிளிங் பேடைப் பிடுங்கிப் படித்தேனே. எதற்கு என்று தெரியுமா? நான் டாப்லெஸாக இருந்தேன். என் பிஹேவியர் சரியில்லை என்று அதில் ரிப்போர்ட் எழுதினாயா என்று பார்த்தேன். அப்படி ஏதாவது எழுதி யிருந்தால் உன் வேலை இந்நேரம் காலியாகி இருக்கும். நீ என் உடம்பை மதிக்காமல் 'நண்டு உள்ளே வராதிருக்க பாத்ரூமுக்கு வெளியே தோண்டிப் பார்க்க வேண்டும்' என்று சின்சியராக எழுதி வைத்திருந்தாய் பார். அந்த சின்சியாரிட்டிதான் உன்னைக் காப்பாற்றியது. சொல், ஒரு ஆண் டாப்லெஸாக அலையலாம். ஒரு பெண் அந்த சுதந்திரத்தை எடுத்துக் கொள்ளக் கூடாதா?''

''தாராளமாக எடுத்துக் கொள்ளலாம்.''



''தேர் யூ ஆர், பின் ஏன் இந்த மேல் சாவனிஸ்டுகள் இதைத் தப்பு என்கிறார்கள்? எதிர்க்கிறார்கள்? அடக்கு. கிறார்கள்?''

''திறந்தபடியே பார்த்துக் கொண்டிருந்தால் அவற்றின் மேல் தங்களுக்கிருக்கும் கவர்ச்சி காணாமல் போய் விடும் என்ற பயம் கூடக் காரணமாக இருக்கலாம்'' என்றேன்.

கண்களில் நீர் வருகிற மாதிரி சிரித்தாள்.

அந்தச் சந்திப்பு அத்துடன் நிறைவடைந்தது. நான் வெளியே வந்து விட்டேன். என்ன மாதிரியான பெண் இவள்? புரியவில்லை. இவள் நின்றதை நான் கவனிக் காமல் இருந்ததற்கு வேறொரு மனவியல் காரணம் இருக்கும் என்று தோன்றுகிறது.

நான் ஏற்கனவே கல்யாணமானவன். கலையரசி என்ற தாடகையின் கணவன். அவளுடைய நடத்தையால் எனக்குப் பெண் சுகம் மேல் இருந்த கவர்ச்சி போய் விட்டது. ஹிஸ்டீரியா தாக்கி முடிந்த பின் அவளது உள்ளாடை முதற் கொண்டு எல்லா உடைகளையும் தளர்த்தி விட வேண்டும் என்பது டாக்டர் உத்தரவு. அப்படித்தான் செய்து கொண்டிருந்தேன். கால்களை விரித்துக்கொண்டு, கைகள் இரண்டையும் இரு வேறு எதிர் கோணங்களில் நீட்டிக் கொண்டு வாய் திறந்தபடி 'பே' என்று அருகில் ஒவ்வொரு ராத்திரியும் படுத்திருக் கும் மனைவி உங்களுக்கு வாய்த்தால் உங்களுக்கும் பெண்ணுடன் மீதான கவர்ச்சி அற்றுப் போய்விடும். இல்லையா பெங்களூர் விஸ்வநாதன்? இல்லையா வேலாயுதம்பாளையம் சம்பத்?''

எப்படியோ, திரிவேணி என்னிடம் நட்பு பாராட்டினாள்.

ஆஸாத் அவளிடம் இருந்து விலகியே இருந்தான். சாரதி அவளிடம் இருந்து விலகியே இருந்தான். அவர்கள் இருவரும் டூட்டி பார்க்கும் சமயத்தில் திரிவேணி எட்டிக் கூடப் பார்ப்பதில்லை என்று அவர்கள் பேச்சில் இருந்து புரிந்தது.

என்னையும் மிக ஜாக்கிரதையாக இருக்கச் சொன்னார் கள். திரிவேணியிடம் பேச்சே வைத்துக் கொள்ளக்கூடாது என்றார்கள்.

'சரி, சரி' என்று தலையாட்டினேன். ஆனால் உள்ளுக் குள் கன்றுக்குட்டி உதைத்தது. திரிவேணியிடம் நான் மிக அதிகமாகவே நெருங்கிக் கொண்டிருப்பதாகப் பட்டது.

நான் டூட்டிக்கு வருவதை எதிர்பார்த்து திரிவேணி காத்திருந்த மாதிரி பட்டது. இரவு பத்திலிருந்து காலை ஆறு மணி வரை டூட்டியின் போது நான் தூங்காதது போலவே அவளும் தூங்குவதில்லை.

நிறையப் பேசினாள். மணிப்பாலில் அவள் மெடிக்கல் காலேஜில் படித்த நாட்களைப் பற்றி நிறைய நினைவு கூர்ந்தாள். அறைத்தோழிக்கு மீசை வரைந்தது பற்றி, ஒரு முறை பாங்க் அடித்துவிட்டு நாள் முழுவதும் சிரித்துக் கொண்டிருந்தது பற்றி, பந்தயத்திற்காக ரயில் வரும் நேரத்தில் பாலத்தின் மேல் இருக்கும் தண்டவாளத்தில் நடந்தது பற்றி, கூட்டில் இருந்து விழுந்த குருவிக்குஞ்சை தாய்க்குருவிக்குத் தெரியாமலேயே கூட்டில் மறுபடி சேர்த்தது பற்றி. ஒரு பாறாங்கல்லின் கீழே குடித்தனம் பண்ணிக் கொண்டிருந்த இருபது தேள்களையும் பிடித்து அவற்றின் கொடுக்குகளை மட்டும் நறுக்கி விட்டு விடுதலை செய்தது பற்றி... பேச்சு... நிறைய பேச்சு.

நடுவில் இரண்டு முறை ராஜதுரை சோதனைக்கு வந்தபோது என் பக்கம் அதிர்ஷ்டம் இருந்தது. என்



அறையில் உட்கார்ந்து சிகரெட் பிடித்தபடி எனக்கு நானே சீட்டு போட்டு ஆடிக் கொண்டிருந்தேன்.

வேலைக்குச் சேர்ந்த ஒரே மாதத்தில் திரிவேணியைப் பற்றி நான் அறிந்து கொண்ட விஷயங்கள் இரண்டு.

ஒன்று, அவளுக்குத் தன் தகப்பனைப் பிடிக்கவில்லை.

இரண்டு, தன் சுதந்திரத்தை மிக விரும்பினாள்.

முதல் மாத சம்பளம் வாங்கியதற்கு அடுத்த நாள் திரிவேணி என்னிடம் சொன்னாள்:

''பாரி, இங்கே எனக்கு உணவு இருக்கிறது. உடை இருக்கிறது. தங்க இடம் இருக்கிறது. ஆனாலும் என்ன பிரயோஜனம்? ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட இந்த அறைக் கதவை விட்டு அந்தப் பக்கம் நகர முடியாது. ஆரோக்கியமாக வளர்க்கப்பட்ட பெண் நாய் நான். நாய் கூட இல்லை. நாய்க்காவது நான்கு தெரு சுற்றலாம். சாப்பிட வேண்டாம் என்று நினைத்தால் சாப்பிடாமல் இருக்கலாம். எனக்கு அந்த உரிமை கூட கிடையாது. கால்களில் தங்க விலங்கு பூட்டப்பட்ட கைதி நான். விலங்கு தங்கத்தில் இருந்தால் என்ன? விலங்கு விலங்கு தானே! என்னை இந்தத் தங்கக் கூண்டிலிருந்து எடுத்துப் பறக்க விடுவாயா? என் சுதந்திரத்தை எனக்கு மீட்டுத் தருவாயா? உன் உயிரைப் பணயம் வைத்து என்னை சிறை மீட்டால் உனக்கு என்ன லாபம் என்று யோசிக் கிறாயா? யோசிக்க வேண்டிய விஷயம்தான். என் தகப் பனின் சொத்தில் இருந்து ஒரு பைசா எனக்குக் கிடைக் காது. அடுத்த வேலைக்கு உணவின்றித் தெருவில் பிச்சைக்காரியை விடக் கேவலமாக அலைய வேண்டிய ஒரு நிலை ஏற்படும். ஆனால்... ஆனால்...''

''ஆனால்...?'' என்று கேட்டேன் நான் படபடப்பை அடக்கிக் கொண்டு.

''இருபது வருஷங்களாக நான் பொக்கிஷம் போல் பொத்திப் பொத்தி வைத்திருக்கும் என் கன்னிமையை உனக்கு என் மனமார காணிக்கை ஆக்குகிறேன்...'' அந்த வாக்கியத்தை முடிக்கும்போது அவள் கண்களில் நீர் திரண்டு இருந்தது.

என் நெஞ்சில் ஒரு பாறாங்கல் ஏற்றி வைக்கப்பட்டிருந்தது.

# 12

சுப்பு சார் என்னை அந்தமான் வரை டிக்கெட் எடுத்து அனுப்பியிருப்பது திரிவேணி என்னும் ஐம்பது கிலோ டி.என்.டி.யைக் கடத்தி வர.

இங்கே வந்ததும் சாரதி எனக்குப் பன்னிப் பன்னி சொன்னது. திரிவேணி மேல் யாராவது கை வைத்தால், யாராவது அவளைக் கடத்த முயற்சி செய்தால், அப்படி முயற்சிப்பவரை விஸ்வநாதன் எந்தெந்த வழிகளை எல்லாம் உபயோகித்துக் கொல்லுவார் என்பதை.

இப்போது திரிவேணி சொல்வது என்னவென்றால், 'என்னை விடுதலை செய்! அதற்குப் பரிசு அவளே.' சுவாமிக்குத் தன்னையே காணிக்கையாக்கிக் கொள்ளும் தேவதாசி போல் திரிவேணியும் தன்னை எனக்கு அர்ப்பணம் செய்வதாகக் கூறுகிறாள்.



கரும்பு தின்னக் கூலி என்பது பழைய சொலவாடை.

கம்ப்யூட்டரும் கற்றுக் கொடுத்து வேலையும் தருவது என்பது இப்போதைய நடைமுறை பொன்மொழி! அந்தப் பொன்மொழியைத்தான் திரிவேணி சொல்லாமல் சொல்கிறாள்.

எல்லாம் ஓ.கே. திரிவேணியைக் கடத்திய பின் என் உயிர் தப்பிப் பிழைத்தால்தானே அவள் காணிக்கையாக்குவதை நான் ஏற்க முடியும்!

ஆனால் ஒரு விஷயம் எனக்குத் தெளிவாகப் புரிந்தது. திரிவேணியை கடத்தும் முயற்சியில் மாட்டிக் கொண்டால் என் உயிர் எனக்குச் சொந்தம் இல்லை என்பது அழிக்க முடியாத ஒரு உண்மை.

உயிரை வெல்லமாக நினைத்து, கடமை கண்ணாயிரமாக திரிவேணியைக் காவல் காத்தால் அவளே என்னை ராஜதுரையிடமோ, விஸ்வநாதனிடமோ அபாயகரமாக சிக்க வைத்து விடுவாள்.

அவளை நான் கெடுக்க முயன்றேன் என்பாள். டாப்லெஸாக என் எதிரில் நின்ற அவளுக்குத் தன் சட்டையைக் கிழித்துக் கொண்டு ராஜதுரையை அழைத்துக் காட்ட எவ்வளவு நேரமாகி விடும்?

'பாரி, இருதலைக் கொள்ளி எறும்பே. மடவாத்தே, ஏமாந்த கழுதையே. நீ வசமாக மாட்டிக் கொண்டாய்!'

'இரு. இரு. உயிர் போனாலும் பரவாயில்லை. சுப்புவுக்குப் பட்ட நன்றிக்கடனாக திரிவேணியைக் கடத்தியே தீருவது என்று முடிவு செய்யவில்லை?'

'ஆமாம்.'

'இப்போது திரிவேணியே உன்னிடம் 'என்னைக் கடத்திப்போ' என்று சொல்கிறாளா இல்லையா?'

'ஆமாம்.'

'பழம் நழுவிப் பாலில் விழுந்து இருக்கிறதே. அதை நினைத்து சந்தோஷப்படுவாயா, அதை விடுத்து இரு தலைக் கொள்ளி எறும்பு, முட்டாள் கழுதை, மடவாத்து என்று நொந்து கொள்வாயா?'

'அட ஆமாம் இல்லை?'

புத்தனுக்கு போதி மரத்தடியில் ஞானம் கிடைத்த மாதிரி, எனக்கு ஒரு பாட்டில் பியர் அடித்த பிறகு ஞானம் கிடைத்தது.

ஓ.கே. திரிவேணியைக் கடத்தலாம். அவள் வரமாட்டேன் என்று, முரண்டு பிடித்தால் வன்முறையை உபயோகப்படுத்த வேண்டும். அவளை மயக்கத்தில் ஆழ்த்தித் தோளில் தூக்கிச் செல்ல வேண்டும். அதெல்லாம் இல்லாமல் திரிவேணியேக் கூட வருவதற்குச் சம்மதித்த பிறகு, அவளைக் கடத்துவது என்பது எவ்வளவு எளிதான விஷயம்? அவள் உதவக்கூட உதவுவாளே!

எனக்கு பரபரப்பாக இருந்தது. உற்சாகமாக இருந்தது.

திரிவேணியைக் கடத்த வேண்டும் என்றால் அவளை எப்படிக் கடத்துவது என்று தீர்மானிக்க வேண்டும். அது நம்பர் ஒன்.

அவளைக் கடத்த எனக்கு நிச்சயம் உதவி வேண்டும். யார் உதவுவார்கள் என்று பார்க்க வேண்டும்.

என் அறையில் ஆமைத்தீவின் வரைபடம் ஒன்று இருந்தது. நான் செக்யூரிட்டி கார்ட் அல்லவா? அதனால்



அந்தத் தீவின் அமைப்பைத் துல்லியமாக விளக்கும் வரை படம் ஒன்றை எனக்குக் கொடுத்திருந்தார்கள். அதைக் கவனமாக ஆராய்ந்தேன்.

ஆமைத்தீவு முழுக்க விஸ்வநாதனுக்குச் சொந்தமாக இருந்தாலும் அதன் ஒரு பாதியைத்தான் அவர் ஆக்கிரமித்திருந்தார். அந்தப் பாதியில்தான் திரிவேணியைப் பாதுகாப்பாக வைத்திருக்க எழுப்பப்பட்ட கட்டிடங்கள் இருந்தன.

எல்லாம் கிரவுண்ட் ப்ளோர் வரைக்கும் போதும் என்று தீர்மானித்துக் கட்டப்பட்டிருந்த கட்டிடங்கள். ஹாலிடே ரிசார்ட்டுகள் எல்லாம் பெரும்பாலும் அப்படித்தான் அமைக்கப்பட்டிருக்கும்.

திரிவேணியை பாதுகாப்பாக வைத்திருந்த கட்டிடத்தில் அவளுடைய அறை இருந்தது. அந்த அறையில் டி.வி., கம்ப்யூட்டர், ஆடியோ சிஸ்டம், டி.வி.டி, சி.டி. எம்.பி.த்ரீ, ஒரு சின்ன நூலகம் எல்லாம் இருந்தன. அதை ஒட்டி ஒரு பாத்ரூம். நான் எட்டிப் பார்த்த அதே பாத்ரூம். அதைத் தவிர ஒரு படுக்கை அறை. அதில் வார்ட்ரோப். மறுபடி டி.வி. ஆடியோ சிஸ்டம், டி.வி.டி., சி.டி., எம்.பி.த்ரீ, சி.டி., காஸெட்டுகள், டேப்புகள், டிரெஸ்ஸிங் டேபிள் எல்லாவற்றுக்கும் இட ஒதுக்கீடு. அவள் படுக்கை அறை வரைபடத்தில் இருப்பதுபோலவே இருக்கும் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. அந்தப் படுக்கை அறையை ஒட்டி மறுபடி ஒரு பாத்ரூம்.

திரிவேணி புழங்க இந்த இரண்டு அறைகள். இந்த அறைகளை ஒட்டி அமைந்திருந்த அறைதான் காவல் நாய்க்கான அறை, அதாவது என் அலுவல் அறை. அதன் அமைப்பு பற்றி ஏற்கனவே சொல்லியாகி விட்டது.

இந்தக் கட்டிடம் ஒரு தனி யூனிட். இதை விட்டால் இன்னொரு தனிக் கட்டிடம் செக்யூரிட்டிகளின் தலைவர் ராஜதுரை இருப்பதற்கான அறைகள். அவருக்கென ஒரு ஆபீஸ் அறை. அதில் எல்லா கம்யூனிகேஷன்களுக்கு மான வசதிகள். ஒயர்லெஸ் ரேடியோ. டெலிபோன்கள். கம்ப்யூட்டரில் இணைக்கப்பட்ட டெலக்ஸ். பாக்ஸ் மெஷின். கட்டிடத்தின் கூரையில் பொருத்தப்பட்ட சக்தி வாய்ந்த சட்டி ஆன்ட்டெனா.

ஆபீசில் ராஜதுரைக்கு உதவியாக கோவர்தன். என்னைப் படகில் கூட்டி வந்து சேர்த்த அதே கோவர்தன். வாசலில் இருபத்து நான்கு மணிநேர செக்யூரிட்டி மிஷின் கன்னுடன்.

நான்கு செக்யூரிட்டிகள் ஷிஃப்டில் மாறி மாறி மெஷின் கன் சகிதம் நின்று இருக்க ஏற்பாடு.

அப்புறம் இன்னொரு கட்டிடம். சமையலுக்காக. சமையல்காரன் பசுபதியின் தர்பார் நடக்கும் இடம். ஓவன், மைக்ரோ ஓவன், எலக்ட்ரிக் அடுப்புகள், காஸ் சிலிண்டர்கள் என்று சமையல் செய்வதற்கான அத்தனை விதமான அடுப்புகளும் பொருத்தப்பட்ட விஸ்தாரமான சமையல் அறை. அதையொட்டி ஒரு ஸ்டோர் ரூம். ஸ்டோர் ரூமில் ஒரு பெரிய ப்ரீஸர் வைப்பதற்காக வரைபடத்தில் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. ப்ரீஸர் இருக்கிறது. நான் பார்த்திருக்கிறேன்.

இங்கு வந்து சேர்ந்த ஒரு மாதத்தில் ராஜதுரையின் ஆபீஸ், சமையல் அறை, ஸ்டாஃப் குவார்ட்டர்ஸ் என்று எல்லா இடங்களுக்கும் போய் அவற்றின் அமைப்புகளை மனதில் பதிய வைத்துக் கொண்டிருந்தேன்.



சமையலறையின் கதவில் பான்ட்ரி என்று கண்ணாடிச் சதுரத்தில் ப்ளோரசன்ட் ஸ்டிக்கர் எழுத்துக்கள் ஆங்கிலத்திலும் மின்னும்.

அந்தக் கதவைத் தள்ளித் திறந்தால் உஷ்ணக் காற்று தாக்கும். விதவிதமான மசாலா வாசனைகள் நாசியை அடையும். பசுபதிக்கு மூன்று உதவியாளர்கள் இருந்தார்கள். இருக்கிறார்கள். மிக ஆரோக்கியமான உடல்களைக் கொண்டவர்கள்.

டூட்டி நேரம் போக மற்ற நேரத்தில் அவர்கள் ஆளுக்கு நன்நான்கு பேர்களை நான்கு தட்டு தட்டி பல்லை உடைப்பதைப் பொழுது போக்காகக் கொண்டவர்கள் என்று சொன்னால் தாராளமாக நம்பலாம்.

டூட்டி நேரத்தில் அனைவரும் உயரமான வெள்ளைத் தொப்பி அணிந்திருப்பார்கள். ஏப்ரன் கட்டியிருப்பார்கள். வேலை மேஜையில் அவர்கள் தோலை உரித்த, இறகுகளைப் பிய்த்த கோழிகளை சித்திரவதை செய்வதைப் பார்த்தால் அவர்கள் மனதில் ஆழமாகப் பதிந்திருக்கும் வன்முறையின் பரப்பு தெரியும்.

கத்திகள், மாமிசம் வெட்ட, கறிகாய் வெட்ட, சீவ, சிதைக்க, பிரம்மாண்டமான குக்கிங் ரேஞ்சுகள். தனியே நின்ற இட்லி ஓவன், ப்ரீஸரில் அடுக்கப்பட்ட ஆட்டுக்கறி, கோழி இறைச்சி, மீன்கள், இறால்கள் எல்லாவற்றையும் பார்த்திருக்கிறேன்.

அந்த மெகா சமையல் கட்டிடத்தை ஒட்டி அவர்கள் நால்வரும் தங்குவதற்கான குவார்ட்டர்ஸ்கள்.

அதை விட்டால் செக்யூரிட்டி கார்டுகளுக்காக என்று கட்டப்பட்ட தனித்தனி குவார்ட்டர்ஸ்கள். நான், ஆஸாத், சாரதி. மூன்று பேர்.

இந்த குவார்ட்டர்ஸ்களை அடுத்து மெஷின் கன் கார்டுகளுக்கான ஒரு கட்டிடம். அந்தக் கட்டிடத்தில் மொத்தம் எட்டு செக்யூரிட்டி கார்டுகள் தங்கியிருந்தார்கள். படகுத் துறையைக் காவல் காக்க நான்கு பேர். ராஜதுரை ஆபீஸ் வாசலில் நிற்க நான்கு பேர்.

இறுதியாக நான்கு வேலைக்காரர்கள் தங்கியிருந்த கட்டிடம்.

துணிகளைத் துவைக்க, ஸானிடேஷன் கோளாறுகளை சரி செய்ய, பெருக்க, கூட்ட, கழிக்க, மின்சாரம், தண்ணீர் சப்ளையை சீராக வைத்திருக்க.

மிச்சம் இருந்தது படகுத் துறை. கோவர்தனுடன் நான் வந்து சேர்ந்த படகுத்துறை. ஆமைத்தீவின் நுழைவாயில். அப்புறம் விஸ்வநாதன் வர ஒரு ஹெலிபேட்.

மற்றபடி தீவின் இன்னொரு பகுதி யாராலும் சீந்தப் படாமல் இருந்தது. ஒரு காலத்தில் இந்திய ராணுவம் அந்தத் தீவை தன் வசத்தில் வைத்திருந்து நிராகரித்து விட்டுப் போனதாக வரை படத்தில் குறிப்பு ஒன்று எழுதப்பட்டிருந்தது.

பாழடைந்த சர்ச், ராணுவ ஆயுதக் கிடங்கு என்று இரண்டு மூன்று இடங்கள் குறிப்பிடப்பட்டு அவற்றின் மேல் சிவப்பு மையில் பெருக்கல் குறிகள் இடப்பட் டிருந்தன.

தீவின் நிராகரிக்கப்பட்ட அந்தப் பகுதியைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்று தீர்மானித்தேன்.

அது அப்புறம்.

திரிவேணியை நான் தனி ஆளாகக் கடத்த முடியாது. நிச்சயம் இன்னொரு உதவி வேண்டும்.



எனக்கு யார் உதவுவார்கள்?

ஒவ்வொருத்தராக ஆராயலாம்.

கோவர்தன்?

என்னைப் படகில் கூட்டி வந்தவன். வெளி உலகோடு தொடர்பு வைத்திருப்பவன். மளிகைப் பொருட்கள், இறைச்சி என்று தீவு மனிதர்களின் தேவைகள் அனைத்தையும் போர்ட் ப்ளேயரில் இருந்து கொண்டு வந்து சேர்ப்பவன்.

தனி ஆள். குடும்ப வாழ்க்கையில் நம்பிக்கை அற்ற வன் அவனது செக்ஸ் தேவைகளுக்கு அந்தமானில் நிறைய வடிகால்கள் இருப்பதாக சாரதி சொல்லியிருந் தான். என்னைவிட இரண்டு மடங்கு அதிகமாக சம்பளம் வாங்குபவன். பணத்தேவை இல்லை. விசுவநாதனின், ராஜதுரையின் விசுவாசி. ம்ஹூம்.

அவனை நம்புவதில் பிரயோஜனமே இல்லை.

ராஜதுரை - நோ, சான்ஸ்.

பசுபதியை சாப்பாட்டிற்கு அணுகலாம். இண்டியன், காண்டினென்ட்ஸ் என்று எல்லாவற்றுக்கும் ரெடி. ஆனால் கடத்தலுக்கு? போர்ட் ப்ளேயரிலேயே அவன் மனைவி இருக்கிறாள். ஒரு பையன், ஒரு பெண். பையன் அமெரிக்காவில் கம்ப்யூட்டரைத் தட்டி டாலர்களைக் குவித்துக் கொண்டிருக்கிறான். மகள் ஆஸ்திரேலியாவில் இன்ஜினீயர் கணவனுடன் கங்காருகளைத் துரத்திக் கொண்டிருக்கிறாள். எனவே நிம்மதியான வாழ்க்கையைச் சிதைத்துக் கொள்ள அவன் விரும்பமாட்டான்.

சாரதி, திரிவேணியைக் கடத்துவது என்பது பற்றி நினைத்தாலே சிறுநீர் கழித்து விடுவான். ஆஸாத் விசுவ நாதனுடைய நெருங்கிய சொந்தக்காரன்.

செக்யூரிட்டி கார்டுகள். வேலைக்காரர்கள் என்று யாரும் வேலைக்கு ஆக மாட்டார்கள். கொஞ்சம் கூடப் புத்திசாலித்தனம் இல்லாதவர்கள். வாழ்க்கையில் ஒவ்வொரு வேளைக்கும் வயிற்றுக்கு சோறு நிச்சயம் என்ற உத்தரவாதம், மட்டும் அவர்களுக்குப் போதும்.

லட்சியம், கனவு என்று எதுவுமே இன்றி, ஆடு, மாடு களைப் போல வாழ்க்கையை நடத்துபவர்கள்.

இந்தத் தீவில் எனக்கு உதவக் கூடியவர்கள் யாருமே இல்லை என்று வருத்தத்துடன் நினைத்துக் கொண் டிருந்த போதுதான் ஷீலாவின் ஞாபகம் வந்தது.

ஷீலா!

வலுவில் வந்து என்னைச் சந்தித்தவள். என்னோடு டைன் அண்ட் டான்ஸில் நடனமாடியவள். நான் அவள் மேல் தப்பான இடங்களில் பட்டதைத் தப்பாக எடுத்துக் கொள்ளாதவள். இந்த வேலையில் என்னை அமர்த் தியவள். இந்த வேலையில் அமர்த்துவதற்காக என் மேல் பரிதாபப்பட்டுக் கன்னத்தில் முத்தமிட்டவள்.

அப்படியானால்?

ஷீலா திட்டமிட்டுத் தானே என்னைச் சந்தித்திருக் கிறாள்? திட்டமிட்டுத்தானே இந்த வேலையில் சேர்த் திருக்கிறாள்?

அவள்தானே குட்டி எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்ச் வைத்திருக்கிறாள்? அவளுக்குத்தானே வெளி உலகத் தொடர்புகள் அத்தனையும் இருக்கும்?

அவளை உதவிக்கு அழைத்தால் என்ன?

எனக்கு இங்கே யாராவது உதவ முடியும் என்றால் அது ஷீலா ஒருத்திதான்.



உற்சாகமாக இருந்தது.

பீரை கடகடவென்று சரித்துக் கொண்டேன். சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டேன். சாய்ந்து கொண்டேன்.

ஷீலாவை எப்படிச் சந்திப்பது. எப்படிப் பேசுவது என்று யோசிக்கத் தொடங்கினேன்.

# 13

திங்கள்கிழமை எனக்கு ஒய்வு நாள். பொதுவாக ஞாயிற்றுக்கிழமைகள் மட்டும் ஒய்வு நாளாக எங்கள் மூவரில் யாருக்குமே அமையாது.

ஒய்வு தினம் என்பது ஆசாதிற்கும், சாரதிக்கும், சிறையிலிருந்து பரோலில் வெளியே போவது போல. படகுத் துறையில் எப்போதும் ஓர் இயந்திரப் படகு ஸ்பே ராக இருக்கும். ஆசாதோ, சாரதியோ அதை எடுத்துக் கொண்டு போர்ட் ப்ளேயருக்குப் போவார்கள்.

ஓட்டலுக்குச் சென்று நடனமாடுவார்கள். கடல் விளை யாட்டில் ஈடுபடுவார்கள். மனிதர்களிடையே சுற்றுவார் கள். அன்று முழுக்க லேசான போதையிலேயே, கிறக் கத்திலேயே தரையில் இருந்து ஓரடி உயரத்தில் மிதந்த படியே வாழ்ந்துவிட்டு மறுபடி அடுத்த ஒய்வு நாள் ஏக்கத்துடன் தீவுக்குத் திரும்புவார்கள்.

என்னுடைய ஒய்வு தினங்களில் நான் போர்ட் ப்ளேயருக்குச் செல்லவில்லை. திரிவேணியை எப்படிக்

கடத்துவது என்று யோசிப்பதிலேயே என் ஓய்வு நேரம் அத்தனையையும் செலவழித்தேன். ஒரு ஃபூல் புரூஃப் திட்டம் வேண்டும்.

நானும் மாட்டக்கூடாது. திரிவேணியைக் கடத்த வேண்டும். அதற்கான வழிகளை ஆராய்ந்து கொண்டிருந் தேன்.

அந்தத் திங்கள் அன்று தீவைச் சுற்றிப் பார்ப்பது என்று தீர்மானித்தேன். கையில் ஒரு பியர் பாட்டில். சட்டைப் பையில் சிகரெட் பாக்கெட். தீப்பெட்டி. புறப்பட்டு விட்டேன்.

ஐந்து நிமிட நடையில் தீவின் மறுபக்கத்திற்குச் சென்று விட்டேன். என் கண்ணெதிரில் விரிந்த அந்த இன்னொரு பாதித்தீவு என்னைப் பிரமிக்க வைத்தது.

சொன்னால் உங்களால் புரிந்து கொள்ள முடியுமா என்று தெரியவில்லை. அதில் சிதிலமடைந்த அமைப்பை அந்த சிதிலத்தில் புதைந்திருந்த அழகை விவரிக்க நான் கற்றுக் கொண்டிருக்கும் தமிழ் போதாது. வார்த்தைகளைத் தேட வேண்டும். இருந்தும் முயற்சி செய்கிறேன்.

ஆமைத்தீவின் மறுபாதி ஒரு காலத்தில் பிரிட்டிஷ் காரர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு இருந்திருக்கிறது. பிரிட் டிஷ் ராணுவத் தளபதிகள், உயர் அதிகாரிகள் ஆகியோர் அந்தத் தீவில் தத்தம் மனைவியருடன் குடியேறி இருந்திருக்கின்றனர். வாழ்ந்து இருக்கின்றனர். சுதந்திரத் திற்குப் பின் தீவைக் காலி செய்து கொண்டு போயிருக் கின்றனர்.

பிரிட்டிஷ்காரர்கள் வாழ்ந்து விட்டுப் போனதற்கான அடையாளங்கள்தான் ஆமைத்தீவின் மறுபாதியில் காணப்பட்டன.



ஒரு பிரம்மாண்டமான சர்ச்சில் எலும்புக்கூடு தெரிந்தது. சர்ச்சின் முகப்பில் சிலுவை ஒன்று வான் நோக்கி உயர்ந்திருந்தது. கூரைகள் பெயர்ந்து இருந்தன. மரத் தாலான உத்தரங்கள் வெயிலிலும், மழையிலும் அடி பட்டு தத்தம் மூலநிறத்தை இழந்து கறுத்திருந்தன. உள்ளே பெஞ்சுகள் எதுவும் இல்லை. காலியான பிரம் மாண்டமான மண்டபம்தான். கூரையில் தெரிந்த ஓட்டைச் சதுரங்களில் இருந்த தூசி நிறைந்த வெயில் ஒரு கன சதுரத் தூணாக இறங்கிக் கொண்டிருந்தது. ஜன்னல்கள் சிலவற்றுக்குக் கதவுகள் இருந்தன. அவை காற்றில் அடித்துக் கொண்டன. அந்த ஒலி ஹாலின் வெறுமையான பிரம்மாண்டம் காரணமாக எதிரொலித்தது.

சர்ச்சிற்குச் சற்றுத் தள்ளி ஒரு பெரிய மண்டபத்தின் எலும்புக்கூடு தெரிந்தது. வாசலில் அதன் வரலாறு ஒரு போர்டில் எழுதப்பட்டிருந்தது.

பிரிட்டிஷ்காரர்களின் கேளிக்கை மண்டபம். ஒருவரை ஒருவர் கோர்த்தபடி நடனம் ஆட, இசைக்க, விருந் துண்ண, இந்திய அழகிகளை நாட்டியமாட வைக்க என்று பயன்படுத்தப்பட்ட மண்டபம். வெறும் செங்கல் செங்கல்லாக இருந்தது.

அந்த மண்டபத்தை அடுத்து கூரை இழந்த வீடுகள். இன்னும் இடிந்து போகாமல் இருந்த சுவர்கள் மேற்பூச்சு இன்றி செங்கல் செங்கல்லாகக் காணப்பட்டன. அந்த செங்கல் சுவர்களில் தாவரங்கள் வேர் பிடித்து வளர்ந் திருந்தன. செங்கல் நிறத்தின் பின்னணியில் பச்சை நிறத் தாவரங்களின் தழுவல் ஒரு கனவுப் பிரதேசத்தில் நுழைந்து விட்ட பிரமையை அளித்தது. பெரும்பாலான வீடுகள் இதே நிலையில்தான் இருந்தன.

படிகள் சிதைந்த தண்ணீர் அற்ற ஒரு நீச்சல் குளம் இருந்தது.

பிரிட்டிஷ்காரர்கள் நீந்திக் களித்த இடம் சற்றுத் தள்ளி ஒரு கல்லறைத் தோட்டம். அது முழுக்க இறந்து போன பிரிட்டிஷ் மக்களின் கல்லறைகள். பெரும்பாலும் இளம் பெண்கள். இருபது வயது, இருபத்தோரு வயது என்று கல்லறைகளில் எழுத்துக்கள் தெரிவித்தன. பெரும் பாலும் பிரசவத்தின்போது நேர்ந்த மரணங்கள். இறப்பும், பிறப்பும் கை கோர்த்து வலம் வந்திருப்பது அந்தக் கல்லறை வாசகங்களில் இருந்து புரிகிறது.

திடீரென்று என் மூளையில் ஓர் எண்ணம் தோன்றியது. இறப்பும், பிறப்பும்! திரிவேணியைக் கடத்தும் போது இந்த இறப்பையும், பிறப்பையும் உபயோகப் படுத்தினால் என்ன?

திரிவேணி கடத்தப்பட்டாள் என்று தெரிந்தால் அடுத்த கணமே விஸ்வநாதன் தன் படையையே ஏவி விட்டு விடுவார். திரிவேணி உயிரோடு இருந்தால் அவளை மீட்டுக் கொண்டு போகலாம். நான் உயிரோடு இருந்தால் என்னையும் பிடித்துக் கொண்டு போய் சாகடிக்கலாம். ஆனால்... ஆனால்...

'இரு... இரு... தாவாதே, இது பற்றி நிதானமாக யோசி' என்று மனதிற்கு ஒரு ஸ்பீட் பிரேக்கர் போட்டேன். திரிவேணியின் கடத்தல் என்பது இப்போது தீர்மானித்து, இப்போதே நிறைவேற்றப்படப் போகும் விஷயம் அல்ல. அதனால் ஆழ்ந்து அமர யோசிக்கலாம் என்று தீர்மானித் தேன்.

தீவை ஒரு இடம் கூட மிச்சம் வைக்காமல் ஆராய்ந்து விடுவது என்று முடிவு செய்து அந்தக் கல்லறைத் தோட்டத்தை விட்டு விலகி நடந்தேன்.



எனக்குள் ஒரு சிறு பொறியை அந்தக் கல்லறைத் தோட்டம் கிளப்பி விட்டது. அந்த நன்றியுடன் அதைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே நடந்தேன்.

தீவின் மறுபாதி கடற்கரையை அடைந்தேன். கரை யோரம் தென்னைகள் தனித்தனியாக நாணல்களைப் போல் வளைந்து வளைந்திருந்தன. வரிசையாக அணி வகுத்து வளைந்து நின்றிருந்த அவற்றைப் பார்த்தால் ஆதிசேஷனின் அத்தனை தலைகளும் ஒன்றாகச் சேர்ந்து படம் எடுத்து வளைந்து நிற்பது போல் தோன்றியது. தென்னைகளை நெருங்கினேன். கடல் அலைகள் கரையுடன் கொஞ்சிக் கொண்டிருந்தன. அந்தமான் கடற்கரைகளில் எங்குமே ஆக்ரோஷ அலைகளைக் காண முடியாது.

வளைந்து நின்ற தென்னைகளுக்கு அடியில் ஒரு படகுத்துறை தெரிந்தது. அதன் படிகள் சிதிலமடைந் திருந்தன. இருப்பினும் உபயோகப்படுத்தக்கூடிய தகுதி இருந்தது. படகுத்துறை. கண்ணாமூச்சி விளையாட்டில் ஈடுபட்ட ஒரு சிறுமி ஒளிந்து கொண்டிருப்பது போல் அமைந்திருந்தது. அந்தத் தீவை யார் சுற்றி வந்தாலும் படகுத்துறை கண்களில் படாது. மேட்டில் இருந்து சரிவில் இறங்கி வளைந்த தென்னைகளை அடைந்து எட்டிப் பார்த்தால்தான் அது அமைந்திருப்பது தெரியும்.

படகுத்துறை அமைந்திருக்கிறது என்றால் அந்த இடத் தில் கடல் குறைந்தது, ஓராள், இரண்டாள் ஆழத்தைக் கொண்டிருக்கிறது என்று அர்த்தம். தரை தட்டாமல் இயந்திரப் படகுகளை அந்தத் துறையில் கொண்டு வந்து நிறுத்த முடியும் என்று அர்த்தம். துறையின் பக்கச் சுவர் களில் டயர்கள் இரும்புச் சங்கிலிகளில் பிரிட்டிஷ்

காலத்தைச் சேர்ந்தவையாக இருக்க வேண்டும். துருப் பிடித்து இற்றுப் போய்விடும் நிலையில் இருந்தன. டயர்களைச் சுற்றியும், சங்கிலிகளில் பிணைந்தும் கடல் தாவரங்கள் வளர்ந்து இருந்தன.

பத்துப் பனிரெண்டு நண்டுகள் டயர்களின் மேலும் கீழுமாய் உலா சென்று கொண்டிருந்தன.

இந்த மறைவான படகுத்துறை எவ்வளவு சாதகமான விஷயம்!

குவார்ட்டர்ஸுக்குத் திரும்பினேன். பசுபதி சாப்பாட் டுடன் வந்து சேர்ந்தான். சாப்பிட்டேன். உள்ளுக்குள் ஒரு குரல் ஷீலாவைப் பார்க்க வேண்டும். ஷீலாவைப் பார்க்க வேண்டும் என ஒலித்துக் கொண்டே இருந்தது.

ஷீலாவைப் பார்க்க வேண்டும் என்றால் ஏதாவது ஒரு திட்டத்தோடு போய்ப் பார்க்க வேண்டும்.

திரிவேணியைக் கடத்துவதற்கு ஷீலா நிச்சயம் உதவி செய்வாள் என்று எனக்குள் ஒரு குரல் ஒலித்துக் கொண்டே இருந்தது.

ஷீலா உதவுவாள். சரி, என்ன மாதிரி உதவி என்று கேட்டால் அதற்கு பதில் சொல்ல வேண்டுமல்லவா?

இப்போதுதான் மெல்ல, மெல்ல எனக்குள் ஒரு திட்டம் உருவாகிக் கொண்டிருந்தது. 'இறப்பும், பிறப்பும்' என்ற திடீர் எண்ணம்தான் என் திட்டத்திற்கு ஒரு ஆரம்பம். சும்மா வெறும் வெளிக்கோடுகள் மட்டுமே உருவாகி இருந்தன. திட்டம் முழுமையாக உருவாக வேண்டுமென்றால் அதற்குக் கொஞ்ச நேரம் பிடிக்கும்.

கொஞ்ச நேரம் கடலுக்குள் சென்று வந்தால் என்ன என்று தோன்றியது. புறப்பட்டேன்.



சாரதியும், ஆசாதும், கோவர்தனும் உபயோகிக்கும் படகுத் துறைக்கு வந்தேன். படகு ஒன்று தண்ணீரில் மிதந்து டயர்களில் அவ்வப்போது மோதி விலகிக் கொண் டிருந்தது.

அதில் ஏறி அமர்ந்தேன். தலையில் மாட்டியிருந்த கயிறை விலக்கினேன். ஸ்டார்ட்டர் பட்டனை அழுத்தி னேன். படகு ட்ரு, ட்ரு என்றது.

கரையில் நின்றிருந்த செக்யூரிட்டி நான் படகைக் கிளப்பு வதை அசுவாரசியமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந் தான்.

அவன் பெயர் சுங்லீ. நேபாலில் இருந்து வந்தவன். என்னைப் பற்றித் தெரியும் என்பதால் நான் படகை எடுத்த போது எந்த விதமான எச்சரிக்கையும் எடுத்துக் கொள்ளாமல் கடலை வேடிக்கை பார்க்க வந்த சுற்றுலாப் பயணியின் பாவனையுடன் நின்று கொண்டிருந்தான்.

அவனுக்கு ஒரு முறை கையசைத்துக் காட்டினேன். பதிலுக்குக் கையசைத்தான். படகைக் கிளப்பினேன்.

அம்பு போல் பாய்ந்தது அது. முன்புறம் லேசாகத் தூக்கியபடி, பின்புறம் தண்ணீரில் அமிழ்ந்திருக்க, தன் இரு பக்கங்களிலும் நுரைச் சேவகர்களின் அணிவகுப் போடு படகு கடலைக் கிழித்துச் சென்றது ரசிக்கக்கூடிய ஒரு காட்சியாக இருந்தது.

வானம் தெளிவாக இருந்தது. தொங்க விடப்பட்டது போல் அங்கங்கே மேகப் பொதிகள். தொடுவானுக்கருகில் இரண்டு சிறு கப்பல்கள் தெரிந்தன.

இலக்கில்லாமல் படகைச் செலுத்தினேன். காற்று தலைமுடியைப் பிடித்து எறியப் பார்த்தது. சட்டைக்

காலரைப் படபடக்க வைத்தது. காலருக்குள் இருந்த இடைவெளிக்குள் புகுந்து விலாப்பகுதியில் கிச்சு, கிச்சு மூட்டியது.

ஆமைத்தீவை வலம் வருவது போல் படகின் திசையை மாற்றினேன். காற்றின் வேகம் கொஞ்சம் குறைந்தது. படகின் இடது புறத்தில் முப்பதடி தூரத்தில் இரண்டு டால்பின்கள் மேல் எழும்பி ஓர் அரை வட்டம் போட்டு மீண்டும் நீருக்குள் இறங்கின.

ஆணும், பெண்ணுமாய் இருக்கக் கூடும். ஆனந்தமாய் விளையாடிக் கொண்டிருந்தன. அந்தமான் கடற்பரப்பில் டால்பின்கள் அதிகம். டால்பின்கள் மட்டுமல்ல, சுறாக்களும், முதலைகளும் கூட அயல்நாட்டு டூரிஸ்டு களைப் போல தத்தம் ரிசாட்டுகளாகத் தீர்மானித்து சளைக்காமல் நீந்திக் கொண்டிருக்கும் இடம்.

சுறாக்கள் டால்பின்களை வேட்டையாடும். டால்பின்கள் தங்கள் வாய்க்குள் அடங்கும் மீன்களை உணவாகக் கொள்ளும். என்றைக்கு இன்னொரு நீர்வாழ் விலங்குக்கு இரையாகப் போகிறோமோ என்று எந்த விலங்கிற்கும் தெரியாது.

ஆனால் மரண பயம் என்பது துளிக்கூட இன்றி டால்பின்கள் மகிழ்ச்சியாகக் கொஞ்சி விளையாடிக் கொண்டிருப்பதைக் காணும்போது பொறாமையாக இருந்தது.

மனிதன் மட்டுமே மகிழ்ச்சியுடன் வாழ முடியாத உயி ரினம். பிரச்சனைகள் எதுவுமே இல்லாத போதிலும் பிரச் சனைகளை உருவாக்கிக் கொண்டு மகிழ்ச்சியைத் தொலைத்து விட்டுத் தேடி அலையும் ஒரே இனம் மனித இனம் மட்டுமே என்று தோன்றியது.



சிகரெட் பிடிக்க வேண்டும் போல் இருந்தது. சிகரெட் பெட்டியிலிருந்து ஒன்றை உருவினேன். உதட்டில் பொருத்திக் கொண்டேன். தீக்குச்சியை உரசினேன். அணைந்தது. காற்று குறைந்திருந்தாலும் தீக்குச்சி அணைக்கப் போதுமானதாக இருந்தது.

குனிந்தேன். தீக்குச்சியை உரசினேன். சிகரெட்டைப் பற்ற வைத்தேன்.

நிமிர்ந்தேன்.

இரண்டு அதிர்ச்சிகள் என்னை ஒரு சேரத் தாக்கின.

படகின் மூக்கிற்கு நேர் எதிரில் கடல் நடுவே ஒரு பாறை முளைத்திருந்தது. படகு அதை நோக்கி வெகு வேகமாய் சென்று கொண்டிருந்தது. இன்னும் ஒரே ஒரு வினாடி தாமதித்திருந்தால் படகு பாறையில் மோதியிருக்கும். பிளந்திருக்கும். நான் கடலில் வீசப்பட்டிருப்பேன் அல்லது பாறையில் மோதப்பட்டிருப்பேன்.

கடைசி வினாடியில் படகின் திசையை திருப்பினேன். படகின் பக்கப் பலகை பாறையை உரசுகிற மாதிரி கடந்தது. உரசவில்லை. உரசியிருந்தால் கூட டைட்டா னிக்கிற்கு ஏற்பட்ட நிலைதான் படகிற்கும் ஏற்பட்டிருக்கும்.

தாங்க் காட். தப்பினேன்.

அதிர்ச்சி நம்பர் ரெண்டு.

சற்று முன் என் கண்ணெதிரில் நீந்தி விளையாடிக் கொண்டிருந்த டால்பின்களில் ஒன்று கடல் மட்டத்தி லிருந்து எழுந்து அரை வட்டம் போட்டு மீண்டும் நீரில் இறங்கிய போது அதை வாய் பிளந்த ஒரு சுறா கௌவியது. கூர்மையாக, வரிசையாக அமைந்திருந்த சுறாவின் பற்கள் டால்பினின் உடலில் பதிந்து ஆழமாக இறங்கின.

# 14

உடலில் சுறாவின் பற்கள் பதிந்த டால்பினை என்னால் காப்பாற்ற முடியாது என்று எனக்குத் தெரியும். இருந்தாலும் என்ன நடக்கிறது என்பதைப் பார்க்கும் வக்கிர ஆர்வம் என்னைச் செலுத்தியது. படகின் இன்ஜினை நிறுத்தினேன். 'ட்ர்ர்' என்ற இயந்திர சத்தம் நின்று அந்தச் சுற்றுப்புறமே வெகு அமைதியாகி விட்டது. படகு வேகம் குறைந்து மிதந்தபடி மிக மெதுவாகச் சென்றது.

என் பார்வை டால்பினின் மேலிருந்து அகலவில்லை. அதற்கு வாழ்வா, சாவா போராட்டம். சுறாவின் பற்களில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ள ஓர் உதறு உதறியது. சுறாவின் வாயில் இருந்து எகிறியது.

அதன் ரத்தத்தை ருசி பார்த்திருந்த சுறா அந்த டால்பினை அவ்வளவு எளிதாக விட்டு விடுவதாக இல்லை. தன் வாலைச் சுழற்றி ஓர் அடி அடித்தது. சம்மட்டியால் அடி விழுந்தது போல் இருந்திருக்க வேண்டும்.

டால்பின் மீன் நீர்ப்பரப்பில் மிதக்கத் தொடங்கியது. அதன் உடல் அவ்வப்போது அபரிமிதமாகத் துடித்தது. நீரின் சளக், புளக் சத்தம் பிரதேசத்தை நிறைத்தது. நீர்த்திவலைகள் மேல் எழும்பி என் முகத்தில் தெறித்தது.

நெஞ்சம் என்னை அறியாமலேயே டால்பினுக்காகப் பரிதாபப்பட்டது. மனிதர்களிடம் முரணான, விசித்திர மான குணங்கள் பல இருக்கின்றன. அவற்றுள் இதுவும் ஒன்று.



கோயிலுக்குச் சென்று ஆட்டை பலிகொடுக்கும் போது உள்ளத்தில் பரிதாப உணர்ச்சி தோன்றுவதில்லை. நேர்ந்து கொண்டதை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் கடமை உணர்ச்சியும், சந்நிதியில் இருக்கும் சாமிக்காகச் செய்கிறோம் என்ற பக்தி உணர்ச்சியுமே மேலோங்கி இருக்கின்றன.

கொசுவையும், மூட்டைப் பூச்சியையும் கொல்லாமல் விட்டு விடும் மென் மனம் கொண்ட பெண்கள் சர்வ சாதாரணமாகக் கோழியின் கழுத்தைத் திருகி அதைச் சாகடிப்பதைப் பார்க்கலாம். உயிரோடு துடிக்கும் மீன் களின் தலைகளைக் கல்லால் நசுக்கிக் கொன்று பாறை யில் தேய்த்துக் கழுவுவதைப் பார்க்கலாம்.

ஆனால் ஏதோ ஒரு உயிர், அவர்கள் சாப்பிடமுடியாத உடலைக் கொண்ட உயிர் பிரியும் போது, உடல் துடிக் கும் போது அவர்களின் மனம் பதைக்கும். பரிதாபப்படும்.

அதைப்போலத்தான் எனக்கும் டால்பினின் துடிப்பு என்னுள் அதன் மேல் பரிதாபத்தை ஏற்படுத்தியது.

என் பரிதாபத்தின் காரணமாக டால்பினுக்கு உயிர் வந்து விடவில்லை. ஆனால் அதன் உடலில் இருந்து ரத்தம் வெளிப்பட்டது. அது நீரில் கலந்தது.

அவ்வளவுதான். டால்பின் இருந்த இடத்தை நோக்கி அம்புகள் போல பத்துப் பதினைந்து சுறாக்கள் வந்தன. சுறாக்கள் எல்லாம் மூன்றடி, நான்கடி நீளமே இருந்தன. அதைவிட பெரிய சுறாக்கள் வந்திருந்தால் அவை நானிருந்த படகைத் தாக்கியிருக்கக் கூடும். என் உட லிலும் பற்களைப் பதித்திருக்கக் கூடும். ரத்தம் வெளிப் பட்டிருக்கக் கூடும்.

சுறாக்கள் ஒன்றையொன்று வாலைச் சுழற்றி வீசி தண்ணீர்ப் பாளங்களை உருவாக்கின. டால்பினைத் சாப்பிடுவதற்கு அவைகளுக்குள் சரியான போட்டி. எத்தனை சுறாக்களுக்குக் காயம் ஏற்பட்டதோ தெரியவில்லை.

டிக், டிக், டிக் என்று நான்கைந்து வினாடிகள் கடந்திருக்கலாம். தண்ணீரில் மிதந்த டால்பின் இப்போது தெரியவில்லை. சுறாக்கள் அதைக் கடித்து ஆயிரம் ஆயிரம் துண்டுகளாக்கி விழுங்கிவிட்டன.

ஆறாவது வினாடி அந்த இடத்தில் கடல் பழையபடி படு அமைதியாகிவிட்டது. ஆறு வினாடிகளுக்கு முன் அந்த இடம் ஒரு போர்க்களமாக இருந்தது என்று சொன்னால் யாரும் நம்ப மாட்டார்கள்.

சுறாக்கள் எல்லாம் வந்த சுவடு தெரியாமல் மறைந்து விட்டன. என் உடல் சிலிர்த்தது.

படகை மறுபடி தீவுக்குத் திருப்புவதென முடிவு செய்தேன். ஸ்டார்ட்டர் பட்டனை அழுத்த இருந்த தருணத்தில் வலப்புறம் இருந்த பாறையைப் பார்த்தேன்.

அந்தப் பாறையில் கடப்பாறையைச் செருகும் அளவு ஓர் ஓட்டைபோட்டு கடப்பாறை போன்ற ஓர் இரும்புக் கோல் செருகப்பட்டிருந்தது. அதன் முனையில் ஓர் அறிவிப்புப் பலகை பொருத்தப்பட்டிருந்தது.

'BEWARE OF SHARKS' என்று ஆங்கிலத்திலும், 'எச்சரிக்கை: சுறாக்கள் நிறைந்த பகுதி' என்று தமிழிலும் அதில் எழுதப்பட்டிருந்தது.

என் மூளையில் ஒரு மின்னல் மின்னியது.

திரிவேணியைக் கடத்துவதற்கான திட்டத்தில் இன்னும் சில கோடுகளை என் மூளை இழுத்தது. கருப்



பையில் வளரும் இரு குழந்தையின் உருவை மெல்ல மெல்ல அடையத் தொடங்குகிற மாதிரி என் மனதின் திட்டம் அதன் முழுமையான வடிவத்தை நெருங்கிக் கொண்டிருப்பதை உணர முடிந்தது.

உற்சாகத்துடன் படகின் என்ஜினை ஸ்டார்ட் செய்தேன்.

## 15

விடுதிக்குத் திரும்பும்போது ஏறக்குறைய இரவாகி விட்டது. அந்தமானில் மாலை ஐந்து மணிக்கே இருட்டத் தொடங்கிவிடும். காலை ஐந்து மணிக்கெல்லாம் சூரியன் உதித்து விடுவதால் பொழுதும் சீக்கிரம் சாய்ந்து விடும்.

தீவை நெருங்கும் போது மணி ஆறு. சுத்தமாக இருட்டியிருந்தது. விளக்குகள் ஒளிரத் தொடங்கி இருந்தன. எனக்கு அப்போதே ஷீலாவைப் போய் பார்க்க வேண்டும் போல இருந்தது. ஆனால் நிச்சயமாக அது முடியாது. போர்ட் ப்ளேயருக்குப் போய் ஷீலாவைத் தொடர்பு கொண்டு பேசி சந்தித்து விட்டுத் திரும்ப வேண்டுமென்றால் குறைந்தது இருபத்து நான்கு மணி நேரமாவது ஆகும்.

எனவே அடுத்த ஓய்வு நாளின் போது ஷீலாவைச் சென்று பார்ப்பது என்று தீர்மானித்தேன். மேலும் ஒரு வாரம் என்பது என் திட்டத்தை நானே அலசி ஆராய்ந்து பார்க்கக் கிடைக்கும் பொன்னான நேரம்.

மறுநாள் நான் டேட்டிக்குச் சென்ற போது திரிவேணி என் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

பொதுவாக ஆபீசில் இருந்து டேட்டிக்குப் போனால் திரிவேணி என்னைப் பார்த்து சிரிப்பாள். அந்தச் சிரிப்பில் நட்பு இருக்கும். மகிழ்ச்சி இருக்கும்.

ஆனால் இன்றைக்கு அந்தச் சிரிப்பு இல்லை. என்னை எதிர்பார்த்துக் காத்திருந்தாள் என்பது உண்மை. ஆனால் முகத்தில் சற்று கூடப் புன்னகையில்லை.

"நேற்று என்ன செய்தாய்?" என்று கேட்டாள்.

"ஏன்?"

"கேள்விக்கு பதில் சொல்."

"காலையில் தீவைச் சுற்றிப் பார்த்தேன். பிற்பகலில் படகில் ஏறி கடலில் கொஞ்ச தூரம் சென்று விட்டு வந்தேன்" என்றேன்.

"அப்படியா?" என்று கேட்டாள். அவள் குரல் வெகு சாதாரணமாக ஒலித்தது. எந்த வித உணர்ச்சியையும் காட்டாத குரலில்.

அவளது மாற்றத்திற்குக் காரணம் என்ன என்று எனக்குப் புரியவில்லை. பொதுவாக திரிவேணி என்னுடன் பேசும்போது, சுதந்திரம் பெற்றபின் அவள் என்னென்ன செய்யப் போகிறாள் என்பதைப் பட்டியலிடுவாள். பட்டியலில் இருக்கும் ஒவ்வொன்றையும் எப்படி நிறைவேற்றிக் கொள்ளப் போகிறாள் என்பதை அலசுவாள்.

இவளது கனவுகள் எப்போதும் அவளது சுதந்திரத்தை மையமாகக் கொண்டே இருக்கும். இன்று ஏன் தன் சுதந்திரத்தைப் பற்றிப் பேசவில்லை? இன்று ஏன் எப்போதும் வழங்கும் புன்னகையை வழங்கவில்லை?



எனக்கு காரணம் புரியவில்லை!

"உடம்பு சரியில்லையா திரிவேணி?" என்று கேட்டேன்.

"ஏன்? நன்றாகத்தானே இருக்கிறேன்." என்று அமர்த்தலாகப் பதில் அளித்தாள்.

சொல்லிவிட்டுத் தனது அறைக்குச் சென்று விட்டாள்,

ஸம்திங் ராங்!

என்னவோ தப்பு இருக்கிறது! எங்கேயோ என்னவோ நிகழ்ந்திருக்கிறது. நேற்று நான் இல்லாத நேரத்தில் சாரதி அல்லது ஆசாதிடம் திரிவேணி பேசக்கூடாதது எதையாவது பேசிவிட்டாளா?

தெரியவில்லை. மேலே துருவிக் கேட்டால் விபரீதமாக ஏதாவது ஆனாலும் ஆகிவிடும். அவள் ஒரு பற்ற வைக்காத டைம் டைட். ஆர்.டி.எக்ஸ். ஜெலட்டின்.

டிவியை எழுப்பினேன். பிரதமர் அயல்நாட்டில் உரையாற்றியதை எல்லா சானல்களும் ஒளிபரப்பிக் கொண்டிருந்தன. சே! ஆஃப் செய்தேன்.

காபி போட்டுக் கொள்ளலாம் என்று தீர்மானித்து பெர்கொலேட்டரை நெருங்கியபோது இரண்டு இன்டர்காம்களில் ஒன்று குக், குக் என்றது.

திரிவேணி உள்ளே அழைக்கிறாள்.

திரிவேணியின் அறையை நோக்கிச் செல்லும் முதல் கதவைத் தள்ளினேன். திறந்து இருந்தது. இரண்டாவது கதவைத் தள்ளினேன். அதுவும் தாள் போடாமல் இருந்தது.

உள்ளே நுழைந்தவன் அதிர்ந்தேன்.

காரணம், திரிவேணி டாப்லெஸாக இருந்தது. ஒரு ப்ராவைப் போட்டுக் கொள்ளும் முயற்சியில் இருந்தாள்.

ஏற்கனவே அந்த மாதிரியான காட்சிக்கு நான் பழகி யிருந்ததால் மனதில் சலனம் எதுவும் இல்லை.

''என்ன திரிவேணி?'' என்று கேட்டேன்.

''இந்த ஹூக்கைக் கொஞ்சம் மாட்டிவிடேன். பெருத்துவிட்டேன் போலிருக்கிறது. கை எட்டவில்லை'' என்றாள்.

அவளுக்கு பின்புறம் சென்றேன். மாசுமருவற்ற அவளது முதுகு தெரிந்தது. பளபளப்பான, வழுவழுப்பான சருமம், இடுப்பில் ஒரு ஜீன்ஸ் தரித்திருந்தாள். இடுப்பு எலும்புக்குக் கீழே அதன் விளிம்பு இருந்தது. அவளது இடுப்பின் கீழே பின்பக்க வீணைக்குடங்களுக்கு இடை யில் இயற்கையாக அமைந்திருந்த க்ளிவேஜின் துவக்கம் தெரிந்தது. சலனப்படவில்லை.

ப்ரா ஹூக்குகளைப் பற்றி இழுத்து கோர்க்கப் பார்த்தேன்.

அவள் என் மேல் சாய்ந்தாள். காதலுடன் அல்ல. காமத் துடன் அல்ல. இழுபட்டது போல் சாய்ந்தாள். காதலுடன் அவள் வெற்று முதுகு என் மார்பில் மோதியது. விட்டிருந் தால் கீழே விழுந்திருக்கக் கூடும். ஹூக்கில் இருந்து என் கைகளை விடுவித்துக் கொண்டு அவள் தோள்களைப் பற்றி சரிந்து விழாமல் தாங்கப் பார்த்தேன்.

எந்த சந்தர்ப்பத்தில் அவள் உடல் திரும்பியது என்று தெரியவில்லை. என் கை அவளது வெற்று மார்பகத்தில் பதிந்தது. பஞ்சுப் பந்தை ஈரமாக்கித் தொட்டுப் பார்த்திருக் கிறீர்களா? கடினமாகவும் இருக்கும், மென்மையாகவும் இருக்கும். அது போல் இருந்தது அவளது இளமார்பு. இது வரை யாராலும் கையாளப்படாத அந்த உணர்ச்சிக் குவியல் என் கைபட்டதும் சிலிர்த்ததை உணர்ந்தேன். லேசாக விறைப்புத் தன்மை எய்தியதை உணர்ந்தேன்.



தடுமாறினேன். ஆனால் உடனே சுதாரித்துக் கொண் டேன்.

சட்டென்று கையை விலக்கினேன்.

''ஐ'ம் ஸாரி'' என்று சொல்லி அவளை நிமிர்த்தி நிற்கவைத்து ப்ராவின் கொக்கியை மாட்டினேன்.

திரிவேணி என் பக்கம் திரும்பினாள். என்னை ஆழமாக ஒரு முறை பார்த்தாள். அவள் கண்களில் கோபம் இல்லை. காமம் இல்லை. வெற்றுப் பார்வை.

அந்தப் பார்வையின் பொருளை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

'இவ்வளவு அருமையான வாய்ப்பைத் தவறவிட் டாயே' என்ற குற்றச்சாட்டா, அல்லது 'இதுவரை ஆடவன் எவனும் தொடாத இடத்தைத் தொடுவதற்கு இடமளித்து விட்டோமே' என்ற குற்ற உணர்வா? ம்ஹூம்.. புரிய வில்லை!

அவள் உதடுகள் பிரிந்தன. ''தாங்க்ஸ்'' என்று எந்த உணர்ச்சியையும் கலக்காத வார்த்தையை உச்சரித்தாள்.

''அதனால் என்ன, பரவாயில்லை'' என்று தடுமாற்றத் துடன் கூறிவிட்டு அந்த அறையை விட்டு விலகத் தொடங்கினேன்.

''ஒரு நிமிஷம்'' என்றாள் அவள்.

திரும்பினேன். ''என்ன திரிவேணி?''

''நீ ஒரு சுவாரசியமான காட்சியைப் பார்க்க வேண்டும்'' என்று கூறி அறையில் இருந்த டீ.வி. ஸ்க்ரீனை என் பக்கம் திருப்பினாள்.

அதன் ஏதோ ஒரு பட்டனை ஆன் செய்தாள்.

திரையில் காட்சி ஓடத் தொடங்கியது.

நான் அவளது அறைக்குள் நுழைகிறேன். திரிவேணியின் முகத்தில் ஒரு திடுக்கிட்ட பாவனை இருக்கிறது. அவள் டாப்லெஸாக நிற்கிறாள். கைகள் இரண்டையும் மார்பின் குறுக்கே வைத்திருக்கிறாள்.

''நோ... பாரி. ப்ளீஸ் போய் விடு. பின்னால் நீ மிகவும் வருத்தப்படுவாய்'' என்கிறாள்.

நான் ஒவ்வொரு அடியாக அவளை நோக்கி எடுத்து வைக்கிறேன். அவளது பின்பக்கம் செல்கிறேன்.

திரையில் இப்போது திரிவேணியின் முகம் தெரிகிறது. அவளது ப்ராவின் கொக்கிகளை நான் இழுத்துப் பிடித்து இணைக்க முற்படும் நேரத்தில் அவள் உதடுகள் 'ஓ' போல விரிந்து திறக்கின்றன. கண்களில் அபரிமிதமான திகில். சட்டென்று என் மேல் விழுகிறாள். என்னவோ நான் அவளைப் பிடித்து இழுத்த மாதிரி அந்தக் காட்சி திரையில் பதிவாகி இருக்கிறது. அதற்கு அடுத்த காட்சியாக என் உள்ளங்கை அவள் மார்பில் பதிகிறது. ஒரு பூப்பந்தைப் பற்றி அழுத்துவது போல திரையில் அந்தக் காட்சி தெரிகிறது.

இப்போது திரையில் திரிவேணியின் முகம். அந்த முகத்தில் திகில், வேதனை, சிறுத்தையிடம் இருந்து தப்பிக்க முயலும் மான்போல இருக்கிறது அவள் முகம்.

ஒரு கற்பழிப்பின்போது தன்னைக் காத்துக்கொள்ளப் போராடும் கன்னிப் பெண்ணின் நிலையில் அவள் காணப்படுகிறாள்.

அவ்வளவுதான். திரையில் கோடுகள்.



குப்பென வியர்த்து விட்டது எனக்கு. ரோபோ போல் அவள் பக்கம் திரும்பினேன்.

''திரிவேணி! என்ன இதெல்லாம்?'' என்று கேட்டேன். வார்த்தைகளை விட காற்றுதான் அதிகம் வெளிப்பட்டது.

''நான் தனியாக நின்று போஸ் கொடுத்த சில காட்சிகளையும் இப்போது நடந்ததையும் சேர்த்து ஸ்கிரீனில் தெரிகிற மாதிரி ப்ரோக்ராம் பண்ணியிருந்தேன்.''

''தெரிகிறது. ஐயோ திரிவேணி. ஏன் இப்படிச் செய்தாய்?''

''இந்த அறையில் இருக்கும் செக்யூரிட்டி காமிராவை நான் நினைத்தால் இயக்கலாம். வேண்டாம் என்று முடிவு செய்தால் ஆஃப் பண்ணிவிடலாம்.''

''சரி. அந்த டெக்னிகல் மேட்டர் எதற்கு இப்போது? முதலில் இந்தக் காட்சியை அழி. அதன் பின் பேசலாம்.''

சிரித்தாள். ''பாரி. ராஜதுரையை அழைத்து இந்தக் காட்சியைப் போட்டுக் காட்டினால் என்ன நடக்கும் என்று நினைக்கிறாய்?''

''ராஜதுரை என்னைக் கொன்று கடலில் இருக்கும் சுறாக்களுக்கு என் உடலை இரையாகப் போட்டு விடுவார்.''

''சரியாகத்தான் தெரிந்து வைத்திருக்கிறாய். நான் அதைத்தான் செய்யப் போகிறேன்.''

மண்டியிட்டேன். என் உயிர் போய் விடுமே என்ற பயத்தினால் அல்ல. செய்யாத குற்றத்திற்கு மறுபடி தண்டனையை அனுபவிக்கப் போகிறேன். உலகம் ஏன் என்னை ஒரு பொய்யனாகச் சித்தரிக்க முயலுகிறது. ஒரு காமாந்தகாரனாக, காமவெறி பிடித்த கயவனாக, உண்மை

வேறாக இருக்கும் போது ஒரு பொய்யனாக நான் சித்தரிக்கப்படுவதை என்னால் தாங்க முடியவில்லை. அதனால்தான் அவள் முன் மண்டியிட்டேன்.

''திரிவேணி! உன் மனசாட்சி நான் அப்படிப்பட்டவன் இல்லை என்று சொல்லும். ஆனால் ஏன் திரிவேணி?'' என்று கெஞ்சலாகக் கேட்டேன். ''எதற்காக இந்தத் தண்டனை என்று சொல்லு. தெரிந்து கொண்டு நிம்மதியாகச் சாகிறேன்.''

''பின்னே, எனக்குச் சுதந்திரம் பெற்றுத் தருவதாக வாக்களித்துவிட்டு அதைப்பற்றி ஏதாவது ஒரு முயற்சியிலாவது ஈடுபட்டிருக்கிறாயா? என்னை இங்கிருந்து கடத்திப் போவதாகச் சொன்னது என்னை சமாதானப் படுத்தத்தானே? கழுதைக்கு முன்னால் காரட்டைக் காட்டுவது போல், எனக்குச் சுதந்திரம் என்ற ஆசையைக் காட்டி நீ இங்கேயே நிம்மதியாக இருக்கப் பார்க்கிறாய் தானே? வெளியே கூட்டிக் கொண்டு போய் விட்டால் உன் வாழ்க்கை சுகங்கள் அத்தனையும் பறிபோய் நடுத் தெருவில் நின்று பிச்சையெடுக்க வேண்டி இருக்குமே என்று நினைத்து எனக்குச் சுதந்திரம் பெற்றுத் தராமலே இருக்க முடிவு செய்து விட்டாய் தானே? என்னை ஏமாற்றப் பார்க்கும் நீ எதற்கு உயிரோடு இருக்க வேண்டும்?''

சிரிப்பதா, அழுவதா என்று தெரியவில்லை. நேற்றைய தினம் தீவைச் சுற்றிப் பார்த்தது. படகு சவாரி போனது எல்லாமே அவளை எப்படிக் கடத்துவது என்று திட்டம் போடத்தான் என்று எப்படி அவளிடம் விளக்குவது? சொன்னால் எவ்வளவு தூரம் அவளால் புரிந்துக் கொள்ள முடியும்?



கடகடவென சிரித்தேன். கணகளில் நீர் வரும் வரை சிரித்தேன்.

திரிவேணி திகைத்தாள். புரியாமல் என்னைப் பார்த்தாள்.

''ஏன் சிரிக்கிறாய்?'' என்று கேட்டாள்.

''உன் முட்டாள்தனத்தை நினைத்து. உனக்குச் சுதந்திரம் பெற்றுத்தருவது. கடைக்குப் போய் கால் கிலோ கத்தரிக்காய் வாங்குகிற மாதிரியா? ராஜதுரை, ஆசாத், சாரதி, பசுபதி யாவற்றுக்கும் மேல் விசுவநாத். அதுதான் உன் அப்பா என்று எத்தனை புயல்களைச் சமாளிக்க வேண்டும் தெரியுமா? நீ என்னுடன் வர சம்மதம் தெரிவித்து விட்டால் உன்னைக் காவல் காக்கும் படை எல்லாம் ரோஜாப் பூவால் பாதை அமைத்து வழியனுப்பி வைக்கும் என்று எதிர்பார்க்கிறாயா? ஒரு எலக்ட்ரான், நியூட்ரான் அளவு கூட குறையே இல்லாத திட்டம் ஒன்று போட வேண்டாமா?''

''நானே உன்னுடன் வருகிறேனே. யார் என்ன செய்து விடுவார்கள்?''

''பதறாதே திரிவேணி. பதறும் காரியம் சிதறும். இங்கிருப்பவர்கள் கண்ணில் எல்லாம் மண்ணைத் தூவி விட்டு உன்னைக் கடத்திக் கொண்டு போகிறேன் என்றே வைத்துக்கொள்.''

''இல்லை. என் சம்மதத்துடன் என்னைக் கூட்டிக் கொண்டு போகப் போகிறாய்.''

''அது அவர்களுக்கு முதலில் தெரியாதே. நான் உன்னைக் கடத்திக் கொண்டு போனதாகவே எண்ணுவார்கள். ஹெலிகாப்டர், இயந்திரப்படகு என்று ஒரு

படையையே அனுப்பி நம்மைத் தேடச் சொல்லுவார்கள். இங்கிருந்து அடுத்த தீவுக்குப் போவதற்குள் நாம் மாட்டிக் கொள்வோம்.''

''மாட்டினால் நான்தான் உன்னை வற்புறுத்திக் கூட்டி வந்தேன் என்று சொல்லிவிடுகிறேன்.''

''சொல்லிவிட்டால்? உன்னை உயிரோடு விட்டு விடுவார்கள். ஆனால் உன்னிடமிருந்து என்னைப் பிய்த்துப் பிரித்து குண்டுகளால் துளைத்து எடுத்து விடுவார்கள். ஒரு வேளை என்னை நீ பாதுகாக்க முயற்றி செய்கிறாய் என்று வைத்துக்கொள். என்னோடு சேர்த்து உன்னையும் கொல்லச் சொல்லி உத்தரவிடுவார் உன் அப்பா.''

''என் அப்பாவா!''

''வாய் பிளக்காதே. உன் அப்பாவைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொண்டதில் இருந்து நான் அவரைப்பற்றி ஒரு மாதிரியான சித்திரத்தைப் பூர்த்தி செய்திருக்கிறேன். அதன்படி நான் யூகித்திருப்பது இதுதான். அவருடைய ஈகோ தோற்றுப் போவதை விட உன்னை பலி கொடுப்பது மேல் என்று எண்ணுகிறவர் அவர். அதனால் நீ என்னைக் காப்பாற்ற முயற்சி செய்வதாகத் தெரிந்தால் என்னோடு சேர்த்து உனக்கும் சமாதி கட்டிவிடுவார். அது நிச்சயம்.''

நான் சொன்னதில் இருந்த உண்மை அவளுக்கு உரைத்திருக்க வேண்டும். அவள் முகத்தில் திகில் படர்ந்தது. சில விநாடிகளில் அந்த திகில் மாறி அந்த இடத்தைத் தன்னிரக்கம் ஆக்கிரமித்தது. உதடுகள் துடித்தன. கண்களில் இருந்து நீர் இறங்குவதற்குத் தயாராக விளிம்பில் கோர்த்துக் கொண்டு நின்றது.

''இப்படி உயிர்வாழ்வதை விட நான் தற்கொலை செய்துகொண்டு செத்துப் போகலாம் பாரி'' என்றாள் அழுகை கலந்த பிசிறான குரலில்.



பரிதாபமாக இருந்தது. என்னை அறியாமல் ஒரு சிரிப்பு வெளிப்பட்டது. சரியான குழந்தை அவள். மனமுதிர்ச்சி பற்றாதவள். நான் சிரிப்பதைப் பார்த்தவுடன் அவள் முகத்தில் சர்ரென்று சூடு ஏறியது.

''நீ ஒரு உணர்ச்சித் தீவிரவாதி திரிவேணி. ஒரு செகண்ட் ராஜதுரையிடம் என்னை மாட்டி விட்டு என்னைச் சாகடிக்கப் பார்க்கிறாய். அடுத்த செகண்ட் நீயே தற்கொலை செய்து கொள்ள போவதாகச் சொல்கிறாய். அதை நினைத்துதான் சிரிப்பு வந்தது. அதனால் தப்பாக எண்ணாதே. மறுபடி கோபப்படாதே. நீ எதற்கு சாக வேண்டும்? எதற்குப் பிறந்திருக்கிறோம்? இந்த உலகில் மகிழ்ச்சியுடன் இருந்து எல்லா இன்பங்களையும் அனுபவித்து வாழ்க்கை நடத்துவதற்காக, அதை விட்டு செத்துப் போனால் பிறந்ததற்கே அர்த்தம் இல்லை. மகிழ்ச்சிகரமான வாழ்க்கை அமைவதற்காகப் போராடுவோம். வென்று விட்டால் மகிழ்ச்சியான வாழ்க்கை. தோற்றால் சாவு. அப்படி செத்தால் அதற்கு, ஓர் அர்த்தம் இருக்கிறது. தப்பித்துப் போவதற்கான திட்டத்தைத்தான் நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். இவ்வளவு நாட்கள் பொறுத்து விட்டாய். இவ்வளவு ஆண்டுகள் அடங்கி இருந்துவிட்டாய். இன்னும் சில நாட்கள் பொறுமையாக இருக்கக் கூடாதா? இருக்க வேண்டும். இரு. நான் உனக்கு நரகத்திலிருந்து விடுதலை பெற்றுத் தருகிறேன். இது சத்தியம்'' என்றேன்.

பேசி முடிக்கும்போது என் உணர்ச்சிகள் என்வசம் இல்லை. சுய கட்டுப்பாடுகளை எல்லாம் மீறி உணர்ச்சி வசப்பட்டுப் பேசிவிட்டேன். அது அவளுக்கு நம்பிக்கையை அளித்தது.

என்னைக் கட்டிப் பிடித்து என் கன்னத்தில் முத்த மிட்டாள்.

''நான் உன்னை நம்புகிறேன்'' என்றாள். நான் அவளைக் கற்பழிப்பது போல் பதிவு செய்து வைத்திருந்த காட்சி களை எல்லாம் என் கண்ணெதிரில் அழித்தாள்.

''போ. காத்திருக்கிறேன்'' என்றாள்.

''எனக்கு உன்னிடமிருந்து ஒரே ஒரு உதவி வேண் டும்'' என்றேன்.

''என்ன?'' என்று கேட்டாள்.

''உன் புகைப்படம் ஒன்று வேண்டும். முழு உருவப் படம். தலை முதல் கால்வரை தெரிகிற மாதிரி.''

''நோ ப்ராப்ளம். என்னிடம் ஒரு போலராய்ட் காமிரா இருக்கிறது. இப்போதே என்னைப்படமாக எடு'' என்று சொல்லிவிட்டு பரபரவென ஜீன்ஸ் பட்டன்களை நீக்கத் தொடங்கினாள்.

''ஏய் என்ன செய்கிறாய் நீ?''

''முழு உருவமும் தெரிய வேண்டும் என்றாயே. நீயூடாகத்தானே வேண்டும்? நீ பார்த்து ரசிக்கத்தானே?'' என்று சற்றே வெட்கம் கலந்த குரலில் கேட்டாள் திரி வேணி.

அவளுக்கு வெட்கப்படக்கூடத் தெரியும் என்பது அப்போதுதான் புரிந்தது.

''சே, நான் பார்த்து ரசிக்க வேண்டுமென்றால் நேரிலேயே பார்க்க முடியுமே. எதற்கு பிம்பத்தைப் பார்த்து ரசிக்க வேண்டும். உன் புகைப்படத்தை ஒரு காரணமாகத்தான் கேட்கிறேன். என்ன, எதற்கு என்றெல்லாம் கேட்காதே. என் திட்டம் என்ன என்றும் கேட்காதே. கூடியவரைக்கும்



என் திட்டத்தினை மனதிலேயே ரகசியமாகப் பொத்தி வைத்தே நிறைவேற்றப் போகிறேன். உன்னிடம் சொன் னால் அது உன் மனதில் பதிந்து முகத்தில் எதிரொலிக் கும். எனக்குப் பின்னால் டீட்டிக்கு வரும் ஆசாதோ, சாரதியோ உன் முகத்தைப் பார்த்து என்னவோ நடக்கப் போகிறது என்று யூகித்து விட்டால் அவ்வளவுதான். நான் உன்னைக் காப்பாற்ற எடுத்துக் கொள்ளும் முயற்சிகள் எல்லாம் நாசமாகி விடும்'' என்றேன்.

''புரொபசர்! இனஃப் ஈஸ் இனஃப். உன் லெக்சரை இத்தோடு நிறுத்திக் கொள்! போட்டோ தானே வேண் டும்? கேட்ச்...'' என்று என்னிடம் ஒரு போலராய்ட் காமிராவைத் தூக்கி வீசினாள்.

சட்டென்று அதைப் பிடித்தேன். திரிவேணியை முன்பக்கம், பின்பக்கம், புரொஃபைல் என்று எல்லா கோணங்களிலும் படம் எடுத்தேன். பின் படங்களை மட்டும் கவர்ந்து கொண்டு அந்த அறையை விட்டு வெளியேறினேன்.

## 16

அடுத்த ஓய்வுநாள் அடுத்த வாரத்தின் செவ்வாய்க் கிழமை அன்று. அந்த நாளை எதிர்பார்த்துத் துடிப்போடு காத்திருந்தேன். இந்த எட்டு நாட்களிலும் திரிவேணி யுடன் பேச்சு எதுவும் வைத்துக் கொள்ளவில்லை. அவளையும் என்னுடன் பேசக்கூடாது என்று கண்டிப் பாகச் சொல்லியிருந்தேன். அவளுடைய நடவடிக்கை

களில் என்ன மாற்றம் தெரிந்தாலும் ராஜதுரைக்கு செய்தி போய்விடும் என்று எனக்குத் தெரியும்.

சீஃப் செக்யூரிட்டி ராஜதுரையின் ஜீனிலேயே சந்தேகப் படும் குணம் இருந்தது. பாக்டரியில் இருந்த நேரடியாக சப்ளை ஆன் செலஃபன் பேப்பர் சுற்றப்பட்ட சிகரெட் பாக்கெட்டைப் பிரித்து ஒரு சிகரெட்டை உதட்டில் பொருத்திக் கொள்ளுவதற்கு முன் அந்த சிகரெட்டை முகர்ந்து அதன் ஒரு துகளை வாயில் வைத்துப் பார்த்து அதன் பின்தான் சிகரெட்டையே பற்ற வைப்பார்.

அப்பபடிப்பட்ட ஆளிடம் திரிவேணியின் நடத்தையில் மாறுதல் இருக்கிறது என்ற செய்தி போனால் அவ்வளவு தான். தீவின் சரித்திரத்தையே புரட்டிப் பார்க்கத் தொடங்கி விடுவார்.

எனவே அடக்கி வாசித்தேன். ஆசாதிடமும், சாரதி யிடமும் இயல்பாகப் பழகினேன். அதே சமயம் வெகு எச்சரிக்கையுடன் இருந்து கொண்டேன்.

எனது ஓய்வு நாளுக்காக உள்ளுக்குள் துடிப்புடனும், வெளியில் அமைதியுடனும் காத்திருந்தேன்.

இன்றைக்கு அந்த ஓய்வு நாள்.

இரவு தூக்கம் சரியாக இல்லை. எப்போது விடியும் என்று இருந்தது. நான்கு மணிக்கே எழுந்து குளித்து என்னைத் தயார்ப்படுத்திக் கொண்டு விட்டேன்.

ஐந்து மணிக்கு பசுபதியின் ஸ்ட்ராங்கான, சூடான, சர்க்கரை குறைந்த காபி வந்து சேருவதற்குள் ஒரு பாக்கெட் சிகரெட்டைக் காலி பண்ணிவிட்டேன்.

காபிக் கலவை சூப்பராக இருந்தது. டிகாஷன், பால், சர்க்கரை, சூடு என்று எல்லாமே அளவு தப்பாமல் வெகு கச்சிதமான கலவையில் அமைந்திருந்தன.



ஒவ்வொரு ஸிப்பையும் ரசித்துக் குடித்தேன். காபிக் கோப்பையை எடுத்துக் கொண்டு போக வந்த பசுபதியை மனமாரப் பாராட்டினேன்.

''பசுபதி. எனக்கு டிபன், சாப்பாடு எதுவும் வேண்டாம். இன்று எனக்கு ஹாஃப். போர்ட் ப்ளேயர் போகிறேன். இந்தத் தீவுக்கு வந்ததில் இருந்து நான் போர்ட் ப்ளேய ருக்கே போகவில்லை. வெளி உலகம் எப்படி இருக்கிறது என்பதைப் பார்த்து விட்டு வரப்போகிறேன்'' என்றேன்.

''இன்று மத்தியானம் மொகல் பிரியாணி. மிஸ் பண் ணப் போகிறீர்கள்'' என்றான்.

''தாங்க்ஸ். என் பங்கையும் சேர்த்து நீயே சாப்பிடு. போர்ட்-ப்ளேயரில் இருந்து உனக்கு ஏதாவது வாங்கி வர வேண்டுமா?''

''விசாரித்ததே போதும். அதுதான் தினம் கோவர்தன் போய் வருகிறானே. மேலும் நானும் அவ்வப்போது போர்ட்-ப்ளேயர் போய் மனைவியையும், குழந்தை களையும் பார்த்து விட்டுத்தான் வருகிறேன்! குடும்பத் துடனேயே நான் எப்போதும் இருந்துவிட வேண்டும் என்பது அவர்கள் ஆசை. அவர்களோடு இருந்துவிட்டால் அப்புறம் வாழ்நாள் முழுக்க அவர்களுக்கு சாப்பாடு போடுவது எப்படி? இன்னும் இரண்டு வருஷங்கள் இங்கே இருந்து சம்பாதித்து விட்டேன் என்றால் தைரிய மாக விஸ்வநாதனிடம் சொல்லி வேலையில் இருந்து நின்று விடலாம் என்று பார்க்கிறேன். போர்ட் ப்ளேயரில் எனக்கு ஒரு நல்ல வீடு இருக்கிறது. என் பெயரில் இரண்டு டாக்ஸிகள் ஓடுகின்றன. குடும்பத்திற்கு என்று சொந்தமாகக் கார் இருக்கிறது.''

''அப்படியா?'' என்றேன் ஆச்சரியத்துடன். ''நீ இப் போதே இந்த வேலைக்கு டாட்டா காட்டும் நிலைமை யில்தான் இருக்கிறாய் போலிருக்கிறதே. போய் விடு வதுதானே?''

''நான் போய்விட்டால் நீங்கள் எல்லாம் பட்டினியாய் இருக்க நேரிடுமே என்று பார்க்கிறேன்'' என்று சிரிப்பு மாறாமல் சொல்லிவிட்டு பசுபதி விலகிப் போனான்.

சுறுசுறுப்படைந்தேன். பத்திரப்படுத்தி வைத்திருந்த திரிவேணியின் புகைப்படங்களை எடுத்து பேண்டின் வாட்ச் பாக்கெட்டில் செருகிக் கொண்டேன்.

குவார்ட்டர்ஸை விட்டு வெளிப்பட்டேன். அனைவரும் உபயோகிக்கும் படகுத் துறையை நோக்கி நடந்தேன். கோவர்தன் உபயோகப்படுத்தும் படகு ஒரு ஓரத்தில் மிதந்து அசைந்து கொண்டிருந்தது. இன்னொரு ஓரத்தில் இன்னொரு இயந்திரப் படகு மிதந்து கொண்டிருந்தது.

அந்தப் படகில் ஏறி உட்கார்ந்தேன். டீஸல் எவ்வளவு இருக்கிறது என்பதைக் காட்டும் முள்ளைப் பார்த்தேன். பாதி டாங்கிற்கு மேல் இருந்தது. ஸ்டார்ட் செய்தேன். போர்ட் ப்ளேயரை நோக்கிச் செலுத்தினேன்.

வழக்கம் போல் அமைதியான கடல். துள்ளிக் குதித்த டால்பின்கள். இறக்கையடித்துப் பறந்த வெண்பறவைகள் அந்தரத்தில் தொங்கிய வெண் மேகங்கள்.

ஷீலாவைப் பார்த்து எவ்வளவு நாட்களாயிற்று? பார்த்தால் என்னைத் தெரியும்? அடையாளம் தெரிந்து கொள்வாளா? எனக்கு உதவுவாளா?

நிச்சயம் உதவுவாள் என்று தோன்றியது.

போர்ட் ப்ளேயரின் பீனிக்ஸ் துறைமுகத்தை அடைந் தேன். தனியார் படகுகளை விடுவதற்கென்று சில



பிரத்யேகமான துறைகள் இருந்தன. அந்தத் துறைகளில் ஒன்றில் படகைச் செலுத்திப் போய் நிறுத்தினேன்.

படகில் இருந்த நைலான் கயிற்று வளையத்தை எடுத்து அங்கிருந்த தளைகளில் ஒன்றில் மாட்டி விட்டு கரையை அடைந்தேன்.

உடனே ஷீலாவிற்கு போன் செய்து பேச வேண்டும் என்ற எண்ணத்துடன் படகுத் துறையை விட்டு விலகி பிரதான சாலைக்குச் செல்லும் பாதையில் நடந்தேன்.

அந்தமான் தீவில் இருக்கும் பீனிக்ஸ் படகுத்துறை ஒரு குட்டித் துறைமுகம். பெருநகரங்களில் இருக்கும் பஸ்-ஸ்டேஷன்களைப் போல் அது ஒரு போட் - ஸ்டேஷன்.

லிப்டில் அந்தமான், நிகோபார் தீவுகள், நீல், ஹேல் வாக் தீவுகள் போன்ற பல தீவுகளுக்கு பீனிக்ஸ் ஜெட்டி யில் இருந்துதான் பயணிகளின் படகுகள் புறப்படும்.

அதனால் பீனிக்ஸ் துறைமுகத்தில் மக்கள் வழிந்து கொண்டிருப்பார்கள். இப்போதும் கூட்டம் அலை மோதியது. இஞ்சி மரப்பா விற்பவர்களும், ஆரஞ்சு விற்பவர்களும், பீடி, சிகரெட், பான் விற்பவர்களும் பயணிகள் இடையே புகுந்து புறப்பட்டுக் கொண்டிருந் தார்கள்.

டிக்கெட் கவுண்டர்கள் இருந்த திறந்த ஹாலில் இருந்த பெஞ்சுகளில் பலவிதமான மனிதர்கள் நிறைந்திருந் தார்கள். ஒரு பெண் இன்னொரு பெண்ணிடம் என்னவோ முறையிட்டு அழுது கொண்டிருந்தாள். ஒரு கிழவி சுற்றுப்புற கூச்சல்களின் பாதிப்பே இன்றி ஒரு துறவி போல் அமர்ந்து சுருட்டை வாயில் வைத்து இரு விரல் களால் அதைப் பற்றிச் சுழற்றி, சுழற்றி புகை இழுத்துக்

கொண்டிருந்தாள். ஒரு சிறுவனும், சிறுமியும் படகில் பாட்டி வீட்டுக்குச் செல்லும் சந்தோஷத்தில் ஒருவரை ஒருவர் துரத்திப் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

அவ்வளவு கவனித்த கண்கள் இன்னொரு காட்சியை யும் கண்டு விட்டன. அயல்நாட்டவன் போல் தெரிந்த ஒருவன் அரை டிராயரும், பூப்போட்ட கலர்ச்சட்டையும் அணிந்து தலையில் ஒரு தொப்பி வைத்து உட்கார்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தான். கண்களில் குளிர் கண்ணாடியுடன் பேப்பர் படித்த அவனைப் பார்க்க வித்தியாசமாக இருந்தது. ஆனால் அவனை நான் பார்த் தேன் என்பதை அவன் பார்த்திருக்க வாய்ப்பு இல்லை. என் கடைக்கண்ணின் ஓரமாக அவனைக் கவனித்துக் கொண்டிருந்தேன்.

போலீஸ் டிபார்ட்மென்டில் இருந்தபோது ஒரு முகத்தைப் பார்த்தவுடனேயே அது வெள்ளை முகமா அல்லது கருப்பு முகமா என்று உணரப் பயிற்சி பெற் றிருந்தேன். அந்த வகையில் பார்த்தபோது இந்த வெள்ளைக்காரன் எனக்கு கருப்பு முகத்தைக் கொண்ட வனாகத் தோன்றினான்.

அவனை கவனிக்காதது போல் அவனைக் கடந்தேன். அவன் மெல்லத் தலையை உயர்த்தினான். என்னைத் தான் பார்க்கிறான் என்பது எனக்குப் புரிந்து விட்டது. என் முகத்தைப் பார்த்தவுடன் அவன் செய்கைகளில் ஒரு பரபரப்பு கூடியது. பேப்பரை மடித்தான். எழுந்தான். என்னைப் பின்தொடர ஆரம்பித்தான்.

விஸ்வநாத் எவ்வளவு முன்யோசனையுடன் செயல் படுகிறான் என்பது அப்போதுதான் புரிந்தது எனக்கு. ஒரு வேளை ராஜதுரைதான் இதற்குக் காரணமென்றால்



அப்போதும் விஸ்வநாத்தைத்தான் பாராட்டத் தோன் றியது. இவ்வளவு எச்சரிக்கையுடன் செயல்படும் ராஜ துரையை செக்யூரிட்டி சீப்பாக வேலைக்கு அமர்த்தி யிருப்பது அவர்தானே?

என்னைப் பின் தொடர்வது போலவே ஆசாதையும், சாரதியையும் கூடப் பின் தொடர்கிறார்களோ என்னவோ!

அவனை உதறிவிட வேண்டும் என்று தீர்மானித் தேன். ஷீலாவிற்கு போன் செய்வதெல்லாம் அப்புறம்.

சர்சர் என்று படகுத்துறையை நோக்கி வரும் சாலையில் டாக்ஸிகள் வந்து நின்றன. பிரயாணிகள் அவற்றில் இருந்து உதிர்ந்தார்கள். டாக்ஸிகள் உடன் ஒரு யு டர்ன் எடுத்துத் திரும்பிச் சென்று பிரதான சாலையின் போக்குவரத்தோடு சேர்ந்து கொண்டன.

அப்படி திரும்பிச் சென்று கொண்டிருந்த டாக்ஸி ஒன்றை திடீரென வழி மறித்தேன். ஏறி உட்கார்ந்தேன்.

''அபர்தீன் பஜார்'' என்றேன்.

டாக்ஸி வேகம் பிடித்தது. மிக மெதுவாகப் பின்னால் திரும்பிப் பார்த்தேன்.

என் பின்னைத் தொடர்ந்து கொண்டிருந்த அயல் நாட்டு ஆசாமி என் திடீர் செயலை எதிர்பார்க்கவில்லை. அவசர அவசரமாக அவன் ஏறிய டாக்ஸி என்னைப் பின் தொடரத் தொடங்கியது.

ஆக ஒய்வுநாள் அன்று ஒருவன் போர்ட் ப்ளேயருக்கு வந்தால் அவன் ஓய்வு நாளைத் தான் கொண்டாடுகிறானா அல்லது வேறு ஏதாவது நிழலான காரியங்களில் ஈடுபடு கிறானா என்று ராஜதுரை கண்காணிப்பது எனக்கு சர்வ நிச்சயமாகப் புரிந்துவிட்டது.

டாக்ஸி அபர்தீன் பஜாரை நெருங்கியது. மார்க்கெட் வீதி சுறுசுறுப்பாக இருந்தது. ஆர்ட் காலரிகள், பர்னிச்சர் மார்ட்கள், கிப்ட் ஷாப்கள் என்று ஏறக்குறைய எல்லா இடங்களையும் டூரிஸ்டுகள் ஆக்ரமித்துக் கொண்டிருந் தார்கள்.

டாக்ஸி போக்குவரத்தின் நெரிசல் காரணமாக ஊர்ந்து போகத் தொடங்கியது. அது பஸ்-ஸ்டாண்டை நெருங்கிக் கொண்டிருந்தது. அந்தமானுக்கு அடுத்திருந்த தீவுகளுக் குத் தரை வழியாகச் செல்லும் பேருந்துகள் பஸ் - ஸ்டாண்டில் இருந்து வெளிப்பட்டுக் கொண்டிருந்தன.

என்னைப் பின் தொடர்ந்து கொண்டிருந்த டாக்ஸி எனக்கு நேர் பின்னால் இருக்கும் என்று எனக்குத் தெரியும். என்ன செய்யலாம் என்று யோசித்தேன்.

சாலையின் இடது பக்கம் என் பார்வை பெருக்கியது. ஒரு பெரிய ஹாப்பிங் காம்ப்ளக்ஸ் தெரிந்தது.

டாக்ஸியை ஓரம் ஒதுக்கி நிறுத்தச் சொன்னேன். நிறுத்தினான். இறங்கினேன். என்னைப் பின் தொடர்ந்த டாக்ஸி நானிருந்த இடத்தைக் கடந்து முன்னேறிச் சென் றது. அதைக் கவனித்த மாதிரி காட்டிக் கொள்ளவில்லை.

டாக்ஸிக்கான வாடகையைக் கொடுத்துவிட்டு ஷாப்பிங் காம்ப்ளக்ஸில் நுழைந்தேன்.

அது ஒரு நான்கு மாடிக் கட்டிடம். நான்கு மாடிகளிலும் பொருட்களை டிஸ்ப்ளேயில் வைத்திருந்தார்கள். நுழைந் தவன் இடது பக்கம் வரிசையாக ஷெல்ப்புகளில் கடல் சிப்பிகளில் ஆன பொம்மைகள், லாம்ப் ஷேடுகள் என்று பல குப்பைகளை அடுக்கி வைத்திருந்தார்கள். நான் ஒரு ஷெல்ப்பிற்குப் பின்னால் போய் நின்று கொண்டேன்.



அங்கிருந்து வாசலைக் கவனிக்க முடியும். கவனித் தேன்.

சரியாக அறுபது விநாடிகள் கழித்து அந்த வெள்ளைக் காரன் உள்ளே நுழைந்தான். நுழையும் போதே பார் வையைச் சுற்று முற்றும் செலுத்தினான்.

அவன் கண்களில் படாதவாறு நான் மறைந்து நின் றேன்.

அயல்நாட்டவனின் கண்கள் அலைந்தன. எந்த மூளையிலாவது என் உருவத்தைப் பார்த்துவிட்டால் அவன் மனம் சமாதானமாகியிருக்கும். நான் இன்னும் மறைப்பாக நின்று கொண்டேன்.

அவன் திடீரென்று படிகளில் ஏறி மாடி தளங்களைப் பார்ப்பதற்கு விரைந்தான். நான் அதைத்தான் எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன்.

மறைவிலிருந்து வெளிப்பட்டேன். கடையை விட்டு சரசரவென வெளியேறினேன்.

வாசலிலேயே ஒரு டாக்ஸி பிடித்தேன். டீல் ஹவுஸ் அருகில் இறங்கிக் கொண்டேன்.

என்னை யாராவது பின் தொடர்கிறார்களா என்று சோதித்து விட்டேன். இல்லை.

ஒரு பப்ளிக் கால் ஆபீஸை நெருங்கினேன்.

ஷீலாவின் செல்போன் எண், என் மூளையின் ஒவ் வொரு செல்லிலும் பதிவாகி இருந்தது. அவளை அழைத்தேன்.

எதிர்முனையில் டிரிங், டிரிங்...

''ஹலோ'' - ஷீலாவின் குரல்தான். என் நரம்புகளில் மின்சாரம்.

''பாரி'' என்றேன்.

ஷீலா மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டாள்.

''எங்கிருந்து?''

''இங்கே டீல் ஹவுஸ் அருகில் இருக்கும் ஒரு பி.சி.ஓ.வில் இருந்து.''

''குட். என்ன விஷயம் பாரி?''

''உன் உதவியை நாடி வந்திருக்கிறேன்.''

''நீங்கள் வருவீர்கள் என்று எனக்குத் தெரியும்.'' என்றாள் ஷீலா.

நான் அதிர்ந்து போனேன்.

''அங்கேயே இருங்கள். நான் வந்து பிக்-அப் பண்ணு கிறேன்.''

## 17

அடுத்த ஐந்தாவது நிமிடம் ஷீலா ஓட்டி வந்த மாருதி வேன் என்னருகில் ப்ரேக் அடித்து நின்றது. முன் கதவைத் திறந்து ஏறிக் கொண்டேன்.

ஷீலாவிடமிருந்து விரும்பத்தக்க வாசனை ஒன்று என்னை அடைந்தது. ஸ்லீவ் லெஸ் ஜாக்கெட் அணிந் திருந்தாள். தொப்புளுக்குக் கீழே புடவை கட்டியிருந்தாள். டிரைவிங் சீட்டில் அவள் உட்கார்ந்திருந்த நிலையில் அவளது வயிற்றுப் பிரதேசம் மடிப்பு மடிப்பாய்த் தெரிந்து என்னைச் சலனப்படுத்தியது.



சிரித்தாள். சிரித்தேன்.

''எங்கே போகலாம்?'' என்று கேட்டாள்.

''யாரும் நம் பேச்சை ஒட்டுக் கேட்க முடியாத ஒரு ரகசியமான இடத்திற்கு'' என்றேன்.

''ரைட். ஆனால் ஒரு முப்பது நிமிஷம் எனக்காகக் காத்திருக்க வேண்டும். ஆஸ்பத்திரியில் ஒரு சின்ன வேலை இருக்கிறது'' என்று சொல்லி பின்சீட் பக்கம் பார்வையைத் திருப்பிக் காட்டினாள்.

பார்த்தேன். பின் சீட்டில் ஐந்தாறு பூங்கொத்துகள் பளிச் என்ற நிறத்தில் இருந்தன.

'எதற்கு?' என்று கேட்க நினைத்தவன், கேட்காம லேயே தலையை அசைத்தேன்.

அந்தமானின் பிரபலமான மருத்துவமனை பார்க் கிங்கில் காரை நிறுத்தினாள்.

இறங்கினாள். பூங்கொத்துக்களுடன் உள்ளே போனாள். அரை மணி நேரம் என்று சொன்னவள், பதினைந்து நிமிடங்களில் திரும்பிவிட்டாள்.

ஏறிக் கொண்டாள். மௌனமாக காரைச் செலுத்தினாள்.

அரை மணி நேரத்திற்குப் பிறகு, மாருதி ஆளரவமே யற்ற, பாறைகளும், வினோத மரங்களும் நிறைந்த ஒரு கடற்கரைக்குச் சென்று நின்றது.

அந்தக் கடல், கடல் நடுவே கவிதைத் துண்டங் களாய்த் தெரிந்த பாறைகள், உயரமாய் வளர்ந்து, கடலைத் தொடுகிற அளவு வளைந்து தாழ்ந்த மரங்கள் எல்லாம் சேர்ந்து அந்தப் பிரதேசத்திற்கு ஒரு தேவலோக அந் தஸ்தை அளித்திருந்தன.

ஒரு பாறையில் அமர்ந்தாள். அருகில் உட்கார்ந்தேன்.

''யெஸ். ஷூட். இந்த இடத்தில் நாம் பேசுவதை பறவைகள் மட்டுமே ஒட்டுக் கேட்கும்'' என்றாள்.

எப்படித் தொடங்குவது என்று தெரியவில்லை. அவள் உதவுவாள் என்று நான் நினைத்தது உள்ளுணர்வின் காரணமாக அன்றி வேறு எந்த ஆதாரத்தையும் வைத்து அல்ல. உள்ளுக்குள் உதறலாக இருந்தது.

ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டேன்.

''எனக்குப் புரிகிறது'' என்றாள்.

''என்ன?''

''நீங்கள் என்னிடம் சொல்லத் தயங்குகிறீர்கள்.''

''ஆம்!''

''நான் நம்பகமானவள் என்று எப்படிப் புரியவைப்பது என்று எனக்குத் தெரியவில்லை.''

''இல்லை ஷீலா! என்ன உதவி என்று கேட்டால் அதிர்ச்சி அடைவாய்.''

''ஆகமாட்டேன். என் உதவி எதற்காகத் தேவைப்படுகிறது என்று என்னால் ஓரளவு யூகிக்க முடிகிறது. ஆமைத் தீவில் உங்களுக்கு உதவுபவர்கள் யாருமே இல்லை. அப்படியே இருந்தாலும் என்னைப்போல் அவர்கள் வெளியில் இல்லை. ஆமைத்தீவில் இருக்கிறார்கள். ராஜதுரை, கோவர்தன், ஆசாத், சாரதி, பசுபதி என்ற யாரையுமே நீங்கள் நம்பவில்லை. நம்பாதவரை நல்லதே.''

''ஏய். ஆமைத்தீவில் யார் யார் இருக்கிறார்கள் என்று உனக்குத் தெரியுமா?''



''மிக நன்றாக. நீங்கள் திரிவேணியை அங்கேயிருந்து கடத்தி வரப்போகிறீர்கள். அதற்கு நான் உதவ வேண்டும். அதுதானே?''

வாய் பிளந்து விட்டேன்.

''ஷீலா!'' என்றேன் குழறலாக.

அவள் புன்னகையுடன் என் கையைப் பற்றி அழுத்திக் கொடுத்தாள்.

''நான் சுப்புவிற்குக் கடன் பட்டிருக்கிறேன். என் உயிரைக் கேட்டாலும் கொடுக்கும் அளவிற்கு. பின்னணியில் வலுவான காரணம் இருக்கிறது. ஆனால் இப்போது சென்டிமென்ட்ஸ் வேண்டாம். ஆமைத்தீவிற்கு திரிவேணி அழைத்து வரப்பட்ட போதே நான் இங்கே வந்து எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்ஜ் தொடங்கிவிட்டேன். நம் ஆட்களில் நம்பகமான யாரையாவது அங்கே விதைக்க வேண்டும் என்பது எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வேலை. ஏற்கனவே சலவைக்காரன், சாக்கடை சுத்தம் செய்பவன் என்று இங்கே இருக்கும் லோக்கல் ஆட்களை அங்கே அனுப்பி இருக்கிறேன். அதனால் ராஜதுரைக்கு நம்பிக்கையானவளாக மாறிவிட்டேன். அந்த சமயத்தில்தான் ஒரு செக்யூரிட்டி ஆசாமி வேலையை விட்டுத் துரத்தப்பட்டான். சுப்புசாருக்குத் தகவல் சொன்னேன். நீங்கள் வந்து சேர்ந்தீர்கள். நம்பகமானவர் என்று சுப்பு சாரே சர்ட்டிபிகேட் கொடுத்திருக்கிறார். உங்களை அங்கே விதைக்க வேண்டியது என் வேலை. முடித்து விட்டேன். நீங்கள் என்ன உதவி கேட்டாலும் செய்து கொடுக்க வேண்டும் என்பது எனக்கு வந்து சேர்ந்திருக்கும் ஆர்டர். ஸோ... ஐ'ம் அட் யுவர் டிஸ்போஸல். என்ன வேண்டும்?''

என்னால் நம்பவே முடியவில்லை. ஜேம்ஸ்பாண்ட் பட நிகழ்வுகள் போல்தான் நிகழ்ச்சிகள் நடந்திருக் கின்றன. சதுரங்க விளையாட்டில் சுப்பு சார் என்னைக் குதிரை வீரனாகக் களம் இறக்கி இருக்கிறார். மூன்று கட்டங்களைத் தாவி என் எதிரியை வென்று மறுபடி புறப்பட்ட இடத்திற்குத் திரும்ப வேண்டும்.

''கம்மான். டெல் மீ. என்ன உதவி வேண்டும்?''

நான் திரிவேணியின் புகைப்படங்களை எடுத்து அவளிடம் நீட்டினேன்.

''இதுதான் திரிவேணி'' என்றேன்.

ஷீலா அந்தப் படங்களை ஆர்வத்துடன் வாங்கிப் பார்த்தாள். ஒவ்வொரு படமாக உற்றுப் பார்த்தாள். திரிவேணி எல்லா விதங்களிலும் தன்னை விட நன்றாக இருப்பதை பார்த்து அவள் கண்கள் ஒரே ஒரு கணம் பொறாமையை வெளிப்படுத்தின. பின் சட்டென்று அந்தப் பொறாமை காணாமல் போய்விட்டது.

என்னைப் பார்த்தாள். ''பார்த்து விட்டேன். அப்புறம்?'' என்றாள்.

''இவளுடைய உயரத்தில், இவளுடைய உடல் நிறத்தில், இவளுடைய ஸ்ட்ரக்சரில், ஏறக்குறைய இவள் முகத்தோடு ஒத்துப்போகிற இவள் வயது பெண்ணின் பிணம் ஒன்று வேண்டும்'' என்றேன்.

ஷீலா அதிர்ச்சி அடைவாள் என்று எதிர்பார்த்தேன். பயந்து போய் 'ஆளவிடுப்பா' என எழுந்து போய்விடு வாள் என்று எதிர்பார்த்தேன். ம்ஹூம். எதுவும் நடக்க வில்லை. அவள் முகம் உணர்ச்சிகளை வெளிப்படுத் தாமல் சாதாரணமாகத் தெரிந்தது.



''அவ்வளவுதானா'' என்று கேட்டாள்.

''ஒரு லிஸ்டே இருக்கிறது.''

''அப்படியானால் அந்த லிஸ்டைப் படியுங்களேன். எதற்கு மென்று தயங்குகிறீர்கள்? முழுங்குகிறீர்கள்?''

''உன்னால் நான் கேட்ட மாதிரி ஒரு பிணத்தைக் கொடுக்க முடியுமா ஷீலா?''

''என்ன கேட்டாலும் கொடுப்பேன். இன்னும் வினோத மாக எதைக் கேட்டாலும் கொடுப்பேன்! எதற்கு நான் ஆஸ்பத்திரியுடன் தொடர்பு வைத்திருக்கிறேன் என்று நினைக்கிறீர்கள்? அங்கே வேலையில் இருக்கும் பல நர்ஸ்கள் என்னுடைய எக்ஸ்சேஞ்ஜ் மூலமாகத்தான் வேலைக்குச் சேர்ந்திருக்கிறார்கள். மார்ச்சுவரி இன் சார்ஜும் என் வார்த்தைக்குக் கட்டுப்படுகிறவன்தான். இங்கே இருக்கும் சிறு தீவுகளில் இன்னும் பழமை அதிகம். பிரசவத்திற்காக டாக்டரைத் தேடி வரமாட் டார்கள். டெலிவரியின் போது சிக்கல்கள் ஏற்பட்டு கடைசி நேரத்தில் இங்கே வந்து உயிரை விடும் பெண் கள் இருக்கிறார்கள். மங்கோலியன் டைப் ஆதிவாசிகள் திரிவேணியின் காம்ப்லெக்ஸிற்குப் பொருந்தி வருவார் கள். அந்தக் கவலையை நீங்கள் விடுங்கள். ஒரு பிணம் கிடைக்கும். ஆனால் உடனே கிடைக்குமா என்பதை செக் பண்ணி விட்டுத்தான் சொல்ல வேண்டும்.''

''உடனே வேண்டாம். நானும் அதற்குத் தயாரில்லை. இன்னும் என்னென்ன வேண்டும் என்பதைச் சொல்லி விடுகிறேன். அதன் பின் டெலிவரி பற்றிப் பேசலாம்.''

''ஓகே...'' என்றாள் அவள்.

''என்னைப் போலொரு பிணம் வேண்டும்'' என்றேன்.

ஷீலா என்னை உச்சி முதல் கால் வரை ஆராய்ந்தாள். வெட்கப்பட வைத்தாள். ஆனால் ஷீலா என்னவோ சோதனைச்சாலை எலியைப் பார்ப்பது போல்தான் பார்த் தாள்.

''ஓகே'' என்றாள்.

''ஒரு நல்ல இயந்திரப்படகு வேண்டும்.''

''ஈஸி! அப்புறம்?''

''இரண்டு ஆக்ஸிஜன் கிட் வேண்டும். தண்ணீருக் கடியில் நீண்ட நேரம் தாக்குப்பிடிப்பது போல்! ப்ளஸ் இரண்டு பாட்டில்கள் மனித ரத்தம்.''

''ரைட்... அதுவும் வெரி சிம்பிள். அப்புறம்?''

''ஸ்ட்ராங்கான மயக்க மருந்து வேண்டும். அந்த மயக்க மருந்துக்கு நிறம். மணம் எதுவும் இருக்கக் கூடாது. அதைப் பாலோடோ, விஸ்கியோடோ கலந்தால் பாலின் டேஸ்ட், விஸ்கியின் டேஸ்ட் மாறக்கூடாது. ஆந்திராவில் ரயிலில் பிஸ்கட்டில் இந்த மாதிரி மயக்க மருந்துகளைக் கலந்து கொடுத்து லட்ச, லட்சமாய் பணத்தைக் கொள்ளை யடிக்கிறார்கள்...''

''ரைட்... அதையும் ஏற்பாடு செய்கிறேன். எப்போது டெலிவரி செய்ய வேண்டும்?''

''ஷீலா. உன்னைப் போல் இவ்வளவு துடிப்பான ஒரு பெண்ணை நான் பார்த்ததே இல்லை. எள் என்றால் எண்ணெயாக இருக்கிறாய். எனக்குக் கல்யாணம் ஆவதற்கு முன் உன்னைப் பார்த்திருந்தால் 'ஐ லவ் யூ' சொல்லியிருப்பேன். எப்படியாவது உன்னைக் கல் யாணம் செய்து கொண்டிருப்பேன். ஆனால் நவ் இட் ஈஸ் டூ லேட். எனக்கு ஒரு முறை கல்யாணம் ஆகி விட்டது.



எனக்கு வாய்த்த மனைவியால் பெண் வர்க்கத்தையே இனி ஒதுக்கித் தள்ளிவிடும் முடிவிற்கு வந்து விட்டேன். அதனால் இனிமேல் கல்யாணம் என்ற பேச்சுக்கே இடமில்லை. ஸ்டில் ஐ அட்மைர் யூ'' என்றேன்.

அவள் கன்னங்களில் சிவப்பு தெரிந்தது. வெட்கம்.

''எப்போது டெலிவரி செய்ய வேண்டும்?'' என்று வெட்கம் கலந்த குரலில் கேட்டாள்.

''மயக்க மருந்து இப்போது கிடைக்குமா?''

''நோ சான்ஸ்.''

''பரவாயில்லை. அடுத்த வாரம் வந்து பெற்றுச் செல் கிறேன். அப்போது அது தயாராகி விடும் இல்லையா?''

''ஓ யெஸ். தயாராக இருக்கும்.''

''ஷீலா, சுப்பு சாருக்கு நீ கடமைப்பட்டுள்ள மாதிரித் தான் நானும் கடமைப்பட்டுள்ளேன். நான் செத்துப்போக இருந்தவன். சுப்பு சார் கைவிடவில்லை. பிழைக்க வைத்து விட்டார். பிழைக்க வைத்த அவர் மேல் முதலில் எனக்குக் கோபமாய் இருந்தது. ஆனால் என் கோபத்தை மாற்றியவர் அவர்தான். 'யார் மேல கோபப்பட வேண் டுமோ அவர்கள் மேல் கோபப்படு' என்று சொல்லிக் கொடுத்தார். விஸ்வநாதனை எனக்குத் தெரியாது. அவரிடம் எனக்குப் பகை இல்லை. ஆனால் அவர் மகளை சுப்பு சார் கடத்தச் சொல்லியிருக்கிறார் என்றால் அதில் நிச்சயம் ஏதோ நியாயம் இருக்கும் என்று தோன் றியது. அதனால்தான் ஒப்புக் கொண்டு இங்கே வந்திருக் கிறேன். என் திட்டம் எங்கேயாவது தோல்வி அடையக் கூடும். எனக்கே தெரியாமல் இருக்கும் ஒரு ஓட்டை என் காலை வாரிவிடக்கூடும். திட்டம் தோற்றால் என் உலக

வாழ்க்கைக்கு முடிவு. அதற்குத் தயாராகத்தான் வந்திருக்கிறேன். அதனால் கடைசி வரைக்கும் போராடிப் பார்த்து விடலாம். நீ துணையாக இருப்பாய் அல்லவா?''

''எதற்கு பாரி இவ்வளவு பெரிய லெக்சர்? நானும் என் உயிர் போவது பற்றிக் கவலைப்படவில்லை. நீ கேட்டதெல்லாம் எங்கே, எப்போது கொண்டு வந்து டெலிவரி செய்ய வேண்டும் என்று சொல். உன்னிடம் டெலிவரி செய்யும் வரை என் உயிர் போகாமல் பார்த்துக் கொள்கிறேன்'' என்றாள் ஷீலா, ராணி மங்கம்மா, ஜான்ஸி ராணி. சித்தோட் ராணி பத்மினி இவர்களைப்போல.

''அதற்குத் தான் இவ்வளவு பெரிய லெக்சர் கொடுத்தேன் ஷீலா. மயக்க மருந்தை அடுத்த வாரம் வந்து நான் பெற்றுச் செல்கிறேன். அதன் பின் ஒரு சரியான நாளுக்காக நான் காத்திருக்கப் போகிறேன். நான் காத்திருக்கும் நேரத்தில் நீ, நான் கேட்ட பொருட்களை எல்லாம் சேகரித்து வைத்துக் கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு நான் கேட்ட இரண்டு மனித உடல்கள். இன்றைக்கு கிடைக்கலாம். நாளைக்கு கிடைக்கலாம் அல்லது ஒரு மாதம் கழித்துக் கிடைக்கலாம். நம் தேவைக்காக அனாவசியமாக இரண்டு மனித உயிர்களை பலி கொடுக்க நான் விரும்பவில்லை. இரண்டு உடல்களும் ஒரே நேரத்தில் கிடைக்கும் என்று சொல்ல முடியாது. வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கூடக் கிடைக்கலாம். ஆனால் ஒரு உடல் கிடைத்து இன்னொரு உடலுக்காகக் காத்திருக்கும் நேரத்தில் ஏற்கெனவே கிடைத்த உடலைக் கெட்டுப் போகாமல் பாதுகாக்க வேண்டும். முடியுமா உன்னால்?''

''முடியும்'' என்றாள்.

அந்த பதிலைத்தான் எதிர்பார்த்தேன்.



''குட். முதல் உடல் உனக்குக் கிடைத்தவுடன் எனக்கு ஒரு எஸ்.எம்.எஸ். அனுப்பு.''

''என்னவென்று செய்தி அனுப்ப வேண்டும்? கோட் லாங்வேஜில் இருந்தால் நல்லது இல்லையா?''

''சங்கேத மொழியில்தான் அனுப்ப வேண்டும். 'ஒரு வேலை காலியாக இருக்கிறது' என்று செய்தி அனுப்பு. உன்னிடம் ஒரு உடல் வந்து சேர்ந்து விட்டதை நான் அறிந்து கொள்வேன்.''

''ஓ.கே. இரண்டாவது உடல் கிடைத்தவுடன் இரண்டு வேலைகள் காலியாக இருக்கின்றன என்று அனுப்பவா?''

பளிச்சென்று புரிந்து கொள்ளும் அவள் தன்மையை வியந்தேன்.

''அஃப்கோர்ஸ். அப்படித்தான் செய்தி அனுப்ப வேண்டும். இரண்டு உடல்கள்தான் நம் திட்டத்திலேயே மிகவும் சிரமமான சேகரிப்பு என்று நான் நினைக்கிறேன். உடல்கள் கிடைத்த பின் நீ சேகரித்துக் கொள்ள வேண்டியது ஆக்ஸிஜன் கிட், இயந்திரப் படகு இவற்றை சேகரிக்க உனக்கு எவ்வளவு காலம் தேவைப்படும்? மறந்து விட்டேனே... இரண்டு பாட்டில் ரத்தம் கூட...''

''இவை எதுவும் பிரச்சனையே இல்லை. இரண்டு மணி நேரத்தில் கூட என்னால் சேகரிக்க முடியும்.''

''ரைட். நீ தயார் என்று தெரிவித்தவுடன் ஒரு சரியான நாளுக்காக நான் காத்திருக்கப் போகிறேன். ரெட் லெட்டர் டே. அந்த நாள் எது என்று நான் தீர்மானித்தவுடன், உனக்கு எஸ்.எம்.எஸ். அனுப்புறேன்...''

''என்னவென்று?''

'''நல்ல வேலை வேண்டும் பாரி' என்று செய்தி அனுப்புவேன். இந்தச் செய்தி உனக்குக் கிடைத்தவுடன்

இரண்டு உடல்களையும் ஓர் இயந்திரப் படகில் போட்டுக் கொண்டு, ஆக்ஸிஜன் கிட் சகிதம் ஆமைத் தீவுக்கு வர வேண்டும். டன்?''

''டன்...!''

''யோசிக்காமல் சொல்லாதே ஷீலா! நான் கூப்பிடுவது பகல் நேரமாக இருக்கலாம். இரவு நேரமாக இருக்கலாம். எந்த நேரம் வேண்டுமானாலும் உன்னை வரச் சொல் வேன். நீ வரவேண்டும். அதுவும் தனியாக யாருடைய உதவியும் இன்றி. எப்படி இறந்த உடல்களைத் தனியாகப் படகில் ஏற்றுவாய்? எப்படி நீ படகைக் கொண்டு வருவாய்? உடல்களையும், ஆக்ஸிஜன் கிட்டையும், படகையும் டெலிவரி செய்த பின் எப்படித் திரும்பிப் போவாய்?''

ஷீலா என்னை ஒரு வெற்றுப் பார்வை பார்த்தாள். ''நீங்கள் சொல்லும் வேலைகளை எல்லாம் ஓர் ஆணால் தன்னந்தனியாக செய்து முடிக்க முடியும் இல்லையா?''

''யெஸ்!''

''அப்படியானால் என்னாலும் முடியும். ஒரு டின் ஷீட்டை பெட்டி வடிவில் தயார் செய்ய ஆர்டர் கொடுத்து விடுவேன். மூடி இல்லாத பெட்டி. அந்தப் பெட்டியில் ஒரு உடலை மார்ச்சுவரி ஆளிடம் வைக்கச் சொல்வேன். உடலுக்கு மேல் கறிகாய்களால் நிரப்பி விடுவேன். இரண்டாவது பெட்டியையும் இதே போல் தயார் செய்து அதிலும் கறிகாய்களை நிரப்பி விடுவேன். ஒவ்வொரு பெட்டியாக ட்ரை சைக்கிளில் ஏற்றுவேன். அஃப்கோர்ஸ். அங்கே எனக்கு மார்ச்சுவரி ஆளின் உதவி தேவைப்படும். பிணம் அவன் கஸ்டடியில் தான் இருக்கப் போகிறது. அவனிடம் இருந்துதான். கைமாறப் போகிறது என்பதால்



கேள்விகள் எதுவும் இருக்காது. மோட்டார் வைத்த ட்ரை சைக்கிளை பீனிக்ஸ் துறைமுகத்திற்கு ஒரு ஆள் ஓட்டி வரப்போகிறான். அந்த டிரை சைக்கிளை இயந்திரப் படகு நிறுத்தப்பட்டிருக்கும் இடம் வரை ஓட்டி வந்து நிறுத்தி சைக்கிள் ஓட்டியின் உதவியால் பெட்டிகள் இரண்டையும் படகில் ஏற்றுவேன். காய்கறிகள்தான் தெரியும் என்பதால் யாருக்கும் எந்தச் சந்தேகமும் வராது... தட் ஸிம்பிள்...''

''ஓகே.. படகில் கொண்டு வந்து சேர்க்கும் வரை யோசித்து இருக்கிறாய். ஓகே எனக்கு இன்னும் சில சந்தேகங்கள் இருக்கின்றன...''

''என்ன?''

''இரண்டு பிணங்களை சேகரிக்கப் போகிறாயே. இறந்தவர்களின் சொந்தக்காரர்கள் பிணங்களை கேட்க மாட்டார்களா? அவற்றைப் புதைக்கவோ, எரிக்கவோ எடுத்துச் செல்ல மாட்டார்களா?''

''ம்ஹூம்...''

''ஏன்?''

''நம் பக்கம் அதிர்ஷ்டம் இருப்பதால்!''

''புரியவில்லை ஷீலா.''

''புரியாது. தான் விளக்குகிறேன். அந்தமானில் குட்டிக் குட்டித் தீவுகள் ஏராளம். இந்தத் தீவுகளில் வேறு வேறு இனத்தைச் சேர்ந்த ஆதிவாசிகள் வசித்து வருகிறார்கள். இவர்களிடம் ஒரு வினோதப் பழக்கம் இருக்கிறது. இவர்களில் யாராவது இறந்தால், இறந்தவர் உடலைப் புதைப்பதில்லை. அவர்கள் வசிக்கும் இடம் கெட்டுப் போய்விடும் என்பதால், எரிப்பதும் இல்லை. இறந்தவரின் உயிர் ஆவியாக மாறி அவர்களையே சுற்றிச் சுற்றி

வரும் என்ற பயம் இருப்பதால், எனவே உடலைக் கடலுக்குள் எறிந்து விடுவார்கள். கடல் வாழ் விலங் கினங்கள் அதை உண்டு பசியாறட்டும் என்று. எனவே இறந்து போனவர்களின் உடல்களை நானே செலவு செய்து கடலில் போட்டு விடுகிறேன் என்று சொன்னால் உறவினர்கள் சந்தோஷமாக ஒத்துக் கொண்டு, தங்களது மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் விதமாக அரிசியில் இருந்து வடிகட்டிய சாராயத்தைப் பரிசாகக் கொடுத்துவிட்டுப் போவார்கள். ஆம் ஐ க்ளியர்?''

''வெரி மச். எனக்கு ஒரு பெரிய கவலை விட்டது. என் அடுத்த கேள்வி. பிணங்களையும், படகையும் டெலிவரி செய்து விட்டு நீ எப்படி திரும்பி போர்ட் ப்ளேயர் வந்து சேருவாய்?''

''சிம்பிள். நான், ஒரே படகில் வரப்போவதாக யார் சொன்னார்கள்?

சரக்குகள் இருக்கும் படகை நான் செலுத்திக் கொண்டு வருவேன். காலிப் படகு ஒன்றை கூடவே இழுத்து வருவேன். டெலிவரி செய்து முடித்தவுடன் காலி படகை செலுத்திக் கொண்டு நான் திரும்பிப் போய் விடுவேன்.''

''பிரில்லியன்ட். எனக்கு இதுபோல் தோன்றவே இல்லையே!''

''உங்களைவிட எங்களுக்குக் கடல் பழக்கம் நிறைய. அதனால் இந்த மாதிரி பிரச்சனைகளுக்கெல்லாம் எளி தில் தீர்வு கிடைத்து விடுகிறது. நீங்கள் கேள்வி கேட்காம லேயே நான் இன்னொரு விஷயத்தையும் சொல்லி விடுகிறேன்...''

நான் அவளை நிமிர்ந்து கேள்விக்குறியுடன் பார்த்தேன்.



''பிணங்களை எடுத்து வரும் தகரப் பெட்டிகள் இரண்டும் ஒரே ஷீட்டால் ஆனவை என்பதால் எங்கேயும் ஓட்டை இருக்காது. அந்தப் பெட்டிகளில் பெரிய பெரிய கற்களைப் போட்டு, மணலால் நிரப்பிப் பின் அவற்றைத் தண்ணீரில் இறக்கி விட்டால், அது கீழே கீழே இறங்கி ஆழத்தில் இருக்கும் தரை மட்டத்திற்குப் போய்ச் சேர்ந்து விடும். அந்தப் பெட்டிகள் இரண்டும் கரையிலேயே இருந்தால் அவற்றில் என்ன கொண்டு வந்திருக்க முடியும் என்று மற்றவர்கள் யூகிக்க முயற்சி செய்வார்கள் இல்லையா? அவற்றில் பிணங்கள் வந்திருக்கக் கூடும் என்று ஒருவராவது மிகச் சரியாக யூகிக்க முடியும் இல்லையா?''

''நீ என்னை விடத் தீவிரமாக யோசிக்கிறாய் ஷீலா...'' என்றேன் உண்மையான பிரமிப்புடன்.

''பரஸ்பரம் முதுகு சொறிந்து விட்டுக் கொள்வது அப்புறம். நீங்கள் எஸ்.எம்.எஸ். அனுப்பியவுடன் நான் சரக்கை ஏற்றிக் கொண்டு வந்து விடுகிறேன். அதுவரைக் கும் ஓ.கே. ஆனால் அவற்றை எங்கே டெலிவரி செய்ய வேண்டும் என்று சொல்லவே இல்லையே...''

''சொல்கிறேன். ஆமைத்தீவின் இன்னொரு பாதி தெரியுமா உனக்கு?''

''அதாவது திரிவேணியும் அவளுடைய செக்யூரிட்டி ஆட்களும் ஆமைத்தீவின் ஒரு பாதியைத்தான் ஆக்கிர மித்திருக்கிறார்கள் என்று சொல்கிறீர்கள் அப்படித்தானே...''

தெளிவாகப் பேசாததற்கு வெட்கப்பட்டேன். 'ஆம்' என்று தலையசைத்தேன்.

''தெரியும். அதற்கு என்ன?'' என்று கேட்டாள்.

''ஆமைத்தீவின் மறுபாதியை ஒரு காலத்தில் பிரிட்டிஷ் இராணுவத்தினர் ஆக்கிரமித்து இருந்திருக்கிறார்கள். தனியாக ஆக்கிரமிக்கவில்லை. தத்தம் குடும்பங்களுடன் வந்து தங்கி இருந்திருக்கிறார்கள். அப்போது அவர்கள் உபயோகித்த ஒரு படகுத்துறை தீவின் மறுபக்கத்தில் உள் வாங்கியது போல ரகசியமாக அமைந்திருக்கிறது. அது இப்போது ஆளரவம் இல்லாமல் இருக்கிறது. அந்தப் படகுத்துறைக்குத்தான் பிணங்களையும், ஆக்ஸிஜன் கிட்டையும் கொண்டு வர வேண்டும். இடம் புரிகிறதா ஷீலா?''

ஷீலா தனது கைப்பையில் இருந்து அந்தமான் தீவின் வரைபடங்கள் அடங்கிய ஒரு புத்தகத்தை எடுத்து விரித்தாள். அந்த வரை படங்களில் தேடி ஆமைத் தீவைக் கண்டு பிடித்தாள். காட்டினாள்.

அதில் நிராகரிக்கப்பட்ட படகுத்துறை எங்கேயிருக்கிறது என்பதை ஒரு சின்ன பெருக்கல் குறி போட்டுக் காட்டினேன்.

''இந்த இடம் எனக்குத் தெரியும் பாரி. இந்த படகுத்துறைக்குச் சற்றுத் தள்ளி உயிரோடு புகைந்து கொண்டிருக்கும் பேரன் எரிமலை இருக்கிறது. அதற்குப் பயந்து யாரும் அந்தப் பக்கம் போக மாட்டார்கள். ஓ.கே. நான் இந்தப் படகுத் துறைக்கு நீ கேட்ட அத்தனை பொருட்களையும் கொண்டு வந்து டெலிவரி செய்து விடுகிறேன்'' என்றாள் ஷீலா.

விடை பெற வேண்டிய நேரம் நெருங்கி விட்டதை உணர்ந்தேன். அவளைப் பிரிவது என்பது கஷ்டமாகத்தான் இருந்தது.

''போகலாமா?'' என்று கேட்டேன்.



''உங்களை யாரும் பின் தொடர்ந்து வரவில்லையா?'' என்று கேட்டாள் ஷீலா.

''ஏய். நீ என்னை நிறைய ஆச்சரியப்படுத்துகிறாய். பீனிக்ஸ் துறைமுகத்திற்கு நான் வந்து இறங்கியதுமே ஒருவன் என்னைப் பின் தொடர முயற்சி செய்தான். அவனை நான் உதறி விட்டுத்தான் வந்திருக்கிறேன். அப்படியே உன்னோடு நான் பேசுவதைக் கண்டு பிடித்திருந்தாலும் பரவாயில்லை. நான் இப்போது செய்து கொண்டிருக்கும் வேலை எனக்குப் பிடிக்கவில்லை. அதனால் உன்னிடம் வேறு வேலை தேடித் தரும்படி கேட்டுக் கொள்ள வந்ததாகச் சொல்லி சமாளித்து விடலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தேன்.''

''இட்ஸ் எ குட் ஐடியா'' என்று சொல்லியபடி வேனை ஸ்டார்ட் செய்தாள் ஷீலா.

## 18

பீனிக்ஸ் படகுத்துறையை அடைந்தபோது முன் மாலை நான்கு மணி.

வழக்கம்போல் படகுத்துறை படு சுறுசுறுப்பாய் இருந்தது. ஒரு பயணிகள் படகு பாங்க் என்று ஹாரனைக் கொடுத்துவிட்டு நகர ஆரம்பிக்க, கடைசி வினாடியில் இருப்பது பேர் அந்தப் படகில் ஏறினார்கள்.

காலையில் என்னைப் பின் தொடர்ந்தவன் எங்காவது கண்ணில் படுகிறானா என்பதை கவனிக்காதது போல் கவனித்தேன்.

இருந்தான். காலையில் இருந்த அதே டிக்கெட் கொடுக்கும் கவுண்டரில் அதே பேப்பரை வைத்துக் கொண்டு படிப்பதைப் போல் பாவனை செய்து கொண்டிருந்தான். அவன் முகத்தில் கடப்பாறையை அப்படியே விழுங்கி விட்ட சங்கடம் இருந்தது. என்னைத் தவற விட்டதற்காகத் தன்னைத்தானே நொந்து கொண்டு உட்கார்ந்திருக்கிறான் என்று தெரிந்தது. அவனுக்காகப் பரிதாபப்பட்டேன்.

நான் போர்ட் ப்ளேயருக்கு வந்து எங்கு போனேன், என்ன செய்தேன் என்று ராஜதுரைக்கு ரிப்போர்ட் அனுப்ப வேண்டும். பொய் ரிப்போர்ட் அனுப்ப முடியாது. பொய் என்று கண்டு பிடிக்கப்பட்டு விட்டால் அவன் உயிருக்கே அது ஆபத்தாக முடியக்கூடும். என்னைத் தவற விட்டதாக உண்மையைச் சொன்னால் அது அவன் வேலைக்கே உலை வைத்து விடக்கூடும். முகத்தில் தர்ம சங்கடம் இல்லாமல் என்ன இருக்கும்

என்னைப் பார்த்து விட்டான். அவன் முகத்தில் ஒரு சிறு மலர்ச்சி தென்பட்டது. பேப்பரை அவசர அவசரமாக மடித்தான். என் முதுகுக்குப் பின்னால் விரைந்து வந்தான்.

நான் படகை நெருங்கிய சமயம் என்னைத் தாண்டிக் கொண்டு முன்னால் வந்து வழி மறிக்கிற மாதிரி நின்றான். அகலமாகப் புன்னகைத்தான்.

''ஹேய்...'' என்றான். பாக்கெட்டில் இருந்து ஒரு ஐ.டி. கார்டை எடுத்துக் காண்பித்தான். அதில் அவன் புகைப்படம் ஒட்டியிருந்தது. சிங்கப்பூரில் இருந்து வெளிவரும் 'ஐலண்ட் எக்ஸ்பிரஸ்' என்ற பத்திரிகையின் ரிப்போர்ட்டர் என்று அச்சாகி இருந்தது. பத்திரிகையின் முத்திரையும் இடப்பட்டிருந்தது.



அவன் போலி இல்லை என்று நான் நம்ப வேண்டும். அதற்காக அவசரம் அவசரமாக ஒரு ஐடென்டிடி கார்டு தயாரித்திருக்கிறான். எனக்கு உள்ளுக்குள் சிரிப்பாய் இருந்தது. வெளியில் காட்டிக் கொள்ளவில்லை.

''ஐ'ம் ஸாம். ஜோனார்தன் ஸாம்'' என்று கை நீட்டினான். பற்றிக் குலுக்கினேன்.

''சுற்றுலாப் பயணிகளை பேட்டி எடுக்கிறேன். உன்னைப் பார்த்தால் சுற்றுலாப் பயணி போல தெரியவில்லையே. தனி படகு வைத்திருக்கிறாய்.. அதை எடுத்துக் கொண்டு எங்கேயோ போகிறாய். நீ இங்கே என்ன செய்கிறாய் என்று தெரிந்து கொள்ளலாமா?'' என்று கேட்டான்.

யோசித்தேன்.

'கோ டு ஹெல்' என்று சொல்லிவிட்டுப் படகில் ஏறிக் கிளப்புவது ஒரு வழி. அப்படிச் செய்தால், அவன் ராஜதுரையிடம் என்னைப் பற்றி ஏதாவது தப்பான செய்தி அனுப்பி வைப்பான். அப்புறம் ஆமைத் தீவிலேயே என்னை, என் நடவடிக்கைகளைக் கண்காணிக்க ஆரம்பித்து விடுவார்கள். எனவே அவனுக்கு கிரீஸ் தடவி அனுப்புவது என்று தீர்மானித்தேன்.

''யூ... ஸீ...'' என்று தோள்களைக் குலுக்கி கைகளை அயல்நாட்டவர்களைப் போல் அனாவசியத்திற்கு அசைத்துத் தொடங்கினேன். ''நான் அந்தமானைச் சேர்ந்தவனல்ல மெயின்லாண்டைச் சேர்ந்தவன். வெயிட்.. வெயிட். அதற்காக உடனே என்னை டூரிஸ்ட் என்று முத்திரை குத்த வேண்டாம். வேலை தேடி மெயின் லாண்டில் இருந்து இங்கே வந்தேன். ஒரு எம்ப்ளாய்மென்ட் ஏஜென்சி மூலம் இங்கே ஒரு வேலை தேடிக் கொண்டேன்.

என் வேலை போர்ட் ப்ளேயரில் அல்ல. அருகில் இருக்கும் ஒரு தீவில். ஒரு ப்ரைவேட் தீவு. அதன் பெயரைச் சொன்னால் உனக்குத் தெரியாது. அந்தத் தீவிலேயே வாரம் ஆறு நாட்களும் இருக்க வேண்டும். வாரம் ஒரு நாள் விடுமுறை. விடுமுறை தினத்தைக் கழிக்க நான் இங்கே வருவேன். நாள் முழுக்க இருந்து விட்டுத் தீவுக்குத் திரும்புவேன். இன்றைக்கு.. இப்போது நான் வேலை செய்யும் தீவுக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறேன். யூ காட் இட்...?''

''ஷ்யூர்... ஷ்யூர்... இங்கே வந்து என்ன செய்வீர்கள்? குறிப்பாக இன்றைக்கு என்ன செய்தீர்கள்?''

''ம்.. ஸம்... ஷாப்பிங் பியர், உணவு. காலையில் அபர்தீன் பஜாரில் இருக்கும் ஒரு ஷாப்பிங் சென்டருக்குப் போனேன். கொஞ்ச நேரம் சுற்றினேன். எதுவும் பிடிக்கவில்லை. வெளியே வந்தேன். பியர் குடித்தேன். சிடியா தாபு வரை போய் வந்தேன். லஞ்ச் சாப்பிட்டேன். போர்ட் ப்ளேயர் வந்தேன். பீச்சிற்குப் போய்க் கொஞ்ச நேரம் பைபர் போட்டில் ஏறி சென்று டூரிஸ்டுகளைப் போல் நீருக்கடியில் இருக்கும் பவழப் பாறைகளை எல்லாம் பார்த்தேன். டீ குடித்தேன். தட்ஸ் ஆல். இதோ படகில் ஏறி போர்ட் ப்ளேயருக்கு குட் - நைட் சொல்லப் போகிறேன். அவ்வளவுதானே? என் பதில் உனக்குத் திருப்தியாக இருந்ததா? நான் போகலாமா?''

''ஒன் மோர் கொஸ்டின்?'' என்றான் அவன் இன்னும் சந்தேகம் தீராமல்.

''ஷூட்'' என்றேன்.

''வாரத்தில் ஆறு நாட்களும் ஏதோ ஒரு தீவில் இருப்பதாகச் சொன்னாயே?''



''யெஸ்?''

''அதுவே கிட்டத்தட்ட ஒரு சிறைத் தண்டனை போலத் தோன்றவில்லை?''

''நோ. நோ. நான் அந்தத் தீவில் வாழ்க்கையை என்ஜாய் பண்ணுகிறேன். நல்ல சம்பளம். பர்ஸ்ட் கிளாஸ் உணவு. குடிப்பதற்கு ஸ்காட்சில் இருந்து சகலமும் பற்றாதென்று வாரத்திற்கு ஒருமுறை விடுமுறை. காலையில் இருந்து மாலை வரை இங்கே என் இஷ்டத்திற்குச் சுற்றுவேன். ஒரு மனிதனுக்கு இன்னும் என்ன வேண்டும்? எனக்குக் குடும்பம் இல்லை. மனைவி, குழந்தை என்று எந்தவிதமான சங்கிலிகளும் என்னைச் சுற்றிக் கட்டப்படவில்லை. ஸோ, ஐ'ம் லிவிங் மை லைப் டு இட்ஸ் புல்லஸ்ட் எக்ஸ்டென்ட் பாஸிபிள்? அண்டர்ஸ்டாண்ட்? அப்படி ஒரு வேளை நான் செய்யும் வேலை எனக்குப் பிடிக்காமல் போனால் - இட் ஈஸ் அன்லைக்லி - இன் கேஸ் பிடிக்காமல் போனால் இங்கே இருக்கவே இருக்கிறது ஒரு எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ஜ். என் தகுதிக்கு வேலையான வேலை வந்தால் சொல்லுவார்கள். நானும் எனக்குப் பிடித்திருந்தால் போவேன். இட் ஈஸ் தட் ஸிம்பிள்'' என்று சொல்லிவிட்டுச் சட்டெனப் படகில் தாவி ஏறினேன். கையசைத்து ''பை ஜர்னலிஸ்ட்'' என்றேன்.

அவன் சற்றே பிளந்த வாயுடன் அசட்டுச் சிரிப்புடன் கையை ஆட்டினான்.

இன்ஜினை ஸ்டார்ட் செய்தேன்.

ஆமைத் தீவை அடைந்தபோது மணி ஏழாகி இருந்தது. தீவு விளக்கொளியில் எரிந்து கொண்டிருப்பது போன்றதொரு பிரகாசத்துடன் காட்சி தந்தது.

என்றைக்கும் விட அதிகமாக ஒளிர்ந்தது. படகுத் துறையில் இருந்த செக்யூரிட்டி என்னைக் கண்டதும் வழக்கத்தை விட அதிகமாகப் புன்னகைத்தான்.

முதுகுத் தண்டில் சிலீர் என்றது. எப்போதும் போல் அவன் முறைப்பாகவே இருந்திருந்தால் எதுவும் தோன்றி இருக்காது. அவன் புன்னகையின் பொருள் என்ன என்று தெரியவில்லை.

''படகைக் கட்டினேன். படித்துறைகளில் கடகடவென ஏறினேன்.

''நீங்கள் திரும்பி வந்ததும் ராஜதுரை உங்களை வந்து பார்க்கச் சொன்னார் சார்'' என்றான் அவன் புன்னகை மாறாமல்.

ராஜதுரையா? என்னையா? ஸம் திங் ராங்.

உள்ளுக்குள் லேசாக நடுக்கம் பரவியது. போர்ட் ப்ளேயரில் நான் ஷீலாவுடன் பேசிக் கொண்டிருந்ததை இன்னொரு நிழல் ஆசாமி மூலம் என்னைக் கண் காணித்துக் கண்டு பிடித்து விட்டாரா என்ன?''

''குட் ஈவினிங் ராஜதுரை.''

ராஜதுரை நிமிர்ந்தார். கண்களில் லேசர் கூர்மை. தலைமுடி நரைத்து விட்டிருந்தாலும் ட்ரிம்மாக இருந்தார். எஃகால் ஆனது போல் உடல் கட்டு, அவர் அணிந்திருந்த கோட்டும், சூட்டும் அவர் பிறக்கும்போதே உடம்போடு ஒட்டிப் பிறந்தவை போலத் தோன்றின.

''ஹலோ பாரி. போர்ட் ப்ளேயருக்குப் போய் வந்தாயா? எப்படி இருந்தது? என்ஜாய் பண்ணினாயா?''

''யெஸ் சார்'' என்றேன் சுருக்கமாக.



''குட். உன்னை ஏன் வரச் சொன்னேன் என்று சந் தேகமாய் இருக்கும் நாளைக்கு நம் பாஸ் விஸ்வநாதனின் பிறந்தநாள். ஆளுக்கொரு ஷாம்பேய்ன் பாட்டில் கொடுத் தனுப்பி இருக்கிறார். கூடவே அடுத்த மாதத்திலிருந்து இங்கிருக்கும் செக்யூரிட்டி கார்டுகளுக்கு மாதம் இரண் டாயிரம் ரூபாய் இன்க்ரிமெண்ட் 'கமான் கோ அண்ட் என்ஜாய்...'' என்றார் ராஜதுரை.

''ஓ.கே. சார்...'' என்றேன். ''விசுவநாதன் தரும் ஷாம் பேய்ன். அவர் தரும் இன்க்ரிமெண்ட். எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்ளப் போகிறேன். ஆனால் அவருடைய பிறந்த நாளுக்கு வாழ்த்துக்களை நானே நேரடியாகத் தெரிவித்தால் நன்றாயிருக்கும் என்று தோன்றுகிறது...''

சொல்லி முடிப்பதற்குள் ராஜதுரை பட்டாசு வெடிப் பதைப் போல் அமர்க்களமாகச் சிரிக்கத் தொடங்கினார். பத்தாயிரம் வாலா வெடித்து முடித்து அடங்கியதைப் போல இருந்தது அவர் சிரித்து முடித்ததும்.

நான் என்ன நகைச்சுவையைத் தூண்டி விட்டேன் என்று இவர் இந்தச் சிரிப்பு சிரிக்கிறார்?

''பையா. விசுவநாதனை வாழ்த்த வேண்டும் என்று சொன்னவன் இந்தக் கூட்டத்திலேயே நீ ஒருவன்தான். மற்றவர்கள் எல்லாம் மண்டியிட்டு ஷாம்பேய்ன் பாட்டி லுக்கும், இன்க்ரிமெண்ட்டுக்கும் மகிழ்ச்சியைத் தெரி வித்து விட்டுப் போனார்கள். எலும்புத் துண்டைப் போட்ட வுடன் சந்தோஷத்தில் நாய் குரைக்குமே, அது போல நீ ஒருவன் தான் தைரியமாக அவருக்கு வாழ்த்து தெரிவிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறாய். வெரிகுட். துணிவு இருப்பவர்கள்தான் உயரங்களைத் தொட முடியும். நீ தொடுவாய். இன்னும் இரண்டு மாதங்களில், அதாவது

மே மாதம் இரண்டாம் தேதி திரிவேணியின் பிறந்த நாள் வரப்போகிறது. அன்றைக்கு விசுவநாதன் இங்கே வரப் போகிறார். அப்போது நீ அவரிடமே நேரில் உன் வாழ்த்துக் களை தெரிவிக்க ஒரு வாய்ப்பு அமைத்துத் தருகிறேன்.'' என்றார் ராஜதுரை.

விலகி வந்து விட்டேன்.

ராஜதுரை இத்தனை நாட்கள் இல்லாமல் திடீரென்று என்னை அழைத்துச் சிரித்துப் பேசியதற்கு இரண்டு காரணங்கள் இருக்கக் கூடும் என்று தோன்றுகிறது.

ஒன்று: என்னை அவர் மிகவும் நம்புகிறார்.

இரண்டு: என்னை அவர் கொஞ்சம் கூட நம்பவில்லை.

ராஜதுரை என்னை நம்பாமல் இருப்பதற்கு வாய்ப் பில்லை. ஷீலாவைச் சந்தித்தது, பேசியது எதுவுமே அவருக்குத் தெரியாது.

பீனிக்ஸ் துறைமுகத்தில் என்னிடம் கேள்வி கேட்ட வன் என்னைப் பற்றி ராஜதுரையிடம் போனில் நல்ல ரிப்போர்ட் கொடுத்திருக்க வாய்ப்பிருக்கிறது. ஒருவேளை அதனால் அவருக்கு என் மேல் நம்பிக்கை வந்து விட்டதா?

எப்படி இருந்தாலும் சரி எனக்கு ஒரு முக்கியமான விஷயம் தெரிய வந்திருக்கிறது. மே, இரண்டாம் தேதி. அன்றைக்கு திரிவேணிக்குப் பிறந்த நாள். விசுவநாதன் வரப்போகிறார். விசுவநாதன் என்னைப் பார்ப்பதற்குள் திரிவேணியைக் கடத்திவிட வேண்டும்.

அந்த ஆள் என்னைப் பார்த்து விட்டால் என் உள்ளத் தில் ஒளிந்திருக்கும் திட்டம் அவர் மனத்திரையில் சினிமாப் படமாக ஓடினாலும் ஓடக்கூடும் என்று தோன் றியது. பார்க்கலாம்.



மே இரண்டு தான் திரிவேணியை கடத்துவதற்கான இறுதி பட்ச நாளாக இருக்க வேண்டும் என்று தீர்மானித் தேன்.

அதற்குள் திரிவேணியை இங்கிருந்து கடத்திக் கொண்டு போக முடியாவிட்டால் மே மூன்றாம் தேதி என் உடலை கடலில் இருக்கும் சுறாக்களுக்கு இரையாக்கி விடுவது என்று முடிவெடுத்தேன்.

ஒன்று திரிவேணியின் கடத்தல், அல்லது எனது மரணம். இரண்டில் ஏதோ ஒன்று நிகழ்ந்தே ஆக வேண் டும்.

## 19

*அடுத்த வாரத்தின் ஓய்வு நாளன்று போர்ட் ப்ளேயர் சென்றேன். பீனிக்ஸ் ஜெட்டியில் என்னை யாரும் பின் தொடரவில்லையே என உறுதி செய்து கொண்டேன்.*

ஷீலாவை அவளது அலுவலகத்தில் சந்தித்தேன். அவள் கொடுத்த மயக்க மருந்தைப் பெற்றுக் கொண் டேன். கிளிசரின் போல் தெரிந்தது. தண்ணீரை விட அடர்த்தி அதிகம். நிறம் இல்லை. தண்ணீர் போலவே இருந்தது.

முகர்ந்து பார்த்தேன். மணம் இல்லை.

மயக்க மருந்து தானா என்ற சந்தேகம் வந்து விட்டது. சுண்டு விரலின் நகத்தின் நுனியில் அதைத் தொட்டு நாக்கில் வைத்துக் கொண்டேன். சுவை எதுவும் இல்லை.

நாக்கில் தொட்டு இரண்டு நிமிடங்கள் வினாடிகளின் டிக் டிக்கில் நகர்ந்தன.

திடீரென்று என் மண்டைக்குள் இடதும், வலதுமாக ஏதோ ஒரு பூச்சி ஓடுவது போல உணர்ந்தேன். கிளு கிளுப்பாக இருந்தது.

வேதனை இல்லை. ஆனந்தம்தான்.

அந்த ஆனந்தத்தை ஒரு செகண்ட், இரண்டு, மூன்று செகண்ட்கள் - எவ்வளவு வினாடிகள் அனுபவித்திருப் பேன் என்று தெரியவில்லை.

என் உடலை விட்டு நான் எங்கோ நழுவிப் போகிற மாதிரி உணர்ந்தேன்.

அவ்வளவு தான். எல்லாமே இருண்டு விட்டன. மறுபடி கண் விழித்தபோது ஆறு மணி நேரம் கடந் திருந்தது.

''திருப்தியா? ஊசி முனை அளவு மயக்க மருந்தே ஆறு மணி நேரம் வரை மனிதனை சாய்த்து விடும் என்பதைத் தெரிந்து கொண்டீர்களா?'' என்று ஷீலா கேட்டாள்.

அவள் குரலில் லேசான எள்ளல் இருந்தது.

''ஐ'ம் ஸாரி ஷீலா. என் திட்டம் தோற்றுவிடக் கூடாது என்பதற்காகக் கொஞ்சம் எச்சரிக்கையுடன் இருந்தேன்'' என்றேன்.

''இட்ஸ் ஆல் ரைட்'' என்றாள் ஷீலா.

தீவுக்குத் திரும்பினேன்.

காத்திருக்கத் தொடங்கினேன. இனி ஷீலாவிடம் இருந்து தகவல் வரும் வரை நான் ஒன்றும் செய்ய முடியாது.



நல்ல பிள்ளையாக நடந்து கொண்டேன்.

ராஜதுரை எனக்கென்று கொடுத்த ஷாம்பேய்ன் பாட்டிலை பசுபதிக்குத் தானமாகக் கொடுத்தேன். பசு பதிக்கு ஷாம்பேய்ன் என்றால் மிகவும் பிடிக்கும் என்று தெரிந்து வைத்திருந்தேன். என் பரிசு எனக்குச் சில சலுகைகளைப் பெற்றுத் தரலாம் என்று எதிர்பார்த்தேன்.

பெற்றுத் தந்தது. அவனுடைய ஸ்டோர் ரூம். கிச்சன் என்று எந்த நேரம் வேண்டுமானாலும் நான் போகலாம். காபி கலந்து குடித்துக் கொள்ளலாம்.

தோசையை தவாவில் இருந்து அப்படியே எடுத்துத் தட்டில் போட்டுக் கொண்டு சாப்பிடலாம். எனக்கு எந்த நேரத்தில் என்ன உதவி எங்கிருந்து தேவைப்படும் என்பதைச் சொல்ல இயலவில்லை. அதனால் கூடிய வரை எல்லோருக்கும் நல்லவனாக இருக்க முயற்சித்தேன்.

ஒரு காலை நேரம் கடற்கரையில் ஜாகிங் செய்து கொண் டிருந்தபோது பசுபதி தள்ளு வண்டியில் ப்ளாஸ்குகளும் காபிக் கோப்பைகளுமாக என்னை நெருங்கினான்.

டவலால் முகத்தைத் துடைத்துக் கொண்டு ப்ளாஸ்கில் இருந்த காபியை எடுத்து கோப்பையில் ஊற்றி வாயில் வைத்தவன் 'தூ' என்று துப்பினேன்.

''என்ன? என்ன?'' என்று பதறிப் போனான் பசுபதி.

''ஸாரி. கொஞ்சம் அதிகப்படியா ரியாக்ட் பண்ணி விட்டேன். ஆனால் நான் குடித்த காபியில் ஒரு கடுகளவு கூட சர்க்கரை இல்லை'' என்றேன்.

பசுபதி நாக்கை கடித்துக் கொண்டான்.

''ஆசாதிற்கான காபி அது. அவர் ஷுகர் பேஷன்ட். அதனால் சர்க்கரை போடாமல் கொடுப்பது வழக்கம்.

அவருக்கு மட்டும் தனியாக எடுத்து வைத்திருந்து கொண்டு போய்க் கொடுப்பேன். எப்படியோ இந்தக் கூட்டத்தில் அந்த ப்ளாஸ்கும் கலந்து விட்டது. இதைக் குடியுங்கள்...'' என்று வேறு ஒரு ப்ளாஸ்கில் இருந்த காபியை ஊற்றிக் கொடுத்தான் பசுபதி.

எனக்கு மூளையில் சட்டெனப் பொறி தட்டியது.

என் திட்டத்தில் ஒரு முக்கியமான கட்டம். தீவில் இருக்கும் அத்தனை பேரையும் செயலிழக்க வைப்பது. அதை எப்படி நிறைவேற்றுவது என்று புரியாமல் தவித்துக் கொண்டிருந்தேன். இப்போது அதற்கு ஒரு வழி கிடைத்து விட்டது.

அன்றைக்கு மாலை ஆசாதின் குவார்ட்டர்ஸில் அவனோடு சேர்ந்து விஸ்கி குடித்தேன். அவனுக்குச் சற்று அளவிற்கு அதிகமாகவே ஊற்றிக் கொடுத்தேன். போதையில் நான் குடிக்கிறேனா, இல்லையா என்பதைக் கூட அவனால் கவனிக்க முடியவில்லை. ஐந்தாவது ரவுண்டில் அப்படியே படுக்கையில் சரிந்தான்.

நான் இரண்டாவது ஸ்மாலில் பாதியைக் குடிக்காமல் வைத்திருந்தேன்.

டம்ளரை டீப்பாயில் வைத்து விட்டு சுறுசுறுப்பாக எழுந்தேன். ஓசைப்படாமல் ஆசாதின் அறையை அலசத் தொடங்கினேன். ஐந்து நிமிடத் தேடலுக்குப் பின் நான் எதிர்பார்த்தது ஆசாதின் படுக்கை அறை ஷெல்ப்பில் இருந்தது.

சிரிஞ்ஜ்கள். டிஸ்போஸபிள் சிரிஞ்ஜ்கள்!

நீரிழிவு உள்ளவர்கள் இன்சுலின் ஊசி போட்டுக் கொண்டு உடலில் சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்துவது வழக்கம். ஆசாத் இன்சுலின் ஊசி போட்டுக் கொள்பவனா, இல்லையா என்று அறிந்து கொள்ள விரும்பினேன்.



படுக்கையறை ஷெல்ப்பில் நூற்றுக் கணக்கில் இன் சுலின் போடுவதற்கு உபயோகப்படும் டிஸ்போஸபிள் சிரிஞ்சுகள் இருந்தன.

புதையலைக் கண்டு பிடித்து விட்ட மாதிரி தோன் றியது. என் திட்டத்தின் ஒரு முக்கியமான கட்டத்திற்கு இந்த சிரிஞ்சுகள் தான் உபயோகப்படப் போகின்றன. அவற்றில் இருந்து ஐந்து சிரிஞ்சுகளை எடுத்து பாக் கெட்டில் செருகிக் கொண்டேன்.

நல்லபிள்ளையாக என் குவார்ட்டர்ஸுக்குத் திரும்பி னேன்.

''மே மாதம் இரண்டாம் தேதி உன் பிறந்த நாள் வரு கிறது இல்லையா? அன்றைக்குத் தான் நான் உன்னைக் கடத்திக் கொண்டு போகப் போகிறேன் திரிவேணி.''

''ஒஹ்... வாட் எ நியூஸ்! தாங்க்யூ.... தாங்க்யூ பாரி... தாங்க்யூ... தாங்க்யூ... ப்ச்... ப்ச்... ப்ச்... ப்ச்... ப்ச்... ப்ச்...''

ஏப்ரல் மாதம் பத்தாம் தேதி.

நான் என் ஷிஃப்டை முடித்துவிட்டு குவார்ட்டர்ஸில் நுழைந்து கொண்டிருந்தபோது செல்போன் அதிர்ந்தது.

எடுத்துப் பார்த்தேன். செய்தி.

ஒரு வேலை காலியாக இருக்கிறது.

எனது இதயத் துடிப்பு சட்டென்று எகிறியது. ஷீலா விடம் ஓர் மனித உடல் தயாராக இருக்கிறது. திட்டத்தைச் செயல்படுத்த வேண்டிய நாள் நெருங்கிக் கொண்டிருக் கிறது.

குவார்ட்டர்ஸில் நுழைந்தேன். ஆடைகளைக் களைந்து விட்டு பாத்ரூம் சட்டியில் உட்கார்ந்தேன்.

யோசித்தேன்.

அடுத்த உடல் நாளைக்கே கிடைத்து விடலாம். அப்படிக் கிடைத்து விட்டால் ஷீலாவை வரச் சொல்ல வேண்டும். எப்படி? எப்போது?

போர்ட் ப்ளேயரில் இருந்து ஆமைத் தீவிற்கு இயந்திரப் படகில் வரவேண்டும் என்றால் குறைந்த பட்சம் ஒரு மணி நேரம் ஆகும்.

ஆஸ்பத்திரியில் இருந்து ஷீலா உடல்களை ஒரு ட்ரை சைக்கிளில் ஏற்றிக் கொண்டு படகுத் துறைக்கு வந்து சேர இரண்டு மணி நேரம் ஆகக் கூடும்.

ரத்த பாட்டில்கள் ஆஸ்பத்திரியில் கிடைக்கக் கூடும். ஆக்ஸிஜன் கிட்டுகளுக்கு அந்தமானில் பஞ்சம் இல்லை.

இயந்திரப் படகு ஒன்று எவ்வளவு லட்சம் ஆகும் என்று தெரியாது. ஆனால் அந்தச் செலவை சுப்பு சார் பார்த்துக் கொள்வார்.

ஸோ, ஷீலாவிற்கு மூன்று மணி நேரம் டயம் கொடுத்து நான் அழைக்க வேண்டும். எல்லாம் சரியாக நடக்க வேண்டும்.

மே நெருங்கிக் கொண்டிருந்தது.

'விசுவநாதன் வரப்போகிறார். விசுவநாதன் வரப்போகிறார்.' என்று தீவில் இருந்த அத்தனை பேரும் மந்திரம் போல் திருப்பித் திருப்பிச் சொன்னார்கள்.

அத்தனை பேரிடமும் நெருப்பு போல பரபரப்பு தொற்றிக் கொண்டிருந்தது.



ஹெலிபேட் சரியாக இருக்கிறதா? அங்கே என்னவோ ஒரு சிறு குழி தெரிகிறதே. அதைப் பூசு.. பூசு.. பூசு.. பூசப் பட்டது.

அவர் வந்தால் தங்குவதற்கென அனைத்து வசதிகளுடன் தன்னிறைவு பெற்ற மாளிகை ஒன்று இருந்தது. பளிங்குத் தரை. கார்ப்பெட் ஐநூறு சதுர அடி படுக்கை அறை.

அந்த வீடு புதுப்பிக்கப்பட்டது. திரைகள் மாற்றப் பட்டன. ஏ.ஸி. யூனிட்டுகள் சரி பார்க்கப்பட்டன. விளக்குகள் எரிகின்றனவா? யெஸ்! டாய்லெட்டில் டவல் பாத் - டப், சோப் லிக்விட் சோப் எல்லாம் இருக்கின்றனவா? யெஸ்!

கார்ப்பெட்டுகள் மாற்றப்பட்டன. மிதியடிகள் மாற்றப் பட்டன. படுக்கை விரிப்புகள் மாற்றப்பட்டன.

பிரதமரின் வருகைக்குத் தயாராகும் மாநிலத் தலைநகர் போல் தீவே புதுப்பிறவி எடுத்துக் கொண்டிருந்தது.

மனதில் ஒரு மூலையில் கவலைக் கம்பளிப் பூச்சி இப்படியும், அப்படியுமாய் உருண்டு கொண்டிருந்தது.

ஷீலாவிடம் இருந்து ஏன் இன்னும் தகவல் வரவில்லை?

என் அன்பே, அன்பான ஷீலா, என்னை ஏமாற்றி விடாதே. ஏமாற்றி விடாதே. சீக்கிரம் தகவல் கொடு.

மே மாதம். முதல் தேதி. பிற்பகல். நல்லதொரு சாப்பாட்டை சாப்பிட்டு முடித்திருந்தேன். அன்று எனக்கு இரவு இரண்டு மணி ஷிஃப்ட். மறுநாள் காலை பத்து மணி வரை, கொஞ்ச நேரம் தூங்கலாம் என்று படுக்கையில் சரிந்த நேரம் செல்போனில் மெசேஜ் வந்ததற்கு அடையாளமாக இரண்டு 'கீ, கீ' கேட்டது.

சிலீர் என்று மின்சாரம் தண்டு வடத்தை ஊடுருவியது போல் இருந்தது.

செல்போனை எடுத்து, பித்தானை அழுத்தி, அது ஒளித்து வைத்திருந்த செய்தியைப் படித்தேன்.

இரண்டு வேலைகள் காலியாக இருக்கின்றன.

மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றன.

# 20

மறுநாள் காலை. தூக்கில் தொங்கப் போகும் ஒரு மரண தண்டனைக் கைதியின் மனநிலையில் இருந்தேன்.

பயம் இல்லை. ஆனால் பதட்டம் இருந்தது. எல்லாம் சரியாக நடக்க வேண்டும்.

விசுவநாதன் வரப்போகிறார். எப்போது? நாளைக்குக் காலையா? அல்லது இரவேவா? எத்தனை மணிக்கு வரப் போகிறார் என்பது தெரிந்தால் ஓரளவு ஆறுதலாக இருக்கும். அவர் வருதற்கு முன்பே திட்டத்தை நிறைவேற்றப் பார்க்கலாம்.

பாரி, ப்ளீஸ், ப்ளீஸ், பதறாதே. பதறாதே பதறும் காரியம் சிதறும்.

இப்போது என் வேலை என்ன?

ஷீலாவிற்குச் செய்தி அனுப்ப வேண்டும்.

என்னவென்று?



'நல்லவேலை வேண்டும் - பாரி.'

அதை அனுப்பினால் ஷீலா உடல்களுடன் வந்து சேர மூன்று மணி நேரமாவது ஆகும். இப்போதே அனுப்பி ஷீலாவை வரவழைத்தால் தீவைச் சேர்ந்தவர்கள் யாராவது பார்த்து விட்டால் ஆபத்து. அவளுக்குச் செய்தி அனுப்ப வேண்டிய நேரத்தைத் தீர்மானிக்க வேண்டும்.

அதற்கு முன் -

திரிவேணியைக் கடத்த வேண்டும்.

அதற்கு முன் -

தீவில் இருக்கும் அத்தனை பேரையும் செயல் இழக்க வைக்க வேண்டும்.

மணி பார்த்தேன். பிற்பகல் மூன்று. ஜன்னல் வழியே பார்த்தேன்.

ஆமைத்தீவு அமைதியாகத் தெரிந்தது. கடலோரத்தில் தெரிந்த ஒன்றிரண்டு தென்னைகள் அசைவின்றிச் சித்திரங்கள் போல் தெரிந்தன.

எழுந்தேன்.

மறைவிடத்தில் இருந்து மயக்க மருந்து பாட்டில் எடுத்துக் கொண்டேன். சிரிஞ்சுகளை எடுத்துக் கொண்டேன். கால்சட்டைப் பையில் மறைத்துக் கொண்டேன்.

குவார்ட்டர்ஸை விட்டு வெளிப்பட்டேன்.

நிதானமாக சூழ்நிலை எப்படி இருக்கிறது என்று ஆராய்ந்தேன்.

படகுத் துறையில் காவல்காரன் நிற்பது தெரிந்தது. கடலை வெறித்துக் கொண்டு நின்றிருந்தான்.

மணல் பரப்பு. நீலவானம், ஒன்றிரண்டு வெண்மேகத் தீற்றல்கள். கடல் நீலமான, ஆழமான, அமைதியான கடல், தலைக்கு மேல் இருபதடி உயரத்தில் கடற்பறவை ஒன்று நான் நின்றிருந்த இடத்தைக் கடந்து போயிற்று.

என் கண்ணில் அது பட்டிருக்காவிட்டால் தலைக்கு மேலே அது கடந்ததை உணராமலேயே இருந்திருப்பேன். சிறகசைப்பு கேட்கவில்லை. காற்றைக் கிழித்துச் செல்லும் ஒலி கேட்கவில்லை. தீவின் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதியை விட்டக் கோட்டில் கடந்து விட்டது.

நானும் அந்தப் பறவையைப் போல்தான் செயல்பட வேண்டும். அமைதியுடன் செயல்புரிய வேண்டும்.

இப்போது ஷிஃப்டில் சாரதி இருப்பான். ஆறு மணி ஷிப்ட். ஆசாதினுடையது. ஆசாதின் ஷிஃப்டை நான் மாற்றிக் கொள்ள வேண்டும். அது ஒன்றும் பெரிய பிரச்னை இல்லை. இப்போதே ஆசாதிடம் சொல்லி விட்டால் ஏற்றுக் கொள்வான்.

இதுபோல் ஷிஃப்ட் மாற்றிக் கொள்ளும் சுதந்திரம் எங்களுக்கு உண்டு.

ஆசாதின் குவார்ட்டர்ஸை அடைந்தேன். இரண்டு முறை காலிங்பெல்லை அழுத்திய பின் ஆசாத் தூக்கக் கலக்கத்துடன் வந்து கதவைத் திறந்தான்.

''என்ன பாரி?''

''இன்றைக்கு இரவு இரண்டு மணிக்கு எனக்கு ஷிஃப்ட். அதை நீ செய்கிறாயா?''

''ஏன்?''

''நாளைக்கு விசுவநாதன் வருகிறார். அவருக்கு முன்னால் தூங்கி வழிய வேண்டாமே என்று பார்க்கிறேன். நீ அவருக்குச் சொந்தக்காரன். என்னை விட அவருக்கு நெருக்கமானவன். அவர் முன்னால் நீ தூங்கி வழிந்தாலும் உன்னை யாரும் எதுவும் சொல்ல மாட்டார்கள். யாரும் என்ன யாரும்? விசுவநாதனே கூட உன்னை ஒன்றும் சொல்ல மாட்டார்.''



விசுவநாதன் ஆசாதின் சொந்தக்காரன் என்னும் ஐஸ். விசுவநாதன் அவனை ஒன்றும் சொல்ல மாட்டார் என்ற புகழுரை. விசுவநாதனுக்கு அவன் நெருக்கமானவன் என்ற பெருமை.

என்னிடம் இருந்த மூன்று ஏஸ்களையும் ஒன்றன் பின் ஒன்றாக இறக்கினேன்.

ஆசாத் மடங்கி விட்டான். பெரும் புன்னகையுடன் ஒத்துக் கொண்டான்.

''தாங்க்ஸ், நைட் டின்னர் வந்து சேரும் வரை நீ தூங்கலாம். போ, தூங்கு'' என்றேன்.

''ஓ.கே பாஸ்'' எனச் சிலிர்த்துக் கொண்டே சொல்லி விட்டுக் கதவைச் சாத்தினான். படிகளில் இருந்து இறங்கினேன். நடந்தேன்.

கிச்சன் காலியாக இருந்தது. பிற்பகல் உணவிற்குப் பின் இரு மணி நேர இடைவேளை. ஸ்டவ்கள் அணைக்கப்பட்டிருந்தன. அன்றைய தினம் பகல் உணவிற்காகச் சமைக்கப்பட்ட உணவுப் பண்டங்களின் வாசனை லேசாகப் பரவியிருந்தது.

பசுபதியும், அவன் உதவியாளர்களும் எங்கே?

மெல்ல நோட்டம் விட்டேன். அவர்கள் படுத்துக் கிடந்தார்கள். உண்ட மயக்கம் தொண்டருக்கும் உண்டல்லவா?

ஸ்டோர் ரூமில் நுழைந்தேன்.

மிகப் பெரிய ஸ்டோர் ரூம் அது. வெங்காயம், உருளைக் கிழங்கு போன்றவை காற்றுப் படும்படி கொட்டி வைக்கப் பட்டிருந்தன - சல்லடைக் கண்களைப் போல் ஓட்டைகள் உள்ள எவர்சில்வர் டிரம்களில் இரண்டு ப்ரீசர்கள் இருந்தன. சைவத்திற்கு ஒன்று, அசைவத்திற்கு ஒன்று. தவிர பெட் வாட்டர் பாட்டில்கள் நிரம்பிய ஒரு ப்ரீசர் இருந்தது. அதன் வெளிப்புறம் கண்ணாடிப் பரப்பிலான கதவு என்பதால் உள்ளே வரிசையாய் அடுக்கி வைக் கப்பட்டிருந்த பெட் பாட்டில்கள் கண்ணில் பட்டன.

ப்ரீசரின் கதவின் மேல் 'மே-1 இரவு உணவு' என்ற பிளாஸ்டிக் எழுத்துக்கள் காந்த சக்தியில் ஒட்டி நின்றன.

ஒவ்வொரு வேளை உணவிற்கு முன்பாகவும் சில்லென்ற மினரல் வாட்டர் பாட்டிலைக் கொடுக்க வேண்டும் என்பது விசுவநாதனின் உத்தரவு. ஆளுக்கு இரண்டு லிட்டர் பெட் பாட்டில்.

ஆமைத்தீவின் அத்தனை பேரும் இந்த மினரல் தண்ணீரைத் தான் குடிக்கிறார்கள். முதல் வேளை நீர் மீந்து போனால் அதை ட்ரேயில் வைத்துத் திரும்ப எடுத்து வருவது பசுபதியின் கடமை.

எனவே இன்றைய இரவு ப்ரீஸரில் இருக்கும் பாட்டில் நீர்தான் விநியோகம் ஆகப் போகிறது.

வெரிகுட்! வெரிகுட்!

என் திட்டத்தின் முதல் கட்டத்தைச் செயல்படுத்தப் போகிறேன்.

ஸ்டோர் ரூமின் கதவைச் சாத்தினேன். ஓசை எழாதபடி தாள் போட்டேன். பாக்கெட்டில் இருந்து மயக்க மருந்து



பாட்டிலை எடுத்தேன். டிஸ்போஸபிள் சிரிஞ்ஜ் ஒன்றை எடுத்தேன். மயக்க மருந்தை சிரிஞ்ஜில் உறிஞ்சினேன்.

ஒவ்வொரு பெட் பாட்டிலாக எடுத்து அதன் மேல்புறம் ஊசியால் துளையிட்டு, சிரிஞ்சில் இருந்த மயக்க மருந்தை இரண்டிரண்டு சொட்டுக்கள் கலந்தேன்.

ஒரு பாட்டில் விடாமல் அத்தனை பாட்டில்களிலும் மருந்தைக் கலந்த பின், யாவற்றையும் ப்ரீஸரில் வைத் தேன், மூடினேன்.

மயக்க மருந்து பாட்டிலையும் சிரிஞ்சையும் பாக் கெட்டில் எடுத்துக் கொண்டேன். மெல்ல நடந்து வந்து கதவைத் திறந்தேன்.

வாசலில் பசுபதி நின்று கொண்டிருந்தான்.

என்னை முறைத்தான்.

இதயம் ஒரு துடிப்பை விட்டது.

# 21

''உள்ளே என்ன திருட்டுத்தனம் செய்தீர்கள்?'' என்று கேட்டான் பசுபதி. அவன் கண்களில் சந்தேகமா, சந் தேகம் போன்ற தோற்ற மாயையா? எனக்குப் புரிய வில்லை.

பசுபதி நிச்சயம் நான் என்ன செய்தேன் என்பதைப் பார்த்திருக்க முடியாது. அதனால் அவனுக்குச் சமாதானம் ஆகும் வகையில் ஏதாவது ஒரு பதிலைச் சொல்ல வேண்டும்.

என்ன சொல்லலாம்? என்ன சொல்லலாம்?

''போன ஒய்வு நாளுக்கு போர்ட் ப்ளேயர் போனேன் அல்லவா? பக்கார்டி ஒயிட் ரம் ஒரு ஹாஃப் பாட்டில் கிடைத்தது. கொண்டு வந்தேன். அதில் ஒரு பெக் குடிக்க லாம் என்று நினைத்தேன். கூட மசாலாவும், உப்பும், மிளகுத் தூளும் சேர்த்த வறுத்த முந்திரி இருந்தால் நன்றாக இருக்குமே என ஆசைப்பட்டேன். அதைத்தான் தேடிக் கொண்டிருந்தேன்.''

''வறுத்த முந்திரி உடம்புக்குக் கெடுதல் என்பதால் அதைச் சாப்பிடக் கூடாது என்று விசுவநாதனின் ஆர்டர்!''

''யெஸ்! ஐ நோ! அதனால்தான் அது ஸ்டோர் ரூமில் எங்காவது ரகசியமாக ஒளித்து வைக்கப்பட்டிருக்கிறதா என்று தேடுவதற்கு வந்தேன். அஃப்கோர்ஸ் யாருடைய புருவமும் உயரக்கூடாது என்பதால்தான் கதவைச் சாத்திக் கொண்டேன்.''

பசுபதி சிரித்தான். என்னை நம்பி விட்டான்!

''பாரி சார். உங்களுக்கு வறுத்த முந்திரி வேண்டும் அவ்வளவுதானே? கோவர்தனிடம் சொல்லி நாளைக்கே ஒரு கிலோ போர்ட் ப்ளேயரில் இருந்து வரவழைக்கிறேன், போதுமா?''

''நாளை விசுவநாதன் வருகிறார்.''

''ஈஸ்வரா. மறந்தே போனேன். அவர் வந்து போன அடுத்த செகண்டே கோவர்தனை போர்ட் ப்ளேயர் அனுப்புகிறேன். வேறென்ன செய்வது?''

''ஸோ நைஸ் ஆஃப் யூ...'' என்றேன். 'விலகப் பார்த்தேன்.



''பக்கார்டி ரம்மைத்தான் இப்போது குடிக்க முடியாது என்று ஆகிவிட்டதே. ஒரு கப் டீ குடித்து விட்டுப் போங் களேன். டார்ஜிலிங் லீஃப் டீ...''

''ஓ.கே...'' என்றேன்.

பசுபதி யாரையோ அழைத்து டீக்கு சொன்னான்.

''ஸ்டோர் ரூமுக்கு கிச்சன் வழியாகவும் வரலாம். அங்கே ஒரு கதவு இருக்கிறது. ஆனால் ஸ்டோர் ரூம் கதவு தாழ்ப்பாள் போட்டிருந்தது. தெரிந்தது. அஸிஸ்டெண் டுகள் ஸ்டோர் ரூம் கதவைத் தாழ்ப்பாள் போட மாட் டார்கள். அப்படியானால் உள்ளே நீங்கள் தான் இருக்க வேண்டும் என்று புரிந்து விட்டது. நீங்கள் செக்யூரிட்டி கார்டு ஏதோ ஒரு முக்கிய காரணத்தால் தான் ஸ்டோர் ரூம் கதவைத் தாள் போட்டிருக்கிறீர்கள் என்று நினைத்தேன். அதனால் மாற்று வழியாகக் கிச்சனுக்குள் வராமல் வெளியிலேயே நின்று விட்டேன். டீ...''

வேறு ஏதோ பேசியபடி 'டீ' என்று வாக்கியத்தை பசுபதி முடித்தபோது எனக்கு ஒன்றும் புரியவில்லை. அருகில் அவருடைய உதவியாளன் கையில் தேநீர்க் கோப்பை வைத்திருந்தான். அதைச் சுட்டிக் காட்டிதான் 'டீ' என்று அவர் சொன்னார் என்பதைப் புரிந்து கொண்டேன்.

டீயைக் குடித்தேன். விலகினேன்.

தொடை இடுக்குகளில், அக்குள்களில் எல்லாம் கன்னா பின்னா என்று வியர்த்திருந்தது.

அறைக்கு வந்தேன். பக்கார்டி ரம் மிக அவசியமாகத் தேவைப்பட்டது. பாட்டிலைத் திறந்து ஒரு லார்ஜ் ஊற்றினேன். பற்றாது எனத் தோன்றியது. எக்ஸ்ட்ரா

லார்ஜாக ஊற்றிக் கொண்டேன். ராவாகச் சிரித்துக் கொண் டேன்.

இல்லாவிட்டால் பயத்தால் ஏற்பட்ட கை நடுக்கம் நிற்காது போலிருந்தது.

பாரி. அமைதி. அமைதி!

சந்தேகப்படாதே! பசுபதிக்கு ஒன்றும் தெரியாது. தெரிய வாய்ப்பில்லை.

இருந்தாலும் உள்ளுக்குள் கன்றுக்குட்டி உதைத்தது. பருந்து இறக்கைகளைப் படபடத்தது.

ஸ்டோர் ரூமுக்கு இன்னொரு கதவு வழியாக உள்ளே வர முடியும் என்று பசுபதி சொன்னானே. ஒரு வேளை... ஒருவேளை... மயக்க மருந்து கலந்ததைப் பார்த்து இருந்தால்...?

நீங்கள் செக்யூரிட்டி கார்டு. ஏதோ ஒரு முக்கிய காரணத் தால் தான் ஸ்டோர் ரூம் கதவைத் தாள் போட்டிருக்கிறீர்கள் என்று நினைத்தேன்.

பசுபதி கண்டு பிடித்து விட்டானா?

சான்ஸே இல்லை. மயக்க மருந்தைக் கலந்தபோது எனது எல்லாப் புலன்களையும் விழிப்புடன் வைத்திருந் தேன்.

பசுபதியோ அல்லது வேறு யாரோ என் செயலைப் பார்க்கவில்லை என்பது நிச்சயம்.

ஒரு வேளை பசுபதிக்கு சந்தேகம் வந்திருந்தால்?

அதனால் என்ன? ஸ்டோர் ரூமை அவன் எவ்வளவு ஆராய்ந்தாலும் கண்டு பிடிக்க முடியப் போவதில்லை. பின் எதற்காகக் கவலைப்பட வேண்டும்?



ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தேன். படபடப்பு கொஞ்சம் கொஞ்சமாக அடங்கத் தொடங்கியது.

மாலை ஆறு மணி.

திரிவேணியைக் காவல் காக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன். டெலிவிஷன் திரைமுன் உட்கார்ந்திருந் தேன்.

தீவில் இருக்கும் அத்தனை பேரும் மயக்க மருந்து கலந்த தண்ணீரைக் குடிக்க வேண்டும். அத்தனை பேரும் மயக்கமடைய வேண்டும். அதன் பின் எனக்குக் குறைந்தபட்சம் ஆறு மணி நேரம் கிடைக்கும். அதிக பட்சம், எட்டு மணி நேரம் கிடைக்கும். அதற்குள் திரிவேணியைக் கடத்திக் கொண்டு போயாக வேண்டும்.

ஷீலாவிற்கு எப்போது தகவல் கொடுப்பது? எல் லோரும் மயக்கம் அடைந்த பின்னரா? அல்லது இப் போதே வா?

மணி ஆறு!

இப்போது தகவல் கொடுத்தால் ஷீலா ஒன்பது மணிக்கு எல்லாம் வந்து சேர்ந்து விடுவாள். அந்தச் சமயத்தில் தீவில் யாராவது விழித்துக் கொண்டிருந்தால் அனாவசியப் பிரச்னை.

எட்டு மணிக்கு பசுபதி எல்லோருக்கும் டின்னர், கொடுத்து விடுவான். ஒன்பது மணிக்குள் அனைவரும் சாப்பிட்டு விடுவார்கள். அப்படியானால் தீவில் இருக்கும் அத்தனை பேரும் ஒன்பது மணிக்கு ப்ளாக் - அவுட் ஆகி விடுவார்கள். அதாவது மயக்கமாகிக் கிடப்பார்கள்.

அதன் பின் ஷீலாவிற்குத் தகவல் கொடுத்தால் அவள் பன்னிரண்டு மணிக்குள் படகைக் கொண்டு வந்து விடுவாள்.

மயக்கம் போட்டவர்களில் யாருக்கு முதலில் தெளிந் தாலும் குறைந்த பட்சம் ஆறு மணி நேரத்திற்கு அப்புறம் தான் விழிக்க முடியும். அப்படிப் பார்த்தால் முதலில் கண் விழிப்பவன் பின்னிரவு மூன்று மணிக்குத்தான் கண் விழிப்பான்.

எனக்கு இரவு பன்னிரண்டு மணியில் இருந்து பின் னிரவு மூன்று வரை மூன்று மணி நேரம் கிடைக்கும். போதும். நூற்று எண்பது நிமிடங்கள்.

இந்த நூற்று எண்பது நிமிடங்களில் நான் தப்பிக்க முடியாவிட்டால்.

மாட்டிக் கொண்டு செத்துப் போவது தான் சரியான தண்டனை. எனக்காக யாரும் பரிதாபப்பட வேண்டிய தில்லை. எனக்காக யாரும் நடுகல் நட வேண்டியதில்லை. மாறாக என்னை நினைத்துக் காறி உமிழட்டும்.

ஒன்பது மணிக்கு ஷீலாவிற்குத் தகவல் சொல்வது என்று தீர்மானித்தேன்.

'டொக்' என்று எனக்குப் பின்னால் எழுந்த சத்தம் என்னைத் துள்ளி எழ வைத்தது. துப்பாக்கியை நீட்ட வைத்தது.

கண்ணாடி ஓவலில் திரிவேணி தட்டியிருக்கிறாள். என்பது அப்புறம்தான் புரிந்தது.

எழுந்தேன்.

அவள் அறைக்குள் நுழைந்தேன்.



அறையின் ஒரு மூலையில் கோபித்துக் கொண்ட முயலாகக் குறுகிப்போய் உட்கார்ந்திருந்தாள்.

முகம் ஆம்பலாகக் குவிந்திருந்தது.

''திரிவேணி.''

நிமிர்ந்து பார்த்தாள். சிரித்தேன்.

பொதுவாக, அவளைப் பார்த்து நான் சிரித்தால் அவளும் ஒரு சிரிப்பைத் திருப்பித் தருவது வழக்கம். ரோஸ் ஈறுகளும், அழகாக அடுக்கப்பட்ட மல்லிகை இதழ்களைப் போன்ற பற்களும் தெரியும், அகன்ற, அழகிய சிரிப்புப் பரிசு.

இன்றைக்கு அது இல்லை.

''உனக்கு இன்றைக்கு இரவு இரண்டு மணி டூட்டி தானே?'' என்று கேட்டாள்.

''ஆம். ஆனால் உன் முகத்தைப் பார்க்க வேண்டும் என்ற காரணத்தால் அதை ஆறு மணிக்குக் கேட்டு வாங்கிக் கொண்டேன்'' என்றேன்.

அவள் கண்கள் விரியவில்லை. முகம் மகிழ்ச்சியைக் காட்டவில்லை.

பதிலாக ''ஐ.ஸீ.'' என்றாள். வறண்டதொரு ஆங்கில 'அப்படியா' அவளைச் சிரிக்க வைக்கும் டெக்னிக் எனக்குத் தெரியும். முதல் முறை அவளுடன் என் சந்திப்பு நிகழ்ந்தபோது அவள் கண்களை நானும், என் கண்களை அவளும் உற்றுப் பார்த்ததில் நான் தோற்றுப் போய் இமைகளை மூடினேன். கண்களில் கண்ணீர். அவளது ஈகோ சின்னதாகத் திருப்தியடைந்ததில் உதடு களில் சிறு புன்னகை.

அடுத்த முறையில் இருந்து நான் அவள் கண்களைப் பார்த்து தோற்றுப் போவதை வழக்கமாக வைத்துக் கொண்டிருந்தேன். நான் தோற்றால் அவள் முகத்தில் நிச்சயம் சிரிப்பு மலரும்.

அதே போல் இப்போதும் அவள் கண்களை உற்று நோக்கத் தொடங்கினேன்.

பதிலுக்கு அவள் என் கண்களைப் பார்க்கவில்லை. வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''கோபமா திரிவேணி?''

இல்லையென்று தலையசைத்தாள்.

''பின்னே?'' என்று கேட்டேன்.

''நாளை எனக்குப் பிறந்த நாள் தெரியுமா?'' என்று கேட்டாள் என் முகத்தைப் பார்க்கவில்லை. வேறு எங்கோ பார்த்துக் கொண்டிருந்தாள்.

''தெரியும். இந்தத் தீவே மேக்கப் போட்டுக் கொண் டிருக்கிறதே.''

''நாளை விசுவநாதன் வருகிறார்.''

''ஆம். நீ கேக் வெட்டுவதைப் பார்க்க. உனக்கு கேக் ஊட்டிவிட. உன் பிறந்த தின விழாக் கொண்டாட் டங்களில் கலந்து கொள்ள. உன் மேல் அவர் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறார் என்பதை வெளிப்படுத்த...''

சொல்லிக் கொண்டே வந்தவன் நிறுத்தினேன்.

காரணம், இதயத்தில் குபீரென்று பீறிட்டு எழுந்த திகில்!

திகைப்பு! திடுக்கிடல்!



திரிவேணியின் இடது கை ஆட்காட்டி விரலின் நுனியில் இருந்து சொட்டுச் சொட்டாக ரத்தம், கீழிறங்கிக் கொண்டிருந்தது.

''திரிவேணி'' என்று தடுப்பதற்கு முன், தன் கையை மறைத்துக் கொள்வதற்கு முன் முந்திக் கொண்டேன்.

அவளது இடது கையைப் புரட்டினேன்.

மணிக்கட்டில் ஓர் ஆழமான வெட்டு. ஒவ்வொரு நாடித் துடிப்பிற்கும் ரத்தம் குமிழ் குமிழாக வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

''திரிவேணி... என்ன இது?''

''விடு... விடு என்னை...'' என்று திமிறினாள்.

கன்றுக்குட்டித் திமிறல். வெகு எளிதாக அடக்கினேன். மணிக்கட்டை இறுகப் பற்றி இரத்தம் வெளியேறுவதை நிறுத்தினேன்.

தடும், தடும் என்று என் மார்பில் மோதிய திரிவேணி அடங்கினாள். அப்படியே என் மார்பில் சாய்ந்தாள்.

''ஏன் திரிவேணி?'' என்று பரிவு அத்தனையும் கலந்து கேட்டேன்.

''நான் விசுவநாதன் முகத்தில் விழிக்க விரும்ப வில்லை. இன்னொரு பிறந்தநாளைப் பார்க்க ஆசைப் படவில்லை...'' என்றாள் திரிவேணி.

''முட்டாளே... முட்டாளே... என்ன காரியம் செய்ய இருந்தாய் நீ? எல்லா ஏற்பாடுகளையும் முடித்துவிட்ட நேரத்தில் இப்படி ஒரு முட்டாள் தனமான காரியத்தில் ஈடுபட்டிருக்கிறாயே...'' என்றேன்.

அவளிடம் அசைவு எதுவும் இல்லை. கண்களை மட்டும் திறந்து மேல் நோக்கி என் முகத்தைப் பார்த்தாள்.

"இரவு இரண்டு மணி ஷிஃப்டிற்கு வரவேண்டியவன் ஏன் மாலை ஆறு மணிக்கே வந்திருக்கிறேன் என்று யோசித்துப் பார்த்தாயா?"

"ஏன்?" என்று பலவீனமான குரலில் கேட்டாள்.

"உனக்குச் சில புத்திமதிகள் சொல்ல."

"நீ இப்படி முட்டாள்தனமாக ஏதாவது செய்வாய் என்று எதிர்பார்த்ததுதான். நான் உனக்கு அட்வைஸ் பண்ண வந்தது வேறொரு விஷயத்திற்காக. ஆனால் அதற்கு அவசியமே இல்லாமல் போகிற மாதிரியான செயலில் நீ ஈடுபட்டிருக்கிறாய்... ஐயோ... ஐயோ உன்னை இன்று இரவு கடத்தப் போகிறேன். உன் பிறந்த நாளுக்கு என நான் அளிக்கப் போகும் பரிசு உன் விடுதலை..."

"உண்மையாகவா?"

"சத்தியமாக" என்று சொல்லி அவள் தலையில் செல்லமாக ஒரு தட்டு தட்டினேன்.

சிரித்தாள். ஆயுள் தண்டனைக் கைதியிடம் போய், 'நாளை உனக்கு விடுதலை' என்று சொன்னால் எவ்வளவு விடுதலை உணர்வுடன் சிரிப்பானோ, அப்படி ஒரு சிரிப்பு அது.

பின் சட்டென்று கட்டிப்பிடித்து என் உதட்டில் முழுமையாக முத்தமிட்டாள்.

நான்தான் விலக வேண்டி இருந்தது.

"திரிவேணி. நான் இங்கு வந்து இவ்வளவு நேரம் இருப்பதே தப்பான விஷயம். ஒருவேளை ராஜதுரை



திடீரென்று 'எல்லாம் சரியாக இருக்கின்றனவா?' என்று பார்த்துவிட்டுப் போக வந்தால் அதுவே பெரும் பிரச்னை யாகிவிடும்..."

"ஐயோ, மணிக்கட்டில் பார் ஒரு சொட்டு ரத்தம். சட்டென்று ரத்தம் வெளிப்படுவதை நிறுத்து. கைக்குக் கட்டுப்போடு. இல்லாவிட்டால் என் மணிக்கட்டை ப்ளேடால் அறுத்து என்னைக் கொல்ல முயன்றான் என ராஜதுரையிடம் நான் ரிப்போர்ட் செய்வேன்" என்று போலியான திகிலுடன் கத்தினாள் திரிவேணி.

"கொஞ்ச நேரத்திற்கு முன் பைப்பில் நீர் கொட்டுவது போல் ரத்தம் வெளியேறியதே அப்போது நீ கவலைப் படவே இல்லையே..." என்று அவள் கைக்கு ஒரு பாண்ட் எய்ட் ஸ்ட்ரிப் ஒட்டியபடி கேட்டேன்.

"அப்போது எனக்கு வாழும் ஆசை இல்லை."

"இப்போது?"

"வாழ வேண்டும் என்ற வெறி இருக்கிறது."

அவள் கன்னத்தைத் தட்டினேன்."

"கேள் என் முட்டாள் தேவதையே! இன்று இரவு எட்டு மணிக்கு உனக்கு டின்னர் வரும். கூடவே இரண்டு லிட்டர் வாட்டர் பாட்டிலும் வரும். டின்னர் சாப்பிடு. ஆனால் அந்தத் தண்ணீரை மறந்தும் குடிக்காதே."

"உத்தரவு..."

"எவ்வளவு தாகமாக இருந்தாலும் அந்தத் தண் ணீரைக் குடிக்காதே. பாத்ரூம் குழாயில் வரும் தண் ணீரைக் குடி. இல்லாவிட்டால் ஏற்கனவே குடித்து மிச்சமிருக்கும் பாட்டில் நீரைக் குடி. பசுபதி கொண்டு

வரும் பாட்டில் நீரைக் குடித்தால் உன் விடுதலையை இனி உன் ஆயுள் வரைக்கும் மறந்துவிட வேண்டியது தான்...''

''சரி.. சரி.. நிறைய பயமுறுத்துகிறாய்.''

''இந்தச் செய்தியை உனக்குச் சொல்ல வேண்டும் என்பதற்காகவே நான் ஆறு மணி ஷிஃப்டிற்கு மாற்றிக் கொண்டு வந்திருக்கிறேன்.''

''அந்தத் தண்ணீரில் என்ன இருக்கிறது அப்படி?''

''உன் விடுதலை'' என்றேன்.

திரிவேணி வாய் பிளந்து என்னைப் பார்த்துக் கொண் டிருக்க அந்த அறையை விட்டு வெளியேறினேன்.

## 22

இரவு எட்டு மணி வரை நல்ல பிள்ளையாய் திரி வேணியைக் காவல் காத்துக் கொண்டிருந்தேன். எங்கும் அசையவில்லை. நிமிடத்திற்கு நிமிடம் என் இதயத் துடிப்பு மட்டும் அதிகரித்துக் கொண்டே இருந்தது.

எட்டு பத்திற்கு பசுபதி வந்து சேர்ந்தான். திரி வேணிக்கு உணவு கொடுத்தான். பாட்டில் நீரைக் கொடுத் தான்.

பின் எனக்கு சாப்பாடும், தண்ணீரும் எடுத்து வைத்து விட்டுப் போனான்.



சாப்பிட்டேன். பாட்டில் நீரைக் கவிழ்த்தேன். பாத்ரூம் குழாயைத் திருகி அப்படியே உள்ளங்கையை அடியில் குவித்து வைத்துப் பிடித்துக் குடித்தேன்.

மணி எட்டு நாற்பத்தைந்து.

ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தேன். புகைத்து முடித் தேன். படபடப்பு லேசாக அடங்கியது.

டீ.வி.யில் சற்று நேரம் பிம்பங்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அந்தச் சதுரத் திசையில் யார் யாரோ வந்தார்கள். போனார்கள். பேசினார்கள். சிரித்தார்கள். அழுதார்கள். ஒரு பக்கம் வயலின்கள் அழுதன. சண்டை போட்டார்கள்.

மனதில் எதுவும் பதியவில்லை. அடிக்கொரு முறை மணி பார்த்தேன். ஒன்பது பதினைந்திற்கு எழுந்தேன்.

வெளியே வந்தேன்.

ராஜதுரையின் அலுவலகம் இருக்குமிடம் நோக்கி மெல்ல நடந்தேன். என் நிழல் எனக்கு முன்னும், பின்னு மாய் நீண்டது. திடீரென்று பக்கவாட்டில் தெரிந்து என்னைப் பயமுறுத்தியது. அலைகளின் இடையறாத ஓசை கேட்டுக் கொண்டிருந்தது. உலகின் எந்த மூலை யிலும், எப்படியும் இருக்கும் சுவர்க் கோழிகளின் ரீங்காரம் இப்போதும் கேட்டுக் கொண்டிருந்தது.

ராஜதுரையின் அலுவலகத்தை அடைந்தேன். நிழ லின் பாதுகாப்பில் மெல்ல நடந்து சென்று எட்டிப் பார்த் தேன்.

ராஜதுரை டைனிங் டேபிளின் மேல் தலை சாய்த் திருந்தார். டேபிளில் பாதி சாப்பாடு மிச்சமிருந்தது. பாட்டில் தண்ணீரில் கால் லிட்டர் குறைந்திருந்தது.

ஷீலா கொடுத்த மயக்க மருந்துக்குக் கிடைத்த முதல் வெற்றி.

பிரச்னை எதுவும் இல்லாமல் ஒரு பெரிய தலை நிம்மதியாக ஓய்வு எடுக்கத் தொடங்கி விட்டது. இன்னும் ஆறு மணி நேரத்திற்கு அவரை யாரும் அசைக்க முடியாது.

இதயம் மகிழ்ச்சியில் ஒரு எம்பு எம்பியது.

படகுத் துறையில் கோவர்தன் கவிழ்ந்து கிடந்தான். அவனருகே சென்று அவனைக் காலாலேயே புரட்டினேன். ம்ஹூம். விழிப்பு வரவில்லை.

கிச்சனுக்குச் சென்றேன். பசுபதி அண்ட் கோ படுத்துக் கிடந்தது.

அடுத்து தொழிலாளர்கள் இருக்கும் குவார்ட்டர்ஸ் பக்கம் சென்று பார்த்தேன். அவர்களும் உருண்டு கிடந்தார்கள். படகுத் துறையைக் காவல் காக்கும் மற்ற செக்யூரிட்டி ஆசாமிகளும் மயக்க மருந்தின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தார்கள்.

எஞ்சி இருந்தது இரண்டே இரண்டு பேர்.

சாரதி, ஆஸாத்.

சாரதியின் குவார்ட்டர்ஸில் ஏ.ஸி.யின் ரீங்காரம் கேட்டது. கதவைத் தட்டினேன். பதிலில்லை. இரண்டு முறை மூன்று முறை, நான்கு முறை ம்ஹூம்.

செல்போன் எடுத்து அவனது செல்போனுக்கு நம்பர் போட்டேன்.

மணி அடித்துக் கொண்டிருந்தது. எழுந்திருக்கவில்லை.

"இந்த நேரத்தில் இங்கே என்ன செய்கிறாய் பாரி?'' எனப் பின்னால் இருந்து மென்மையாக ஒரு குரல் கேட்டது.



முதுகுவடத்தில் ஒரு ஐஸ் துண்டம் இறங்கியது.

திரும்பினேன்.

ஆஸாத் நின்று கொண்டிருந்தான்.

''சிகரெட் பாக்கெட் தீர்ந்து விட்டது. வாங்கிக் கொண்டு போகலாம் என்று வந்தேன்'' என்றேன்.

உள்ளுக்குள் படபடப்பாய் இருந்தது. பதட்டமாய் இருந்தது. இவன் ஏன் இன்னும் விழித்துக் கொண்டிருக்கிறான்? இரவு உணவை உண்ணவில்லையா?

''அதற்கு நீ ஏன் வர வேண்டும்? ஒரு போன் போட்டுச் சொல்ல வேண்டியதுதானே?'' என்றான் ஆசாத் குரலில் கடுமையைக் கொஞ்சம் கூட்டி. ''சாப்பிடலாம் என்று உட்காரப் போனேன். நீ கதவை இடிக்கும் சத்தம் கேட்டது. அதனால் எழுந்து வந்தேன். நேட்டி நேரத்தில் அந்த அறையை விட்டு வெளியே வரக்கூடாது என்று தெரியுமா, தெரியாதா?'' என்று குற்றம் சாட்டும் தொனியில் கேட்டான்.

''ஐம்' ஸாரி. தூக்கம் வரும் போல் இருந்தது. அதுதான் கொஞ்சம் வெளிக்காற்றைச் சுவாசித்து விட்டுப் போகலாம் என்று வந்தேன் என்றேன்.''

என் பதில் எனக்கே திருப்தி தரவில்லை. டூட்டி சமயத்தில் எக்காரணத்தைக் கொண்டும் யாரும் வெளியே வரக்கூடாது என்பது ராஜதுரையின் கண்டிப்பான உத்தரவு. என்ன அவசரமாக இருந்தாலும் போனில்தான் தகவல் சொல்ல வேண்டும். இந்தச் சட்டங்களை யார் மீறினாலும் ராஜதுரையிடம் உடனே தகவல் கொடுத்து விட வேண்டும். அடுத்தவரைக் காப்பாற்றுவதாக எண்ணி ராஜதுரையிடம் தகவல் தெரிவிக்காமல்

மறைக்கப் பார்க்காமல், தகவல் மறைத்தவர் மீதுதான் முதல் நடவடிக்கை. குற்றத்தைப் பொறுத்துத் தண்டனை வேலை போகலாம். எல்லா வசதிகளும் பறி போக லாம்.

''நான் ராஜதுரையிடம் தகவல் தெரிவிக்கப் போகி றேன். எனக்கு வேறு வழியில்லை'' என்றான் ஆஸாத். ராஜதுரை இருக்கும் அறை நோக்கி நடக்கத் தொடங்கி னான்.

''ஹாண்ட்ஸ் அப்'' என்றேன். சட்டென்று துப்பாக் கியை நீட்டி அவன் மார்பிற்குக் குறி வைத்தேன்.

''பாரி'' என்றான் அதிர்ச்சி கலந்த குரலில். ''நீ என்ன செய்கிறாய் என்பதை தெரிந்துதான் செய்கிறாயா? இல்லை பைத்தியம் கியித்தியம் பிடித்து விட்டதா?''

''ஹாண்ட்ஸ் அப்'' என்றேன் கடுமையாக.

அவன் கைகளைத் தூக்கினான்.

''திரும்பு'' என்றேன்.

நான் எதற்குத் திரும்பச் சொல்கிறேன் என்பது அவ னுக்குத் தெரிந்திருக்கும். துப்பாக்கியின் பின்பாகத்தால் அடிபடப் போவதை அவன் தெரிந்து கொண்டு விட்டான் என்பது அவனது முக பாவத்தில் எனக்குப் புரிந்தது.

''வருத்தப்படுவாய் பாரி.''

''திரும்பு.''

திரும்பினான். சற்றும் எதிர்பாராத விதமாக என் கையில் ஒரு வெட்டு வெட்டினான். சற்றும் எதிர்பார்க்க வில்லை. துப்பாக்கி எகிறியது.



ஆசாதின் கையை ஓங்க விடக்கூடாது. அவன் கை ஓங்கினால் திரிவேணிக்கு விடுதலை கிடைக்காது என்பது மட்டுமல்ல. என் உயிருக்கு விடுதலை கிடைத்து விடும்.

கீழே விழுந்து துப்பாக்கியை நோக்கிக் குனிந்த அவன் மேல் பாய்ந்தேன்.

அவன் விலகினான். உருண்டான்.

பயிற்சி பெற்றவன். நிச்சயம் என் பாய்ச்சலை எதிர் பார்த்திருக்கிறான்.

ஆசாத் அந்தத் துப்பாக்கியைப் பற்றி விடக்கூடாது. என் முக்கால் பலம் அதில் தான் இருக்கிறது.

நான் அவனை விட வேகமாக உருண்டேன். கீழே மணல் வெகு வேகமாக உருள முடிந்தது. துப்பாக்கியை நோக்கிப் பாய்ந்த அவன் கால்களைப் பற்றி இழுத் தேன். அவன் முகம் என் முகத்திற்கு நேரே வந்தது. அதில் தெரிந்தது பயமா, கோபமா மூர்க்கமா, ஆத்திரமா?

நான் ஒரு பன்ச்சை செலுத்தினேன். அவன் முகத்தில் பாய்ந்தது. முட்டி அவன் முகத்தில் பதிந்து அழுந்தி, வெளிப்பட்டது. மூக்குத் தண்டு உடைந்து ரத்தம். ஆசாத் போராட்டத்தை விடவில்லை.

அவன் முடியைக் கொத்தாகப் பற்றித் தூக்கினேன். தரையில் ஒரு மோது மோதினேன்.

''வலிக்கிறதா?'' என்றேன்.

அவன் நாவால் உதட்டை பலவீனமாக ஈரப்படுத்தி னான். அவன் விலாவில் ஒரு ஜூடோ வெட்டு வெட்டி, ''வலிக்கிறதா?'' என்று கேட்டேன்.

வினோதமாக ஒலியெழுப்பினான்.

'குபுக்' என்று மணலில் வாந்தி எடுத்தான்.

ஆல்கஹால் நாற்றம் அடித்தது. குடித்திருக்கிறான்.

துணிபோல் தொய்ந்து போயிருந்தான். பார்த்தால் பாவமாக இருந்தது. முதல் வேலையாகத் துப்பாக்கியைப் பொறுக்கிக் கொண்டேன்.

"தண்ணீர்... தண்ணீர்..." என்று முனகினான்.

அவன் சட்டைக் காலரைப் பற்றி இழுத்துச் சென்றேன். மணலில் கோடு போட்டுக் கொண்டே வந்தான். அவனது குவார்ட்டர்ஸ் வந்ததும் எழுந்து நிற்க வைத்து, ஏறக்குறைய தள்ளிக் கொண்டு போய் அவனது கட்டிலில் படுக்க வைத்தேன்.

சுற்றிலும் பார்த்தேன்.

பசுபதி கொண்டு வந்து வைத்திருந்த உணவுப் பாத்திரம் மூடி இருந்தது. அதனருகில் இரண்டு லிட்டர் பாட்டில் இருந்தது. அதை எடுத்தேன். சீலை உடைத்தேன். அவனிடம் கொடுத்தேன்.

பத்து தினங்களாகப் பாலைவனத்தில் தண்ணீர் இன்றி தாகத்தில் தவித்தவனைப் போல் தண்ணீரைக் குடித்தான். அவன் தொண்டை ஆப்பிள் முதலில் அதிவேகமாக மேலும் கீழும் ஏறி இறங்கியது.

சில வினாடிகளுக்குப் பின் ஆப்பிளின் இயக்கம் மட்டுப்பட்டது.

ஆசாத் பாட்டில் நழுவ விட்டான். கண்களை மூடினான்.



பெருமூச்சு ஒன்றை வெளிப்படுத்தினேன். மணி பார்த்தேன் 9.35.

செல்லை எடுத்தேன்.

'நல்ல வேலை வேண்டும் - பாரி' என்று ஷீலாவிற்கு எஸ்.எம்.எஸ். அனுப்பினேன்.

## 23

இரவு மணி 11.30.

திரிவேணி இருந்த அறைக்கதவைத் திறந்து விட்டேன்.

ஒரு பறவையைப் போல, ஒரு மான் போல வெளியே ஓடிவந்தாள். அவள் முகத்தில் உண்மையான மகிழ்ச்சி தெரிந்தது. அப்படியே பாய்ந்தாள். தோளில் கிளியாகத் தொற்றிக் கொண்டாள். என் கழுத்தைச் சுற்றி கைகளை வளைத்துப் போட்டு தட்டாமாலை சுற்றினாள்.

"இரு. இரு இந்தத் தீவை விட்டு வெளியுலகிற்கு போன பின் சந்தோஷப்படலாம். அதுவரை உன் விடுதலை என்பது ஒரு கேள்விக்குறிதான்..." என்றேன்.

டக்கென்று சுழற்சியை நிறுத்திக் கொண்டாள். அவள் உற்சாகம் வடிந்து விட்டது.

"திரிவேணி, சியர் அப். ஒரு வினாடி பொங்கும் பால். அடுத்த வினாடி நீர் ஊற்றப்பட்ட நெருப்புத் துண்டு. கொஞ்சம் சமநிலையாய் இரு. உள்ளே போ. உன்

னுடைய ட்ரஸ் ஒன்றை எக்ஸ்ட்ராவாகக் கையில் எடுத்துக் கொள்.''

'ஏன்? எதற்கு?' என்ற கேள்விகள் எல்லாம் இல்லாமல் அடிபணிந்தாள்.

அவளும் நானுமாய் வெளிப்பட்டோம்.

தீவு மகா அமைதியாக இருந்தது. காற்றில் இருந்த சில் லேசாகப் பயமுறுத்தியது. அவள் கையைக் கோர்த்துக் கொண்டு என் குவார்ட்டர்ஸிற்குச் சென்றேன். என்னுடைய யூனிஃபார்ம் ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டேன். ஏற்கனவே நான் சேர்த்து வைத்திருந்த பணத்தைக் கட்டாகக் கட்டி பிளாஸ்டிக் பை ஒன்றில் போட்டு வைத்திருந்தேன். அதை எடுத்தேன். செல்போனையும் சார்ஜரையும், அதில் போட்டேன். பையை சீல் பண்ணினேன்.

இனி நீர் அந்தப் பைக்குள் நுழையாது என்ற திருப்தி ஏற்பட்டது.

வினாடிகள் நழுவிக் கொண்டிருந்தன. 'சீக்கிரம், சீக்கிரம் ஆன்ட்டி க்ளைமேக்ஸாய் ஏதாவது நடப்பதற்குள் இந்தத் தீவை விட்டு விலகு' என்று உள்ளுணர்வு மணி அடித்துக் கொண்டே இருந்தது.

குவார்ட்டர்ஸை விட்டு வெளியே வந்தோம்.

ராஜதுரையின் ஆபீஸ் பக்கம் எட்டிப் பார்த்து விடுவது என்று தீர்மானித்தேன்.

மணலில் திரிவேணியை இழுத்துக் கொண்டு வேக வேகமாக நடந்தேன்.

பசுபதி அண்ட் கோ நினைவின்றி கிடந்தது. செக்யூரிட்டி ஆட்கள், வேலையாட்கள் எல்லாம் நினைவின்றி



விழுந்து கிடந்தது நிலா வெளிச்சத்தில் தெளிவாகத் தெரிந்தது. படகுத் துறையில் கோவர்தன் ஏறக்குறைய பிணம் போல் தெரிந்தான்.

சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு யுத்த களத்தினூடே நடந்து செல்வது போல் இருந்தது.

திரிவேணி என்னுடன் பசை போட்டாற்போல் ஒட்டிக் கொண்டாள். அவளது உடலின் நடுக்கம் என் உடலை ஊடுருவியது.

''பாரி...'' என்று திகிலுடன் அழைத்தாள் அவள்.

''என்ன?''

''இந்தத் தீவில் இருக்கும் அத்தனை பேரையும் கொன்று விட்டாயா பாரி?'' என்று மூச்சிரைப்பினூடே திக்கித் திக்கிக் கேட்டாள் அவள்.

அவளது உடல் நடுக்கத்தின் காரணம் புரிந்தது.

''சேச்சே. நான் அவ்வளவு கொடூரமானவன் இல்லை. எல்லோரும் மயங்கிக் கிடக்கிறார்கள். ஆழ்ந்த தூக்கம் என்று வேண்டுமானால் சொல்லலாம். இன்னும் மூன்று மணி நேரத்திற்குள் அத்தனை பேரும் விழித்து விடுவார்கள். அதற்குள் நாம் இவர்களின் கண்ணில் படாத தூரத்திற்குப் போய் விடலாம். கவலைப்படாதே...'' என்றேன்.

''கவலைப்படவில்லை. உண்மையிலேயே இவர்களில் யாரையும் நீ கொல்லவில்லை. இல்லையா?''

''எனக்கென்ன பைத்தியமா திரிவேணி. ஒரே நேரத்தில் இப்படிப் பலபேரைப் படுகொலை செய்வதற்கு?'' என்று அவளை ராஜதுரையின் அறைக்கு இழுத்துப் போனேன்.

ராஜதுரை மேஜையில் கவிழ்ந்தபடியே கிடந்தார். அவர் தலைமுடியைப் பற்றி அவரைப் புரட்டினேன். ஒரு மெல்லிய பேப்பர் துண்டை எடுத்து அவர் மூக்கருகே காட்டினேன். அது படபடத்தது.

''பார் மூச்சு இருக்கிறது...'' என்றேன். திரிவேணியின் முகத்தில் சிரிப்பு.

அவளை அழைத்துக் கொண்டு ஷீலா வரப்போகும் படகுத்துறையை நோக்கி காலடி எடுத்து வைத்தபோது ராஜதுரையின் அறையில் ரேடியோ உயிர் பெற்றது.

என்னென்னவோ வித விதமான ஓசைகளின் நடுவே கரகரப்பான ஒரு குரல் ''ராஜதுரை! விசுவநாதன். உன் னால் கேட்க முடிகிறதா? பதில் சொல். இது மூன்றாவது அழைப்பு. அங்கே எல்லாம் சரியாகத்தானே இருக் கின்றன? ஏன் பதில் சொல்ல மாட்டேன் என்கிறாய்? நான் அங்கே வந்து கொண்டிருக்கிறேன். என் லாண்டிங்கிற்கு ஏற்பாடு செய்து விட்டாய் தானே? ராஜதுரை. ப்ளீஸ் ரெஸ்டாரண்ட். ஓவர்... ஓவர்...?''

''விசுவநாதனின் குரல்'' என்றாள் திரிவேணி உணர்ச்சியேயின்றி.

என் வயிற்றில் ஒரு கலவரப் பந்து உருவாகத் தொடங் கியது. இந்தத் தீவை விட்டு வெளியேறுவதற்குள் விசுவநாதன் வந்து சேர்ந்து விட்டால் திரிவேணியை மறந்து விட வேண்டியதுதான். எனக்கு சிவலோக பிராப்தியோ, வைகுந்த வாசமோ கிடைத்து விடும்.

''வா திரிவேணி'' என்று அவள் கையைப் பற்றிக் கொண்டு தபதபவென ஓடினேன்.



மணலில் கால்கள் புதைந்தன. மூச்சிரைத்தது. திரி வேணி இரண்டு முறை கீழே விழுந்து பின் எழுந்து என் கை கோர்த்துக் கொண்டாள்.

நிராகரிக்கப்பட்ட படகுத் துறையை அடைந்தோம்.

'டுட்டுட்.டுட்' என்று படகின் இன்ஜின் ஒலி கேட்டது. கடல் பரப்பு அடர் இருளாக இருந்ததால் எதுவும் தெரிய வில்லை. நிலவை மேகம் சுத்தமாக மறைத்துக் கொண் டிருந்தது.

''ஷீலா... வீ ஆர் ஹியர்'' என்று கத்தினேன்.

காற்று என் குரலை எந்தத் திசையில் சுமந்து சென் றதோ தெரியவில்லை. ஷீலாவிடம் இருந்து பதில் இல்லை. ஆனால் படகின் இயந்திரச் சத்தம் சிறிது சிறிதாகப் பெரிதாகிக் கொண்டே வந்தது.

திரிவேணி என் கையை இறுக்கமாகப் பிடித்து என் மேல் பசை போட்டு ஒட்ட வைத்தாற் போல் நின்றாள்.

வானில் ஹெலிகாப்டரின் உலோகச் சத்தம் கலந்த 'ணிக், ணிக்' கேட்கத் தொடங்கியது.

விசுவநாதன் தீவுக்கு வந்து கொண்டிருக்கிறார்!

இயந்திரப் படகு கண்ணில் பட்டது. ஷீலாதான் செலுத்தி வந்தாள். அந்தப் படகின் பின்னால் இன்னொரு படகு தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. ஷீலாவின் முகத்தில் நிலவின் வெளிச்சம் ஒரு பாதியை பளிச் சென்று காட்டியது. விடுதலை தேவியைப் போல, பாரத தேவியைப் போல காட்சி அளித்தாள்.

என்னைப் பார்த்து விட்டாள். பக்கத்தில் இருந்த திரிவேணியையும் பார்த்து விட்டாள். உற்சாகமாகக் கையசைத்தாள்.

கையசைத்தேன். படகுத் துறையை நெருங்கியது. குனிந்தேன். கை கொடுத்து ஷீலாவை மேலே ஏற்றினேன். ஷீலா ஒரு ஜீன்ஸ் பேண்ட் அணிந்திருந்தாள். உள்ளுக்குள் ஒரு டைட்டான பனியன் டைட் டாப்ஸ் அணிந்து மேலே ஒரு லெதர் ஜாக்கெட் அணிந்து அதன் ஜிப்பைப் போடாமல் திறந்து விட்டிருந்தாள். டைட்டான டாப்ஸின் காரணமாக அவளது மார்பகங்கள் கும்மென்று ப்ளோரசன்ட் இங்க்கால் ஹைலைட் பண்ணப்பட்ட எழுத்துக்களைப் போல ஹைலைட் பண்ணப்பட்டுத் தெரிந்தன.

லெதர் ஜாக்கெட்டுக்குள் கையை நுழைத்து ஒரு டார்ச்சை எடுத்து அழுத்தினாள்.

சக்தி வாய்ந்த வெளிச்சக் கதிர்கள் அவள் அமர்ந்து வந்த படகை வெளிச்சம் போட்டுக் காட்டின. சவப்பெட்டிகளைப் போல் இரண்டு நீளமான டின் பெட்டிகள் மேலே மூடியின்றித் தெரிந்தன. அவற்றில் ஒரு ஆண் பிணமும் பெண் பிணமும் தெரிந்தன. அவை நிர்வாணமாக இருந்தன.

ஆண் பிணம் என் அளவு என்றால் என் அளவிலேயே இருந்தது. பெண் பிணம் அப்படியே திரிவேணியை உரித்து வைத்த மாதிரி இருந்தது.

திரிவேணி அந்தப் பிணங்களைப் பார்த்துவிட்டு 'வீல்' என்று அலறினாள்.

''பாரி... அங்கே பார்... அங்கே பார்.''

அவள் முதுகைத் தட்டிக் கொடுத்தேன். ''பயப்படாதே. நான்தான் இந்தப் பிணங்களைக் கொண்டு வருமாறு ஷீலாவிடம் கேட்டிருந்தேன்...''



''எதற்கு?'' என்று நடுங்கும் குரலில் கேட்டாள் திரிவேணி.

''நோ கொஸ்டின்ஸ். நடப்பதை ஜஸ்ட் பார்த்துக் கொண்டே இரு. நமக்கு நேரம் இல்லை. உடனே செயல்பட்டாக வேண்டும்...'' என்றவன் ஷீலாவின் பக்கம் திரும்பினேன். ''மேலே காய்கறி போட்டு மூடி எடுத்து வரப் போவதாக சொன்னாயே ஷீலா.''

''அப்படித்தான் எடுத்து வந்தேன். வரும் வழியில் காய்கறிகளைத் தண்ணீரில் எறிந்து விட்டேன். பெரும்பாலும் உருளைக்கிழங்குகளும், வெங்காயமும் உங்களுக்கு நேரம் இருக்காதென்று தெரியும். அதனால் உங்கள் நேரத்தைக் கொஞ்சம் மிச்சப்படுத்தி இருக்கிறேன்'' என்றாள்.

அவளை வியந்து கொண்டிருக்க நேரம் இல்லை. ஷீலாவின் டார்ச் வெளிச்சத்தின் உதவியுடன் நான் படகில் இறங்கினேன். தகர டின்னில் இருந்து இரண்டு பிணங்களையும், படகின் பரப்பிற்கு இடம் மாற்றினேன். இரண்டு தகரப் பெட்டிகளையும் எடுத்து ஷீலாவிடம் நீட்டினேன்.

ஷீலா பெற்றுக் கொண்டாள்.

''திரிவேணி, அந்தப் பெட்டிகளில் மணலை நிரப்பு. கமான் அஸிஸ்ட் ஷீலா'' என்றேன்.

ஷீலாவை விரோதமாக முறைத்துக் கொண்டிருந்த திரிவேணி குனிந்து பெட்டிகளில் ஒன்றை மணலால் நிரப்பத் தொடங்கினாள். ஷீலா இன்னொரு பெட்டியில் மணலை நிரப்பினாள்.

நான் ஆண் பிணத்திற்கு என் யூனிஃபார்மை அணிவித்தேன். பெண்ணின் பிணத்திற்கு திரிவேணியின் ஆடைகளை அணிவித்தேன்.

தாவி மேலே ஏறினேன்.

மணல் நிரப்பப்பட்ட டின் சவப்பெட்டிகளை ஷீலாவும் நானுமாகச் சேர்ந்து கடலில் தள்ளினோம். மணலின் பாரம் காரணமாக பெட்டிகள் நேரே நீரில் விழுந்து கடலின் ஆழத்திற்குச் சென்றன.

டார்ச் லைட்டின் வெளிச்சத்தில் படகை ஆராய்ந்தேன். இரண்டு ஆக்ஸிஜன் சிலிண்டர்கள் இருந்தன. முகத்தில் மாட்டிக் கொள்ளும் மாஸ்குகள் இருந்தன. மாஸ்கில் இருந்து ஆக்ஸிஜன் சிலிண்டருக்கு ட்யூப் நீண்டது. தவிர இரண்டு பாட்டில்கள் ரத்தம் இருந்தன.

தாவி ஏறினேன். ஷீலாவைக் கட்டி அணைத்தேன். அவள் கன்னத்தில் முத்தமிட்டேன். ''எல்லாம் பாக்காவாக இருக்கின்றன ஷீலா. உனக்கு எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை'' என்றேன்.

திரிவேணி என்னையும், ஷீலாவையும் பார்த்த பார்வையில் பொறாமை இருந்தது.

''அதுதான் நன்றி சொல்லி விட்டீர்களே!'' என்றாள் ஷீலா.

தீவில் தூரத்தில் குரல்கள் குழப்பமாக ஒலித்தன. காலடிச் சத்தங்கள் தட் தட் என்று கேட்டன.

''குயிக். அவர்கள் வரத் தொடங்கி விட்டார்கள்'' என்றாள் ஷீலா. ''டார்ச் உங்களிடமே இருக்கட்டும். உதவும். நான் டார்ச் இல்லாமல் சமாளிப்பேன்'' என்றாள்.



நான் படகில் குதித்தேன். திரிவேணிக்குக் கை கொடுத்து இறக்கினேன்.

ஷீலா காலியான படகில் குதித்தாள். இரண்டு படகுகளையும் இணைத்த நைலான் கயிறை அவிழ்த்தேன்.

இயந்திரங்களை ஸ்டார்ட் செய்தேன்.

''நான் உயிர் பிழைத்தால் உன்னைத் தொடர்பு கொள்கிறேன் ஷீலா. குட்பை'' என்றேன்.

ஷீலா சில வினாடிகள் என்னை வெறித்தாள். தலையசைத்தாள். அவளது படகை எடுத்துக் கொண்டு விலகினாள்.

நான் படகைக் கிளப்பினேன்.

நூறடி தூரத்தில் டார்ச பட்டங்கள், தீவில் தெரிந்தன.

அவை துறையை நோக்கி வேக வேகமாக ஓடி வந்தன.

ஹெலிகாப்டர் ஒன்று தீவில் மேலேறியது. அதன் அடியில் ஒரு சக்தி வாய்ந்த சர்ச் லைட் சுழன்று கொண்டிருந்தது.

திரிவேணி மஹா கலவரத்துடன் அவற்றைப் பார்த்தாள். என் தோளில் மயங்கிச் சரிந்தாள்.

## 24

கடலில் இயந்திரப்படகு விரைந்து கொண்டிருந்தது.

திரிவேணியை உலுக்கினேன். கண் விழித்தாள். செருகினாற்போல இமை திறந்து என்னைப் பார்த்தாள்.

''திரிவேணி விழித்துக்கொள். நாம் தப்பிக்கப் போகி றோம். பயப்படாதே விசுவநாதனால் நம்மைப் பிரிக்க முடியாது'' என்றேன்.

நம்பிக்கையின்றி என்னைப் பார்த்தாள்.

இருந்தும் எழுந்து அமர்ந்தாள்.

நான் பெல்ட்டில் எப்போதும் வைத்திருக்கும் கத்தியை அதன் தோல் உறையிலிருந்து வெளியே எடுத்தேன். கத்தி படு கூராக இருந்தது. அதன் முனையால் படகில் இருந்த பிணங்களின் முகங்களில் கன்னா பின்னா வென்று கோடு போட்டேன்.''

பின் இரண்டு இரத்த பாட்டில்களையும் எடுத்து பிணங் களின் முகங்களில் உடல்களில் என்று ஊற்றினேன்.

மேலே வானில் ஹெலிகாப்டரில் சர்ச் லைட்டைச் சுழற்றியபடி நாங்கள் இருந்த திசை நோக்கி வந்தது. சர்ச் லைட் வெளிச்சத்தில் அவர்கள் படகைப் பார்த்து விட்டால் சுடுவார்கள் என்று தோன்றியது.

துப்பாக்கியை வெளியில் எடுத்தேன். அதன் ஸேஃப்டி காட்சை ரிலீஸ் செய்தேன்.

'டக டக' என ஒலி எழுப்பியபடி ஹெலிகாப்டர் கடந்தது. அதன் சர்ச் லைட் வெளிச்சம் எங்களின் படகைத் தொடவில்லை. ஹெலிகாப்டர் இன்னொரு வட்டம் அடித்து வருவதற்கு ஒரு நிமிடமாவது ஆகும். என் பக்கம் அதிர்ஷ்டம் இருந்தது.

திடீரென்று கடல் நீரில் இரண்டு இயந்திரப் படகுகள் விரைந்து வரும் ஒலி கேட்டது. படகுகள் இன்னும் கண்ணில் படவில்லை. அவற்றிலும் சர்ச் லைட்கள் பொருத்தப்பட்டிருக்கும்.



விசுவநாதன் பெரிய ஆள். அதற்குள் ஹெலிகாப்டரை வானத்தில் ஏற்றி விட்டார். இரண்டு படகுகளைக் கடலில் தேட விட்டு விட்டார்.

அவருடைய பலம் எத்தகைய என்று புரிந்தது. மாட்டக் கூடாது. மாட்டக்கூடாது. மாட்டினால் விசுவநாதன் நிச்சயம் 'ஏன் பிறந்தோம்?' என்று நினைக்க வைத்து விடுவார்.

நான் படகை பாறைகள் இருந்த இடத்தை நோக்கிச் செலுத்தினேன்.

திராட்டிலை கொஞ்சம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகப் படுத்தினேன்.

''திரிவேணி அந்த ஆக்ஸிஜன் கிட்டை எடுத்து மாட்டு. சிலிண்டரை முதுகில் பொருத்திக்கொள்'' என்றேன். ''கமான் குயிக். நாம் இருவரும் உயிர் பிழைக்க வேண்டுமென்றால் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் மாட்டு...''

ஆச்சரியப்படும் விதமாகத் திரிவேணி ஆக்ஸிஜன் சிலிண்டரை முதுகுப் பக்கம் பொருத்திக் கொண்டாள். முகத்தில் முகமூடியை மாட்டிக் கொண்டாள்.

நானும் ஆக்ஸிஜன் சிலிண்டரை முதுகில் பொருத்தி னேன். மாஸ்கை முகத்தில் மாட்டினேன்.

'டிஷ்யூங்' என்று துப்பாக்கி வெடிக்கும் சத்தம் கேட்டது.

அப்படியே திரிவேணியை குப்புறப்படுக்க வைத்தேன். நானும் குப்புறப்படுத்தேன்.

விசுவநாதனின் ஆட்கள் நெருங்கி விட்டார்கள்.

எதிரில் பார்த்தேன். பாறைகள் படகை வெகு வேகமாக நெருங்கிக் கொண்டிருந்தன.

"திரிவேணி என் கையைப் பற்று. கடலில் குதி. ரெடி... ஒன்... டூ... த்ரீ..."

இரண்டு பேரும் கடலில் குதித்தோம்.

அதே வினாடி படகு பாறைகளில் மோதியது. படகில் இருந்த இரண்டு உடல்களும் தூக்கி எறியப்பட்டன.

நீரில் ரத்தம் பரவியது.

நான் பார்த்துக் கொண்டிருந்தேன். சுறாக்கள் வால்களைச் சுழற்றி அடித்துக் கொண்ட சப்தம் கேட்டது.

"திரிவேணி வா நாம் நீந்தலாம்."

தண்ணீருக்கடியில் நாங்கள் நீந்தத் தொடங்கினோம்.

## 25

மறுநாள்.

பொழுது புலர்ந்து விட்டது என்பதை கடல் நீருக்குள் ஊடுருவிய சூரியக் கதிர்கள் அறிவித்தன.

திரிவேணி களைத்துப் போயிருந்தாள். அவளது வாழ்க்கை ஒரே இரவில் இத்தனை அனுபவங்களை ஒரு போதும் சந்தித்திருக்காது.

மெல்ல தலையை நீருக்கு மேல் உயர்த்தினேன்.



சற்று தூரத்தில் ஒரு தீவின் கரை தெரிந்தது. மனம் 'அட' என்று ஒரு துள்ளு துள்ளியது.

நீலவானில் மேகங்கள் மிதந்து கொண்டிருந்தன.. பறவைகள் இசை மயமான கூவல்களை வெளிப்படுத்தி ஆகாயத்தில் பறந்தன. கடல் நீரின் பரப்பு அலைகள் எதுவுமின்றி அமைதியாகத் தெரிந்தது.

மெல்ல எழுந்து நின்றேன். கழுத்தளவு வரை ஆழம் இருந்தது.

"திரிவேணி கம் ஆன். ஏதோ ஒரு தீவின் கரை தெரிகிறது. வெளிப்படையாக எந்த ஆபத்தும் தெரியவில்லை. இந்தத் தீவில் ஒதுங்கலாம் வா..."

கரை.

மேலேறினோம். தென்னைகள் அடர்ந்திருந்தன. காட்டுச் செடிகளும், கொடிகளும், மரங்களும் அடர்ந்திருந்தன. அந்தக் காட்டை ஊடுருவி திரிவேணியை அழைத்துச் சென்றேன். செடிகளின் சலசலப்பு அந்நியர்களைப் பார்த்துவிட்டு பட்சிகளின் கலவரம் கலந்த சிட், சிட்கள்.

மரங்களுக்கு நடுவே ஒரு குகை போன்ற அமைப்பு இருந்தது.

திரிவேணியை அங்கே உட்கார வைத்தேன். அருகில் உட்கார்ந்தேன்.

ஒரே இரவில் திரிவேணி அத்தனையும் இழந்து விட்டாள்.

தன் சுதந்திரத்திற்காக அவள் கொடுத்த விலை மிக அதிகம்.

நாங்கள் இருவரும் விஸ்வநாதனிடம் சிக்காமல் இருப்பதே எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. இது என்ன தீவு என்று தெரியவில்லை. ஆமைத்தீவில் இருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்றும் தெரியவில்லை.

ஆனால் ஒன்று மட்டும் தெரிந்தது.

விஸ்வநாதனோ, அவரது ஆட்களோ இங்கே தேடி வரமாட்டார்கள்.

அவர்களைப் பொறுத்த வரை இயந்திரப் படகு ஒன்றில் பாரியும், திரிவேணியும் தப்பித்துப் போனார்கள். அந்தப் படகு பாறையில் மோதி சுக்கு நூறாகியது.

அதில் பயணம் செய்த பாரியும், திரிவேணியும் தண்ணீரில் விழுந்தார்கள்.

ரத்த காயத்துடன் தண்ணீரில் விழுந்த அவர்களைச் சுறா மீன்கள் சண்டை போட்டுக் கொண்டு கிழித்துக் கிழித்துச் சாப்பிட்டன. எஞ்சியது அவர்கள் அணிந்திருந்த ஆடைகள் மட்டுமே.

கடலில் மிதக்கும் யூனிஃபார்மும், திரிவேணியின் ஆடைகளும் இந்த திரைக்கதையைத்தான் எழுத உதவும்.

திரிவேணி செத்துப் போனதற்காக விஸ்வநாதனுக்கு வருத்தம் இருக்கிறதோ என்னவோ, அவள் தப்பிக்க முடியவில்லை என்பதில் நிச்சயம் சந்தோசம்தான் இருக்கும்.

எனவே விஸ்வநாதனின் ஆட்கள் இங்கே தேடி வரமாட்டார்கள்.

திடீரென்று திரிவேணி 'வீல்' என்று அலறினாள். தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு திரும்பினேன். அவளது



விரல் ஒரு திசையைச் சுட்டிக்காட்ட, அலறல் இன்னும் தொடர்ந்து கொண்டிருந்தது.

அவள் சுட்டிக்காட்டிய திசையில் அந்தத் தீவைச் சேர்ந்த காட்டுவாசி ஒருவன் செடி கொடிகளை நீக்கி முகம் மட்டும் நீட்டி இறுக்கமான முகத்துடன் எங்களைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் கையில் வேல் போன்ற ஒரு ஆயுதத்தை வைத்துக் கொண்டு என்னைக் குறி பார்த்துக் கொண் டிருந்தான்.

நான் சற்று அசைந்தாலும் அவன் வேலை என் மேல் செலுத்துவான் என்பதில் சந்தேகம் இல்லை. அது மட்டுமில்லை. அந்த வேலில் விஷம் தடவியிருக்கும். அது ரத்தத்தில் கலந்தால் நிச்சயம் மரணம்தான்.

நட்பாகச் சிரித்தேன்.

என் சிரிப்பு அவன் முக இறுக்கத்தைத் தளர்த்தியது.

வேலைத் தழைத்தான். பின் சட்டென்று திரும்பி ஓடத் தொடங்கினான். நிர்வாணமாக இருந்தான். இடுப்பில் ஏதோ இலை தழைகளால் ஆன கயிற்றைக் கட்டி அதில் சங்குகளையும் சிப்பிகளையும் கோர்த்திருந்தான்.

''திரிவேணி. அவன் இந்தத் தீவில் இருக்கும் காட்டு வாசி. அந்தமானில் காட்டுவாசிகள் இருக்கும் தீவுகள் நிறைய. இவர்களுக்கு வெளிஉலக நாகரீக மக்களுடன் கலப்பது சம்மதமற்ற ஒன்று. இப்போது இவன் ஓடிப் போனானே! எதற்கு என்று நினைக்கிறாய்? தன் ஆட் களைக் கூட்டி வரப்போகிறான். இவர்களிடம் இருந்து நாம் உயிரோடு தப்பிக்க வேண்டுமானால் ஒரே ஒரு வழிதான் இருக்கிறது என்றேன்'' பரபர குரலில்.

''என்ன?''

''நீ நிறைமாத கர்ப்பிணியாக மாற வேண்டும்.''

''வாட்?''

''உன் வாட் எல்லாம் அப்புறம்! முதலில் உன் வயிறு பெரிதாக வேண்டும்'' என்றேன். மார்பில் ஒளித்து வைத்திருந்த பணக்கற்றைகள் நிறைந்த பிளாஸ்டிக் பையை வெளியே எடுத்தேன். அதைத் திறந்து அதிலிருந்து செல்போனை வெளியே எடுத்தேன்.

திரிவேணியின் ப்ராக்கை அவள் சற்றும் எதிர்பாரா சந்தர்ப்பத்தில் சரேலென்று மேலே தூக்கினேன். திரிவேணி திடுக்கிட்டாள். பின் வெட்கப்பட்டாள். அதையெல்லாம் ரசிக்கும் மனோ நிலையில் நான் இல்லை.

பிளாஸ்டிக் பையை அவள் வயிற்றில் வைத்தேன். பலமாக இருந்த ஒரு காட்டுக் கொடியை கத்தியால் அறுத்து பிளாஸ்டிக் பையை அவள் வயிற்றோடு சேர்த்து வைத்துக் கொடியால் கட்டினேன்.

அவள் ப்ராக்கை மறுபடி பழைய நிலைக்குக் கொண்டு வரக் கொஞ்சம் சிரமமாக இருந்தது. இருப்பினும் கொண்டு வந்து விட்டேன்.

செடி கொடிகள் புதர்கள் அசையும் சத்தம் கேட்டது.

''முகத்தில் பிரசவ வேதனையைக் காட்டு திரிவேணி'' என்றேன்.

அவர்கள் ஆண்களும் பெண்களுமாய் எட்டிப் பார்த்த போது, திரிவேணி வயிற்றைப் பிடித்துக் கொண்டு பிரசவ வேதனையில் துடிதுடித்துக் கொண்டிருந்தாள்.

எட்டிப் பார்த்தவர்கள் அனைவரின் முகத்திலும் கலவரம் குடிகொண்டது.



திரிவேணியை இரண்டு பெண்கள் நெருங்கினார்கள்.

''பயப்படாதே ஒன்றும் செய்ய மாட்டார்கள்'' என்றேன் பற்களுக்கிடையில்.

அவர்கள் இருவரும் இடுப்பில் இலைகளால் ஆன ஆடை ஒன்றைச் சுற்றிக் கொண்டிருந்தார்கள். கருப்பாக பனம்பழங்களைப் போல் மார்பகங்கள்.

அவற்றைக் காட்டும் வெட்கம் அவர்களின் முகங்களில் இல்லை.

திரிவேணியின் வயிற்றைத் தொட வந்தாள் ஒருத்தி. அவளைத் தொடவிடாமல். திரிவேணி அலறிய அலறலில் அவள் கையை இழுத்துக் கொண்டாள்.

இன்னொருத்தி திரிவேணியின் தலையை தன் மடியில் தாங்கினாள்.

காட்டுவாசிகளின் தலைவன் போல் தெரிந்த ஒரு ஆள் என்னை நெருங்கினான்.

தன் உள்ளங்கையில் இருந்த துண்டுச்சீட்டு ஒன்றைக் காட்டினான்.

வெள்ளிமணல் தீவு வாசிகளே... எந்த உதவி வேண்டுமானாலும் நீங்கள் கூப்பிட வேண்டிய எண்... என்று எழுதி கடற்கரைப் படையினரின் எண் ஒன்று கொடுக்கப்பட்டிருந்தது.

தீவுகளில் இருக்கும் மனிதர்கள் மாரடைப்பால் அவதிப்படும் போது, குழந்தைப் பேற்றுக்காகத் துடித்துக் கொண்டிருக்கும்போதும் அவர்கள் ஹெலிகாப்டரை எடுத்து வந்து துன்பப்படும் ஆட்களை போர்ட் ப்ளேயர் மருத்துவமனைக்கு கொண்டு சேர்ப்பார்கள். காட்டுவாசி

களுக்கு இது போன்ற உதவிகளை எல்லாம் செய்வதன் மூலம் அவர்களை இன்றைய நாகரீக உலக மக்களுடன் இணைந்து வாழ வைப்பதற்கான முயற்சிகளில் ஒன்று இது.

இது போல் ஏதாவது ஒரு தகவலுக்காகத்தான் திரிவேணியிடம் பிரசவ வேஷம் போடச் சொன்னேன். நானிருக்கும் தீவின் பெயர் என்னவென்று எப்படிக் கேட்டாலும் அங்கிருக்கும் மக்களால் சொல்ல முடியாது. சொல்லத் தெரியாது.

கடற்படையினர் அடையாளம் காண வசதியாக இந்தத் தீவிற்கு 'வெள்ளி மணல் தீவு' என்று பெயர் வைத்திருக் கிறார்கள். எனக்கு இந்தத் தகவல் ஒன்று போதும்.

செல்போனைக் கையில் எடுத்தேன். அதைத் தூக் கத்தில் இருந்து எழுப்பினேன். சிக்னல் கிடைத்தது. பேட்டரியும் ஃபுல் சார்ஜில் இருந்தது.

ஷீலாவை அழைத்தேன்.

காத்துக் கொண்டிருந்தவளைப் போல் எடுத்தாள்.

''ஆர் யூ ஆல்ரைட் ஷீலா?''

''நான் மிக நன்றாக இருக்கிறேன். விசுவநாதனின் ஆட்களுக்கு நான் வந்து போனதே தெரியாது. நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?''

''பைன்?''

''திரிவேணி?'' - அவள் குரல் தயங்கிப் பின் ஒலித்தது.

''ஃபண்டாஸ்டிக்.''

''எங்கே இருக்கிறீர்கள்?''



''ஸில்வர் ஸாண்ட்ஸ் ஐலண்டில் இருக்கிறோம். இந்தத் தீவில் ஹெலிகாப்டர் இறங்குவதற்கான வசதி இருப்பதாகத் தெரிகிறது. நேவல் போர்ஸில் இருந்து ஹெலிகாப்டர்கள் இங்கே வந்து போவது வழக்கம் என்று தோன்றியது. ஸோ எனக்கொரு ஹெலிகாப்டர் வேண் டும். அதைச் செலுத்தத் திறமையான பைலட் வேண்டும். ஹெலிகாப்டர் இந்தத் தீவில் இருந்து டேக் ஆஃப் ஆனவுடன் சென்னையில்தான் போய் இறங்க வேண்டும். முடியுமா?''

''முடியும். நான் ஒரு ஹெலிகாப்டரை ஏற்கனவே தயார் நிலையில் வைத்திருக்கிறேன். சென்னை வரை செல்ல ஃப்யூயல் ஃபில் பண்ணித் தயாராக இருக்கிறான். பைலட். இன்னும் முப்பது நிமிடங்களில் ஹெலிகாப்டர் ஸில்வர் சாண்ட்ஸ் ஐலண்ட் ரீச் பண்ணிவிடும்.''

ஷீலாவை வாழ்நாள் முழுக்க வியந்து கொண்டே இருக்கலாம்.

''தாங்க்ஸ் ஷீலா. ஆமைத் தீவு செய்தி ஏதாவது தெரிந்ததா?''

''ஸாரி. நோ இன்ஃபர்மேஷன். அதைப் பற்றி ஆராயப் போனால் சந்தேகம் என் பக்கம் திரும்பி விடும். அது நமக்கு ஆகாது என்பதால் ஆமைத் தீவு பற்றி நான் அதிகம் தெரிந்து கொள்ள ஆசைப்படவில்லை.''

''ஓ.கே.'' என்றேன்.

என் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த காட்டு வாசிகளை நோக்கி வானை நோக்கி கையைக் காட்டி இறக்கை அடித்துக் கொண்டு இறங்கப் போவதாக சைகை காட்டினேன்.

காத்திருக்கத் தொடங்கினேன்.

முப்பதாவது நிமிடம்.

வானில் 'டக, டக'வென்று ஹெலிகாப்டரின் ஒலி கேட்டது. காட்டுவாசிகள் ஹெலிகாப்டரை வரவேற்க ஓடினார்கள்.

''திரிவேணி. கெட் ரெடி. நாம் இந்தத் தீவை விட்டு வெளியேறப் போகிறோம். சென்னைக்கு செல்லப் போகிறோம்...''

''உன்னோடு நரகத்திற்குக் கூட நான் வரத் தயார்'' என்றாள் திரிவேணி.

கீழே, கீழே, கீழே என்று ஹெலிகாப்டர் தழைத்தது.

காட்டுவாசிகள் ஒரு ஸ்ட்ரெச்சரை எடுத்து வந்தார்கள். திரிவேணியை அதில் படுக்கச் சொன்னேன்.

நாய் வேஷம் போட்ட பின் கடைசி வரை குரைக்கா விட்டால் எப்படி?

திரிவேணி சிரிப்பை அடக்கிக் கொண்டு அதில் படுத்தாள்.

ஹெலிகாப்டரை நோக்கிச் சென்றோம்.

இறக்கைகளின் மெதுவான சுழற்சியில் காற்று விஷ், விஷ், விஷ என்று விசிலடித்தது.

ஹெலிகாப்டரின் கதவைத் திறந்து கொண்டு ஷீலா இறங்கினாள்.

''ஷீலா... வாட் எ சர்ப்ரைஸ்?'' என்றேன்.

''நான் வருவேன் என்று நீங்கள் எதிர்பார்த்திருக்க வேண்டும். முன் பின் தெரியாத பைலட் கொண்டு வரும் ஹெலிகாப்டரில் நீங்கள் ஏறுவீர்களோ, மாட்டீர்களோ



என்று தான் நான் வந்தேன். ஒரு வேளை இந்த ஹெலி காப்டர் விசுவநாதனுடையதோ என்ற சந்தேகம் உங் களுக்கு வந்து விட்டால்?''

நான் இரண்டு கைகளையும் சேர்த்து மனமாரத் தட்டினேன்.

''இவ்வளவு முன் யோசனையுள்ள ஒரு பெண்ணை நான் வாழ்நாளில் இதுவரை சந்தித்ததே இல்லை ஷீலா...'' என்றேன்.

ஷீலாவின் முகத்தில் செம்மை படர்ந்தது.

ஹெலிகாப்டரில் ஏறினோம்.

சென்னையை நோக்கி அது தன் பயணத்தைத் தொடங்கியது.

## 26

சூப்பு சார் என்னைக் கட்டிப் பிடித்தார்.

அவர் கண்களில் உண்மையாகவே கண்ணீர்.

ஷீலாவை அருகில் அழைத்தார். அவள் தலையை வருடிக் கொடுத்தார்.

''தாங்க்ஸ் ஷீலா...'' என்றார்.

பின் திரிவேணியைப் பார்த்தார். தலை முதல் பாதம் வரை அந்தப் பார்வையில் அபரிமிதமான பாசம் தெரிந்தது.

''ஷீலா உள்ளே கூட்டிப் போய் திரிவேணியிடம் எல்லாவற்றையும் சொல்'' என்றார்.

ஷீலா திரிவேணியை உள்ளே அழைத்துப் போனாள்.

பின் சுப்பு சார் என் பக்கம் திரும்பினார்.

''பாரி. இந்த திரிவேணியை எதற்காக கடத்திக் கூட்டி வரச் சொன்னேன் என்று உனக்குள் கேள்வி இருக்கக் கூடும். முக்கியமான ஒரு காரணம் இருக்கிறது. நியாய மான வாழ்க்கை வாழ்ந்தவன் நான். என் மனைவி. அவளுக்கும் எனக்கும் பிறந்த மூன்று வயதுக் குழந்தை. ஆனந்தமான வாழ்க்கை அது. என் மனைவி தேவதை போல இருப்பாள். வெகு அழகாக இருப்பாள். என்னிடம் ஒரு தாசி போல் நடந்து கொண்டாள். அந்த விசுவநாதன் என் மனைவியை அவனுடைய உரிமையாக மாற்றிக் கொள்ளத் தீர்மானித்தான். மனைவியையும், மகளையும் கடத்திப் போய் விட்டான். ஆச்சரியப்படாதே. விசுவநாதன் அப்போதே பணம் படைத்த ஒரு பொறுக்கி. என் மனைவி அவனுடைய நோக்கத்திற்கு இடம் கொடுக்காமல் தற்கொலை செய்து கொண்டாள். என்னை தாதாவாக மாற்றியதே விசுவநாதன்தான். அவனிடம் நான் என் மகளை மீட்டு விடுவதாகச் சபதம் போட்டேன். திரிவேணியை அவனிடம் இருந்து நான் மீட்டு விட்டால் விசுவநாதன் தற்கொலை செய்து கொள்வதாகப் பதிலுக்கு சபதம் போட்டான். திட்டமிட்டேன். மெதுவாக. ஷீலா என்னிடம் வந்து சேர்ந்தாள். அவள் ஒரு கால் கேர்ள். உயிர் போகும் சிக்கல் ஒன்றிலிருந்து அவளை விடுவித்தேன். அதனால் அவள் எனக்கு அடிமையாகி விட்டாள். திரி வேணியைக் கடத்தி வரவேண்டுமென்று அவளிடம்



தான் முதலில் சொன்னேன். திரிவேணி ஆமைத் தீவில் இருப்பது எனக்குத் தெரியும். ஷீலா அந்தமானில் செட்டி லானாள். அதன் பின் உன்னைச் சந்தித்தேன். திரி வேணியைக் கடத்திவர நீதான் சரியான ஆள் என்று தீர்மானித்தேன். உன்னை அனுப்பினேன். நீ என் மகளை மீட்டு வந்து விட்டாய். என் மனைவியின் ஆத்மா திருப்தி அடைந்திருக்கும். உனக்கு இன்னும் ஒரே ஒரு கட்டளை இடப் போகிறேன். மறுக்காதே என்ன?''

பிரமிப்பின் உச்சத்தில் இருந்தேன்.

''நீங்கள் உயிரைத் தரச் சொன்னாலும் தருவேன் பாஸ்.''

''உயிர் எல்லாம் வேண்டாம். திரிவேணியை கல் யாணம் செய்து கொடுக்கிறேன். அவளை வாழ்நாள் முழுக்க சந்தோஷமாக வைத்திருக்க வேண்டும். இது என் கட்டளை என்ன?''

மயங்கி விழாமல் இருந்தது ஆச்சரியமே.

# நீ வேறு, நான் வேறு

## 1

பாஸ்கரன் யமஹாவை சாய்த்து ஸ்டாண்ட் போட்டான். பெல்ட்டை வளையங்களுக்குள் சரிப்படுத்தினான். ரெஸ்ட்டாரண்ட்டின் நியான் வெளிச்சம் அவன் மீது விழுந்து புரண்டது.

சாம்பல் சீருடை அணிந்த பணியாளன் மரியாதை செலுத்தி டோக்கன் கொடுத்தான்.

பாஸ்கரன் பளிங்குப் படிகளில் ஏறினான்.

தடிமனான கரிய கண்ணாடிக் கதவுகளை திறந்து பிடித்தான் இன்னொரு பணியாளன்.

நன்றி சொல்லி உள்ளே நுழைந்தான்.



அடக்கப்பட்ட வெளிச்சத்தில் செயற்கைச் செடிகள் பூத்திருந்தன. ஜலபல என்று சப்தித்துக் கொண்டு ஒரு செயற்கை நீரூற்று இயங்கிக் கொண்டிருந்தது. நிறைய இடைவெளிகள் விட்டு மேஜைகள் போடப்பட்டிருந்தன. கனமான குஷன் பதித்த சோபாக்கள் வாடிக்கையாளர்களின் பாரத்திற்காகக் காத்திருந்தன.

பாஸ்கரன் கண்களை அலைய விட்டான்.

இங்கே வா என்று கடைசி மேஜையிலிருந்து கையசைப்பு வந்தது.

பதிலுக்கு கை உயர்த்திவிட்டு அந்த மேஜைக்கு நடந்தான். நெருங்க நெருங்க கையசைத்தவரின் முகத்தில் வெளிச்சம் கூடியது. புன்னகை விரிந்தது.

''உட்கார் பாஸ்கர்... எப்படியிருக்கே?''

மேஜைக்கு மறுபுறம் இருந்த ஒற்றை சோபாவில் அமுழ்ந்தினான்.

''நல்லா இருக்கேன் அப்பா. நீங்க எப்படி இருக்கீங்க?'' என்றான், குரலில் உண்மையான அக்கறை இல்லாமல்.

அவரை நெருக்கத்தில் பார்த்தபோது சென்ற முறை பார்த்ததைவிட சற்றே செழித்திருந்தார்.

''சொல்லுங்கப்பா... பேசணும்னு வரச் சொன்னீங்களே...''

''என்ன பாஸ்கர், இப்படி மூணாம் மனுஷன் மாதிரி கேக்கறே? பதினைஞ்சு மாசம் கழிச்சு சந்திக்கிறோமே, அப்பாகிட்ட பேசறதுக்கு உன்கிட்ட விஷயமே இல்லியா?''

''வரச் சொன்னது நீங்கதானப்பா?''

''உனக்கு எம்மேல கோபம் தீரலை...''

''கோபப்படற உரிமையெல்லாம் கூட எனக்கு இருக்கா என்ன?''

''ஏய்! மூடை மாத்திக்க. இப்படி ஒவ்வொரு வார்த்தையும் காட்டமாப் பேசிட்டிருந்தா, இந்த மாலைப் பொழுதே வீணாப் போயிடும்...''

''ஈ... ஈ... ஈ...''

''அதுக்காக சிம்பன்ஸி மாதிரி நீ சிரிச்சுக் காட்ட வேண்டாம்... அதுக்கு முன்னால... நீ என்ன சாப்பிடறே?''

மெனு கார்டை அவன் பக்கம் தள்ளினார்.

அப்பாவின் முகத்தைப் பார்ப்பதை விட அந்த மெனு கார்டைப் புரட்டுவது அவனுக்கு சுலபமாயிருந்தது.

டை கட்டிய நபர் அருகில் வந்து நின்றார். அவர் சொன்ன அயிட்டங்களைக் குறித்துக் கொண்டார். அவன் அப்பாவும் தனக்கு வேண்டியதைக் குறிப்பிட்டார்.

ஆர்டர் எடுத்தவர் நகர்ந்ததும், அவர் ஆரம்பித்தார்.

''உன் பிஸினஸ் நல்லா பிக்அப் ஆகியிருக்குன்னு கேள்விப்பட்டேன். வெரிகுட்...''

''என் பிஸினஸைப் பத்திப் பேசக் கூப்பிடலைன்னு தெரியும்ப்பா...''.

''இப்ப உனக்கு என்ன அவசரம்? கொஞ்சம் நிதானமாத்தான் பேசலாமே... ரிலாக்ஸ்டா இரு பாஸ்கர்.''

அவர் முகத்தில் ஒரு சின்ன கவலை இருந்தது. அவன் தோள்களைக் குலுக்கினான்.

''பாஸ்கர், உனக்கு என் மேல பாசமே இல்லாம போயிடுச்சு இல்ல?''

''உங்க வயசு எவ்வளவுப்பா?''



''ஏன்?''

''சொல்லுங்க...''

''நாற்பத்தி மூணு.''

''என் வயசு?''

''இருபத்திரெண்டு...''

''இந்த இருபத்திரெண்டு வருஷத்துல எத்தனை நாள் என்கூட சேர்ந்து இருக்கீங்க? எத்தனை நாள் நாம சேர்ந்து சாப்பிட்டிருக்கோம்? எத்தனை தடவை என்னை வெளியே அழைச்சிட்டுப் போயிருக்கீங்க? இருபத்தி ரெண்டு வருஷத்துல எனக்காக எத்தனை நேரம் ஒதுக்கியிருக்கீங்கப்பா?'' - பாஸ்கரனின் குரல் உயரவில்லை. ஆனால் அதில் வேகம் இருந்தது. அழுத்தம் இருந்தது.

''பாஸ்கர், உனக்கு என் நிலைமை தெரியும். என் பிஸினஸ் எப்படி என்னை இழுத்துப் பிடிச்சிருந்ததுன்னு தெரியும். எனக்கு எங்கே நேரம் இருந்தது?''

''பிஸினஸ்! அந்த பிஸினஸ் என்ன ஆச்சுப்பா?''

''பிஸினஸ்னாலே ஏத்தம் இருக்கும். இறக்கம் இருக்கும். பாஸ்கர், என் பிஸினஸ் கவுந்து போச்சு. அது என் தப்பா?''

''ஏத்தம் எங்கப்பா இருந்தது? அம்மாவோட நகை, அம்மா பேர்ல தாத்தா எழுதி வச்ச வீடு எல்லாத்தையும் உறிஞ்சி சாப்பிட்டு ஏப்பம் விட்டுச்சே தவிர ஏத்தம் எங்கப்பா இருந்தது? அம்மா உயிரோட இருந்திருந்தா அந்த வீட்டை அப்படி அழிச்சிருக்க முடியுமா உங்களால?''

''முடிஞ்சு போன கதையைப் பேசறதால லாபமில்ல பாஸ்கர். உன்கூட இல்லைன்னு வேணா நீ குறைப்பட்டுக்கலாம். ஆனா உன்னை கவனிச்சு வளர்க்கறதுக்கு நான் தவறினதேயில்ல...''

''தி கிரேட் தங்கதுரையோட மகன் நாலு வயசுலேர்ந்தே ஹாஸ்டல்ல தங்கிப் படிச்சான்கறது உங்களுக்குப் பெருமைன்னு நெனைச்சிட்டீங்க. மணி அடிச்சா எழுந்துக்கணும், மணி அடிச்சா சாப்பாடு, மணி அடிச்சா தூங்கணும்னு நீங்க ரெண்டு வருஷம் வாழ்ந்து பாருங்க. அப்பத்தான் இருபது வருஷமா நான் அனுபவிச்சது உங்களுக்குப் புரியும்...''

''என் கூட சண்டை போடணும்னு பிளான் பண்ணிட்டு தான் வந்தியா?'' - தங்கதுரையின் குரல் தாழ்ந்து இருந்தது. ''ஒருவேளை உங்கம்மா உயிரோட இருந்திருந்தா இந்த நெலமை வந்திருக்காதோ என்னவோ! ஒத்தை ஆளா நான் பிஸினஸைப் பார்ப்பேனா, இல்ல உன்னைப் பார்ப்பேனா? என் ஸப்போர்ட் உனக்குத் தேவையின்னு நெனைச்ச வரைக்கும் உனக்குத் தேவையானது கெடைக்க ஏற்பாடு பண்ணிட்டுதான் இருந்தேன், பாஸ்கர்... நீ யுனிவர்ஸிடில தங்க மெடல் வாங்கினே, காலேஜ்லயே உன்னை வந்து கொத்திட்டுப் போக கம்பெனில்லாம் தயாராயிருந்தது. இப்ப நீ உன் கால்ல நிக்கறே... சந்தோஷமா இருக்கு. சூப் வந்திருக்கு பார். சாப்பிடு.''

பாஸ்கர் ஒரு பீங்கான் கோப்பையை அவர் பக்கம் நகர்த்தினான்.

சற்று நேரம் உணவு வகைகளுடன் கழிந்தது.

''உன் பிஸினஸ் எப்படியிருக்கு பாஸ்கர்?''

''நல்லா இருக்குப்பா. மூணு பார்ட்னர்ஸ்க்குள்ளும் ஒத்துப் போகுது. பிரச்னை இல்ல. இன்னும் ரெண்டு மூணு மாசத்துல ஜப்பான் போக வேண்டியிருக்கும்.''

''ஈஸிட்? பிஸினஸ் விஷயமாவா?''



''ஆமாம். எங்க ஸாஃப்ட்வேரை அவங்க கேட்டிருக்காங்க. யு.எஸ்.லேயும் ஒரு பெரிய கம்பெனியோட பேச்சு வார்த்தை நடந்திட்டிருக்கு...''

''சந்தோஷமா இருக்கு...''

''இன்னிக்கு சந்திச்சே ஆகணும்னு கூப்பிட்டீங்களே, என்ன விஷயம்னு இனிமே பேசலாமாப்பா?''

''பாஸ்கர்'' - தங்கதுரை தன் ருமாலி ரொட்டியின் ஒரு ஓரத்தைக் கிழித்து அதைப் பார்த்தபடி பேசினார். ''நீ ஓரளவுக்கு முன்னுக்கு வந்தாச்சு... எப்ப கல்யாணம், பாஸ்கர்.''

''பொண்ணு ஏதாவது பார்த்து வச்சிருக்கீங்களா?''

''ஆமாம், பாஸ்கர்'' தங்கதுரை தலையைக் குனிந்து கொண்டார். ''ஆனா உனக்கு இல்ல... எனக்கு!''

# 2

''அப்ப நான் கேள்விப்பட்டது உண்மைதானாப்பா?'' பாஸ்கர் பார்வையை நிமிர்த்தி அவர் விழிகளுக்குள் செலுத்தினான்.

''என்ன கேள்விப்பட்டே?'' அவர் அவன் பார்வையை எதிர்கொள்ள முடியாமல் தடுமாறினார்.

''நீங்க மேனேஜரா இருக்கற கம்பெனியோட மொத லாளி ஒரு விதவை. அவங்ககிட்ட எக்கச்சக்க சொத்து இருக்கு. அவங்க எப்படியோ உங்க வலைல விழுந்துட்டாங்கன்னு சொன்னாங்க...''

''வலைல விழுறது அது இதுன்னு மலிவாப் பேசாதே பாஸ்கர்... அவளுக்கு என்னைப் பிடிச்சிருக்கு. எனக்கு அவளைப் பிடிச்சிருக்கு...''

''அவங்களுக்கு என்ன வயசுப்பா?''

''முப்பது இருக்கலாம்.''

''சொத்து எவ்வளவு தேறும்?''

''பாஸ்கர்!''

''என் அப்பாவோட மனைவிக்கு எவ்வளவு சொத்து இருக்குன்னு நான் தெரிஞ்சுக்கறது தப்பா?''

''ஆரம்பத்துலேர்ந்து நீயும் நானும் தனித் தனியாவே வாழ்ந்துட்டோம், பாஸ்கர். அதனால உனக்கு என்னை அப்பாவா ஒத்துக்கறதே கஷ்டமாயிருக்கு. தப்பு எம்பேர்ல இருக்கலாம்... ஆனா உன்னை விட்டா எனக்கு வேற யாரும் உறவுன்னு கெடையாது. அதனால என் சுக துக்கத்தையெல்லாம் உன் கூட பகிர்ந்துக்கணும்னு தோணுது. ஒரே ஊர்ல இருந்தாலும் ரெண்டு பேரும் தனித்தனியா இருக்கோம். மூஞ்சி பாத்துக்கறது கெடை யாதுங்கறதால உறவு விட்டுப் போயிடுமா, பாஸ்கர்?''

''நீங்க என் கேள்விக்கு பதில் சொல்லாம எங்கெங்கோ சுத்தறீங்க...''

''மீராவுக்கு எவ்வளவு சொத்துன்னு தெரிஞ்சு என்ன ஆகப் போகுது? மூணு, நாலு கோடிக்கு மேல இருக்கும்னு வச்சிக்க.''

''கங்கிராட்ஸ்ப்பா... வழக்கமா மகன் கல்யாணத்துக்கு அப்பா இன்விடேஷன் அடிப்பாரு. இப்ப உங்க கல் யாணத்துக்கு என் பேர்ல அழைப்பிதழ் அடிக்கட்டுமா?''

''கேலியா இருக்கு உனக்கு!''



''எப்ப கல்யாணம்?''

''பதினேழாம் தேதி...''

''இன்னும் ரெண்டே நாள்ல! வெரிகுட்... என் உதவி ஏதாவது தேவையா?''

''நீ கல்யாணத்துக்கு வந்தா போதும். வரல்லேன்னா ஒவ்வொருத்தன் ஒவ்வொரு மாதிரி பேசுவான்...''

''வரேம்ப்பா...''

''உனக்கு பிஸினஸ்க்கு ஏதாவது பணம் வேணும்னா என்கிட்ட தாராளமா கேளு பாஸ்கர். கூச்சப்படாதே...''

''மீராவோட பணம் வரதுக்கு முன்னாலேயே உங் களுக்கு அந்த பந்தா வந்துருச்சுப்பா...''

''நீ என்னை ரொம்ப மலிவா நெனைச்சிருக்கே...''

''ஸாரிப்பா... வேற மாதிரி நெனைக்கத் தோணலை...''

தங்கதுரை அவனை அழுத்தமாகப் பார்த்தார். அவனைக் கோபிக்க முடியாமல் அவர் தடுமாறுவது புரிந்தது.

சிறு பிஸினஸ் பெட்டியைத் திறந்து அழைப்பிதழை அவனிடம் கொடுத்தார்.

வாங்கினான். பிரித்துப் பார்க்கக் கூட இல்லை.

கோப்பை சுடுநீரில் விரல்களை நனைத்துக் கழுவிக் கொண்டான். பில் வந்தது.

''நான் கொடுக்கிறேன்'' என்றார், தங்கதுரை அவசர மாக.

''அதான் கல்யாண சாப்பாடே போடப் போறீங்களே'' என்று சிரித்து பில்லுக்கும், டிப்ஸிற்கும் சேர்த்து பணத்தை வைத்தான்.

எழுந்தான். ''கல்யாணத்துல பாக்கலாம்ப்பா...''

அவர் சாப்பிட்டு முடித்தாரா இல்லையா என்று கூடப் பார்க்கும் பொறுமையற்றவனாக அந்த ரெஸ்ட்டாரண்டை விட்டு வெளிப்பட்டான்.

பைக்கை நிறுத்தியிருந்த இடம் நோக்கி நடந்தான்.

# 3

செந்தில்குமார் சிகரெட்டைப் பற்ற வைத்தான்.

''ஓவர்நைட்டுல கப்புனு ஒரு பணக்கார வாரிசா ஆயிட்டியா, பாஸ்கர்?'' என்றான், சிரித்து.

''ஏய்... வாரிசுன்னு எப்படிரா சொல்ல முடியும்? அவங்கப்பா ஒரு பணக்கார மம்மியைக் கூட்டிட்டு வந்திருக்காருன்னு வேணா சொல்லலாம்...'' என்று அதே சிகரெட்டை செந்திலிடமிருந்து வாங்கிப் புகைத்தான், மனோகர்.

''வாரிசும் இல்ல, மம்மியும் இல்ல. அவருக்கு ஒரு பொண்டாட்டி தேவைப்படுது. அவர் கல்யாணம் பண்ணிக்கறாரு. நான் வெறும் கெஸ்ட்... அவ்வளவுதான்.'' என்றான், பாஸ்கரன் தலையணையை மடியில் அழுத்திக் கொண்டு. ''எனக்கு சந்தோஷமாவும் இல்ல... வருத்தமாவும் இல்ல... அந்த மீராவை நெனைச்சாத்தான் கொஞ்சம் கவலையா இருக்கு...''

''எப்படிடா அந்த பார்ட்டியை உங்கப்பா வளைச்சாரு?''

''எங்கப்பாவுக்கு எப்பவுமே அந்த ராசி உண்டு... எங்கம்மா செத்ததும் என்னை ஊட்டி ஹாஸ்டல்ல கொண்டு



போய் விட்டுட்டு தனியாளாத்தான் வாழ்க்கை நடத்தினாரு. தனியாளான்னா பிரம்மச்சாரியான்னு அர்த்தம் இல்ல. அவருக்கு கம்பெனி கொடுக்கறதுக்கு அப்பப்ப யாராவது ஒரு பொண்ணு ரெடியாத்தான் இருந்தா...''

''அவரைப் பார்த்தா வயசே தெரியலைடா... கும்முனு ஹீரோ மாதிரிதான் இன்னிக்கும் இருக்காரு'' என்றான், செந்தில்குமார்.

''மூணு கோடி சொத்துன்னா சொன்னாரு? தப்பு, பாஸ்கர்... அந்த பொம்பளைக்கு இருபது, இருபத்தஞ்சு கோடிக்கு சொத்து இருக்கும். மருந்து தயாரிக்கற யூனிட்டே பன்னெண்டு கோடிக்கு மேல மதிப்பிருக்கும்.''

''பொய் சொல்வாருடா... எங்கப்பா என்ன வேணா பொய் சொல்வாரு. விடு. அவ்ரைப் பத்தியே எதுக்கு பேசிக்கிட்டு?''

''உங்காளுகிட்ட சொல்லிட்டியா?''

''யாரு... அபர்ணாகிட்டயா?''

''ம்...''

''சொல்லல... கல்யாணம் முடிஞ்சப்புறம் சொல்லலாம்னு நெனைக்கறேன்...''

''ஏண்டா, அவ உன்னை விட்டுட்டு உங்கப்பாவைக் கொத்திக்கிட்டு போய்டுவான்னு பயமா?''

''அபர்ணா சாதாரண கம்ப்யூட்டர் ஆப்பரேட்டர்டா... அவகிட்ட கோடி கோடியா சொத்தா இருக்கு? அவளே வந்து மேல விழுந்தாலும் எங்கப்பா திரும்பிப் பார்க்க மாட்டாரு... நௌ ஸ்டாப்! இந்த பேச்சை இனிமே பேச எனக்கு இஷ்டமில்ல. நம்ப கம்பெனி மேட்டரைப் பேசுவோம்... ஜப்பானுக்கு யார் போகலாம்?''

பாஸ்கர் சட்டென்று பேச்சை மாற்றியவுடன், மற்ற இருவரும் சிகரெட்டைப் புகைத்துவிட்டு சீரியஸானார்கள்.

மூன்று பேரும் நெருங்கிய நண்பர்களாயிருந்ததால், பங்குதாரர்களாயிருப்பதில் எந்தப் பிரச்சனையும் இல்லாதிருந்தது. நட்பிற்கு இருக்கும் பலமும், சௌகர்யமும் சொந்த சகோதரர்களுக்குள் கூட கிடைப்பது அரிது.

யாருடைய சட்டையை யார் வேண்டுமானாலும் எடுத்துப் போட்டுக் கொள்ளலாம். யாருடைய பர்ஸிலிருந்தும் யார் வேண்டுமானாலும் பணம் எடுக்கலாம், வைக்கலாம். பாஸ்கரனுக்கு சிகரெட் பழக்கமில்லை என்றாலும் நண்பர்களுக்கான சிகரெட் பாக்கெட் எப்போதும் அவன் சட்டையிலும் இருக்கும்.

செந்தில்குமாரின் பெற்றோர் கோவையில் மனோகரனின் பெற்றோர். மகாராஷ்ட்டிராவில் எனவே மூன்று பிரம்மச்சாரிகளாக சேர்ந்து ஒரு சம்சாரம் உருவாகியிருந்தது.

நேரமிருந்தால் மூவருமாக சேர்ந்து சமைப்பார்கள், அல்லது சீட்டு விளையாடுவார்கள், அல்லது சினிமா போவார்கள். கம்பெனிக்கு லீவு விட வேண்டிய நிர்ப்பந்தமான நாட்களில் சட்டென்று நீர் வீழ்ச்சி, அணைக்கட்டு என்று எங்கேயாவது டூர் கிளம்பி விடுவார்கள்.

''ஹனிமூனில் கூட நண்பர்களை அழைச்சிட்டு வருவீங்க போலருக்கே'' என்று அபர்ணா கூட பாஸ்கரை அவ்வப்போது கேலி செய்வாள்.

''பாஸ்கர்... நீ அந்த மீராவைப் பார்த்திருக்கியா?'' என்றான், செந்தில்குமார்.

''மறுபடியும் ஆரம்பிச்சாச்சா?''



''சொல்லுடா... பார்த்திருக்கியா?''

''இல்ல... பார்க்கற சந்தர்ப்பம் கெடைக்கல... கல்யாணத்துக்குப் போனா பார்க்கப் போறேனே...''

''நான் பார்த்திருக்கேன். அவங்க கம்பெனிக்கு ஸாஃப்ட்வேர் விஷயமா ஒரு தடவை கொட்டேஷன் கொடுக்க நேர்லயே போயிருக்கேன். அவளை நீ நேர்ல பார்த்தாதான் உனக்குப் புரியும். அந்தப் பொண்ணை எப்படி உங்கப்பா தேர்ந்தெடுத்தார்னு ஆச்சரியம் வரும்.''

''அவளை எங்கேடா எங்கப்பா தேர்ந்தெடுத்தார்? அவ பணத்தைத்தானே தேர்ந்தெடுத்தார். இதப் பாரு, மறுபடியும் டாபிக் அந்தப் பக்கம் போகுது. வேணாம்... எனக்கு அவர்களைப் பத்திப் பேசப் பிடிக்கல...''

''ஸாரி... இனிமே பேசல...'' செந்தில்குமார் வாயைத் தன் கையால் பொத்திக் கொண்டான்.

செந்தில்குமாரை அடக்கி விட்டால் கூட, பாஸ்கரனுக்கு உள்ளுக்குள் இப்போது ஒரு ஆர்வம் வந்து விட்டது.

மீரா எப்படி இருப்பாள்?

# 4

மீரா போனை வைத்துவிட்டு நிமிர்ந்தாள்.

எதிரே இருந்த பெரிய கண்ணாடி அவளைப் புரட்டிப் பிரதிபலித்தது.

ஒருபுறம் குறுகலாய், ஒருபுறம் அகலமாய் இருந்த கோணல் நெற்றி. சற்றே விடைத்த மூக்கு; எப்போதும்

பருக்களை சுமக்கும் கன்னங்கள். முடிச்சிட்ட புருவங் களுக்குக் கீழ் ஒவ்வொன்றும் திசை தப்பிய இரு விழிகள். மூடிய பிறகும் சற்றே கோணலாக நெளியும் உதடுகள். உள்வாங்கிய முகவாய். நரம்பு தெரியும் கழுத்து.

கடவுள் ஏன் எல்லா அசிங்கங்களையும் என் முகத்தி லேயே முயற்சி செய்து பார்த்திருக்கிறான்?

''என்ன மீரா பார்க்கறே?'' தங்கதுரை அவளைப் பின்னா லிருந்து வந்து அணைத்தார்.

''இந்த அசிங்க மூஞ்சியை உங்களுக்கு எப்படிங்க பிடிச்சது?''

''முட்டாள். இந்த அழகுதான் எனக்குப் பிடிச்சது. எல்லாம் சீரா அளவெடுத்த மாதிரி இருந்தாத்தான் அழ குன்னு யார் சொன்னது? நான் பார்த்தது உன் மூஞ்சியை இல்ல மீரா. உன் இதயத்தை...''

''எவ்வளவு லக்கி நான்!''

''உன்னை விட நான்தான் லக்கி, மீரா...''

தங்கதுரை அவள் முதுகில் மெல்ல விரல்களை நடத்தி இறக்கினார்.

அவள் சிலிர்த்தபோது அவள் முகத்தை அண்ணாத்தி உதடுகளில் சின்னதாக ஒரு முத்தம் பதித்தார்.

''பாஸ்கர்கிட்ட சொல்லிட்டீங்களா?'' என்றாள், மீரா.

''சொல்லியாச்சு!''

''என்ன சொன்னான்...?''

''அவன் என்ன நெனைக்கறான்னு என்னிக்குமே எனக்குத் தெரிஞ்சது கிடையாது... கல்யாணத்துக்கு வரேன்னு சொல்லியிருக்கான், மீரா...''



''நாளைக்குக் கல்யாணம்னு நெனைச்சாலே எனக்கு சிலிர்க்குது, டியர்'' - மீரா தன் கைகளை வளைத்து தங்கதுரையின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

கிண்ணென்று எவ்வளவு உறுதியான ஆண்மகன்!

இந்த கம்பீரமான கவர்ச்சி நாளை முதல் எனக்கே சொந்தம் என்ற நினைப்பே அவளை சிலுப்பியது.

''கல்யாணம் முடிஞ்ச கையோட கம்பெனியோட பொறுப்பு அத்தனையையும் உங்ககிட்ட தூக்கிக் கொடுத் துடப் போறேன், டியர்.''

''அவசரப்படாதே மீரா. ஏற்கெனவே உன் பணத்துக் காகவும், சொத்துக்காகவும்தான் நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கறேன்னு ஆபீஸ்ல ஒரு கெட்ட பேர் இருக்கு.''

''பேசறவங்க பேசிட்டுப் போகட்டும். எல்லாத்துக்கும் நம்மளைப் பார்த்து பொறாமை...''

''நான் மேனேஜராவே இருக்கேன். நீ முதலாளியாவே இரு... ஆறு மாசம் போகட்டும். அப்புறம் முழு பொறுப்பு என்கிட்ட கொடுக்கறதா வேண்டாமான்னு நீ முடிவு செய்யலாம்...''

''ஏன் பேத்தறீங்க? என்னையே முழுசா உங்ககிட்ட கொடுக்கப் போறேன். இந்தக் கம்பெனிதான் பெரிசா? வக்கீலைக் கூப்பிட்டு அத்தனை சொத்தையும் இன் னிக்கே உங்க பேருக்கு மாத்திரவா?''

''ஐயையோ!'' தங்கதுரை அவளைத் திருப்பினார்.

''உனக்கு எம்மேல நம்பிக்கை இருக்கு... எனக்கு உம்மேல ஆசை இருக்கு... குறுக்கே ஒரு வக்கீல் எதுக்கு? பத்திரம் எதுக்கு? கல்யாணத்தைப் பத்தி மட்டும்

பேசுவோம். என்ன நகைல்லாம் நாளைக்குப் போட்டுக்கப் போறே மீரா?''

''நீங்களும் என்கூட லாக்கருக்கு வாங்க... நீங்களே தேர்ந்தெடுத்து கொடுங்க'' என்று அவர் கன்னத்தில் தன் உதடுகளைத் தேய்த்தாள், மீரா.

நுங்கம்பாக்கத்தில் ஒரு தனியார் கம்பெனியின் லாக்கர் கட்டிடத்திற்குள் மாருதி ஜென் நுழைந்தது. நின்றது.

தங்கதுரை இறங்கி கதவு திறந்தார்.

மீரா இறங்கினாள். அவருடன் கை கோர்த்துக் கொண்டாள். செக்யூரிட்டி ஆள் விறைப்பாகி மரியாதை செலுத்தினான். கதவு திறந்தான்.

உள்ளே நுழைந்ததம், ரிசப்ஷனில் இருந்த பெண் இரு கைகளும் கூப்பினாள்.

''வணக்கம் மேடம். ரொம்ப நாளா காணோம்?'' என்று புன்னகைத்தாள்.

எவ்வளவு அழகாய் இருக்கிறாள். இவள்! அதுவும் புன்னகைக்கும்போது எப்பேர்ப்பட்ட பல் வரிசை! மீரா அவளை ரசித்துக் கொணடே பதில் புன்னகை செய்தாள்.

''லாக்கர் ஆப்பரேட் பண்ணணுமா மேடம்?''

''யெஸ்... லாக்கர் நம்பர் 222.''

''ஒன் மினிட் மேடம்...''

அந்தப் பெண் தன் கீ போர்டில் படபடவென்று சில எழுத்துக்களைத் தட்டினாள். வாடிக்கையாளர்களின் வசதிக்கென வைத்திருந்த இன்னொரு கீபோர்டைக் காண்பித்தாள். ''உங்க பாஸ்வேர்டைப் போடுங்க மேடம்'' என்றாள்.



மீரா தன் லாக்கருக்குரிய சங்கேத வார்த்தையை அந்த கீ போர்டில் தட்டினாள்.

கம்ப்யூட்டர் பீப் என்று ஒரு ஒலி எழுப்பியது. அதன் நினைவில் பதிக்கப்பட்ட சங்கேத வார்த்தையுடன் அவள் தட்டிய வார்த்தையை ஒப்பிட்டுப் பார்த்து, உள்ளே போகலாம் என்று அனுமதி அளித்தது.

''குட் டே மேடம்... நீங்கள் உள்ளே போகலாம்.''

இடது புறம் சிறு பாதை. நடந்ததும், கனத்த இரும்புக் கதவைத் திறந்து விட ஒரு பணியாள்.

உள்ளே நுழைந்ததும், 'வெல்கம் மேடம்' என்று வரவேற்கும் இன்னொரு யுவதி.

தங்கதுரை முதல் தடவையாக இப்போது இந்த லாக்கர் அடுக்குகளைப் பார்த்தார். பெரிய பெரிய லாக்கர்கள். உயரமான லாக்கர்களை அணுகுவதற்கு ரப்பர் சக்கரங்கள் பொருந்திய வசீகரமான ஏணிகள்.

வலதுபுறத்தில் மத்தியில் இருந்தது மீராவின் 222.

கம்பெனி பெண் தன்னிடமிருந்த சாவி போட்டு ஒருபுறம் திருகினாள். மறுபுறம் மீரா தன்னிடமிருந்த சாவி நுழைத்துத் திருக, க்ளிக் என்ற ஒலி கேட்டது.

மீரா லாக்கரைத் திறந்திருக்கும் போது அதில் உள்ளதை மற்றவர்கள் பார்க்க இயலாதபடி இரண்டு பக்கமும் மரத்தாலான தள்ளு திரைகளை நகர்த்தி நிறுத்தினார்கள்.

மீரா லாக்கரிலிருந்து ஒவ்வொரு நகைப் பெட்டியாக வெளியே எடுத்தாள்.

அங்கிருந்த வசதியான நகரும் மேஜையில் அவற்றைப் பரப்பினாள்.

''என்கிட்ட இருக்கற கலெக்ஷன் இதுதான், டியர். இதுல நாளைக்கு நான் எதைப் போட்டுக்கணும்னு சொல் லுங்க...'' என்றாள்.

தங்கதுரை ஒவ்வொன்றாகத் திறந்தார்.

முத்து நெக்லஸ், கற்கள் பதித்த கல்நெக்லஸ், வைரங் கள் பதித்த வைர நெக்லஸ், தடிமனான தங்கச் சங்கிலி, அதில் கோர்க்கும் வகை வகையான தங்க டாலர்கள் என்று ஒவ்வொன்றைப் பார்க்கும்போதும் பிரமிப்பு வந்தது.

''எனக்கு நகைன்னா கொஞ்சம் பலவீனம்...'' என்றாள், மீரா. ''மார்க்கெட்ல ஏதாவது புது டிஸைன் வந்திருந்தா உடனே வாங்கிடுவேன். அதனாலதான் கலெக்ஷன் அதிகமாயிருச்சு...''

''எல்லாமே உனக்கு ரொம்பப் பொருத்தமா இருக்கும், மீரா...''

''இந்த மயில் நெக்லஸை இன்னும் நீங்க பார்க்கலியே... இதையும் பார்த்துடுங்க'' என்று லாக்கரிலிருந்து சற்று அகல மான ஒரு நகைப் பெட்டியை வெளியே எடுத்தாள் மீரா.

தங்கதுரை நடுங்கும் விரல்களால் மெல்ல அந்தப் பெட்டியைத் திறந்தார். திறந்ததும் -

அவர் மீது மின்னல்கள் வாரியிறைக்கப்பட்டன. கண்கள் கூசின. ஒற்றைக் கல்லில் துவங்கி பதினான்கு கற்கள் வரை வரிசையாகப் பதிக்கப்பட்டிருந்த வைரங் களில் மெலிதான நீல நெடி இருந்தது. நடுவில் பதக்கம் போல் இருந்த அமைப்பில் வைரம் தவிர நீலம், பச்சை இரு நிறக் கற்களும் பதிக்கப்பட்டிருந்தன.

''இது மும்பைல வாங்கினது'' என்றாள், மீரா. ஒரு பிரபல இந்தி நடிகையின் பெயர் சொல்லி, ''அவ இந்த



டிஸைன் நெக்லஸ் போட்டுட்டு ஒரு விழாவுல பரிசு வாங்கறதை டி.வி.ல பார்த்தேன். அடுத்த வாரமே மும்பை போய் அந்த நெக்லஸ் பண்ணின அதே ஜுவல்லரியைப் பிடிச்சு, அவளை விட இருபது கல்லு கூடவே பதிக்கச் சொல்லி ஆர்டர் கொடுத்தேன்.''

ஒரு குழந்தையின் குதூகலத்துடன் அவள் தன் ஆர்வத்தைத் தெரியப்படுத்தினாள்.

தங்கதுரை அந்த நெக்லஸை உள்ளங்கையில் ஏந்திப் புரட்டினார்.

''எக்ஸலண்ட். எக்ஸ்ட்ரா ஆர்டினரி... இதுதான் மயில் நெக்லஸா?''

''ஆமா... இதுக்குப் பொருத்தமா ரெண்டு கை வளை யலும் பண்ணியிருக்கேன்...''

''லட்ச ரூபா ஆச்சா?''

சிரித்தாள். ''ஒண்ணு இல்ல... முப்பத்தியேழு லட்சம் ஆச்சு...''

''வ்வாட்?''

''தர்ட்டி செவன் லாக்ஸ்... முப்பத்தேழு லட்சம்'' என்று புன்னகைத்தாள் மீரா. ''உங்களுக்குப் பிடிச்சிருக்கா?''

''அபாரமா இருக்கு. இதைத்தான் நாளைக்கு நீ கல்யாணத்துக்குப் போட்டுக்கணும்...''

தங்கதுரை அந்த நெக்லஸை அப்படியே அவள் கழுத்தில் பொருத்திப் பார்த்தார்.

''எக்ஸலண்ட்'' என்றார். ''இந்த லாக்கர்ல இருக்கற நகையெல்லாமே ஒரு கோடி தேறும் போல இருக்கே...''

''தேறும்'' என்றாள், மீரா. ''கல்யாணம் முடிஞ்சதும் நாம ஒரு தடவை மும்பைக்குப் போவோம். உங்களுக்கு இதே போல ஒரு வைர ப்ரேஸ்லெட் வாங்கிருவோம்...''

அந்த வைர நெக்லஸை மட்டும் எடுத்துக் கொண்டு மற்ற நகைப் பெட்டிகளை லாக்கருக்குள் வைத்துப் பூட்டினாள், மீரா.

# 5

ஆடம்பரமாக, ஆனால் ஆர்ப்பாட்டமில்லாமல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது, திருமணம்.

நகரின் பெரிய திருமண மண்டபத்தில் கார் பார்க்கிங்கிற்குக் கூட இடம் இருக்காது என்று நினைத்திருந்தான், பாஸ்கரன்.

ஆனால் நிறைய இடம் காலியாய் இருந்தது.

மண்டபத்திற்குள்ளே மிகச் சொற்பமான மனிதர்கள் தான் மீராவின் விருந்தாளிகளாக வந்திருந்தார்கள். பணக்கார வட்டத்தில் இருந்தாலும், எதனாலோ மற்றவர்களுடன் அதிகத் தொடர்பு வைத்துக் கொள்ளாமல் மீரா தவிர்த்திருக்கிறாள் என்று தெரிந்தது. அவளுடைய தோற்றம் பற்றி அவளுக்கு இருக்கும் தாழ்வு மனப்பான்மை ஒரு காரணமாக இருக்கலாம் என்று பாஸ்கரனுக்குத் தோன்றியது.

வந்திருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் தங்கதுரையின் நண்பர்கள்.



பாஸ்கரனைப் பார்த்ததும் தங்கதுரை பெரிதாகப் புன்னகைத்தார்.

''மீரா... இது யார் தெரியுதா?''

''உங்க பிரதரா? உங்களை மாதிரியே ஸ்மார்ட்டா இருக்காரே...''

''ஏய்... பிரதர் இல்ல... பிள்ளை - மகன்...''

''நைஸ் டு மீட் யூ...'' என்று மீரா அவன் கையைப் பற்றி குலுக்கினாள்.

மிருதுவான பெண்மை நிறைந்த கை. ஏதோ ஒரு பியூட்டி பார்லருக்குப் போய் அவள் அழகு படுத்திக் கொண்டு வந்ததால் சீராக இருந்த கூந்தல். நல்ல உயரம். எடுப்பான கவர்ச்சிகரமான வளைவுகள். அவள் முகத்தில் இத்தனை கரடு முரடுகளா என்று பாஸ்கரன் வியந்தான்.

ஒரு பெண்ணை அழகா இல்லையா என்பதை உடல் வளைவுகளை வைத்து தீர்மானித்தால் மீரா அபாரமான அழகிதான்; முகத்தை வைத்துத் தீர்மானித்தால் இவளுக்கும் அழகுக்கும் வெகு தொலைவு.

பாஸ்கரன் அவளைப் பார்த்து நட்பாகப் புன்னகைத்தான். ''கங்கிராட்ஸ்'' என்றான். எதனாலோ அவளிடத்தில் அவனுக்கு ஒரு கருணை ஏற்பட்டது. அவளை அப்பா அன்புடன் நடத்த வேண்டுமே என்ற கவலை எழுந்தது.

தான் கொண்டு வந்திருந்த பரிசுப் பொருளை அவளிடம் நீட்டினான்.

''இருந்து சாப்பிடணும்...'' என்றாள், மீரா.

''ஷ்யூர்...'' என்று பாஸ்கரன் அங்கிருந்து நகர்ந்தான்.

சொந்த அப்பாவுடைய கல்யாணத்தில் ஒரு மூன்றாம் மனிதனைப் போல கலந்து கொள்வது அவனுக்கே வேடிக்கையாக இருந்தது.

மற்றவர்களைத் தவிர்த்து அவன் தனியானதொரு நாற்காலியில் அமர்ந்தான். ஸ்பீக்கர்களில் கதரி கோபால் நாத்தின் சாக்ஸபோன் இசை பொழிந்து கொண்டிருந்தது.

பாஸ்கரன் பக்கத்தில் நிழலாடியது. திரும்பினான்.

"குட்ஈவினிங்... என் பெயர் ப்ரீதா..." என்று புன்னகை யுடன் ஒரு பெண் நின்றிருந்தாள்.

"குட் ஈவினிங்" என்றான், பாஸ்கரன் அவள் யாரென்று புரியாமல்.

"நீங்க தங்கதுரையின் மகன் பாஸ்கரன்தானே?" அவள் குரலில் தேன் இருந்தது.

"அ... ஆமாம்... நீங்க?"

"இங்கே உட்காரலாமா?" என்றவள் அவன் அனுமதிக் காகக் காத்திராமல் அவனுக்கு அடுத்த இருக்கையில் அமர்ந்தாள்.

அவளிடமிருந்து மிக ரம்மியமான ஒரு வாசம் வந்தது.

மாம்பழ மஞ்சள் நிறத்தில் ஒரு பட்டுப்புடவை உடுத்தி யிருந்தாள். அதன் அரக்கு பார்டர் அவள் சருமத்தின் நிறத்தை உயர்த்திக் கொடுத்தது.

மாசு மருவில்லாத சருமம். ஒளி வீசும் பெரிய கண்கள். நேர் நாசி. சீரான பல்வரிசை. அற்புதமான அழகு. அவள் வந்ததில், நகர்ந்ததில், அவனருகில் அமர்ந்ததில், பேசியதில் - எல்லாவற்றிலும் ஒரு நளினம் இருந்தது. ஒரு அசாத்திய வசீகரம் இருந்தது.

"ப்ரீதா... உங்களை இதுக்கு முன்னால் நான் பார்த்த தில்லை..."

"பார்த்திருக்க மாட்டீங்க. நுங்கம்பாக்கத்தில் இருக்கும் ஜே.எஸ்.லாக்கர் சிஸ்டம்ஸில் நான் கோ-ஆர்டினேட்டரா



இருக்கேன். மீரா மேடம் எங்களுடைய நெடுநாளைய கஸ்டமர்..."

"ஐ ஸீ..."

"எங்க கம்பெனில கம்ப்யூட்டர் சிஸ்டத்துல சில் புது புரோகிராம்ஸ்லாம் சேர்க்கலாம்னு இருக்கோம். ஒரு கன்ஸல்டேஷனுக்கு வர முடியுமா?"

"நான் ஸாஃப்ட்வேர் கம்பெனி வச்சிருக்கறது உங் களுக்கு..."

"தெரியும்..." என்று சிரித்தாள். "உங்க அப்பா சொல்லி யிருக்காரு... எப்ப வரீங்க?"

"கார்டைக் கொடுங்க... போன் பண்ணிட்டு வரேன்" என்றான். அவள் பளபளக்கும் தோல் பையைப் பிளந்து திறந்து அதற்குள்ளிருந்து கம்பெனியின் முகவரிச் சீட்டை எடுத்து நீட்டினாள்.

"இந்த டிரெஸ் உங்களுக்கு ரொம்ப நல்லா இருக்கு."

பாஸ்கரன் அதிர்ந்தான். அவளுடைய வார்த்தைகளால் அல்ல. அப்படிச் சொல்லிவிட்டு அவன் தொடையில் ஒரு கை வைத்து அழுத்தி அவள் கண்ணடித்ததால்.

இந்தப் பெண்ணுக்கு என்ன வேண்டும்?

"ப்ரீத்தீ..." என்று யாரோ கூப்பிட்டதும், பாஸ்கரன் விடுதலையுணர்வு பெற்றான். ப்ரீதா எழுந்து கூப்பிட்ட திசை நோக்கி நகர்ந்தாள். போகும் முன் மறக்காமல் அவனிடம் ஒரு 'எக்ஸ்க்யூஸ் மீ'யை உதிர்த்தாள்.

பாஸ்கரன் சடாரென்று தன் இருக்கையிலிருந்து எழுந்து விட்டான்.

ப்ரீதா திரும்பி அவனைத் தேடி வரும் முன் மண்ட பத்தை விட்டே வெளியேறி விட வேண்டும் என்று முடிவு செய்தான்.

அவன் எழுந்ததும் யாரோ டின்னர் ஹாலுக்கு அழைத்துப் போனார்கள்.

ப்ரீதா எங்காவது தென்படுகிறாளா என்று பார்வையை சுழற்றிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை என்பதே பாஸ்கரனுக்கு ஆச்சரியமாயிருந்தது.

# 6

''அவ்வளவு அழகா அந்த ப்ரீதா?'' என்றாள் அபர்ணா, பாஸ்கரனின் தலைமுடியைக் கலைத்து.

''ஸ்டன்னிங் ப்யூட்டின்னு சொல்வாங்களே... பிரமிக்க வைக்கற அழகு. உலக அழகிப் போட்டில்லாம் கலந்துக் கிட்டா அத்தனை தேசத்து பொண்ணையும் தூக்கி சாப்பிட்டுருவா'' என்றான், பாஸ்கரன். ''இவ்வளவு அழகும் ஒரே இடத்துல இருக்கறதை நான் பார்க்கறது இது ரெண்டாவது தடவை...''

''மொதல் தடவை...?''

''என் அபர்ணாகிட்ட...''

''ஏய், ஏய், டூப் விடாதே...''

''நீ அழகு. ரசிச்சுப் பார்க்கச் சொல்ற ரம்மியமான அழகு. அவ அழகு ராட்சஸ அழகு. ஆளை முழுங்கி அடிமைப் படுத்தற அழகு. ராத்திரி எனக்கு சரியா தூக்கமே வரல. அந்த அளவுக்கு ஒரு ஆளை பைத்தியமாக்கற அழகு அவ...''

''எனக்கு உடனே அவளைப் பார்க்கணும் போல இருக்கே, பாஸ்.''



''நுங்கம்பாக்கம் லாக்கர் கம்பெனிக்கு போ... பார்க்கலாம். பார்த்து என்ன பண்ணப் போறே? எங்க ஆளுகிட்ட அதென்ன சிரிச்சுப் பேசினியாமே, கண்ணடிச்சியாமேன்னு கேட்டு மெரட்டிட்டு வருவியா?''

''என் ஆளை எத்தனை ஆயிரம் பேர் பார்த்தாலும் எனக்கென்ன பயம்? என் ஆள் என்னைத் தவிர இன்னொருத்தியைப் பார்க்காத வரைக்கும் எனக்கென்ன கவலை?''

''இன்னொரு தடவை சொல்லு...''

''ஏன்?''

''நீ தலையை ஆட்டி ஆட்டி பேசினப்போ, காது ஜிமிக்கி ஊஞ்சலாடியது ரொம்ப அழகா இருந்தது.''

''ச்சீ போடா...''

அபர்ணா வெட்கப்பட்டாள்.

அந்த வெட்கம் கூட அழகாகத்தான் இருந்தது.

தனியார் வங்கியில் அவள் ஒரு அதிகாரி. அந்த வங்கிக்கு கம்ப்யூட்டர் விஷயமாக அவன் அடிக்கடி போக வேண்டியிருந்தபோது, கம்ப்யூட்டர் அதிகாரி என்ற முறையில் அவளோடுதான் அவன் பரிமாற்றம் செய்ய வேண்டி இருந்தது. ஒருத்தருக்கொருத்தர் பிடித்துப் போய், அடிக்கடி சந்தித்து, அவர்களுக்குள் தேவையற்ற போலித்தனங்களைத் தவிர்த்து -

இப்போது கடற்காற்றை அனுபவித்துக் கொண்டு மணல் வெளியில் ஒருவரை ஒருவர் சீண்டிக் கொண்டு பாஸ்கரன் - அபர்ணா.

''உங்கப்பா சந்தோஷமா இருக்காரா?''

''ஹனிமூன் போயிருக்காங்க - கொடைக்கானலுக்கு'' என்றான், பாஸ்கரன்.

''நம்ம ஹனிமூன் எப்போ பாஸ்கர்?''

''செந்திலுக்கும், மனோகரனுக்கும் மொதல்ல பொண்ணு கெடைக்கட்டும்...''

''அடி செருப்பால! ஹனிமூன் கூட கூட்டு முயற்சி தானா?''

''கொஞ்சம் வெயிட் பண்ணு அபர்ணா... அதிக பட்சம் ஆறு மாசம். ஃபாரின் ஆர்டர்ஸ்லாம் இப்பத்தான் வர ஆரம்பிச்சிருக்கு... அதுல கொஞ்சம் ஸ்டெடியாயிட் டோம்னா நான் ப்ரீயாயிடுவேன்...''

''உனக்காக ஆறே மாசம்... இன்னிலேர்ந்து கணக்கு. நூத்தி எண்பது நாள் முடிஞ்சதும், நீ என் கழுத்துல தாலி கட்டியாகணும். இல்லாட்டி...''

''விட்டுட்டுப் போயிடுவியா?''

''ஆசையைப் பாரு. நீ கட்டலைன்னா, நான் உன் கழுத்துல தாலி கட்டிருவேன்.''

அபர்ணா வாய்விட்டுச் சிரித்தாள்.

பாஸ்கரனும் அந்தச் சிரிப்பில் கலந்து கொண்டான்.

# 7

கொடைக்கானல். மேகங்களுக்குப் பின்னிருந்து சற்றே தலை நீட்டியிருக்கும் சூரியன். காற்றில் உதிர்ந்த



இலைகளைப் போல இங்கொன்றும், அங்கொன்றுமாக மிதக்கும் படகுகள்.

தங்கதுரை ஒரு துடுப்புப் படகு எடுத்திருந்தார். கால்களை நீட்டி எதிர்ப்பலகையில் அழுத்தி துடுப்புகளை வளைத்து இழுத்தார். ஒவ்வொரு அசைவிற்கும் புஜம் உருண்டு திரண்டது. வலுவான தசைகள் மார்பில் புடைத்தன.

அந்த அழகை ரசித்தபடி எதிரே அமர்ந்திருந்தாள், மீரா. அவள் கண்களில் கிறக்கம் இருந்தது. முந்தின இரவு தங்கதுரையின் வேகம் அவளை பிரமிக்க வைத்தது.

''ரொம்ப லக்கிங்க நான்...'' என்றாள், திடீரென்று.

எதிர் வெயிலில் அவள் கறுப்புக் கண்ணாடி அணிந் திருந்ததால், அவளுடைய கண்களைப் பார்க்க வேண்டிய அவசியம் தங்கதுரைக்கு வரவில்லை.

''என்ன திடீர்னு அதிர்ஷ்டம் பத்தி பேச்சு?'' என்றார்.

''அதிர்ஷ்டம் இல்லாம உங்களைப் போல ஒரு அற்புதமான ஆண் எனக்கு கணவனா கெடைச்சிருப் பாரா?''

''அப்படிப் பார்த்தா நான் கூடத்தான் லக்கி'' என்றார் தங்கதுரை. ''இத்தனை வயசுக்கப்புறம் இவ்வளவு அழ கான, அன்பான மனைவி யாருக்குக் கெடைப்பாங்க?''

''நான் அழகில்லைன்னு எனக்குத் தெரியும். அழ குன்னு பொய் சொல்லாதீங்க. எனக்குப் பிடிக்கலை.''

''அழகு இல்லேன்னு நீ நெனைச்சுக்கிட்டா? என் கண்ணுக்கு நீ அழகுதான். நீ கல்யாணம் பண்ணிக்கத் தயார்னு அறிவிப்பு கொடுத்திருந்தா உன்னைக் கொத் திட்டுப் போக நூறு பேர் வந்து கியூவுல நின்னிருப்பான்.''

''நூறென்ன, ஆயிரம் பேர் கூட வருவான், என் பணத்துக்காக. எனக்காக வந்தது நீங்க மட்டும்தான்...''

அவள் தங்கதுரையின் பாதத்தை மடியில் தூக்கி வைத்துக் கொண்டாள். அவருடைய கால் விரல்களை மிருதுவாக உருவி விட்டாள்.

''மீரா... கம்பெனி பொறுப்பு எல்லாத்தையும் என் பேருக்கு மாத்தப் போறதா சொன்னியே. நிஜம்தானா?''

''நீங்கதான் கூடாதுன்னு அடம்பிடிச்சீங்களே... நீங்க மேனேஜராவும், நான் முதலாளியாவும்தான் இன்னும் ஆறு மாசத்துக்கு இருக்கணும்னு சொன்னீங்களே...''

''பணத்துக்கு ஆசைப்பட்டு உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதா மத்தவன் நெனைக்கக் கூடாதேன்னு அப்படி சொன்னேன். ஆனா, இப்ப யோசிச்சுப் பார்த்தா நீ சொன்னதுதான் கரெக்டோன்னு தோணுது. மேனேஜரா இருந்துக்கிட்டு பளபளன்னு கார்ல வந்து எறங்கறதும், பங்களாவுல குடியிருக்கறதும், மத்தவங்களை அதிகாரம் பண்றதும் சரிப்பட்டு வராது. பொறுப்பு எடுத்துக்காம பொண்டாட்டி பணத்துல அனுபவிக்கறான் பாருன்னு தான் பேசுவாங்க...''

''அப்ப உங்களை எம்.டி.யா போட்டுரவா டியர்?''

''ஆமா, அப்பத்தான் கம்பெனில எனக்கு மரியாதை இருக்கும். இதையெல்லாம் யோசிச்சுதான் நீ மொதல்ல அப்படி சொல்லியிருப்பே. நான்தான் புரிஞ்சுக்காம முட்டாள்தனமா வேண்டாம்னு பிடிவாதம் பிடிச்சிட்டேன்.''

''ஸோ வாட்? ஊருக்குப் போனதும் கம்பெனி அட்வகேட்டை கூப்பிட்டுச் செய்ய வேண்டியதை செஞ்சிருவோம்'' என்று கோணல் உதடுகளை இன்னும் கோணி புன்னகைத்தாள், மீரா.



பழங்கள் வாங்கி வருவதாகச் சொல்லி தங்கதுரை புறப்பட்டுப் போயிருந்தார். ஹோட்டல் அறையில் தனிமை மீராவுக்கு போரடித்தது. அதே ஹோட்டலில் கீழ்த்தளத்தில் ஒரு கார்மென்ட்ஸ் எக்ஸிபிஷன் நடந்து கொண்டிருந்தது அவள் நினைவுக்கு வந்தது.

அறையை மூடிவிட்டு லிப்டில் இறங்கினாள்.

எக்ஸிபிஷன் பகுதியில் அதிகக் கூட்டமில்லை. நிறைய ஹேங்கர்களில் விதம் விதமான சட்டைகள், சூட்டிங்குகள் அணிவகுத்திருந்தன.

ஏற்றுமதி பகுதிக்கு நகர்ந்தாள் மீரா.

ஸ்வெட்டர் போட்ட பெண்கள் அவளை வரவேற்று சுற்றிக் காட்டினார்கள்.

''எக்ஸ்ட்ரா லார்ஜ்'' என்று தங்கதுரையின் அளவைச் சொன்னாள், மீரா. அங்கு பார்வைக்கு வைத்திருந்த உடைகளில் விலை உயர்ந்த ஷர்ட்களை, ஸ்வெட்டர்களைப் பார்த்துப் பார்த்து தேர்ந்தெடுத்தாள்.

கடைசி வரிசையில் இருந்த ஒரே டெலிவுல் பாண்ட்டை எடுத்து வெளிச்சத்திற்கு நேரே பிடித்தபோது, எதேச்சையாக அவள் பார்வை வெளியே விழுந்தது.

கண்ணாடி சுவரைத் தாண்டி, ஹோட்டலின் முகப்பருகில் எஸ்.டீ.டி. பூத்தில் தங்கதுரை யாரிடமோ பேசிக் கொண்டிருந்தது ஒரு மௌனப் படம் போலத் தெரிந்தது.

மீராவிற்கு ஆச்சரியமாயிருந்தது. ஹோட்டல் ரூமிலிருந்து சௌகர்யமாக போன் பேசலாமே, ஏன் வெளியே பூத்திலிருந்து பேசிக் கொண்டிருக்கிறார்?

உடைகளுக்குப் பணம் கொடுத்துவிட்டு ரூமுக்குத் திரும்பினாள்.

தங்கதுரைக்கு ஒரு இனிய ஆச்சரியமாக இருக்கட்டும் என்று அந்த உடைகளை அவர் பெட்டியில் வைத்து விட நினைத்தாள்.

அவர் பெட்டி பூட்டியிருந்தது. அவள் பெட்டியைப் போன்ற அதே பெட்டி என்பதால் அவளிடமிருந்த சாவி யால் அந்தப் பெட்டியைத் திறந்தாள்.

அவருடைய பழைய உடைகளைத் தளர்த்தி விட்டு அடியில் புதிய உடைகளை வைத்தபோது கையில் ஒரு வெள்ளைக் கவர் தட்டுப்பட்டது. கவரில் அவளுடைய கம்பெனியின் முகவரி அச்சிட்டிருந்தது. பட்டையாக எழுதும் பேனாவால் V.V.I. என்று எழுதப்பட்டிருந்தது.

V.V.I. என்றால்? வெரி வெரி இம்பார்ட்டண்ட் என்று அர்த்தமா?

கவரை வெளியே எடுத்தாள். அறைக்கதவை உட்புறம் தாளிட்டு விட்டு அந்தக் கவரை கிழிக்காமல் பிரித்தாள். உள்ளே மூன்றாக மடிக்கப்பட்ட இரு வெள்ளைத் தாள்கள் இருந்தன. இரண்டு விரல்களால் அந்தத் தாள்களை வெளியே எடுத்தாள். பிரித்தாள்.

முதல் தாள் கம்ப்யூட்டரில் அச்சடிக்கப்பட்டிருந்தது. அதில் மீரா அண்ட் கம்பெனியின் சொத்து விவரங்கள் பட்டியலிடப்பட்டிருந்தன. அசையும் சொத்துக்கள் என்று வாகனங்கள், இதர முதலீடுகள், அலுவலக மேஜை, நாற்காலி, கம்ப்யூட்டர் வகையறாக்களின் இந்த வருடத் துவக்கத்தில் இருந்த மதிப்பீடுகளின் விவரங்கள். அசையாத சொத்துக்கள் என்று கம்பெனிக்கு சொந்தமான வெவ்வேறு அலுவலகக் கட்டிடங்கள், கோடவுன்கள், காலி மனைகள் இவை பற்றிய பட்டியல்கள்.



இந்த விவரங்கள் எல்லாம் சாதாரணமாக ஆடிட்டர்களுக் குத்தானே தேவைப்படும்? தங்கதுரைக்கு எதற்காக?

இரண்டாவது தாளில் பார்வையைப் பதித்தாள்.

அந்தத் தாளில் தங்கதுரையின் கையெழுத்தில் அவளுடைய தனிப்பட்ட வங்கிக் கணக்குகள் பற்றிய குறிப்புகள் எழுதப்பட்டிருந்தன.

ஒவ்வொரு கணக்கிலும் கையிருப்புத் தொகை என்ன என்று பட்டியல் தயாராகியிருந்தது. ஆடிட்டர்களிடம் சொல்லாத இரண்டு கணக்குகள் கூட தங்கதுரைக்கு எப்படித் தெரிந்தது என்று அவளுக்கு ஆச்சரியமாயிருந்தது.

அவளுடைய சொத்து விவரங்கள் ஹனிமூன் வந்த இடத்தில் அவருக்கு எதற்கு?

அவளுக்குப் புரியவில்லை. அவளுடைய சந்தோஷத் தில் ஒரு ஓரத்தில் கொஞ்சம் விண்டு எடுக்கப்பட்டு விட்டது போல் உணர்ந்தாள்.

அந்த தாள்களை செருகி, அந்த கவரை எடுத்த இடத்திலேயே வைத்தாள். அந்தக் கவரை அவள் பார்த்ததாக தங்கதுரைக்குத் தெரிய வேண்டாம் என்று அவளுக்குத் தோன்றியது. அவள் வாங்கி வந்த புதிய உடைகளைப் பெட்டியில் மேலாக வைத்தாள். மூடினாள்.

திடீரென்று அவளுள் ஒரு பதட்டம் வந்து விட்டது.

திரை விலக்கி ஜன்னலுக்கு வெளியே பார்த்தாள்.

கையில் பிளாஸ்டிக் பையில் பழங்கள் ததும்ப ஹோட்டலுக்குள் தங்கதுரை நுழைவது தெரிந்தது.

யாருடனோ எஸ்.டீ.டி. பேசி விட்டுத்தான் பழங்கள் வாங்கவே அவர் போயிருக்கிறார் என்று புரிந்தது.

அறைக் கதவின் உட்புறத் தாளைத் திறந்து விட்டு முகத்தை இயல்பாக வைத்துக் கொண்டு அவள் படுக்கையில் சாய்ந்தாள்.

ஏன் இந்தப் பதட்டம்? தங்கதுரை என்ற தனி மனிதனுக்கு ரகசியங்கள் இருக்கக் கூடாதா என்ன?

கல்யாணம் ஆகிவிட்ட காரணத்தால் அவளுடைய கொத்தடிமை ஆகிவிட்டாரா என்ன? எதற்காக இத்தனை நிர்ப்பந்த உரிமை?

தன்னைத் தானே சமாதானம் செய்துகொள்ள அவள் முனைந்தபோது கதவில் சாவி செருகப்பட்டு திறக்கப் பட்டது.

''ஹாய் ஹனி'' என்றார், தங்கதுரை.

பழங்களை மேஜை மீது வைத்துவிட்டுத் திரும்பியவர், ''ஆர் யூ ஆல்ரைட்?'' என்றார்.

புன்னகையுடன் எழுந்து உட்கார்ந்தாள் மீரா.

''வெளியே குளிர் எப்படி இருக்கு?'' என்றாள்.

''வெளியே எப்படி இருந்தா என்ன? உள்ள நாம இப்ப கதகதப்பா இருக்கப் போறோம். ஹேய்... என் பெட்டியை எடுத்தியா என்ன? நகர்ந்திருக்கு?''

''யெஸ்... உள்ளே உங்களுக்கு ஒரு சர்ப்ரைஸ் இருக்கட்டும்னு நெனைச்சேன். ஆனா பெட்டியை பழையபடி வைக்க மறந்துட்டேனா?''

''சர்ப்ரைஸ்! எனக்கா?''

பெட்டியை அவசரமாகத் திறந்தார்.

''மைகுட்னஸ்! உனக்கென்ன பைத்தியமா? எனக்கு எதுக்கு இவ்வளவு புது டிரெஸ்?''



''ஆசையா இருந்தது... வாங்கினேன்...''

''உனக்கு எம்மேல எவ்வளவு பிரியம்!''

அப்படியே குனிந்து அவளை ஆட்டுக்குட்டியைப் போல அலாக்காகத் தூக்கி அவள் முகத்தில் முத்தமிட்டார்.

''உன் அன்பாலயே என் கண்ல தண்ணி வரவழைச் சுருவே'' என்றார்.

அவர் அவளை நெருக்கிய வேகத்தில் மீராவின் கட்டுப்பாடு தளர்ந்தது. அப்படியே அவர் கையில் உருகிப் போகலாம் போல் இருந்தது.

கட்டிலில் அவளைக் கிடத்தினார்.

''இத்தனைக்கும் பதிலுக்கு நான் என்ன பண்ணப் போறேன், மீரா?''

''என்கிட்ட உண்மையா இருங்க, போறும்...'' - மீராவை மீறி வார்த்தைகள் வெளியே விழுந்து விட்டன.

''உன்கிட்ட உண்மையா இல்லேன்னா, நான் நரகத்துக்குத்தான் போகணும்'' என்றார், தங்கதுரை.

''அப்புறம் இன்னொரு விஷயம் மீரா...''

''என்ன?''

''உன்னைப் பத்தின முழு பொறுப்பும் நான் எடுத்துக்கணும்னு ஆசைப்படறேன். இன்கம்டாக்ஸை பிளான் பண்றதுலேர்ந்து எல்லாமே நான் பொறுப்பா செய்யணும். உன் பாங்க் அக்கவுண்ட்ஸ் என்னென்ன இருக்கு. நம்ப கம்பெனியோட சொத்து விபரம்லாம் என்னன்னு ஒரு லிஸ்ட் தயார் பண்ணி எடுத்திட்டு வந்திருக்கேன். என்னடா ஹனிமூன் வந்த இடத்துலகூட பிஸினஸ்

பேசறானேன்னு நீ நெனைச்சிரக்கூடாது... நிதானமா, உனக்கு மூடு இருக்கும்போது பேசலாம்.''

மீராவின் உள்ளே இருந்த இறுக்கம் பொலபொல வென்று உதிர்ந்தது. ச்சே, என்னுடைய நல்லதிற்காகத் தான் தங்கதுரை இந்தப் பட்டியலே தயார் செய்துள்ளார். அதற்குள் அவசரப்பட்டு, அவரையே சந்தேகித்து...

''என்ன மீரா, என்னை ஒரு மாதிரி பார்க்கறே... அக்கவுண்ட்ஸ் விஷயம்லாம் பேசறது உனக்குப் பிடிக் கலையா?''

''நீங்க எது செஞ்சாலும் எனக்குப் பிடிக்குங்க'' என்று கால்களை விரித்துப் போட்டு தங்கதுரையை அருகே இழுத்துக் கொண்டாள், மீரா.

# 8

யமஹாவை நிறுத்தி அதன் பெட்ரோல் டாங்க் மீது தன் ஹெல்மெட்டைக் கழற்றி வைத்து விட்டு, அந்தக் கட்டிடத்திற்குள் நுழைந்தான், பாஸ்கரன்.

ஜே.எஸ். லாக்கர்ஸ் என்ற பிரம்மாண்டமான பித்தளை எழுத்துக்கள் அவனை வரவேற்றன.

படிகளில் அவன் ஏறும்போது, கண்ணாடிக் கதவு திறந்து வெளிப்பட்டார், தங்கதுரை.

''ஹாய் அப்பா!'' என்றான், பாஸ்கரன் உற்சாகமாக.

தங்கதுரை படிகளில் அப்படியே உறைந்து போய் நின்றார். அவனை அங்கே எதிர்பார்க்காதவர் போல அதிர்ந்து போய் அவனைப் பார்த்தார்.



''நீ... நீ...''

''என் பேரு பாஸ்கரன்...''

தங்கதுரை சுதாரித்தார். ''நீ இங்கே... எப்படி?''

''நீங்க ஒய்ப்போட லாக்கருக்காக வந்திருப்பீங்க. நான் என் வயித்துப் பாட்டுக்காக வந்தேன்.''

''வயித்துப்பாடா... வாட் டூ யூ மீன்?''

''பிஸினஸ் விசிட்பா. உங்க ஹனிமூன்லாம் எப்படி இருந்தது? எப்ப திரும்பி வந்தீங்க?''

''ஹனிமூன் நல்லா இருந்தது, பாஸ்கர். ரெண்டு நாள் முன்னால திரும்பி வந்தேன். இங்கே லாக்கர் விஷயமா வந்தேன். நீ?''

''சொன்னேனேப்பா. பிஸினஸ் விசிட்! இங்க ப்ரீதான்னு ஒரு பொண்ணு வேலை செய்யுது. உங்க மேரேஜ்ல என்னைப் பாத்தது. கம்பெனில ஏதோ ஸாஃப்ட்வேர் வேலை பார்க்கணும், வர முடியுமான்னு கேட்டுது. போன வாரம் ரொம்ப பிஸியாயிருந்தேன். வர முடியல. சரி இப்ப ப்ரீயா இருந்தா பார்த்துட்டுப் போலாமேன்னுதான் வந்தேன்.''

''ப்ரீதாவா?'' தங்கதுரையின் நெற்றி சுருங்கியது.

''உங்களுக்குத் தெரியுமாப்பா?''

''அ... யெஸ்... லாக்கர் தொடர்பா வந்தபோது பார்த் திருக்கேன். என்ன வேலை கொடுத்திருக்கா உனக்கு?''

''இன்னும் அவளைப் பார்த்துப் பேசவே இல்லி யேப்பா.''

தங்கதுரை அவன் தோளில் கை போட்டார். ''அந்த ப்ரீதா இன்னிக்கு லீவுன்னு சொன்னாங்க. வந்தது வீணாக வேண்டாம். வா நாம ஒரு காபி சாப்பிடலாம்.''

''எனக்கு இன்னிக்குத்தான் நேரம் கெடைச்சது. இன்னிக்குப் பார்த்து அவங்க லீவு போட்டுட்டாங்களா?'' பாஸ்கரன் நாசூக்காக தன் தோளிலிருந்து அவர் கையை விலக்கினான். ''எதுக்கும் நான் வந்துட்டுப் போன மெஸேஜைக் கொடுத்திட்டு வந்துடறேன். வெயிட் பண்ணுங்க.''

சட்டென்று இரண்டு படியேறி, கண்ணாடிக் கதவு திறந்ததும் - நேர் எதிரே ரிசப்ஷனில் புன்னகைத்து போனில் பேசியபடி நின்றிருந்தாள் - ப்ரீதா!

பாஸ்கரன் உள்ளே போகாமல் மறுபடி வெளியே வந்தாள்.

''அவங்க இருக்காங்கப்பா... நாம அப்புறம் மீட் பண்ணலாம்'' என்றான்.

தங்கதுரையின் முகம் களையிழந்து காணப்பட்டது.

''ம்'' என்று தலையசைத்தார்.

''வாங்க... வாங்க'' என்று ஆர்ப்பாட்டமான புன்னகை யுடன் வரவேற்றாள், ப்ரீதா. ''உக்காருங்க.''

எதிர் குஷன் நாற்காலியில் அமர்ந்தான். ''என் வேலைல கொஞ்சம் பிஸியா இருந்தேன். உடனே வர முடியலை'' என்றான் பாஸ்கரன்.

''என்ன சாப்பிடறீங்க?''

''முதல்ல நாம பேச வேண்டியதைப் பேசிட்டோம்னா, என்ன வேணும்னாலும் சாப்பிடலாம்'' என்று பாஸ்கரன் புன்னகை மாறாமல் பதில் சொன்னான்.

இன்றைக்கும் ப்ரீதா அபாரமாயிருந்தாள். வயலட் நிறத்தில் உடம்போடு தீற்றிக் கொள்ளும் ஒரு ஷிஃபான் ஸாரி அணிந்திருந்தாள். அதே நிறத்தில் காதுகளிலிருந்து



தொங்கட்டான்கள் தொங்கின. கழுத்தில் வயலட் மணி கள் கோர்த்த ஒரு செயற்கை மணிமாலை.

இவள் கண்களில் எத்தனை வெளிச்சம்!

''இப்ப நீங்க புதுசா சில ஸாஃப்ட்வேர் தயாரிக்கறீங்க. ஏற்கனவே இருக்கிற சிஸ்டம்ல சில இம்ப்ரூவ்மெண்ட் செய்யணும்னா செய்வீங்களா?'' என்றாள், ப்ரீதா.

பேசும்போது கண்களோடு பார்வையைக் கோர்த்து திணறடித்தாள்.

''தாராளமா...'' என்றான், பாஸ்கர்.

''ஏற்கனவே இன்னொருத்தர் எழுதியிருக்கிற புரோ கிராம்ஸையெல்லாம் நீங்க எப்படி பார்க்க முடியும்?''

''சில புரோகிராம்ல அவங்க மட்டும்தான் உள்ளே போகிற மாதிரி இருக்கும். சிலதை யார் வேணுமானாலும் படிக்க முடியும். உங்க தேவை என்னன்னு கரெக்டா தெரிஞ்சாத்தான்...''

அவள் மேஜையிலிருந்த போன் கிணுகிணுத்ததும் பேச்சைப் பாதியிலேயே நிறுத்தினான்.

''எக்ஸ்க்யூஸ் மீ'' என்று அவள் ஒயிலாக ரிசீவரை எடுத்து, ''குட்மார்னிங், ஜே.எஸ். லாக்கர்ஸ்'' என்றாள்.

அது கம்பெனிக்கு வந்த போன் இல்லை, அவளுக்குத் தனிப்பட்ட முறையில் வந்த போன் என்பது உடனடியாக அவள் முகம் மாறியதிலிருந்து தெரிந்தது.

''ஆமாம்... அதுக்கென்ன?'' என்றாள், குரலை வெகுவாகத் தனித்து.

அவள் முகத்தில் இருந்த புன்னகை மறைந்தது. சற்றே சிடுசிடுப்பு சேர்ந்தது. ''எனக்கும் அக்கறை இருக்கு... இப்ப எதுக்கு கத்தறீங்க? எனக்கும் கத்தத் தெரியும்... நான்

கத்தினா உங்களுக்குத்தான் ஆபத்து... சரி... நான் பார்த்துக்கறேன். என் மேல நம்பிக்கை வைங்க'' - அவள் குரலை மிகக் குறைத்திருந்தாள். ஆனாலும் அவளுடைய உதடுகளின் சிறுசிறு அசைவிலிருந்தே அவள் உதிர்ந்த வார்த்தைகளை அவனால் யூகம் பண்ண முடிந்தது.

ரிசீவரை வைத்துவிட்டு கைக்குட்டையால் நெற்றியை ஒற்றிக் கொண்டு புன்னகைத்தாள். அந்தப் புன்னகையில் உயிர் குறைந்திருந்தது.

''ஒரு நிமிஷம்... எங்க ஜி.எம். இருந்தார்னா, அவர் கிட்ட உங்களை அழைச்சிட்டுப் போறேன். அவர் தான் பார்க்கணும்னு சொன்னாரு...'' என்று இன்டர்காமில் இரண்டு எண்களைத் தட்டினாள்.

''மார்னிங் சார்... ப்ரீதா ஹியர். நீங்க கம்ப்யூட்டர் விஷயமா ஒரு ஸாஃப்ட்வேர் என்ஜினியரைப் பார்க்க ணும்னு சொல்லியிருந்தீங்களே... எனக்குத் தெரிஞ்சவர் வந்திருக்காரு... அப்படியா சார்... யெஸ் சார்... ஓ.கே சார்.''

ரிசீவரை வைத்தாள். வசீகரமெல்லாம் சேர்த்து ஒரு புன்னகை செய்தாள். ''ரொம்ப ஸாரி, பாஸ்கர். ஜி.எம். இப்ப அர்ஜன்ட்டா இன்னொரு மீட்டிங்குல இருக்காரு... இன்னொரு நாள் பார்க்கலாம்னு சொன்னாரு... அவர்கிட்ட அப்பாயின்ட்மென்ட் பிக்ஸ் பண்ணிட்டு நானே உங் களுக்கு போன் பண்றேனே... வெரி ஸாரி...''

அவள் சட்டென்று அவனைக் கத்தரிப்பதாக பாஸ்கர னுக்குத் தோன்றியது.

''தட்ஸ் ஆல்ரைட்...'' என்று அதே புன்னகையுடன் எழுந்தான். ''குட் டே'' என்றான். வெளியேறினான்.

பார்க்கிங் பகுதிக்கு நடந்தபோது, அங்கிருந்த பார்க்கிங் பணியாளன் வெகுவாக விரைப்பதைப் பார்த்தான்.



பாஸ்கரனை ஒரு பென்ஸ் கார் கடந்து போனது. 'ஜெனரல் மேனேஜருக்காக ஒதுக்கப்பட்டது' என்று எழுதப்பட்ட இடத்தில் போய் பார்க் செய்யப்பட்டது.

பணியாளன் ஓடிப்போய் கதவு திறக்க, ரேமண்ட்ஸின் விலையுயர்ந்த கோட் சூட்டுடன் வடநாட்டு மனிதர் இறங்கினார். டிரைவர் அவரது சிறு பிஸினஸ் பெட்டியை சுமந்து வர, கம்பெனி நோக்கி நடந்தார்.

பாஸ்கரன் பார்க்கிங் பகுதியில் இருந்த பணியாளனை அருகில் கூப்பிட்டான். ''யார் அது?''

''எங்க ஜி.எம். சார்...''

''உங்க கம்பெனில எத்தனை ஜெனரல் மேனேஜர் இருக்காங்க?''

''ஒரே ஜி.எம். தான் சார். இப்ப உள்ளே போறாரே மேத்தா. இவர்தான் ஜி.எம். இவங்கப்பா தான் எம்.டி...''

பாஸ்கர் தனக்குள் புன்னகைத்தான்.

பார்க்கிங் பகுதியில் இருந்த போனைக் காண்பித்தான். ''இது இன்டர்காமா?'' என்றான்.

''ஆமா சார்...''

''ஜி.எம். ரூமுக்கு என்ன நம்பர்?''

''அவரோட பேசணும்னா ரிசப்ஷன்ல அப்பாயின்ட் மென்ட் வாங்கணும் சார்...''

''அவரோட இன்டர்காம் நம்பர் 24, கரெக்டா?''

''தப்பு சார்... எங்க கம்பெனில அந்த நம்பர்ல கனெக் ஷனே கிடையாது சார்... மொதல் நம்பரே 101. எல்லாமே மூணு நம்பர்தான்... ஜி.எம். நம்பர் 199. ஏன் சார் கேக்கறீங்க?''

''சும்மாதான்... தேங்க்யூ...''

ப்ரீதா இரண்டே எண்களை டயல் செய்து இல்லாத ஜி.எம்.முடன் இன்டர்காமில் பேசியது ஏன்? பேச ஆரம்பித்தவள், அவளுக்கு வெளியிலிருந்து ஒரு போன் வந்ததும் சட்டென்று மாறிப் போனது ஏன்?

'நான் கத்தினா உங்களுக்குத்தான் ஆபத்து' என்றாளே, அப்படியானால் எதிர்முனையில் இருந்தது யார்?

தோள்களைக் குலுக்கிக் கொண்டான். காபி சாப்பிடக் கூப்பிட்டாரே அப்பா... அவரோடாவது போயிருக்கலாம்!

யமஹாவை உதைத்துக் கிளப்பினான்.

## 9

மீரா புதிய நைட்டி அணிந்திருந்தாள். கண்ணாடித் துணி வழியே அவளுடைய உள்ளாடைகள் பிரத்யட்சமாகத் தெரிந்தன. கண்ணாடியில் தன் வளைவுகளை அவளே ரசித்தாள்.

பாத்ரூமிலிருந்து தங்கதுரை வெளிப்படப் போகும் தருணத்திற்காகக் காத்திருந்தாள்.

ரூம் ஸ்ப்ரேயர் வைத்து சுகந்தமான மணத்தை அறையில் விசிறினாள். ஏர்கண்டிஷனரை சரியான பதத்தில் வைத்தாள். ஸ்டீரியோ சிஸ்டத்தில் ஷிவ்குமார் ஷர்மாவின் சி.டி.யை ஓடவிட்டாள்.

தங்கதுரை டர்க்கி டவலுடன் வெளிப்பட்டார்.

மார்பு ரோமக்காடு.



என்ன வலுவான தசைகள்! அவரைப் பார்த்தாலே, நரம்புகள் முறுக்கிக் கொண்டன.

ஓடிப்போய் அவரை அணைத்துக் கொண்டாள்.

''இன்னிக்கு என்ன டே சொல்லுங்க'' என்றாள்.

''என்ன டே?'' தங்கதுரை அவளை இறுக்கிக் கொண்டார்.

''நமக்குக் கல்யாணம் ஆகி இன்னியோடு அம்பது நாள் ஆகுதுங்க...''

''வெற்றிகரமான அம்பதாவது நாள்!''

தங்கதுரை அவளை அப்படியே தூக்கி கட்டிலில் போட்டார்.

மீராவைப் பொறுத்தவரை ஐம்பது பொன்னான நாட்கள்! ஐம்பது சொர்க்க நாட்கள்.

இப்போது கம்பெனியின் இணை மேனேஜிங் டைரக்டராக தங்கதுரை செயல்பட ஆரம்பித்து விட்டார். அந்த மட்டத்து வேலையின் நெளிவு சுளிவுகளை அவருக்கு ஆசையுடன் கற்றுத் தந்தாள். அவரோடு ஒரே அறையில், ஒரே மேஜையில் இன்னொரு நாற்காலி போட்டு அமர்ந்து வேலை பார்ப்பது அவளுக்கு சுகமாய் இருந்தது.

இடையில், கம்பெனியின் லாயர் வந்து விவாதங்களில் கலந்து கொண்டார். கம்பெனியை அவர் பெயருக்கு சொந்தமாக்க வேண்டாம் என்றார். ஆறு மாதங்களுக்கு அவர் கம்பெனியால் நியமிக்கப்பட்ட மேனேஜிங் டைரக்டராக இருக்கட்டும். அக்கவுண்டிங் வருடம் மாறும்போது சொத்துரிமையை இணை உரிமையாளராக அனுபவிக்கட்டும் என்றார்.

தங்கதுரை உடனே சரி என்றார். பொறுப்புகளை ஏற் பதில்தான் ஆர்வம், உரிமை கொண்டாடுவதில் இல்லை என்றார்.

அவளுடைய முதல் திருமணம் தோல்வி. அவ ளுடைய அப்பா பார்த்துப் பொருத்தி வைத்த மணமகன் உடல் நிறைய பழுதுடன் வந்தான். அவன் மூலம் அவள் சந்தோஷப்பட்ட தருணங்களை விட அவனுக்கு ஆஸ்பத்திரிக்கு சாப்பாடு எடுத்துப் போன சந்தர்ப்பங்கள் தான் அதிகம்.

ரொம்ப நாள் சோதிக்காமல் அவனை குழப்பமான ஒரு இதயநோய் தாக்கி ஏப்பம் விட்டது.

மீரா தனியானாள். அவள் அப்பாவின் நிழலில் கம்பெனி நிர்வாகத்தைப் பூரணமாகக் கற்றுக் கொண்டாள். அவள் அப்பாவும் இறந்த பிறகு, கம்பெனிதான் அவளுடைய துணை என்று சந்தோஷப்பட்டாள்.

தங்கதுரையைப் பார்க்கும் வரை!

அவளுக்குக் கீழே பணிபுரிந்தவர். பணிவாய் இருந் தவர். கம்பெனியின் லாபத்திற்காக இரவு என்றும், பகல் என்றும் பாராமல் உழைத்தவர். தவறான ஒரு கொட்டேஷ னால் கம்பெனிக்கு வரவிருந்த நாற்பது லட்ச நஷ்டத்தை உடனடி கவனத்தால் தவிர்த்தவர்.

அப்படித்தான் அவளுக்கு நெருக்கமானார். அன்றாடம் பிஸினஸ் விஷயமாக சந்திக்க ஆரம்பித்து, மெல்ல மெல்ல அவள் இதயத்திற்குள் துளை போட்டு நுழைந்தவர்.

அவளை முதல் முதலில் சந்திக்கும் யாரும் ஒரு சிறு முகச் சுளிப்பை மறைக்க முடியாமல் திணறுவார்கள். அவளுடைய பதவி காரணமாக பணிந்து போகிறவர்கள் கூட அவளை நேர்க்கு நேர் பார்க்கும்போது முகத்தில் ஒரு



கசப்பை வெளிக்காட்டாமல் இருக்கத் தடுமாறுவார்கள். தங்கதுரை அப்படியில்லை.

சொல்லப் போனால், ''இந்த ஸாரி உங்களுக்கு ரொம்ப நல்லா இருக்கு மேடம்.'' ''இந்த கண்ணாடி பிரேம் உங்க முகத்துக்கு நல்லாப் பொருந்துது மேடம்'' என்று அவள் அழகைப் பற்றி உயர்த்தித் தான் பேசியிருக்கிறார்.

அவருக்கும் மனைவி இல்லை, அவளுக்கும் கணவ னில்லை என்பதாலோ என்னவோ, வெறும் பணியாளர் என்ற எல்லையைத் தாண்டி அவரைப் பற்றிய கற்பனை களை வளர்த்துக் கொள்ளத் தோன்றியது.

''நீங்க ஏன் கல்யாணத்தைப் பத்தி யோசிச்சதில்லை?'' என்று ஒரு முறை நாசூக்காகக் கேட்டாள்.

''மனசுக்குப் பிடிச்ச ஒரு பொண்ணை நான் பார்க் கலை... தோளுக்கு மேல் வளர்ந்த ஒரு மகன் இருக்கான்... அதனால ஒரு தயக்கம் இருந்தது. ஆனா இப்ப கொஞ்ச நாளா நமக்கு ஒரு துணை இருந்தா நல்லா இருக்கு மேன்னு தோண ஆரம்பிச்சிருக்கு...'' என்றார் தங்கதுரை அவளின் அழகற்ற கண்களைப் பார்த்து.

''கொஞ்ச நாளான்னா?'' மீரா கேட்டாள்.

''தப்பா நெனைச்சுக்க மாட்டீங்கன்னா சொல்றேன். உங்களைப் போல ஒரு திறமையான அன்பான பொண்ணை சந்திப்போம்னு நான் நெனச்சதில்ல. சந் திச்சப்புறம், உங்க கூட மனம் விட்டுப் பேச ஆரம்பிச் சப்புறம் மீரா போல ஒரு பெண்ணை சந்திச்சிருந்தா இன்னொரு கல்யாணத்துக்கு ஒத்திட்டிருப்போமோன்னு தோணுது.''

எவ்வளவு கண்ணியமாக தன் விருப்பத்தைச் சொன் னார் தங்கதுரை! மீராவின் இதயம் உருகியது.

''உங்களைப் பார்த்ததிலோ்ந்து எனக்கும் அப்படி ஒரு எண்ணம் ஓடிட்டிருக்கு தெரியுமா?'' என்ற போது அவள் கன்னங்கள் சிவந்து விட்டன.

''ஏய் என்ன யோசனை?'' தங்கதுரை அவளை நிமிர்த்தி னார்.

''உங்களைப் பத்திதான்'' மீரா கட்டிலில் எழுந்து உட்கார்ந்து அப்படியே அவரை அணைத்துக் கொண் டாள்.

அவர் தோளில் முகவாய் பதித்து அவர் பரந்த முதுகில் விரலோட்டி இறுக்கினாள். வெகு எதேச்சையாக அவள் பார்வை நிமிர்ந்தது. எதிரில் இருந்த கண்ணாடியில் எதிர் சுவரில் இருந்த வார்ட்ரோபின் பிம்பம் விழுந்திருந்தது. வார்ட்ரோப் கண்ணாடியில் அவள் முதுகும். அவள் தோளின் மீது அழுந்தியிருந்த தங்கதுரையின் முகமும் பிரதிபலித்து அது எதிர் கண்ணாடியில் மறுபிம்பமாகத் தெரிந்தது.

அவளை அணைத்திருந்த தங்கதுரையின் முகத்தில் சந்தோஷம் இல்லை. லயிப்பு இல்லை. ஒரு அருவருப் பும், கசப்பும், வேண்டா வெறுப்பும் தெரிந்தன.

மீரா மெலிதாக அதிர்ந்தாள். சடாரென தன் முகத்தைப் பின்னுக்கிழுத்து அவர் முகத்தைப் பார்த்தாள்.

தங்கதுரையின் கண்களில் இப்போது கிறக்கம் தெரிந்தது. உதடுகளைக் குவித்து முத்தமிடத் தயாரா யிருப்பது போல் ஆசை இருந்தது.

உடனே மறுபடி அவரை இறுக அணைத்தாள். அவர் முகம் அவள் தோளுக்குப் பின்புறம் போனதும் சட் டென்று அதே கசப்புணர்வு, அருவருப்பு!

மீரா நொறுங்கினாள்.



அப்படியானால்... அப்படியானால் அவளிடம் நெருக்க மாக இருக்கும் போதெல்லாம் தங்கதுரை காட்டும் லயிப்பும், ஆனந்தமும் பொய்யா? அவரும் ஒரு சராசரி ஆண்மகன்தானா?

சடாரென அவரை விலக்கி எழுந்தாள்.

''உங்க நடிப்பைப் பார்த்துட்டேன்'' என்றாள். குரல் ஆத்திரத்தில் நடுங்கியது.

''என்ன உளர்றே?''

''என்னைக் கட்டிப் பிடிக்கும்போது உங்க மூஞ்சி போற லட்சணத்தை கண்ணாடில பார்த்துட்டேன்.''

''பாத்துட்டியா?'' தங்கதுரை எழுந்தார். அவள் தோளைத் தொட்டார். ''ஸாரிடா... உன்கிட்ட சொல்லாம மறைச்சிடணும்னுதான் பார்த்தேன்... சொன்னா நீ ரொம்பக் கவலைப்படுவியேன்னு நெனைச்சுத்தான் சொல்லாம இருந்தேன்... ஆனா மாட்டிக்கிட்டேன்...''

''என்ன சொல்றீங்க?''

தங்கதுரை மீராவின் கையைப் பற்றி தன் நெஞ்சுக்கும், வயிற்றுக்கும் இடைப்பட்ட பகுதியில் பதித்து அழுத்தி னார். அழுத்திய அதே கணம் முகத்தை சுளித்தார்.

''ரெண்டு நாளா இந்த இடத்துல ஒரு வலி... என் னன்னே புரியல... உன்கிட்ட சொன்னா நீ பயந்துருவே. டாக்டர், நர்ஸிங்ஹோம்னு ஆரம்பிச்சிருவே... ஆபீஸ்ல புது காண்டிராக்ட் கையெழுத்தாகற நேரத்துல எல்லா சுமையையும் உன் தலைல வைக்கறதுக்கு எனக்கு இஷ்ட மில்லை... அதனால வலியைப் பொறுத்திட்டிருந்தேன். ஆனா இறுக்கமாக் கட்டிப் பிடிக்கறப்ப, வலி சுளீர்னு உச்சி மண்டை வரைக்கும் அடிக்குது... என்னை அறியாம லேயே வலில மூஞ்சி சுளிச்சிடறேன்... உனக்கு தர இந்த சின்ன சந்தோஷத்தைக் கூட என் வலியைக் காரணம் காட்டி தராம இருக்க மனசு வரலை...''

தங்கதுரை சொல்லச் சொல்ல மீராவுக்குக் கண்களில் தண்ணீர் குபீரென்று பொங்கி வந்தது.

என் சுகம், என் சந்தோஷம் என்று மாய்ந்து மாய்ந்து யோசிப்பவரைப் போய் நான் எப்படிக் கேவலமாக சந்தேகப்பட்டு விட்டேன்!

அப்படியே மடங்கி அவர் காலடியில் விழுந்தாள். அவர் கால்களைக் கட்டிப் பிடித்தாள். அழுதாள்.

''ஏய்... என்ன ஆச்சி? நீ இப்படி டென்ஷன் ஆவேன்னு தெரியும். அதான் பேசாம இருந்தேன்.''

''என் சுகம்தான் பெரிசுன்னு நீங்க நெனைக்கலாங்க. நான் அப்படி இருக்க முடியாது. இப்பவே டாக்டர் கிட்ட போகலாம், வாங்க.''

''வெளையாடாதே... இப்ப நிம்மதியாத் தூங்கு. காலைல போய்க்கலாம்...''

தங்கதுரை அவளை அணைத்து எழுப்பினார்.

# 10

''ப்ளீஸ்... ப்ளீஸ்... ஒரே ஒரு சிகரெட்'' என்று கெஞ்சினான் செந்தில்குமார்.

''நோ!''

அவன் பாக்கெட்டிலிருந்து எடுத்த சிகரெட்டை அவன் கையிலிருந்து பிடுங்கி பாக்கெட்டிற்குள்ளேயே செருகினாள் அபர்ணா.

''நீங்க சிகரெட் பிடிக்கறது என் உடல்நலத்துக்குத் தீங்கானது. எனவே ஸ்மோக்கிங் நோ!''



''என்னாங்கடா இது வம்பா இருக்கு'' என்றான், மனோகரன். ''ஒரு தம் அடிக்க விடும்மா ப்ளீஸ்.''

''நோ என்றால் நோதான்.''

''ஏம்மா, எங்க ரூம்ல நீ கெஸ்ட்டா வந்து உக்காந்துக்கிட்டு எங்களுக்கே தடை உத்தரவு போடறியே, நியாயமா? மனித அடிப்படை உரிமையை தட்டிப் பறிக்க உனக்கு யார் அதிகாரம் கொடுத்தாங்க?''

''அதிகாரம்லாம் கொடுத்து வாங்கறது இல்லை. தானா எடுத்துக்கறது'' என்றாள் அபர்ணா. கால் மேல் கால் போட்டு அமர்ந்து ''இன்னொரு தடவை கேட்டா இந்த சிகரெட் பாக்கெட்டை பக்கெட் தண்ணில ஊறப் போட்டுருவேன்...''

''ஐயோ, ஐயோ... 555 சிகரெட் காஸ்ட்லி சிகரெட்... அப்படில்லாம் பண்ணிராத... எங்க பாடே இவ்வளவு மோசமா இருக்கே, உன்னைக் கட்டிக்கிட்டு எங்க நண்பன் என்ன அவஸ்தையெல்லாம் அனுபவிக்கப் போறானோ, பாவம்!''

''உங்க நண்பர் எங்கே? அட்ரஸ் மாறி வேற எங்கே யாவது போய்ட்டாரா?''

''இந்த அட்ரஸ்க்குத்தான் வந்திருப்பான்.. படி ஏறும் போது உன் குரல் கேட்டிருக்கும்... இதுகிட்ட வந்து மாட்ட வேணாமேன்னு அப்படியே ஒரு யூ டர்ன் எடுத்து எறங்கிப் போயிருப்பான்...'' என்றான், மனோகரன்.

''ஏற்கெனவே ரெண்டு நாளா ஒரு போன் கூட செய்ய முடியல, உங்க நண்பரால... கௌரவம் பார்த்தா நடக்காதுன்னு நானே புறப்பட்டு வந்திருக்கேன்... இப்பவும் டபாய்ச்சிட்டு ஓடிருவாரா?''

''ஏய், பாவம். அவனை விட்டுடு... அரக்கோணத்துல ஒரு பிராஜக்ட்... விடியறதுக்கு முன்னாலே தலைல தண்ணியை ஊத்திக்கிட்டு புறப்பட்டான்னா நைட் பத்து மணிக்கு மேலதான் ரிடர்ன் ஆறான்...''

''அரக்கோணம் என்ன, அமெரிக்காவே போனாக்கூட எஸ்.டீ.டி., ஐ.எஸ்.டி.னு போன் வசதி இருக்கே, பண்ண முடியாதா?''

வாசலில் யமஹா வந்து நிற்கும் சத்தம் கேட்டது. ''இதோ வந்தாச்சு'' என்று எழுந்தாள், அபர்ணா.

''நாங்க கண்ணை மூடிக்கணுமா இல்ல காதைப் பொத்திக்கணுமா?'' என்றான் செந்தில்குமார்.

''ரெண்டு பேரும் கொஞ்ச நேரம் வெளியே போய் நில்லுங்களேன். நான் எங்களோட தனியாப் பேசணும்னா ப்ரைவஸியே இல்ல...''

''தனியா பேசணுமா இல்ல தனியா...''

''தடியா... கெட்அவுட்...''

''ஹாய் அபர்ணா! நுழையறதுக்கு முன்னாலேயே கெட் அவுட்டா?''

''பாஸ்! உன்னை இல்லை... என்ன இது, நிலக்கரி சுரங்கத்துலயா வேலை பார்த்துட்டு வரே... வாட் இஸ் திஸ்?''

''பைக்ல சென்ட்ரல். சென்ட்ரல்லேந்து புளி மூட்டை ரயில்ல அரக்கோணம். அங்க லொடக்கு லொடக்கு ஜீப்ல ரெண்டு கிலோ மீட்டர். அப்புறம் பாக்டரில முதுகு ஒடியற வேலை. மறுபடியும் லொடக்கு லொடக்கு... புளி மூட்டை.... பைக்...'' என்றான், பாஸ்கரன் தன் தோல் பையை முதுகிலிருந்து இறக்கி வைத்து.

''இந்த தண்டச் சோறுகளை அனுப்பறதுதானே. பாவம் நீயே போய் கஷ்டப்படறே...'' அபர்ணா அவன் தலை முடியைக் கலைத்தாள்.

''கண்ணை மூடிக்கணுமா?''

''காதைப் பொத்திக்கணுமா?''



''அட, சும்மா தலையைத் தொட்டாக்கூட உன் நண்பனுங்க கலாட்டா பண்றாங்கப்பா... ரெண்டு நாளா நான் செம கோபமா இருக்கேன். சீக்கிரம் சுரண்டிக் குளிச்சிட்டு புறப்படு... ரெண்டு மூணு லிட்டர் ஐஸ்க்ரீமை உள்ள தள்ளினாத்தான் கோபம் குறையும்'' என்று அபர்ணா பாஸ்கரனை பாத்ரூமுக்குத் தள்ளினாள்.

''யப்பா, சீக்கிரம் உன் லொள்ளை வெளியே இழுத்திட்டுப் போ... ஒரு தம் அடிக்க விடாம கலாட்டா பண்ணிட்டிருக்கு...'' என்றான், செந்தில்குமார், அபர்ணா வின் ஓங்கிய கையிலிருந்து குனிந்து தப்பித்துக் கொண்டே.

''அஞ்சே நிமிஷம்'' என்று பாஸ்கரன், பாத்ரூம் கதவை சாத்திக் கொண்டான்.

''ரெண்டு பேரும் சமர்த்துப் பிள்ளைங்களா என் கூட வந்தீங்கன்னா, எனக்கு வாங்கித் தர்ற ஐஸ்க்ரீம்ல ஆளுக்கொரு ஸ்பூன் தருவேன்...'' என்றாள், அபர்ணா.

''வேணாம்மா... நீயே வயிறு முட்டக் கொட்டிக்க'' என்றான், மனோகரன் கதவுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு.

மிதமான வெளிச்சத்தில் அந்த பார்லரில் போடப் பட்டிருந்த மஞ்சள் நாற்காலிகளும், மஞ்சள் மேஜைகளும் புதுப் பொலிவு தந்தன.

சீண்டலும், தீண்டலும் முடிந்து பாஸ்கரன், அபர்ணா இருவரும் ஒரு நிலைக்கு வந்திருந்தார்கள்.

காலியான ஐஸ்க்ரீம் கண்ணாடிக் கோப்பைகளை கடைச் சிப்பந்தி எடுத்துப் போனான்.

''பாஸ்கர், உன்கிட்ட ஒரு விஷயம் பேசலாமா வேணாமான்னு தயக்கமாகவே இருக்கு.''

''சொல்லு அபர்ணா... என்கிட்ட என்ன தயக்கம்?''

''உன் அப்பாவைப் பத்தினது...''

''ஸோ வாட்?''

''பாங்க்ல இருந்துக்கிட்டு இந்தத் தகவலைல்லாம் நான் வெளியே பேசக்கூடாதுதான். ஆனா பாஸ்கரன்கற தால என்னால தவிர்க்க முடியலை...''

''அட, எதுக்கு இவ்வளவு பீடிகை?''

''உங்கப்பா தங்கதுரையை எனக்குத் தெரியும். ஆனா என்னை அவருக்குத் தெரியாது. இதுவரைக்கும் நீங்க அவரை அறிமுகப்படுத்தி வச்சதில்ல... அதனால எங்க பாங்க்குக்கு வரும்போது அவர் எந்த சந்தேகமும், இல் லாமதான் என்கிட்ட நடந்துப்பாரு... எங்க பாங்க்ல மீரா கம்பெனியோட ஒரு முக்கியமான அக்கவுண்ட் இருக்கு... உங்கப்பாவுக்கும் எங்க பாங்க்ல அந்தக் கம்பெனில அவர் வேலை செய்ய ஆரம்பிச்ச நாள்லேர்ந்து கணக்கு இருக்கு...''

''கம் டு தி பாயிண்ட்...''

''முன்னால கம்பெனி செக்குல கையெழுத்துப் போடற உரிமை மீராவுக்கு மட்டும்தான் இருந்தது. இப்ப கல்யாணத்துக்கப்புறம் உங்கப்பாவும் எம்.டி. அந்தஸ்துல செக்குல கையெழுத்துப் போடலாம்னு மாத்திட்டாங்க... கம்பெனி செலவுக்காக ஒவ்வொரு புதன்கிழமையும், சனிக்கிழமையும் நிறைய தொகை எடுப்பாங்க... அஞ்சு லட்சம் எடுத்தா உடனே அம்பதாயிரம் உங்கப்பா தன் கணக்குல கட்டிடறாரு. மூணு லட்சம் எடுத்தா முப்ப தாயிரம் கட்டிடறாரு. பத்து பர்ஸண்ட் பர்ஸனல் அக் கவுண்ட்டுக்குப் போகுது.''

''விடு... கம்பெனியே அவருக்கு சொந்தமாகியிருக்கும்... இது என்ன அல்பப் பணம்!''

''இல்ல பாஸ்கர்... உங்கப்பா அக்கவுண்ட்ல இந்த பணம் தங்கறதில்ல. பணம் கட்டின ரெண்டாவது நாளே அதே தொகைக்கு ஒரு செக் வந்துரும். பணத்தை வழிச்சி



எடுத்திட்டுப் போயிரும். அந்த செக் யார் பேருக்கு தெரியுமா ரெகுலரா வருது?''

''யாரு பேருக்கு?''

''ப்ரீதா... ஜே.எஸ். லாக்கர்ஸ்ல வேலை பார்க்கறான்னு சொன்னீங்களே - உங்க தூக்கத்தையே கெடுத்த அபார அழகி. அந்த ப்ரீதாவுக்கு அதே தொகையை ரெகுலரா உங்கப்பா கொடுத்திட்டிருக்காரு.''

''இன்ட்டரஸ்டிங்'' என்றான் பாஸ்கரன். ''அப்பாவுக்கு புது காண்டாக்ட் கெடைச்சாச்சா?''

''ஒரே ஒரு தடவை அவர் செல்போன்ல பேசினதும் என் காதுல விழுந்தது... ப்ரீதாகிட்டதான் பேசினாரு... அவர் பேசின வார்த்தைகளை அப்படியே சொல்றேன், கேட்டுக்க. 'மறுபடி என் ஸன் காண்டாக்ட் பண்ணி னானா? முட்டாள்தனமா அவனை வேற இழுத்து விட் டிருக்கே நீ! இதப்பாரு, இன்னொரு தடவை அவன் உன்னைத் தேடி வந்தா அந்த ப்ராஜெக்டே டிராப் ஆயி டிச்சின்னு சொல்லி அழகாக் கழட்டி விட்டுரு...' அப்படின்னாரு... இதுக்கு என்ன அர்த்தம், பாஸ்?''

பாஸ்கரன் முகம் சற்றே சீரியஸானது.

''அன்னிக்கு கம்பெனில அவளைப் பார்த்து நான் பேசின போதும் அப்பாதான் போன் பண்ணியிருக்கணும். நான் கத்தினா உங்களுக்குத்தான் ஆபத்துன்னு அவ சொன்னதுக்கு இப்பத்தான் அர்த்தம் புரியுது. எதிர்ல நான் உக்காந்திருக்கும்போது அவளால சத்தமா பதில் சொல்ல முடியல... போனை வச்சவுடனே பொய் சொல்லி என்னை அவசரமா கட் பண்ணினா. அவரோட எச்சரிக்கையாத்தான் இருக்கும். அப்புறம் நான் ஒரு தடவை பி.ஏ.வை விட்டு போன் பண்ணச் சொன்னேன். ப்ராஜெக்ட் பத்தி முடி வாகலை... முடிவானதும் அவளே பேசறேன்னு சொன் னாளாம். எல்லாம் அப்பா கொடுத்த உத்தரவாயிருக்கும்.''

''உங்கப்பாவுக்கு அவளுக்கும் நடுவுல...''

''எங்கப்பா பொம்பளை விஷயத்துல திறமைசாலி. அதிர்ஷ்டசாலி...'' என்று சிரித்தான் பாஸ்கர். ''அவரும், ப்ரீதாவும் சேர்ந்து என்ன திட்டம் போட்டிருக்காங்கன்னு புரியலை. எதுவா இருந்தாலும், பாதிப்பு அந்த மீராவுக்குத் தான், பாவம்...''

''பாவம்னு சொல்லிட்டுப் பேசாம இருக்கறதா?''

''வேற என்ன செய்யச் சொல்றே?''

''ஏதாவது செய் பாஸ்கர்'' என்றாள் அபர்ணா, கவலை சேர்ந்த முகத்துடன்.

## 11

'PERSONAL' என்று சிகப்பு மசியில் எழுதப்பட்டு அவள் பெயருக்கு வந்திருந்த கூரியர் உறையை மீரா பிரித்தாள்.

அழகாக இடைவெளி விட்டு தமிழில் டைப் செய்யப் பட்ட ஒரு கடிதம்.

*அன்புள்ள மீரா,*

*உங்கள் புதுக் கணவர் முழு யோக்கிய மானவர் அல்ல. கம்பெனி கணக்கிலிருந்து தன் தனிப்பட்ட கணக்கிற்கு பணம் மாற்றிக் கொள்வது மட்டுமல்லாது உங்களுக்கு எதிரான ஏதோ ஒரு சதி வேலையிலும் ஈடுபட்டிருப்ப தாக சந்தேகம் வருகிறது. கவனமாயிருப்பது உங்களுக்கு நல்லது.*



மொட்டைக் கடிதம்! ஒரு பெயர் இல்லை, கையெழுத் தில்லை, உண்மை விளம்பி, நலம் விரும்பி என்று பொதுவான புனைப் பெயர்கள்கூட இல்லை.

என்ன அர்த்தம் இந்தக் கடிதத்திற்கு? யார் அனுப்பி யிருப்பார்கள்? அண்மைக் காலமாக அவளுடைய சொத்து பற்றி அதை எப்படி தன் பெயருக்கு மாற்றுவது என்பது பற்றி தங்கதுரை அவ்வப்போது உதிர்த்து வந்த எதேச்சை யான பேச்சுக்களுக்குக் கூட அர்த்தம் இருக்கிறதா என்ன? கொடைக்கானல் போன போதே அவள் பார்த்திருப்பாள் என்பதால்தான் அவர் பெட்டியில் வைத்திருந்த சொத்து பட்டியல் பற்றி வலிய பேச்செடுத்தாரா?

கொடைக்கானல் என்றதும் அவளுக்கு சடாரென்று இன்னொரு காட்சியும் நினைவுக்கு வந்தது. தங்கதுரை ஹோட்டலுக்கு வெளியே இருந்த எஸ்.டீ.டி. பூத்தி லிருந்து யாருடன் பேசினார்? அன்றைக்கு அது பற்றி அவரிடம் கேட்காமல் விட்டுப் போய் விட்டது. கேட் டிருந்தால் அதற்கும் ஏதாவது விளக்கம் கொடுத்திருப் பாரோ?

அறைக்கதவு தள்ளித் திறக்கப்பட்டதும் அந்தக் கடிதத்தை அப்படியே மடியில் வைத்து கசக்கி திறந்திருந்த இழுப்பறைக்குள் போட்டாள்.

நுழைந்தவர் தங்கதுரைதான்.

''போலாமா?'' என்றார், உற்சாகமாக.

''எங்கே?''

"என்ன மீரா... ஊட்டி எஸ்டேட் பத்தின டாகுமெண்ட்ஸை இன்னிக்கு அட்வகேட் ரெடி பண்ணி வைக்கறேன்னாரே... நீ கையெழுத்துப் போட்டாதான் எஸ்டேட்டை என் பேருக்கு ரெண்டு நாள்ல மாத்தி பதிவு பண்ண முடியும். போய்ட்டு அப்படியே வெளியே டின்னர் சாப்பிடுவோம்.''

''இல்லைங்க... இன்னிக்கு வேணாம்...''

''என்னது, வேணாமா? வாட் டு யூ மீன்? நாளன்னைக்கு என் பர்த்டேக்கு நீ கொடுக்கற பரிசுன்னு சொன்னியே...''

''தலையை வலிக்குதுங்க... நாளைக்கு பார்ப்போம்...''

''தள்ளிப் போட வேணாம். டாக்குமெண்ட்ஸை எடுத்துக் கிட்டு வக்கீலை இங்கே வரச் சொல்லிரட்டுமா?''

''வேணாங்க. பர்த்டே அன்னிக்கு கொடுக்கலைன்னா என்ன, இன்னொரு நாள் ரிஜிஸ்டர் பண்ணினா போச்சு...''

''நானா கேட்டேன்? நானா உன்கிட்ட பிச்சை கேட் டேன்? நீயேதான் ஊட்டி எஸ்டேட்டை எனக்கு பிறந்த நாள் பரிசா தரதா சொன்னே?'' தங்கதுரையின் குரலில் ஒரு ஆவேசம் இருந்தது. மேஜையில் இரு கைகளையும் ஊன்றி அவள் முகத்துக்கு நெருக்கமாக தன் முகத்தை வைத்து குரலை இன்னும் உயர்த்தினார்.

''கொடுக்க இஷ்டமில்லேன்னா, இல்லைன்னு சொல் லிட்டுப் போ. தலைவலி அது இதுன்னு ஏன் சொல்றே?''

மீரா அரண்டு விட்டாள். இதுதான் உண்மையான தங்கதுரையின் நிறமா?

சுதாரித்தாள்.

''இன்னிக்கு என்னவோ சகுனம் சரியில்லேன்னு தோணிச்சு. அதனால சொன்னேன்... நீங்களா டியர் என்கிட்ட இப்படி கத்தினது?''

அவள் முகத்தில் தெரிந்த அதிர்ச்சியும், கலக்கமும் தங்கதுரையைத் தாக்கியிருக்க வேண்டும்.

''ஸாரி... ரொம்ப ஸாரி...'' என்று அவள் முகத்தை தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டார்.

''வர வழில டிராஃபிக்ல ஒரு பைக் மேல உரசி சின்ன சண்டையாயிடுச்சு... அதே மூடுல வந்தேனா... அநாவ சியமா உன்கிட்ட கத்திட்டேன்... இதை மனசுல வச்சுக் காதடா... இன்னிக்கு இல்லேன்னா என்ன, நாளைக்கு கையெழுத்து போட்டா ஆச்சு... அதுக்குப் போய் நான் கத்திட்டேன். எனக்கே வெக்கமாயிருக்கு... எம்மேல கோபமில்லையே கண்ணா?''



மீராவுக்கு ஆச்சரியமாயிருந்தது. நொடி நேரத்தில் சட்டென்று எப்படி மாறி விட்டது பேச்சு!

இது உண்மையான நிறமா, சற்று முன் பார்த்தது உண்மையான நிறமா?

மீரா காத்திருந்து கண்டு பிடிக்க முடிவு செய்தாள்.

இரவு.

தங்கதுரை பாத்ரூமில் இருந்தபோது திடீரென்றுதான் மீராவுக்கு அந்த ஐடியா தோன்றியது.

அவர் வெளியே வர இன்னும் பத்து நிமிடம் ஆகும்.

அவசரமாக எழுந்து தங்கதுரையின் ஸஃபாரி பாக் கெட்டிலிருந்து செல்லுலார் போனை எடுத்தாள்.

ஜப்பானிலிருந்து தருவித்த போன், மூன்றாக மடித் தால் பாக்கெட் கால்குலேட்டர் அளவிற்குத்தான் இருக்கும். அதைத் திறந்தாள்.

அன்றைய தேதியில் தங்கதுரை எந்தெந்த எண்களை டயல் செய்தார், எந்தெந்த எண்களிலிருந்து அவருடைய தொடர்பு வந்தது என்று இரண்டு பட்டியலும் அந்த செல்லுலார் போனில் நினைவில் பதிவாகியிருக்கும் குறிப்பிட்ட பொத்தானை அழுத்தினாள்.

இரண்டு பட்டியல்களையும் பார்த்து அவசரம் அவ சரமாக எண்களை ஒரு தாளில் குறித்துக் கொண்டாள். அந்தத் தாளை தன் கைப்பையின் ரகசிய அறைக்குள் போட்டாள்.

செல்போனை எடுத்த இடத்திலேயே வைத்து விட்டாள்.

ச்சே, ஒரு மொட்டைக் கடிதத்திற்கு மதிப்பு கொடுத்து என் மீது காதலாயிருப்பவரை நான் ஏன் சந்தேகிக்க ஆரம்பித்து விட்டேன்?

உங்கள் புதுக் கணவர்
முழு யோக்கியமானவர் அல்ல.

தங்கதுரை எனக்கு துரோகம் செய்வாரா என்ன? யாரோ பொறாமை பிடித்தவர்கள் செய்த வேலையா அது?

தங்கதுரை பாத்ரூமிலிருந்து வெளிப்பட்டார்.

''என்ன டியர் படுத்துட்டே? தலைவலி இன்னும் சரி யாகலையா?''

இன்றைக்கு இருக்கும் சந்தேகக் குழப்பத்தில், தங்க துரையுடன் ஆனந்தமாக இருக்க முடியுமா என்ன?

''ஆமாங்க'' என்றாள். ''இன்னிக்கு ரெஸ்ட் வேணும்... ஸாரி...''

''உன் உடம்பைப் பார்த்துக்கா... வக்கீலுக்கு போன் பண்ணிட்டே தானே?''

''ம்...''

''அப்புறம் ஜே.எஸ். லாக்கர்ஸ்ல சமீபத்துல உன் சங்கேத வார்த்தையை மாத்தினியா என்ன?''

''இல்லையே. ஏன் கேக்கறீங்க?''

''சில லேடீஸ் கல்யாணத்துக்கப்புறம் புருஷன் பேரை பாஸ்வேர்டா உபயோகப்படுத்தறாங்கன்னு என் நண்பன் ஒருத்தன் சொன்னான். நீ அந்த மாதிரி முட்டாள்தனமா எதுவும் செய்ஞ்சிராதேன்னு சொல்லத்தான் கேட்டேன். மாத்திரை ஏதாவது போட்டுக்கிட்டியா? இல்ல எடுத்துத் தரவா?''

''மாத்திரை போட்டுக்கிட்டேன்... குட்நைட்...''

லாக்கரைப் பற்றி திடீரென்று ஏன் விசாரித்தார்? சங்கேத வார்த்தையை என் வாயால் நான் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கிறாரா?



மீராவுக்குக் குழப்பமாயிருந்தது.

மறுநாள் தனிமை கிடைக்கக் காத்திருந்தாள், மீரா. கிடைத்ததும், முந்தின நாள் தங்கதுரையின் செல்போனிலிருந்து குறித்து வந்திருந்த டெலிபோன் எண்களைப் பார்வையிட்டாள்.

சில எண்கள் அவளுக்குப் பழக்கமான எண்கள்.

கம்பெனி தொடர்பாக சப்ளையர்கள், வாடிக்கையாளர்கள், வங்கி இவர்களுடன் பேசப் பயன்படுத்தும் எண்கள்.

தங்கதுரையிடமிருந்து இருமுறை போன் போனதாகவும், ஒருமுறை போன் வந்ததாகவும் ஒரே எண் இருந்தது. இது பரிச்சயமான எண் ஆயிற்றே. சற்றே யோசித்ததும் நினைவுக்கு வந்து விட்டது. இது ஜே.எஸ். லாக்கர்ஸின் எண்.

முந்தின தினம் அவள் லாக்கருக்குப் போகவில்லை. ஆனாலும் தங்கதுரை அந்த எண்ணிற்கு இரண்டு முறை போன் செய்திருந்தார். அங்கேயிருந்து அவருக்கும் போன் வந்திருக்கிறது. என்ன அவசியம் இருக்க முடியும்?

இதுவரை அவளுக்குப் பழக்கமில்லாத போன் எண்கள் என்னென்ன என்று பார்த்தாள்.

மூன்று எண்கள் இருந்தன.

முதல் எண்ணிற்கு டயல் செய்தாள்.

''குட்மார்னிங்... ஹனீபா ஜுவல்லர்ஸ்.''

''குட்மார்னிங்... நான் மிஸ்டர் தங்கதுரையோட பி.ஏ. பேசறேன். நேத்து சார் உங்களுக்கு போன் பண்ணியிருந்தாரு...'' என்றாள், குரலை சற்று மெலிதாக்கி.

''ஆமாம் மேடம்... நேத்து ரெடியாகல... இன்னிக்கு ஈவ்னிங் நிச்சயம் அந்த நெக்லஸ் ரெடியாயிருக்கும்னு சொல்லுங்க...''

''பேமெண்ட்?''

''அட்வான்ஸ் அம்பதாயிரம் போக இன்னும் முப்பத்தியேழாயிரம் தரணும் மேடம்...''

''தேங்க்யூ'' மீரா ரிசீவரை வைத்தாள்.

நெக்லஸா? யாருக்காக ஆர்டர் பண்ணியிருக்கிறார் தங்கதுரை? மீராவுக்கு ஒரு ஆச்சரியப் பரிசு தரலாம் என்று திட்டமிட்டிருக்கிறாரா? எண்பத்தியேழாயிரத்திற்கு இப்போது அவளுக்கு நெக்லஸ் எதற்கு?

மீரா அடுத்த எண்ணை டயல் செய்தாள்.

''குட்மார்னிங். எஸ்.கே.டிராவல்ஸ்...''

தன்னை தங்கதுரையின் பி.ஏ. என்று அறிமுகம் செய்தாள்.

''மேடம் விசாரிச்சிட்டோம். மேடம்... சார் கேக்கற 20, 21, 22 தேதில கோவாவுல அவர் கேட்ட ஹோட்டல்ல ரூம் இல்ல. அதே அளவுக்கு நல்ல த்ரீ ஸ்டார் ஹோட்டல் இன்னொண்ணு இருக்கு. அதுல ரூம் போடலாமா, அல்லது வேற தேதில வருவாங்களான்னு கேக்கணும்...''

''சாரையே பேசச் சொல்றேன்.''

அதற்கடுத்த போன் நம்பரும் டிராவல் ஏஜன்ஸி தான். முந்தின ஏஜன்ஸியால் இயலாததை இவர்கள் செய்து முடித்திருந்தார்கள்.

''மேடம்... 20, 21, 22 தேதில சார் கேட்ட ஹோட்டல் மித்ராலேயே டீலக்ஸ் சூட் போட்டாச்சு... இருபதாம் தேதி காலைல மும்பை பிளைட்டுக்கு டிக்கெட்டும் கன்ஃபர்ம் பண்ணியாச்சு. இன்னிக்கு ஆபீஸ்க்கு அனுப்பிடவா, வீட்டுக்கு அனுப்பிடவா?''

''சாரே சொல்வாரு... டிக்கெட் யார் பேர்ல போட்டிருக்கீங்க?''

''சார் சொன்னபடி மிஸஸ் அண்ட் மிஸ்டர் தங்கதுரை.''



''தேங்க்யூ'' என்று ரிசீவரை வைத்தாள்.

20, 21, 22.

கோவாவிற்கு ஒரு டூர் புரோகிராம் போட்டிருக்கிறார், அவளிடம் சொல்லாமலே. அவளுக்கு இன்னொரு ஆச்சரியப் பரிசாக அதை ஏற்பாடு பண்ணியிருக்கிறாரா?

மீராவுக்கு சந்தோஷப்படுவதா, சந்தேகப்படுவதா என்று புரியாமல் குழப்பமாயிருந்தது.

அரை மணி நேரத்திற்குள் அவள் யோசனையைத் தீவிரப்படுத்துவது போல் ஒரு போன் வந்தது.

''வணக்கம்... பாஸ்கரன் பேசறேன். எந்த பாஸ்கரன்னு தெரியுதா? தங்கதுரையோட மகன்...''

''சொல்லுங்க பாஸ்கர்...''

''இது டைரக்ட் லைன்தானே? வேற யாரும் ஒட்டு கேட்க முடியாதே?''

''டைரக்ட் லைன்தான்... தைரியமாப் பேசலாம்...''

''உங்களுக்கு கையெழுத்துப் போடாம ஒரு லெட்டர் வந்ததே... அதை அனுப்பினது நான்தான்.''

''வாட்?''

''ஆமாம்... உங்களுக்கு எதிரா ஏதோ திட்டம் போடறாரோ எங்கப்பானு எனக்கு சந்தேகம்... நீங்க கொஞ்சம் கவனமாயிருந்தா நல்லது... முக்கியமா ஜே.எஸ். லாக்கர்ஸ்ல வச்சிருக்கற நகையெல்லாம் பத்திரம். முடிஞ்சா உங்க சங்கேத வார்த்தையை மாத்திருங்க...''

''உங்களுக்கு ஏன் சந்தேகம் வந்தது பாஸ்கர்?''

''எனக்கு கெடைச்ச சில தகவல்களை வச்சிப் பார்க்கும்போது உங்களை எச்சரிக்கை பண்ணனும்னு தோணிச்சு. ஒருவேளை என் சந்தேகம்லாம் தப்பா இருந்து எங்கப்பா யோக்கியமானவரா இருந்தா எனக்கும் சந்

தோஷம்... உங்களுக்கும் சந்தோஷம்... அப்படியிருந்தா உங்க மனசை வேதனைப்பட வைச்சதுக்காக முன் கூட்டியே மன்னிப்பு கேட்டுக்கறேன்...''

''என்மேல இவ்வளவு அக்கறை காட்டறதுக்கு ரொம்ப நன்றி பாஸ்கர்... உங்கள் போன் நம்பரை எனக்குத் தர முடியுமா?''

பாஸ்கரோடு பேசி முடித்த பின் மீராவுக்கு குழப்பம் அதிகமாகி விட்டது.

# 12

''ஹாய் டியர்!'' என்று அறைக்குள் நுழைந்து கோட்டைக் கழற்றி ஹாங்கரில் மாட்டினார் தங்கதுரை.

''ஹாய்'' என்றாள் மீரா, உற்சாகமான புன்னகை காட்டி. ஆனால் அவர் பார்வையைத் தவிர்த்து ஒரு பைலில் ஆழ்ந்தாள்.

தங்கதுரை ஒரு கவரை அவள் மடியில் போட்டார்.

''குட் நியூஸ்'' என்றார்.

மீரா கவரைப் பிரித்து உள்ளேயிருந்த தாளை எடுத்தாள்.

எலக்ட்ரானிக் டைப்ரைட்டரில் நேர்த்தியாக டைப் செய்த கடிதம். கேசவலால் அண்டு கம்பெனி என்று பூனாவில் ஒரு முகவரி கொடுக்கப்பட்டிருந்தது. மீரா கம்பெனியின் சில இரும்பு பர்னிச்சர்களில் மிகுந்த ஆர்வம் காட்டுவதாகவும், மகாராஷ்டிராவிற்கு முழு ஏஜன்ஸி எடுப்பது குறித்து உரிய நபருடன் பேச விரும்புவதாகவும், 20, 21, 22 தேதிகளில் டைரக்டர்கள் அனைவரும் இருப்பார்கள் என்பதால் அந்த தேதிகளில்



வந்தால், விவரமாகப் பேசி முடிவு செய்ய வசதியாய் இருக்கும் என்று கடிதம் சொன்னது.

மீரா தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். நிமிர்ந்தாள்.

''நம்ப மேனேஜா யாரையாவது அனுப்புவோம்'' என்றாள்.

''இல்ல மீரா. அந்த கேசவலால் கம்பெனியோட ஓனர் பையன் எனக்குப் பழக்கம். நான் லெட்டர் எழுதிப் போட்டுதான் அவங்க இப்ப நமக்குக் கடிதம் போட்டிருக்காங்க. மூணு நாள்தான். நீ கம்பெனியைப் பார்த்துக்கோயேன். நானே பர்ஸனலா போய்ட்டு வந்துடறேன்...''

''தனியாவா?''

''இதுக்கு எதுக்கு துணை?''

''உதவிக்கு ஒரு மேனேஜரை வேணா...''

''நோ நோ... இந்த மாதிரி முக்கியமான மேட்டரெல்லாம் நாமளே டைரக்டா டீல் பண்ணனும். அஸிஸ்டெண்டுனு யாரையாவது அழைச்சிட்டுப் போனா, போட்டிக் கம்பெனிக்கு மேட்டர் லீக் ஆயிடும்... அந்த ரிஸ்க்கே வேணாம். டோண்ட் ஒர்ரி டியர். நான் சமாளிச்சுருவேன்...'' தங்கதுரை அவளின் பின்புறம் வந்து நின்று இரு கன்னங்களிலும் அவர் கையை இழைத்தார்.

''நீங்க சமாளிச்சிருவீங்க... நான் எப்படி சமாளிக்கறதுன்னு யோசிச்சிட்டிருக்கேன்...''

''மூணு நாள்தான.''

''இந்தக் கம்பெனி போன் நம்பரை குறிச்சுக்கறேன்...''

மீரா ஒரு காகிதத்தில் எழுத முனைந்தபோது, தங்கதுரை அந்தக் கடிதத்தை அவளிடமிருந்து வலிக்காமல் பறித்தார்.

''கம்பெனி நம்பர் எதுக்கு? நான் அங்கேயா தங்கப் போறேன்? ஹோட்டல்லதான் தங்குவேன்... போய்ச் சேர்ந்தவுடனே நான் உன்கூடப் பேசறேன்...''

''அதுவும் கரெக்ட்தான்'' என்றாள் மீரா, புன்னகைத்து ''இப்ப உங்களுக்கு என்ன புரோகிராம்?''

''ஏன் டியர்?''

''ஜே.எஸ். லாக்கர்ஸ் வரைக்கும் போகணும். கூட வார்றீங்களா?''

தங்கதுரை சட்டென்று திகைத்தார். துரிதமாய் சுதாரித்தார். ''லாக்கருக்கா? போலாமே...'' என்றார். ''வேற ஒரு அப்பாயின்ட்மென்ட் வச்சிருந்தேன். அதை கேன்சல் பண்ணிட்டு வந்துடறேன்...''

சட்டென்று அறையை விட்டு வெளிப்பட்டார்.

# 13

''குட்மார்னிங் மேடம்'' என்று தன் வசீகரமான புன்னகையுடன் எழுந்தாள் ப்ரீதா. ''உங்க பாஸ் வோர்டை போடுங்க மேடம்.''

உள்ளே நுழைந்து லாக்கரில் இரு சாவிகள் போட்டுத் திறந்து -

என்னவோ தப்பு நடந்திருக்கிறது என்று எச்சரித்தது மீராவின் உள் மனசு.

நகைப் பெட்டிகள் சற்றே இடம் பெயர்ந்திருப்பது போலத் தோன்றியது.

''டியர், நீ எனக்கு ஒரு சின்ன உதவி பண்ணணுமே'' என்றாள் ப்ரீதா.

''சொல்லு.''

''லாக்கர்ல என்னென்ன நகை வச்சிருக்கேன்னு ஒரு லிஸ்ட் எடுக்கணும்னு ரொம்ப நாளா நெனைச்சுக்கறேன் முடியலை... இப்ப எடுத்துருவோமா?''



தங்கதுரையிடமிருந்து சில கணங்களுக்கு பதிலே இல்லை.

''லிஸ்ட் எடுக்கறதுல உங்களுக்கு ஏதாவது கஷ்டமா?''

''லிஸ்ட் எதுக்கு மீரா? இந்த லாக்கரை உன்னைத் தவிர வேற யார் திறக்க முடியும்?''

''என்கிட்ட என்னென்ன நகை இருக்குன்னு ஒரு லிஸ்ட் இருந்தா நல்லதுதானே? நான் சொல்லச் சொல்ல இந்த பேப்பர்ல குறிச்சுக்கிட்டே வாங்களேன்... பத்தே நிமிஷ வேலை...''

மீரா ஒவ்வொரு நகைப் பெட்டியாகத் திறந்தாள். நகையை வெளியே எடுத்தாள். அது பற்றிய விபரத்தை தங்கதுரையிடம் சொன்னாள்.

'முக்கியமா ஜே.எஸ்.லாக்கர்ல வச்சிருக்கற நகையெல்லாம் பத்திரம்' என்று பாஸ்கரன் எச்சரித்தது நினைவிற்கு வந்தது.

ஒவ்வொரு நகையாக சரி பார்த்தாள். அவளுடைய அத்தனை நகைகளும் அவளுக்கு நினைவிருந்தன. சரி பார்த்துக் கொண்டே வந்ததில் எல்லா நகைகளும் இருந்தன.

ஆனால் அவளுக்கு மிகவும் பிடித்த மயில் நெக்லஸை அவள் இப்படிப் புரட்டியா வைத்திருந்தாள்?

ஆனால் அவள் எதுவும் வாய்விட்டு சொல்லவில்லை. அவளைத் தவிர வேறு யார் இந்த லாக்கரைத் திறக்க முடியும்? சங்கேத வார்த்தை தெரியாமல் கம்ப்யூட்டர் உள்ளேயே அனுமதிக்காதே!

வீண் சந்தேகமா?

நகைப் பெட்டிகளை ஒவ்வொன்றாய் உள்ளே எடுத்து வைத்தாள். லாக்கரைப் பூட்டினாள்.

''தேங்க்யூ டியர்'' என்று அவரிடமிருந்து நகைப் பட்டியலை வாங்கி தன் கைப்பைக்குள் வைத்துக் கொண்டாள், ''போலாமா?''

## 14

''ஏன் பாஸ்கர் மீராகிட்ட நீ பேசினே?'' என்று சற்றே கவலையுடன் கேட்டான், அபர்ணா.

ரெஸ்ட்டாரண்டின் மரசுவரின் பின்னணியில் அவள் முகம் அழகாக பிரேம் போட்டது போல் இருந்தது.

''கையெழுத்துப் போடாம மொட்டைக் கடிதம் அனுப்பினதே எனக்கு ரொம்ப வெக்கமா இருந்தது... ஏதோ தப்பு நடக்குதுன்னு எனக்குத் தெரிஞ்சும் அதை அவங்ககிட்ட சொல்லாம இருக்க மனசு கேக்கலை.''

பாஸ்கர் ஸ்பூன் நுனியால் தட்டில் கோலம் போட்டான்.

''ஆனா அந்த மீரா உங்கப்பா பேரல பைத்தியமா இருக்கா... நீ போன் பண்ணினதைக் கூட அவர்கிட்ட அவ இந்நேரம் சொல்லியிருப்பா...''

''சொல்லட்டுமே... எங்கப்பாவோட மனசு கோணக் கூடாதுன்னு போலித்தனமா பொய்யா நடந்துக்கற அவசியம் எனக்கு இல்லே...''

''அவ்வளவு பணக்கார மனைவிக்கு அவர் எதுக்கு கவரிங் நகை வாங்கினார்னும் கூட எனக்கு ஆச்சரியம்.''

''என்னது, கவரிங் நகை வாங்கினாரா?''

''தீபா கவரிங் ஜுவல்லர்ஸ்க்கு பதினைஞ்சாயிரத்துக்கு ஒரு செக் கொடுத்திருந்தாரு, பாஸ்...''

''கிட்டத்தட்ட சி.பி.ஐ. லெவல்ல நீ அந்த அக்கவுண்ட்டை கவனிச்சிட்டிருக்கே போலிருக்கு?''



''ஏய், அதனால எம்மேல வருத்தமா? உங்கப்பான்றதால தானா ஒரு ஆர்வம் வந்துடுது. நியாயமாப் பார்த்தா இப்படி நான் ஒரு தலைப்பட்சமா ஒரு கணக்கைப் பத்தி வெளியே பேசக்கூடாதுதான்.''

''கவரிங் கம்பெனிக்கு எதுக்கு செக் கொடுத்தாரு? எங்கப்பாவோட திட்டமே எனக்குப் புரிய மாட்டேங்குது...'' என்றான் பாஸ்கரன், பிளேட்டை நகர்த்தி விட்டு பெப்ஸியை அருகே இழுத்து.

## 15

தன் சட்டையை வைத்து பெட்டியை மூடினார் தங்கதுரை.

''பாக்கிங் ஓவர்'' என்றார் புன்னகைத்து. ''விடிகாலைல ஏர்போர்ட்டுக்குப் போகணும்ங்கறதால, சீக்கிரம் தூங்கலாம்னு நெனைக்கறேன். சீக்கிரம் தூங்கறதுன்னா, உன்னை கிஸ் அடிக்கலாம்னு அர்த்தமில்ல...'' என்று மீராவை அப்படியே ஏந்தி அணைத்துப் படுக்கையில் தள்ளினார்.

அவருடைய வலுவான தசைகளுக்குள் தஞ்சம் ஆன போது, இந்த ஆணா எனக்கு துரோகம் செய்யப் போகிறான் என்று மீராவின் அடிவயிற்றில் ஒரு கலக்கம் ஏற்பட்டது.

மீரா கண்களைத் திறந்தாள். படுத்ததிலிருந்து ஒரு கணம் கூட உறங்காமல் கண்களை மூடி வைத்திருந்தவள், தங்கதுரை தூங்கிவிட்டார் என்று நம்பிக்கை வந்ததும், அவர் கையை மெல்ல நகர்த்திவிட்டு, எழுந்தாள்.

கட்டிலிலிருந்து இறங்கினாள்.

இரவு விளக்கு மட்டும் மங்கலாக எரிந்து கொண்டிருந்தது.

கட்டிலுக்கு அடியில் இருந்து பயணத்திற்கு தயாராய் இருந்த தங்கதுரையின் பெட்டியை ஒலி எழுப்பாமல் வெளியே இழுத்தாள்.

தன்னிடமிருந்த சாவியால் திறந்தாள்.

தங்கதுரை அடுக்கியிருந்த உடைகளை ஒவ்வொன்றாக அப்படியே உயர்த்தினாள். இரண்டு உடைகளுக்கு நடுவிலிருந்து டிராவல் ஏஜன்ஸியின் உறை தட்டுப் பட்டது.

திறந்தாள்.

மும்பைக்கான விமான டிக்கெட்கள்.

இரண்டு.

மிஸ்டர் தங்கதுரை, மிஸஸ் தங்கதுரை.

அவளுள் எரிமலை வெடித்தது.

அதற்கடுத்த செட் உடைகளுக்கு நடுவில் ஒரு வெல்வெட் துணிப்பை இருந்தது. அதை எடுத்து ஜிப்பைத் திறந்தாள். அதிர்ந்தாள்.

நீல வெல்வெட் பின்னணியில் மின்னல்களை வாரி இறைத்துக் கொண்டு அவளுடைய மயில் நெக்லஸ்.

இது எப்படி வெளியே வந்தது? எப்போது வந்தது?

கட்டிலில் சின்ன சலசலப்பு.

மீரா சுதாரிக்கும் முன்னர், தங்கதுரை எழுந்து விட்டிருந்தார். எழுந்தவுடன் அவரைப் பரபரப்பு தொற்றிக் கொண்டது.

மேஜை விளக்கைத் தட்டினார்.

பளீர் என்ற வெளிச்சத்தில் திறந்த பெட்டிக்கு எதிரில் மண்டியிருந்த மீரா தெரிந்தாள்.

''ஏய், என்ன பண்றே?'' அவர் குரல் பதறியது.

இதற்கு மேலும் ரகசியம் வேண்டாம் என்று மீராவுக்குத் தோன்றிவிட்டது.



''நான் உங்களைக் கேக்கறேன். என்ன இது?'' மீராவுக்கு குரல் ஆத்திரத்தில் நடுங்கியது.

''என்னை ஏன் இப்படி ஏமாத்திட்டிருக்கீங்க?''

''அந்த நெக்லஸை வை...'' என்று அவள் கையிலிருந்து அவர் பறிக்க வந்தார்.

மீரா அதை தன் முதுகுக்குப் பின் மறைத்து சடாரென்று பின் வாங்கினாள்.

''இதை எப்படி வெளியே எடுத்தீங்க?''

''மீரா. அதைக் கொடுத்துரு... அதை ஒரு நண்பன் கிட்ட காட்டிட்டு திருப்பி எடுத்திட்டு வந்துடுவேன்... இதே மாடல்ல அவன் ஒரு நகை பண்ணனும்னு சொன்னான்.''

''பொய்! எத்தனை பொய்! அப்படியே இருந்தாலும், லாக்கர்லேர்ந்து என்னைக் கேக்காம எப்படி எடுத்தீங்க? உங்களை எப்படி எடுக்க விட்டாங்க?''

''உனக்கு விளக்கமா சொல்றேன். முதல்ல கத்தாதே.''

''என்னை அடக்காதீங்க... உங்க கூட நாளைக்கு பிளைட்ல வரப்போறது யார்? யார் அந்த மிஸஸ் தங்கதுரை?''

''மீரா...'' தங்கதுரை தோள்களைக் குலுக்கினார். ''உனக்குத் தெரியாம இருக்கற வரைக்கும் நல்லதுன்னு நெனைச்சேன். இப்ப தெரிஞ்சாச்சு. முழுசாத் தெரியட்டும். உன் மூஞ்சியை எவன் சகிச்சுக்கிட்டு வாழ்க்கை நடத்துவான்? உனக்கு நான் படுக்கைலயும் சரி, வாழ்க்கைலயும் சரி, எந்தக் குறையும் வைக்க மாட்டேன். ஆனா அதே சமயம், என் சந்தோஷத்துக்காக நான் கொஞ்சம் அப்படி இப்படி இருக்கத்தான் இருப்பேன். கண்டுக்காதே...''

''யார் இந்த மிஸஸ் தங்கதுரை?''

''ப்ரீதா! ஜே.எஸ்.லாக்கர்ஸ்ல இருக்காளே அவ...''

''அவ உதவியோடத்தான் இந்த நெக்லஸை வெளியே எடுத்தீங்களா?'' மீரா இன்னும் குரலைத் தழைக்கவில்லை.

''ஆமா... கம்ப்யூட்டர் ஸ்பெஷலிஸ்ட் ஒருத்தனைப் பிடிச்சு உன் பாஸ்வேர்டு என்னன்னு தெரிஞ்சுக்கிட்டா. அதுக்கப்புறம் உன் கையெழுத்தைப் போட்டு 'லாக்கரை உபயோகிக்க என் கணவருக்கு உரிமை தருகிறேன்'னு ஒரு லெட்டர் எழுதி லாக்கர் கம்பெனிக்குக் கொடுத்தேன். லாக்கரைத் திறக்க விட்டாங்க. உன்னை விட ப்ரீதா கழுத்துக்கு இந்த நெக்லஸ் இன்னும் எவ்வளவு அழகா இருக்கும். யோசிச்சுப் பாரு...''

''இந்த நெக்லஸைக் காட்டி அவ கூட ஹனிமூன் கொண்டாடப் போறீங்களா?''

''யெஸ்... ஹனிமூன்தான்! குறுக்கே யார் நின்னாலும் தூக்கி எறிஞ்சிட்டுப் போயிடுவேன்... நீ பேசாம அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டுப் போயிட்டா உனக்கு என் மனைவின்னு ஒரு அந்தஸ்து கெடைக்கும்... நீ நெனைச்சா இந்த மாதிரி இன்னொரு நெக்லஸ் வாங்கிக்கலாம்...''

''யூ ராஸ்கல்! என் நகையை எடுத்து இன்னொருத்திக்கு தானம் பண்ண உங்களுக்கு என்ன உரிமை இருக்கு?''

''இப்படி நீ கத்துவேன்னுதான் இதே போல கவரிங் நகை ஒண்ணு பண்ணி லாக்கர் உள்ளே வச்சிருக்கேன். மூன்று நாள் உபயோகப்படுத்திட்டு, ப்ரீதா இதைத் திருப்பித் தந்துருவா...''

''இன்னும் என்னென்ன நகைல்லாம் என் லாக்கர் லேர்ந்து எடுத்தீங்க?''

''நெனைச்சிருந்தா எல்லாம் எடுத்திருக்கலாம்... ப்ரீதாவும் பொம்பிளைதான? எல்லாத்தையும் வாங்கிக் கிட்டா என் பேர்ல சலிப்பு வந்துரும். என்னை விட சின்னச் சின்ன அழகான பசங்க நெறைய பேர் அவளை வட்டமிடறாங்க... அதனால ஒரு சமயத்துக்கு ஒரு நகை தான் சாம்பிள்னு எடுக்க நெனைச்சிருக்கேன்...''



மீரா எழுந்தாள். ''இவ்வளவு பெரிய கிரிமினல் குத்தம் பண்ணிட்டு கொஞ்சம் கூட அலட்டிக்காம உங்களால எப்படிப் பேச முடியுது? லாக்கரைத் திறந்தேன். நகையை எடுத்தேன், போர்ஜரி பண்ணேன், கவரிங் நகையை வச்சேன். மனைவி இருக்கறப்பவே இன்னொருத்தி கூட ஹனிமூன் போறேன்னு எப்படி கூசாமப் பேச முடியுது உங்களால? உங்க வார்த்தைங்களை உண்மைனு நம்பி கல்யாணம் பண்ணிக்கிட்டேன்...''

''வேற எந்த ஆம்பிளை உன்னை ஏறெடுத்துப் பார்ப்பான்? உனக்கு என்ன குறை வச்சிட்டேன்?''

''பொய்யும், புரட்டும், திருட்டும், துரோகமும் கூட குத்தமில்ல, குறையில்லைன்னு சொல்றீங்களா?''

''நான் மோசமானவன்தான்... அஞ்சு கோடி ரூபா காம்பன்சேஷன் கொடுத்துரு... விவாகரத்து பண்ணிடலாம்.''

''என்கிட்டேர்ந்து ஒரு பைசா கூட பெயராது... உங்களுக்கு மாத்திக் கொடுத்த உரிமையை எல்லாம் கூட நாளைக்கே திருப்பி வாங்கிடப் போறேன்...''

இரண்டே எட்டில் தங்கதுரை அவளை அடைந்தார்.

''மீரா... இதப்பாரு... நான் நல்லவனுக்கு நல்லவன் பொல்லாதவனுக்கு பொல்லாதவன்...''

அவள் தோளைப் பற்றித் திருப்பினார். அவள் கையை முறுக்கி மயில் நெக்லஸை அவளிடமிருந்து பறிக்க முயன்றார்.

மீரா ஆவேசமானாள். சட்டென கழுத்தை வளைத்து அவர் கையைக் கடித்தாள்.

தங்கதுரை கையை உதறி விலகி, அதே வேகத்தில் பளீ ரென அறைந்தார். நகை அவர் கைக்குப் போய்விட்டது.

மீராவின் கன்னம் பழுத்தது. அடித்த வேகத்தில் பெட்டி யின் மீது போய் விழுந்தாள். விழுந்த வேகத்தில் அவர் உடைகளைக் கலைத்து அந்த விமான டிக்கெட்களை எடுத்து இரண்டாக, நான்காக, பதினாறாகக் கிழித்தாள்.

''ஏய்!'' தங்கதுரை ஆத்திரம் மிகுந்தவராக தாவி அவளை அடைந்து எட்டி உதைத்தார்.

அவள் அணு அணுவாக ரசித்த அவருடைய வலுவான உடம்பு இப்போது அவளைப் புரட்டி எடுத்தது.

அவருடைய இன்னொரு உதையில் அவள் எகிறிப் போய் கட்டிலின் பக்கவாட்டில் மோதினாள். அந்த வேகத்தில் அங்கிருந்த அலங்காரப் பித்தளை மேஜை விளக்கு அவள் மீது சரிந்தது.

மீரா எரிமலை போல் கொதித்துக் கொண்டிருந்தாள். அவளை அள்ளி எடுத்து எறிவதற்காக தங்கதுரை குனிந்த போது, அந்தப் பித்தளை விளக்கை முழு வேகத்துடன் அவர் மீது அடித்தாள்.

விளக்கின் கனமான அடிபாகம் தங்கதுரையின் நெற்றி யின் பக்கவாட்டில் மோதியது. மோதிய வேகம் மீராவின் கை வழியே உடல் பூராவும் அதிர்வுகளை அனுப்பியது.

தங்கதுரை ஒரு கணத்திற்கும் குறைவான நேரம் அப்படியே உறைந்து நின்றார். பின்னர் வெட்டப்பட்ட வாழைமரம் போல அப்படியே சரிந்தார்.

அவருடைய தலை ரூமின் கார்ப்பெட்டில் தொம்மென்று மோதியது. அறையின் தரையெங்கும் அந்த அதிர்வு பரவியது. அவர் கையிலிருந்து மயில் நெக்லஸ் எகிறியது.

மீரா நடுங்கிக் கொண்டு அவரைப் பார்த்தாள்.



அவர் எழுந்து மீண்டும் தாக்கும்போது எதிர் கொள்வதற் காக உயர்த்திய விளக்குடன் அவள் தயாராயிருந்தாள்.

தங்கதுரை எழுந்திருக்கவில்லை.

ஒரு கணம், ஒரு முழு நிமிடம், இரண்டு நிமிடங்கள் தங்கதுரையிடமிருந்து எந்த அசைவும் இல்லை!

மீராவுக்கு தூக்கிவாரிப் போட்டது.

கையிலிருந்த பித்தளை விளக்கை மெல்லக் கீழே வைத்தாள்.

ஸ்லோமோஷனில் தங்கதுரையை நெருங்கினாள்.

அவர் தோளைத் தொட்டு அசைத்தாள்.

''என்னங்க.. என்னங்க...'' அவர் அசையவில்லை. கண்கள் மூடியிருந்தன. நெற்றிப் பக்கவாட்டிலிருந்து ரத்தம் ஒரு கோடாக இறங்கியது. காதருகில் குனிந்து சற்று சத்தமாகக் கூப்பிட்டாள். அசைவில்லை.

நெஞ்சில் கை வைத்து உலுக்கினாள். நெஞ்சின் மீது படிந்திருந்த கை விலகிக் கீழே சரிந்தது.

குபீரென்று பயம் அவளைத் தாக்கியது.

ஐயோ, என்ன ஆயிற்று இவருக்கு?

இரண்டு கைகளிலும் அவரை அசைத்தாள். உலுக்கினாள்.

தங்கதுரை கண் திறக்கவில்லை.

அவருடைய மூச்சு நின்றுவிட்டதா அல்லது குறைந்து விட்டதா? அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஒரு விஷயம் மட்டும் தெளிவாகப் புரிந்தது.

இந்த சூழ்நிலையை அவளால் தனியாக சமாளிக்க முடியாது. அவளுக்கு உதவி தேவை.

உதவிக்கு யாரைக் கூப்பிடுவது?

தங்கதுரையைத் தாக்கிக் கீழே வீழ்த்திவிட்டேன் என்று யாரிடம் சொல்ல முடியும்?

அவள் தலையைப் பிடித்துக் கொண்டாள். மண்டைக் குள் ஒரு ரெயில் ஓடுவது போன்ற திடும் திடும் திடும்.

மெல்ல, மெல்ல ஒரு பூ விரிவது போல் அவளுக்குள் அந்த யோசனை விரிந்தது.

பாஸ்கர்!

அவள் நிலைமையைப் புரிந்து கொள்ளக்கூடிய ஒரே ஆள் பாஸ்கர்!

# 16

செந்தில்குமாரோடு சீட்டாட்டத்தில் ஜெயித்து விட்டு அப்போதுதான் பாஸ்கரன் படுத்திருந்தான். விளக்கை அணைத்ததும் அவன் செல்போன் சிணுங்கியது.

''பாஸ்கர்.. மீரா பேசறேன்...'' எதிர்முனைக் குரல் நடுங் கியது. துடித்தது. அழுகைக்குத் தயாராயிருந்தது. ''பாஸ்கர், இங்கே ஒரு அசம்பாவிதம் ஆகிப்போச்சு. நான் உங்களை உடனே பார்க்கணும்...''

''அப்பா எங்கே?''

''அவர் வீட்ல கெடக்காரு. அடிச்சாரு. பதிலுக்கு நான் அடிச்சதில கீழே விழுந்தவரு எழுந்துக்கலை. எனக்கு ரொம்ப பயமா இருக்கு.''

''எங்கேர்ந்து பேசறீங்க?''

''வீட்டில இன்னிக்கு யாரும் இல்லை... சமையல் வேலை செய்யவறங்க வீட்ல கல்யாணம்னு எல்லாரும் புறப்பட்டுப் போயிட்டாங்க.. கேட்டுல வாட்ச்மேன் மட்டும் தான். வீட்ல எனக்கு தனியா இருக்க பயமா இருந்தது. கார் எடுத்திட்டு வெளியே வந்துட்டேன். இப்ப உங்க ஏரியா போஸ்ட் ஆபீஸ்கிட்ட இருக்கேன்... உங்களை நான் உடனே



பாக்கணும்... நீங்க வரீங்களா, இல்ல நீங்க தங்கியிருக்கற இடத்தைச் சொன்னா, நான் அங்கே வரேன்...''

''வீட்ல நடந்த சண்டை வாட்ச்மேனுக்குத் தெரியுமா?''

''தெரியாது. என் பெட்ரூம் வீட்டுல பின்பக்கத்துல இருக்கு. ஜன்னலுக்கு திரை போட்டிருக்கும்.. ஏஸி பண்ணின ரூம்கறதால வெளியே சத்தம் கேக்காது...''

''நீங்க அங்கேயே இருங்க. நான் புறப்பட்டு வரேன்.. பத்தே நிமிஷம் கொடுங்க...''

''தங்கதுரை செத்திருப்பாரா, பாஸ்கர்?'' அவள் குரல் உடைந்து, போனில் அழுகை வெடித்தது.

''நேர்ல வரேன்'' பாஸ்கரன் பரபரப்பாக எழுந்தான்.

''என்னடா மேட்டர்?'' என்றான், மனோகரன்.

''எங்கப்பாவுக்கும் அந்த மீராவுக்கும் சண்டை. அடிதடி ஆயிருச்சு போல இருக்கு.. அப்பாவுக்கு ஏதோ காயம்னு சொன்னாங்க... பார்த்துட்டு வந்துடறேன்...''

''ஏதாவது ஹெல்ப் வேணுமாடா?''

''தேவையா இருந்தா உங்களுக்கு போன் பண்றேன்'' பாஸ்கரன் தன் செல்லுலார் போனை பறித்துக் கொண்டு பேண்ட்டை மாட்டினான்.

# 17

தங்கதுரை அசைந்தார். மெல்ல இமைகளைத் திறந்தார். கனத்த இரும்பு குண்டு ஒன்றை மண்டையில் கட்டிவிட்டது போல ஒரு பாரம். நெற்றிப்பொட்டிலிருந்து ராட்சஸ வலி புறப்பட்டு உடம்பெங்கும் ஊடுருவியது.

கண் திறந்த சில கணங்களுக்கு அவருக்கு சூழ்நிலையே பிடிபடவில்லை. கட்டில் நகர்ந்திருந்தது. தலையணை

சரிந்திருந்தது. தண்ணீர்க் குவளை கவிழ்ந்திருந்தது. மேஜை விளக்கு கீழே புரண்டிருந்தது.

தங்கதுரை வலிக்கும் நெற்றியைத் தொட்டார். பிசுக் கென்று ரத்தம் ஒட்டியது. எழுந்து உட்கார்ந்து கண்ணாடி யில் தன் முகம் பார்த்ததும், அவருக்கு எல்லாம் நினை வுக்கு வந்து விட்டது.

அவர் பயணப்பெட்டி திறந்தே கிடந்தது. விமான டிக்கெட்டுகள் கிழிபட்டு அறையெங்கும் பறந்திருந்தன.

கட்டிலுக்கடியில் குனிந்து பார்த்தார்.

அவர் கையிலிருந்து பறந்து போன மயில் நெக்லஸ் அங்கு இல்லை.

மீரா எங்கே?

ரத்தம் வழியும் நெற்றியில் ஒரு கைக்குட்டையை அழுத் திப் பொத்திக் கொண்டு அவர் அறை அறையாகத் தேடினார்.

இங்கே இல்லை. இங்கேயும் இல்லை... ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தார். பிட்ச்!

மாருதி ஜென்னைக் காணவில்லை.

மைகாட்! மீரா எங்கே போயிருக்கிறாள்? போலீஸிடம் போயிருக்கிறாளா?

நோ.... போலீஸிடம் சொல்வது என்ற முடிவு செய்தால் ஒரு போன் செய்து போலீஸை இங்கே வரவழைத் திருக்கலாமே...

மண்டையில் இடி இடி என்று வலித்தது. முதலில் இதை நிறுத்த வேண்டும்.

பாத்ரூமில் நுழைந்தார். காயத்தை நன்றாகக் கழுவினார். ஐஸ் வைத்து ரத்தக் கசிவை நிறுத்தினார். ஆன்ட்டி செப்டிக் மருந்தைப் போட்டு, பிளாஸ்திரி போட்டார்.

மீரா எங்கே போயிருப்பாள்?

அவருக்குத் தெரிந்து அவளுக்கு நெருக்கமான தோழிகள் கிடையாது.



கெஸ்ட்ஹவுஸிற்குப் புறப்பட்டுப் போயிருப்பாளா? அல் லது வக்கீலைத் தேடி போயிருப்பாளா? அவரை அடித்துக் காயப்படுத்தியதால் பயந்து கொண்டு ஓடி விட்டாளா?

போனை எடுத்தார். அவசரமாக டயல் செய்தார்.

''ப்ரீதா.. நான்தான். எல்லாம் கை மீறிப் போய்டிச்சு. மீரா வுக்கு தெரிஞ்சிடுச்சு. டிக்கெட் ரெண்டையும் கிழிச்சுப் போட்டுட்டா...''

''உங்களுக்கு தைரியம் இருக்கா?'' ப்ரீதா மறுமுனையில் வெடித்தாள். ''ஏர்லைன்ஸ்ல எனக்கு ஆள் தெரியும். கிழிஞ்ச டிக்கெட்டுக்கு டூப்ளிக்கேட் வாங்கறது கஷ்டமில்லை.''

''அந்த மயில் நெக்லஸையும் அவ பிடுங்கிட்டுப் போயிட்டா...''

''வாட்! நீங்க ஆம்பளைதானே? மீராவை ஒத்தைக் கையால ஒடிச்சுப் போடற அளவு உங்களுக்கு பலம் இருக்கு இல்ல? அப்புறம் எப்படி அவ கையை ஓங்க விட்டீங்க? எனக்கு அந்த நெக்லஸ் வேணும், வேணும்... நெக்லஸ் கெடைக்கலைன்னா, நம்ம ட்ரிப்பையே கேன்ஸல் பண்ணிரலாம்...''

''ப்ரீதா.. இப்ப என்ன விபரீதமான நெலமைல இருக்கோம்னு உனக்குப் புரியலையா? அது உன்னோட நெக்லஸ் இல்ல, என்னோட நெக்லஸ் இல்ல... மீராவோட நெக்லஸ்... லாக்கருக்குள்ளேர்ந்து எப்படி வெளியே வந்ததுன்னு போலீஸ் கேட்டா, மாட்டப்போறது நான் மட்டும் இல்லை... நீயும்தான்...''

''என்னை மாட்டி விடப் பார்க்காதீங்க!''

''அப்ப ஒரே வழிதான் இருக்கு.. நாம உடனே தலைமறைவாயிடணும்...''

''நான் என்ன தீவிரவாதியா தலைமறைவாகறதுக்கு? போலீஸ் என்னை ஒண்ணும் பண்ணமுடியாது. உங்க மனைவியோட சங்கேத வார்த்தை உங்களுக்குத் தெரிஞ்

சிருந்தது. ஏமாத்திக் கையெழுத்துப் போட்டு நீங்க கொண்டு வந்த லெட்டரை நம்பி நாங்க உங்களை அனுமதிச்சோம். லாக்கரைத் திறந்தது நானா, நீங்களா? நகையெடுத்தது நானா, நீங்களா? மனைவி மாதிரி பொய்க் கையெழுத்து போட்டது நீங்களா, நானா? என்னை எந்த போலீஸாலும் ஒண்ணும் பண்ண முடியாது. மெரட்டாதீங்க...''

''ப்ரீதா! எவ்வளவு சுலபமாகக் கழட்டிவிடறே...''

''இப்பவும் கழட்டி விடலை... அந்த நெக்லஸைக் கொண்டு வாங்க. சாமர்த்தியம் இருந்தா உங்க மனைவியை போலீஸ்க்கு போகவிடாம தடுங்க...''

''என்னை டேபிள் லாம்ப்பால அடிச்சிப் போட்டுட்டு அவ கௌம்பிப் போயிட்டா.. அவ காரைக் காணும்.''

''அவங்க போலீஸ்க்குப் போயிருந்தா இந்நேரம் உங்க வீட்டைச் சுத்தி போலீஸ் நின்னுட்டிருக்கும்.. உங்களை அடிச்சான்னா சொன்னீங்க?''

''அடிச்சி மயக்கமாக்கிட்டு ஓடியிருக்கா...''

''அப்ப தைரியமா போலீஸ்க்கு போயிருக்க மாட்டா. அவ எங்கே போயிருப்பான்னு எனக்குத் தெரியும்.''

''எங்கே?''

''பாஸ்கரனைத் தேடி.''

''வாட்!''

''பாஸ்கரனையும் நம்ம குரூப்ல சேர்த்துக்கணும்னு தான் அவரை நான் கூப்பிட்டேன். அப்ப சத்தம் போட்டு திருப்பி அனுப்பச் சொன்னீங்க...''

''முட்டாள்! பாஸ்கரனைப் பத்தி உனக்குத் தெரியாது. ராவணனுக்குப் பொறந்திருந்தாலும், அவன் ராமன். அவன்கிட்ட நீ அந்த பாஸ்வேர்டு பத்திக் கேட்டிருந்தா உங்க எம்.டி.க்கு ஒரு லெட்டர். போலீஸ்க்கு ஒரு லெட்டர் அன்னிக்கே தட்டி விட்டிருப்பான்! ஆனா அதுக்கும் மீரா அவனைத் தேடிப் போறதுக்கும் என்ன சம்பந்தம்?''

''உங்களோட மீரா அன்னிக்கு லாக்கருக்கு வந்து நகைக்கெல்லாம் பட்டியல் எடுத்தாளே.''



''ஆமா.''

''அன்னிக்கு நீங்க புறப்பட்டுப் போன கொஞ்ச நேரத் துக்கெல்லாம் பாஸ்கரன் கிட்டேர்ந்து போன் வந்தது... மீரா வந்திருக்காங்களான்னு கேட்டார்.''

''இதை ஏன் நீ மொதல்லயே சொல்லலை?''

''என்னவோ மறந்துட்டேன்... அதனாலதான் சொல்றேன். மீரா ஒருவேளை பாஸ்கரைத் தேடிப்போயிருக்கலாம்...''

''செஞ்சிருப்பா... அவளை நான் பிடிக்கறேன். நல்லவேளை எனக்காகக் கொடுத்த ஸான்ட்ரோ கார் வாசல்லதான் நிக்குது.''

''நாம போறோமா இல்லியானு இன்னும் ஒரு மணி நேரத் துக்குள்ள போன் பண்ணுங்க. உங்களுக்கு நிஜமாவே எம்மேல ஆசை இருந்தா போலீஸ்ல மாட்டினாலும் எம் பேரு சொல்லாதீங்க. ஆல் தி பெஸ்ட்.'' ப்ரீதா மறுமுனை யில் துண்டித்தாள்.

தங்கதுரை கார் சாவியை எடுத்துக் கொண்டார்.

# 18

''அவசரப்பட்டுட்டீங்க'' என்றான், பாஸ்கரன். ''எத் தனையோ நாள் பொறுமையா இருந்த நீங்க இன்னிக்குக் கொஞ்சம் அவசரப்பட்டுட்டீங்க.. அப்பாவை நீங்க கையாண்ட விதம் தப்பு. அவரை அடிச்சது தப்பில்லை.. ஆனா அப்படியே போட்டுட்டு ஓடி வந்தீங்களே அது தப்பு.. வாங்க, முதல்ல அவரை கவனிப்போம்...''

''எனக்கு பயமாயிருக்கு, பாஸ்கர்...'' என்று அவன் கைகளைப் பிடித்து தன் கைகளுக்கும் வைத்துக் கொண்டாள், மீரா.

''அவருக்கு ஒண்ணும் ஆகியிருக்காது. அப்படியே ஆகியிருந்தாலும் தற்காப்புக்காக அடிச்சதால உங்க போல

குத்தம் இல்லே... நீங்க போலீஸைக் கூப்பிட்டிருந்தா, பிரச்சனையே இருந்திருக்காது. உங்களை மாதிரி பொய்க் கையெழுத்து போட்டது, நகையை லாக்கர்லேர்ந்து எடுத்தது இந்த ரெண்டு பாயிண்ட் போறும் அவரை கம்பிக்குப் பின்னால தள்ளறதுக்கு...''

"போலீஸ் ஸ்டேஷனை நான் மிதிச்சதில்லை, பாஸ்கர். மிதிக்க இஷ்டமும் இல்ல... நீங்க கூட வருவீங்களா?''

"நான் வரட்டுமா?''

கார் ஜன்னலுக்குள் குனிந்து முகம் காட்டினார் தங்கதுரை.

"நீ.. நீங்களா?'' மீரா அதிர்ச்சியுடன் பார்த்தாள்.

''சாகலை. உயிரோடத்தான் இருக்கேன்...'' தங்கதுரை ஆவேசமான குரலில் சொன்னார். "இப்ப புதுசா சின்னப் பையனா பிடிச்சிட்டியா?''

"த்தூ!'' என்றான், பாஸ்கரன். "மண்டையை ரெண்டாப் பொளந்தா கூட உங்களுக்கு புத்தி வராதாப்பா?''பாஸ்கரன் காருக்குள்ளிருந்து இறங்கப் பார்த்தான்.

''நெக்லஸ் எங்கேடி?'' தங்கதுரை காருக்குள் கை விட்டு மீராவின் கழுத்தைப் பிடித்தார். வலுவான விரல் கள் அவள் குரல்வளையை வளைத்தன. நெறித்தன.

''அப்பா, உங்களுக்கு என்ன பைத்தியமா?'' பாஸ்கர் ஆவேசமானான். அவர் கையைப் பிடுங்கப் பார்த்தான்.

மீராவுக்கு மூச்சு திணறியது. அவள் செயல்பட்டாள்.

இக்னீஷன் எப்போது திருகப்பட்டது? கியர் எப்போது பொருத்தப்பட்டது? க்ளட்ச் எப்போது விடுவிக்கப்பட்டது?

கார் விருட்டென்று ஒரு துள்ளலுடன் சீறிப் புறப்பட்டது.

அந்த எதிர்பாராத வேகத்தில் தங்கதுரை விசிறி எறி யப்பட்டார்.

தார்சாலையில் விழுந்து புரண்டு எழுந்தபோது, நெற்றி பிளாஸ்திரி பிரிந்து ரத்தம் மீண்டும் வேகமாகக் கசிய ஆரம்பித்தது.



தங்கதுரை தன் காரை நோக்கி ஓடினார்.

''மீரா... நேரே போலீஸ் ஸ்டேஷன் போங்க...'' என்றான், பாஸ்கரன்.

கார் அதி தீவிர வேகத்தில் பறந்தது.

''நோ!'' என்று கத்தினாள், மீரா. ஸ்டியரிங்கை இறுகப் பற்றியபடி, ''தங்கதுரையைப் பார்த்தீங்க இல்ல? அவர் உயிரோட பிழைச்சு வந்துட்டார். இப்ப போலீஸ்க்குப் போனா, நான் அவரை அடிச்சதைத்தான் பெரிசு பண்ணு வாங்க... எனக்கு யோசிக்க நேரம் வேணும்...''

''காரோட வேகத்தைக் குறையுங்க மீரா... இந்த ஸ்பீடுல போனா கண்ட்ரோல் பண்ண முடியாது..." பாஸ்கரன் பதறினான்.

தெருமுனையில் காரை மீரா திருப்பிய வேகத்தில் அவன் கதவின் மீது எறியப்பட்டு பிடித்துக் கொள்ள வேண்டியிருந்தது! சீட் பெல்ட்டை அணிந்தான்.

மீராவின் விழிகள் பெரிது பெரிதாய்ப் பூத்திருந்தன. உடம்பில் பயம் ஊடுருவியிருந்தது.

''பாஸ்கர், அவசரப்பட்டு நான் எந்த முடிவும் எடுக்க விரும்பலை. உக்காந்து பேசுவோம்... நேரே தையூர்ல இருக்கற என் கெஸ்ட் ஹவுஸ்க்கு வண்டியை விடறேன். அங்க தனிமைல நிதானமா என்னால யோசிக்க முடியும்.''

''அவசியமில்ல மீரா.''

''ப்ளீஸ்... என்னைக் கட்டாயப்படுத்தாதீங்க... ஐயோ!''

'ஐயோ' என்றது ரியர்வியூ கண்ணாடியில் பார்த்து.

''தங்கதுரை நம்மளைத் துரத்தறாரு.'' மீராவின் குரல் கீச்சிட்டது.

''வண்டியை நிறுத்துங்க, மீரா. நான் டிரைவ் பண்றேன்...''

''நோ! வண்டியை நிறுத்தினா, தங்கதுரை என்னைப் பிடிச்சிடுவாரு... கார் ஓட்டறதுல நான் எவ்வளவு எக்ஸ் பர்ட்டுனு அவருக்குத் தெரியாது. இன்னிக்குத் தெரிஞ் சுக்கப் போறாரு...''

மீராவுக்கு ஆவேசமே வந்திருந்தது. ஜென் புதிய வேகத்தில் புதிய உந்துதலோடு சீறிப் பாய்ந்தது.

''நீங்க பயப்படவே வேண்டாம். நான் போலீஸ்க்கு இன்ஃபார்ம் பண்ணிடறேன். அவங்க தங்கதுரையைப் பார்த்துப்பாங்க...''

பாஸ்கரன் செல்லுலார் போனை எடுக்க, மீரா மிரண்டாள்.

''நோ!'' என்று மீண்டும் கத்தினாள். பாஸ்கர், ப்ளீஸ் எனக்கு பிரஷர் கொடுக்காதீங்க... என்னை யோசிச்சு முடிவெடுக்க விடுங்க...''

பாஸ்கரன் பயந்து போனை அணைத்தான்.

எதற்காக இவள் இவ்வளவு தூரம் பிடிவாதம் பிடிக்கிறாள்? போலீசிடம் அப்படி என்ன பயம்?

மீரா ரியர்வியூ மிர்ரரில் மறுபடி பார்த்தாள்.

தங்கதுரையின் காருக்கும், அவள் காருக்கும் இடையில் இடைவெளி சற்றே குறைந்திருந்தது.

இரவின் பின்பகுதியானதால் சாலைகளில் போக்குவரத்தே இல்லை.

மீரா காரின் வேகத்தை இன்னும் கூட்டினாள்.

அடுத்த திருப்பத்தில் கார் தையூர் போகும் நெடுஞ்சாலைக்குள் நுழைந்தது.

அகலமான நெடுஞ்சாலையில் நுழைந்ததும், ஜென் இன்னும் வேகம் பிடித்தது.

காற்று காரில் மோதி சீறிப் பின் வாங்கியது.

தங்கதுரையின் காரும் அயராமல் பின் தொடர்ந்தது.

அந்த வேகத்தில் மீரா பயணம் செய்யும்போது போலீஸ் பற்றி மறுபடி பேச்செடுக்க பாஸ்கரனுக்கு பயமாயிருந்தது. செல்லுலார் போனை மடியில் வைத்துப் பிடித்திருந்தான்.

''நாம இப்ப எக்ஸாட்டா எங்கே போறோம், மீரா?'' என்றான், பாஸ்கரன் சற்றே உரக்க.

''தையூர்ல இருக்கற என் கெஸ்ட் ஹவுஸ்க்கு. அங்க ரெண்டு பக்கமும் தென்னந்தோப்பு. தோட்டக்காரங்க... அவ்வளவுதான்.''



''போலீசுக்குப் போறதைப் பத்தி அங்கே போய்ப் பேசிக்கலாம்கறீங்க?''

''போலீஸ்... போலீஸ்னு.. ஏன் என்னைப் பயமுறுத் -''

மீரா ஒரு கணம் பாதையிலிருந்து பார்வையைத் திருப்பி அவனிடம் இறைஞ்சி மறுபடி பார்வையைப் பாதையில் பதித்தபோது, சாலை வளைந்து திரும்புவது கண்டாள். ஸ்டியரிங்கை அதே வேகத்தில் திருப்பிய போது, வெகு திடீரென்றுதான் அதைப் பார்த்தாள் - சாலையில் நடுவில் ஒரு லாரி புரண்டு கிடந்தது.

''மீரா!'' பாஸ்கரன் அலறினான்.

லாரியைத் தவிர்ப்பதற்காக மீரா காரை லேசாக ஒடித்துத் திருப்பியதில் கார் பாதையிலிருந்து சீறி விலகி செம்மண் சரிவில் தேய்த்து இறங்கி, டயர்களுக்கு பிடிப்பு கிடைக்காமல், உருட்டி விட்ட பகடைக்காய் போல சடசடவென்று குட்டிக்கரணம் அடித்தது. மூன்றாவது குட்டிக்கரணத்திற்குப் பிறகு டயர்கள் நான்கையும் மேலே தூக்கியபடி அது மல்லாந்து நின்றது.

## 19

தங்கதுரை ஸான்ட்ரோவை பிரேக் அடித்து வேகம் குறைத்து சரிவில் இறக்கி நிறுத்தினார்.

காரிலிருந்து இறங்கி பரபரவென்று ஓடினார்.

கவிழ்ந்து கிடந்த லாரியிலோ அதன் பக்கத்திலோ ஆட்கள் இல்லை. இருந்திருந்தால் அவர்களும் விபத்தால் கவரப்பட்டிருப்பார்கள் என்று அவருக்குத் தோன்றியது.

மாருதி ஜென்னின் சக்கரங்களில் மூன்று இன்னும் சுழன்று கொண்டிருந்தன.

அது தலைகீழாகத் தேய்த்து நகர்ந்த இடம் அகலமாக செம்மண்ணில் உழுதாற் போலிருந்தது.

காரின் உச்சி நசுங்கியிருந்தது. முன்புறம் என்ஜின் இருந்த பகுதி வளைந்து தூக்கி காரின் முன் கண்ணாடியை முற்றிலும் மூடியிருந்தது.

பக்கவாட்டிலிருந்து பார்த்தபோது சீட்டு பெல்ட்கள் போட்ட நிலையில் மீராவும், பாஸ்கரனும் அடுத்தடுத்து தலைகீழாக உட்கார்ந்து தொங்கினார்கள்.

மீராவின் முகத்தில் பக்கங்களில் எல்லாம் ரத்தம், ரத்தம், ரத்தம். அரையிருட்டில் அதற்கு மேல் புலப்பட வில்லை. தங்கதுரையின் உடல் நடுங்கியது.

காரின் மறுபுறம் ஓடினார். குனிந்து பார்த்தார்.

பாஸ்கரின் தலை தொங்கியிருந்தது.

அவனிடமிருந்து நழுவியிருந்த செல்லுலார் போனில் ஒரு பச்சைப் புள்ளி ஒளிர்ந்து ஒளிர்ந்து அணைந்தது

''பாஸ்கர்'' தங்கதுரை உடைந்த கண்ணாடி ஜன்னல் வழியே அவனைத் தொட்டார்.

''பாஸ்கர்... பாஸ்கர்...'' என்று சற்று உலுக்கினார்.

பாஸ்கர் சீட் பெல்ட்டால் கவ்வப்பட்டு தலைகீழாகத் தொங்கியிருந்தானே தவிர, அவருடைய நெருக்கமான குரலுக்குக் கூட அசையவில்லை.

தங்கதுரைக்கு தொண்டை அடைத்தது.

பாஸ்கரனை எப்படி வெளியே எடுப்பது?

உதவிக்கு ஆள் இல்லாமல் அந்தக் காரை நிமிர்த்த முடியாது.

யாரை அழைப்பது?

போலீஸ்? தீயணைப்புத்துறை?

கூப்பிடு. யாரையாவது கூப்பிடு!

உடைந்த ஜன்னல் வழியே கையை உள்ளே செலுத்தி பாஸ்கரின் செல்லுலார் போனை மெல்ல வெளியே எடுத்தார். போனை எடுக்கும்போது வளைந்த அவர் சுண்டு விரலில் ஏதோ ஒன்று சிக்கியது. கையோடு இழுத்துக் கொண்டு வெளியே வந்தது.



வெளியே கை வந்ததும்தான் பார்த்தார்.

அது ஏதோ இல்லை. மயில் நெக்லஸ்.

பதக்கத்தின் மீது ஒரே ஒரு ரத்தத் துளி சிந்தியிருந்தது.

அந்த அரையிருட்டிலும், அந்த வைர நெக்லஸ் பளீரென்று விளக்குப் போட்டாற் போல் தெரிந்தது.

தங்கதுரையின் விரல்கள் நடுங்கின.

இந்த நெக்லஸிற்காகத் தானே இந்தத் துரத்தல்? தீயணைப்புத் துறைக்கு போன் செய்வதற்காக காருக்குள் ளிருந்து செல்லுலார் போன் எடுத்தவர் கையில் தானாக அந்த மயில் நெக்லஸ்!

தங்கதுரை தடுமாறினார்.

நான் இப்போது என்ன செய்ய வேண்டும்?

ஓடு. ஓடிவிடு. நெக்லஸோடு ஓடி விடு. இந்த விபத்தையே யாரும் இன்னும் பார்க்கவில்லை. ஓடிவிடு...

ஓடாதே! காருக்குள் அடிபட்டுக் கிடப்பது உன் மகன். உன்னை நம்பி வந்த மனைவி. நீ உடனே கவனித்தால் ஒருவேளை அவர்கள் உயிர் பிழைக்கலாம்!

பிழைத்தால்? மீரா பிழைத்தால் நீ நேரே, சென்ட்ரல் ஜெயிலுக்குப் போக வேண்டியதுதான்!

தங்கதுரைக்கு மண்டை வெடித்து விடும்போல் இருந்தது.

ஒரு முடிவுக்கு வந்தவராக ப்ரீதாவின் எண்களை டயல் செய்தார்.

''ப்ரீதா, நெக்லஸ் கிடைத்து விட்டது!''

''கிரேட்!'' அவள் குரலில் உற்சாகம் பீறிட்டது.

''மீராவை எப்படி சமாளிச்சீங்க?''

''மீராவும், பாஸ்கரனும் மோசமான விபத்தில் காரோடு சேர்ந்து புரண்டு கிடக்காங்க, ப்ரீதா.''

''வாட்!''

"உயிர் இருக்கா இல்லையான்னு தெரியலை... நான் பின்னால வரதைப் பார்த்து மீரா மிரண்டு போய் விட்டாள். காரை படுவேகமாக ஓட்டி, கண்ட்ரோல் இல்லாம கவுத்துட்டா..."

"மை காட்! எங்கே நடந்துச்சு விபத்து?"

"தையூர் போற வழில. நெடுஞ்சாலைல ஒதுக்குப் புறமான எடத்துல..."

"விபத்தை வேற யார் யார் பார்த்தாங்க?"

"வேற யாரும் பார்க்கலை. இந்த ஏரியாலயே வேற யாரும் இல்ல..."

"விடியறதுக்கு முன்னால காரை யாராவது கண்டு பிடிப்பாங்களா?"

"சான்ஸே இல்ல, ப்ரீதா..."

"நல்லதாப் போச்சு... நீங்க நெக்லஸோட புறப்பட்டு வாங்க. டிக்கெட்டுக்கு நான் ஏற்பாடு பண்ணிடறேன். எனக்கு மும்பைல ஆள் இருக்காங்க... மும்பை போனதும், போலி பாஸ்போர்ட்டுக்கு ஏற்பாடு பண்ணிக்கிட்டு துபாய், மலேஷியா, அமெரிக்கான்னு எங்கேயாவது நீங்க சொன்ன மாதிரி தலை மறைவாயிடலாம்."

"ஆனா, பாஸ்கர்."

"இப்ப நீங்க என்ன செய்ய முடியும்?"

"போலீஸ்க்கோ, தீயணைப்புத் துறைக்கோ போன் பண்றேன். நான் யாருன்னு சொல்லிக்காம இங்கே ஒரு விபத்து நடந்திருக்குன்னு சொல்லிட்டு போனை வச்சிடறேன்... அவங்க வந்து கண்டு பிடிக்கட்டும்..."

"கொஞ்சமாவது மூளையை உபயோகப்படுத்தறீங்களா, நீங்க? மீரா விபத்துல மாட்டிக்கிட்டா யாருக்கு முதல் தகவல் தரணும்னு பார்ப்பாங்க?"

"அவ புருஷனுக்கு! ஆமா, என்னை அவங்க காண்டாக்ட் பண்ணினா பிராப்ளம்... ஆனா, இப்படியே இவங்களைப் போட்டுட்டு..."

"உங்களுக்கு மீரா வேணுமா, ப்ரீதா வேணுமான்னு முடிவு செய்யற நேரம் வந்தாச்சு. நம்ம பிளைட் கிளம்பின



பிறகு யாராவது காரைக் கண்டு பிடிப்பாங்க... உயிரோட இருக்கணும்னு அதிர்ஷ்டம் இருந்தா அவங்களுக்கு உயிர் இருக்கும். அதே சமயம் நாம மும்பைல இருப்போம். ஒரு வேளை இதை விபத்துன்னு நெனைச்சு, சொத்து பூரா உங்க பேருக்கு தானா மாறி வந்தா, ஏத்துக்குங்க... அனுபவியுங்க... மீரா பொழைக்கணும்னு ஏன் நினைக்கறீங்க? சும்மா அங்கேயே நின்னு ஆபத்துல மாட்டிக்காதீங்க. அந்த இடத்தைக் காலி பண்ணுங்க."

ப்ரீதாவின் குரலில் உறுதி இருந்தது.

தங்கதுரை பாஸ்கரின் தலைகீழான முகத்தில் மெல்ல விரலோட்டினார்.

"ஸாரி, பாஸ்கர்!" என்றார்.

கண்ணோரம் துளிர்த்த நீர் முத்துக்களை அலட்சியம் செய்து ஸான்ட்ரோ கார் நோக்கி விரைந்தார்.

## 20

விமான நிலையம்.

மும்பை விமானம் அறிவிக்கப்பட்டு விட்டது. பயணிகள் பகுதியில் அடுத்தடுத்து பாலிமர் இருக்கைகளில் ப்ரீதாவும், தங்கதுரையும் அமர்ந்திருந்தார்கள்.

"மூஞ்சியைக் கொஞ்சம் ரிலாக்ஸ்டா வச்சுக்கங்க" என்றாள் ப்ரீதா. "ரொம்ப டென்ஷனாத் தெரியறீங்க..."

"டென்ஷனாத்தான் இருக்கேன்..." தங்கதுரை உதடுகளை நாவால் ஈரப்படுத்திக் கொண்டார்.

"அப்படியே மடக்கினாலும் விபத்து பத்தி எனக்குத் தெரியவே தெரியாதுன்னுதான் அடம் பிடிக்கப் போறீங்க? அப்புறம் என்ன? மும்பைப் பயணம் ஏற்கெனவே ஆபீஸ்ல திட்டம் போட்டது... நைட் மனைவி புறப்பட்டு வெளியே போனாங்க... கெஸ்ட் ஹவுஸ் போறதா

சொன்னாங்க, வேற எதுவும் தெரியாதுன்னு அடிச்சு சொல்லிட்டாப் போச்சு...'' என்றாள் ப்ரீதா, தங்கதுரையின் கையை அழுத்திக் கொடுத்து.

''நெக்லஸ் எங்கே?''

''என் கைப்பையில் பத்திரமா இருக்கு... எவ்வளவு பணம் தேறிச்சு?''

''வீட்டுல இருந்ததையெல்லாம் புரட்டினதுல பணமா ஒண்ணரை லட்சம் கெடைச்சுது... நகையா அம்பது அறுபது பவுன் தேறியிருக்கும். அத்தோட விடலை நான்... எந்தெந்த பாங்க்ல கணக்கு இருக்கோ அந்தந்த கணக்குலேர்ந்து பணம் எடுத்திருக்கேன்...''

''நைட்லே எந்த பேங்க் திறந்திருக்கும்?''

''24 மணி நேரம் பணம் எடுக்க வசதியா டெல்லர் மெஷின்களை எவ்வளவோ பேங்க்ல வச்சிருக்காங்களே. நான் இங்கேயே இருந்தா பல கோடி சொத்தை அனுபவிக் கலாம்தான். ஆனா அதை விட உன்னோட இருக்கணும் கறதுதான் எனக்கு பெரிசு. அதனாலதான் ரிஸ்க் எடுத்து நெக்லஸைல்லாம் வெளியே எடுத்தேன். உன்னை மட்டும் பார்க்கலைன்னா என் வாழ்க்கையே வறண்டு போயிருக்கும் ப்ரீதா. மும்பை போனதும் டயத்தை வேஸ்ட் பண்ணாம நாம தப்பிக்கப் பார்க்கணும்.''

''மயில் நெக்லஸ் தவிர எடுத்திட்டு வந்திருக்கற மத்த நகையெல்லாம் மும்பைலேயே நாம வித்துரணும்.''

ப்ரீதா நிறுத்தினாள். காரணம் தங்கதுரைக்கு அருகில் நிழலாடியது.

''மிஸ்டர் தங்கதுரை? மும்பைக்குப் போகும் பயணி?''

சாதாரண உடை அணிந்திருந்தாலும், அந்த நபரின் தோற்றத்தைப் பார்த்தவுடனேயே தங்கதுரைக்குப் புரிந்து விட்டது. அவருடைய நா உலர்ந்தது.

''யெஸ்.''

''கொஞ்சம் தனியா வர முடியுமா? மேடம், நீங்களும் வாங்க...''



''யார் நீங்க?''

''தமிழக போலீஸைச் சேர்ந்தவங்க... பொது இடத்துல கலாட்டா பண்ண வேண்டாமேன்னு மப்டில வந்திருக் கோம். அடையாள அட்டையைப் பாக்கறீங்களா?''

போலீஸ்! ஒரு வேளை மீராவின் காரைக் கண்டு பிடித்து விட்டார்களா? விபத்து பற்றிய செய்தியை அவள் கணவன் என்ற முறையில் தங்கதுரைக்கு தகவல் கொடுக்க மட்டும் வந்திருக்கிறார்களா?

''எ... என்ன விஷயம்?'' என்றார் தங்கதுரை.

''உங்களைச் சந்திக்க ஒரு நண்பர் உள்ளே காத்திருக் கார்... வர்றீங்களா?''

தங்கதுரை, ப்ரீதா இருவரின் இரு பக்கங்களிலும் நெருக்கமாக சூழ்ந்து அவர்களை கிட்டத்தட்ட விமான நிலையத்தின் உள்ளறைக்கு நடத்திப் போனார்கள் அவர்கள்.

''வாங்கப்பா...''

பாஸ்கரனின் குரல்!

அதிர்ந்து நிமிர்ந்தார், தங்கதுரை.

கன்னத்தில் கூட்டல் குறிகளாக பிளாஸ்திரி. இடது கை வெள்ளைத் துணி ஊஞ்சலில் தொங்கியது.

அவன் உட்கார்ந்திருந்த சக்கர நாற்காலிக்குப் பின்னே ஒரு நர்ஸ்.

''கால்ல ஒரு சின்ன எலும்பு முறிவு, அதனால தான் எழுந்து நின்னு உங்களை வரவேற்க முடியல... வாங்க ப்ரீதா...''

பாஸ்கரனின் முகத்தில் களைப்பு இருந்தது. இருந் தாலும் தீவிரம் இருந்தது.

''விடிஞ்சு வெளிச்சம் வந்தப்புறம்தான் எங்களைக் கண்டு பிடிப்பாங்க... அதுக்குள்ள நீங்க மும்பைக்குப் போகலாம்னுதான் திட்டம் போட்டிருப்பீங்க... ஆனா அது புஸ்ஸாயிடுச்சு இல்ல...''

''நீங்க என்ன சொல்றீங்க... எனக்குப் புரியவே இல்லை...'' என்றாள், ப்ரீதா. ''மிஸ்டர் தங்கதுரை

பிஸினஸ் விஷயமா மும்பை போகணும்னு சொன்னாரு... அவர் கூடப் போறேன். மத்தபடி நீங்க சொல்ற எதுவும் எனக்குப் புரியல...''

''அடடா... நீங்க எங்கப்பாகிட்ட நெக்லஸை பைக்குள்ள பத்திரமா வச்சிருக்கறதைப் பத்தி சொல்லும் போதும், மத்த நகையை விக்கறதுபத்தி பேசும் போதும், இந்த போலீஸ்காரங்க உங்க நல்லெண்ணம் தெரியாம, அதையெல்லாம் ரெக்கார்டு பண்ணித் தொலைச்சிட் டாங்க...'' பாஸ்கரன் புன்னகைத்தான்.

ப்ரீதாவின் முகம் வெளிறியது.

''என்னாச்சுன்னாப்பா, நான் மீராகிட்ட போலீஸ்க்குப் போகலாம்னு சொன்னபோது அவங்க பயந்துக்கிட்டு மறுத்தாங்க... என்னையும் போன் பேசக்கூடாதுன்னு தடுத்தாங்க. நான் என்ன பண்ணேன்? மடில செல்லுலார் போனை வச்சிருந்தேனா, அதுல அப்படியே என் நண்பன் செந்தில்குமாரோட எண்ணை விரல் நுனியால அழுத்தி டயல் பண்ணிட்டேன். மறுபக்கம் ரிசீவரை எடுத்ததும், பச்சை லைட் எரிஞ்சதைப் பார்த்தேன். மீராகிட்டே எங்கே போறோம்னு சத்தமாக் கேட்டேன். தையூர்னு சொன் னாங்க... போலீஸ்க்குத் தகவல் தெரிவிக்கிறதைப் பத்தியும் சத்தமாப் பேசும்போதுதான் உங்க காருக்கு பயந்து மீரா காரைத் திருப்பி ஆக்ஸிடெண்ட் ஆயிருச்சு. ஆனா மறுமுனைல எங்க உரையாடலைக் கேட்ட செந்தில் குமாரும், மனோகரனும் உடனே செயல்பட்டு போலீஸ்க்கு தகவல் கொடுத்து, தையூர் போகற வழில தேடிட்டு வந்து கவுந்து கெடக்கற லாரியைப் பார்த்து, அப்புறம் எங்க காரைப் பார்த்து - ஆஸ்பத்திரிக்கு எடுத்திட்டுப் போய்...''

''என்னை மன்னிச்சிடு, பாஸ்கர். உன்னை அப்படியே விட்டுட்டு நான் போயிருக்கக் கூடாது.'' தங்கதுரையின் கண்களில் மறுபடி கண்ணீர்.



''ப்ரீதாவோட அழகு உங்களை முட்டாளாக்கிருச்சு அப்பா. இப்ப கூட எனக்காக தான் நீங்க கண்ணீர் விடறீங்க... நான் உங்க மகன்கறதால. ஆனா உங்களை முழுசா நம்பி தன்னையே கொடுத்தாங்களே மீரா, அவங்களுக்கு எப்பிடியிருக்குன்னு கேக்கணும்னு கூட உங்களுக்குத் தோணலை...''

தங்கதுரை பதிலின்றி குனிந்தார்.

''அவங்களுக்குக் கொஞ்சம் சீரியஸான காயம்... ஆனா பொழைச்சிட்டாங்க... பயமில்ல... அவங்க இன்னும் முப்பது நாள் படுக்கைல இருக்கணும்... நான் மூணு வாரம் ரெஸ்ட்ல இருக்கணும்...''

பாஸ்கரன் நர்ஸிடம் சைகை செய்ய, சக்கர நாற்காலி அவர் அருகே நகர்த்தப்பட்டது.

''அன்பான மனைவி, நல்ல பதவி... நெறைய சொத்து, இவ்வளவும் உங்களுக்கு அமைஞ்சிருந்ததே அப்பா. ஏம்பா அவசரப்பட்டு எல்லாத்தையும் கெடுத்துக்கிட்டீங்க?''

அவர் பதில் சொல்லவில்லை.

''காமம்! கண் மூடித்தனமான காமம்! உங்ககிட்ட இருக் கறதை உறிஞ்சினதும் ப்ரீதா உங்களை விட இன்னும் இளைஞரா வசதியா இருக்கறவன் கிட்ட போயிடுவான்னு உங்களுக்குப் புரியலையா அப்பா?''

பாஸ்கரன் போலீஸின் பக்கம் திரும்பினான்.

''தேங்க்யூ இன்ஸ்பெக்டர். என்னைப் பேச இவ்வளவு தூரம் அனுமதிச்சதுக்கு...''

ப்ரீதா திடீரென்று தன் கையிலிருந்த பையைச் சுழற்றி பக்கத்தில் நின்ற போலீஸைத் தாக்கிவிட்டு வெளியே ஓடப் பார்த்தாள்.

தங்கதுரை அவளை ஒரே எட்டில் பிடித்தார்.

''இனிமே தப்பிக்க வழி இல்ல, ப்ரீதா. முட்டாள்தனமா எதுவும் செய்யாதே...'' என்றார்.

# 21

''கல்யாணம் முடிஞ்சு நம்ம குழந்தையை தொட்டில்ல ஆட்டுவீங்கன்னு நான் ஆசையா காத்திருந்தா இப்படி உங்க கையை தொட்டில்ல ஆட்டிட்டு உக்காந்திருக்கீங்களே...''

- என்றாள் அபர்ணா பாஸ்கரனின் மூக்கு நுனியை நிமிண்டி.

''கல்யாணத்துக்கப்புறம் உன்கிட்ட அனுபவிக்க வேண்டியதுக்கு இப்பவே ஒத்திகை எடுக்கறான்னு வச்சிக்கலாம்'' என்றான், செந்தில்குமார்.

''தடியா... நீ பேசாம இரு...''

''பாஸ்கர், இதுக்காகவாவது உனக்கு சீக்கிரம் சரியாகணும்... இந்த பிசாசை நீ வெளியே போய் மீட் பண்ணிருவே... உன்னைத் தேடி அது இந்த ரூமுக்கு வந்தா எங்க பொழைப்பு நாறுது'' என்றான் மனோகரன்.

''பிசாசா?'' அபர்ணா எழுந்தாள். ''பிசாசு சும்மா விடாது. ரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும்...'' என்று மனோகரனையும், செந்தில்குமாரையும் அந்த அறைக்குள் சுற்றிச் சுற்றித் துரத்த -

''யம்மா. நான்தான் கவுந்து கெடக்கேன்... என் பார்ட்னர்ஸையாவது முழுசா இருக்க விடு. அவங்கதான் இப்ப பிஸினஸைப் பார்த்துக்கறாங்க...'' என்றான் பாஸ்கரன். ஒற்றைக் கையை சமாதானத்திற்காகத் தூக்கினான்.

''பிஸினஸ்னவுடனே ஞாபகம் வருது. மீரா மேடம் இன்னிக்குப் பேசினாங்க... நம்ப கம்பெனிக்காக அவங்க கட்டடத்துல ஒண்ணை எழுதி வக்கப் போறாங்களாம்...''

''வேணாம் செந்தில்... யார் சொத்தும் வேணாம், யார் தானமும் வேண்டாம்... நாம உழைச்சு, நம்ப சொத்தை நாமே சேர்ப்போம்...'' என்றான், பாஸ்கரன்.

''அதுக்கு இந்த பிசாசு எப்பவும் துணை இருக்கும்'' என்றாள் அபர்ணா.

*